# உலகு உய்ய!

(உலக அமைதி ஆண்டு வெளியீடு)

ஆசிரியர்:

டாக்டர் சுந்தர சண்முகனார்

ஓய்வு பெற்ற தமிழ்-அகராதித் துறைப் பேராசிரியர்

புதுச்சேரி-11.

வெளியீடு:

புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்

38, வேங்கட நகர்,

புதுச்சேரி-605 011.

1987

உரிமை: சுந்தர சண்முகனார்

1987

## காணிக்கை

ஒரே உலக அமைப்புக்குப் பாடுபட்ட அருளாளர்கட்கும் பாடுபட்டுக் கொண்டிருக்கும் அறிஞர்கட்கும் காணிக்கையாக இந்த நூலைப் படைக்கின்றேன்.

சு.ச.

**கிடைக்கும் இடங்கள்:**

புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்,
38, வேங்கட நகர், புதுச்சேரி-11.

மற்றும்

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
79, பிரகாசம் சாலை, சென்னை-108.

**விலை ரூ 30-00**

அச்சிட்டோர்:

கே.பி.டி. இண்டஸ்ட்ரி,
அண்ணாமலைநகர்,
608 002.

# அணிந்துரை

செந்தமிழ்த் தொண்டர் – செயல் மறவர்

**சிவ. கண்ணப்பா** அவர்கள்

ஓய்வு பெற்ற தலைமை யாசிரியர்,

புதுச்சேரி.

''செந்தமிழ்க் குரிசில்'' டாக்டர் சுந்தர சண்முகனார் ஒரு பிறவி எழுத்தாளர்; உலகம் வியக்கும் உயர்ந்த கருத்துக்களை வாரி வழங்கும் ஆற்றல் மிக்கவர். அவருடைய கருத்துக்கள் தமிழ் வடிவம் பெற்றிருந்தாலும், உலக அறிஞர்கள் ஒப்புக்கொள்ளும் சிறப்பு மிக்கவை. ''உலகு உய்ய!'' என்னும் இந்த நூலில் இதனைக் காணலாம்.

பிறந்த நாட்டால் அவர் ஒரு தமிழர்; வாழும் நிலத்தால் அவர் ஓர் இந்தியர்; உள்ளத்தால் அவர் ஓர் உலகத்தவர். ''உலகம் என்பது ஒரே நாடு; ஆங்கிலம் உலக மக்களின் மொழி'' என்ற புதிய கொள்கைக்கு விளக்கம் தரும்நூல் இந்தநூல்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கொள்கையை முதலில் வைத்தவர் ஒரு தமிழர். ''தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் தன்னிலன்றோ இன்பம்'' என்று உலக மக்களைப் பிணைக்க வழி காட்டியவரும் ஒரு தமிழர். ''உலகத்தில் ஒரே நாடு– ஒரே மொழி– ஒரே கொடி ஒரு காலத்தில் தோன்றும்' என்ற கருத்தை வெளியிட்டவர் ஒரு பிரஞ்சுக்காரர். இம் மூவர் கருத்தையும் விளக்கி உலகுக்கு ஒரு புது நூலைப் படைத்துக் கொடுத்திருக்கிறார் டாக்டர் சுந்தர சண்முகனார்.

"உலகு உய்ய" என்ற இந்த நூலில் எங்கேனும் நான்கு பக்கங்கள் புரட்டிவிட்டு டாக்டர் சுந்தர சண்முக னாரைக் குறை சொல்லக்கூடாது. எல்லாப் பக்கங்களை யும் ஆர அமரப் படித்துவிட்டால் குறை சொல்ல மனம் வராது; "நோய்ப் பகைவனிடம் நாள்தோறும் போராடி இத்துணைச் சிறப்பான நூலைச் சுந்தர சண்முகனார் எழுதியிருக்கிறாரே!" என்று ஆச்சரியப்படத் தோன்றும்.

செய்வன திருந்தச்செய்யும் இயல்பினர் சுந்தர சண் முகனார். சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் வெளி வந்த 'திருக்குறள் தெளிவுரை' யிலிருந்து, அவரிடம் செய் வன திருந்தச் செய்யும் உயர்ந்த பண்பைப் பார்த்து வரு கிறேன். ஆயிரம் ஆண்டுகளானாலும் அழிக்க முடியாத கருத்துக் கருவூலங்களைத் தேடிக்கொடுத்தவர் அவர்.

உடனிருந்தே இடையூறு செய்துகொண்டிருக்கும் நோயைப் (மூளைக் கட்டி) புறங்கண்டு, உலகில் ஒருமை உணர்வு தோன்றவேண்டும் என்ற உணர்வு கொண்டு "உலகு உய்ய" என்ற இந்த நூலைப் படைத்திருக்கிறார் சுந்தர சண்முகனார்.

"கீதாஞ்சலி" என்னும் நூலை முதலில் வங்காள மொழியில் எழுதிப் பின்னர் அதனையே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து நோபல் பரிசைப் பெற்ற டாகூரைப் போல், 'உலகு உய்ய' என்ற இந்த நூலை டாக்டர் சுந்தர சண்முகனாரே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து (சமா தானத்திற்கு உரிய) நோபல் பரிசு பெற வேண்டும் என்று நான் இறைவனை இறைஞ்சுகிறேன். அந்தத் தகுதி இந்த நூலுக்கு உண்டு.

இவண்
சிவ. கண்ணப்பா
2—3—1987

# முன்னுரை

ஒருவரை உய்விப்பதே அரிய செயல். உலகம் முழுதும் உய்யச் செய்வது என்பது அரிய பெரிய அடைவு (சாதனை) ஆகும். உலகு உய்வதற்கு உரிய சில வழிமுறைகளை இந்த நூல் பல தலைப்பின் கீழ்க் கூறுகிறது. ஒவ்வொரு தலைப்பும் ஒரு கட்டுரை போல் இருக்கும்; ஆனால், இந்நூல், தனித் தனியான பல உதிரிக்கட்டுரைகளின் தொகுப்பு அன்று. ஒரு பொருள் நுதலிய தொடர் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

உயர்வு உள்ளல்:

உலகம் உய்ய வேண்டும் என்னும் இலக்கை நோக்கிப் பயணம் செய்யும் புதிய நோக்குடைய இந்நூலில் கூறப்பட்டிருக்கும் வழி துறைகளைப் பின்பற்றினால் வெற்றி கிடைக்குமா - ஒரே உலகம் உருவாகுமா? – என்பதைப் பொறுத்திருந்து காணவேண்டும்.

> ''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
> தள்ளினும் தள்ளாமை நீர்த்து'' (குறள் – 596)

என்பது வள்ளுவம்.

பழையனவற்றுள் வேண்டியவற்றை வைத்துக்கொண்டு வேண்டாதவற்றை விலக்கிவிடலாம் - புதியனவற்றுள்ளும் வேண்டாதவற்றை விலக்கிவிட்டு வேண்டியவற்றை வைத்துக் கொள்ளலாம் – என்னும் நடுநிலைக் கொள்கையை மையமாக வைத்து இந்நூல் படைக்கப்பெற்றுள்ளது.

வெற்று அத்தை – பாட்டி கதைகளைப் படித்துக் கொண்டிருக்கும் நமது நாட்டில், கட்டாயம் படிக்க வேண்டிய இத்தகைய ஆய்வு நூல்கட்கும் ஆதரவு கிடைக்க வேண்டுமே!

தமிழில் இப்படி ஒரு நூல் வெளிவர வேண்டும் என்னும் எண்ணம் நீண்ட நாளாக என் நெஞ்சை உறுத்திக்

கொண்டிருந்தது. அதன் பயனாகவே இந்நூல் முகிழ்த்து மலர்ந்தது.

## திருமண அழைப்பிதழில்:

என் மகனது திருமண அழைப்பிதழின் தொடக்கத்தில் "வாழ்க வையகம்" என்னும் தொடரையும், என் மகளது திருமண அழைப்பிதழின் தொடக்கத்தில் "உலகு உய்க" என்னும் தொடரையும் அமைத்தவன் யான். எனக்கு இந்தக் கோட்பாட்டில் அவ்வளவு பிடிப்பு உள்ளது.

இவ்வளவு நாள் தமிழ் அறிந்தவர்கட்கு மட்டும் நூல் எழுதினேன். இப்போது உலகினர்க்கு நூல் எழுதியுள்ளேன். இந்த நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அச்சிட்டு உலகம் முழுவதும் பரப்பவேண்டும்—என்பது எனது வேணவா. இப்போது முதலில் தமிழ் அறிந்தவர்கள் ஆதரவு அளிக்கும் வண்ணம் பணிவுடன் வேண்டுகிறேன்.

இந்நூலுக்கு மனம் திறந்து மிகவும் சிறந்த அணிந்துரை அருளியுள்ள செந்தமிழ்த் தொண்டர் - செயல் மறவர் உயர்திரு சிவ. கண்ணப்பா அவர்கட்கு எவ்வாறு நன்றி செலுத்துவது என்பது தெரியவில்லை. இந்நூலை நன்முறையில் விரைவில் அச்சிட்டுத் தந்த அண்ணாமலை நகர் கே.பி.டி. அச்சகத்தார்க்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன்.

இந்த நூலை வெளியிட ஓரளவு பொருளுதவி புரிந்துள்ள புதுச்சேரி மாநில அரசுக்கு நன்றி செலுத்தும் கடப்பாடு உடையேன்.

வணக்கம்.

சுந்தர சண்முகன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | உலகத் தாய் வாழ்த்து | — 8 |
| 1. | உலகு உய்ய! | — 9 |
| 2. | மக்கள் தொகைக் கட்டுப்பாடு | — 19 |
| 3. | மூட நம்பிக்கைக்கு முற்றுப் புள்ளி | — 51 |
| 4. | பொருளியல் கோட்பாடு | — 69 |
| 5. | ஆக்க வேலைகள் | — 102 |
| 6. | போரில்லா உலகம் | — 145 |
| 7. | ஒழுங்கு முறை உள்ள உலகம் | — 182 |
| 8. | உலகுக்கு ஒரே பொதுமொழி | — 218 |
| 9. | உலகுக்கு ஒரே அரசு | — 247 |
| 10. | நிறைவு உரை | — 296 |
| 11. | மீள் பார்வை | — 301 |
| 12. | பிற்சேர்க்கை | — 304 |

# உலகத் தாய் வாழ்த்து

1\. தொல்லுலகத் தாயேநீ துவளாமல் உழைத்திடுவாய்
எல்லையிலா அனைத்துயிரும் இன்பமிகப்
பெறுவதற்கே!
தன்னையேதான் சுற்றலுடன் தவழ்ந்துநகர்
பம்பரம் போல்
உன்னைநீசுற் றிக்கொண்டே உயர்கதிரை வலம்
வருவாய்
தன்னுடலை உருட்டுருட்டித் தகுகோயில் சுற்றுகின்ற
தன்னிகரில் அன்பனைப்போல் தாயேநீ உருளு
கின்றாய்

2\. வானகத்துப் பாதைகளில் வலமிடும்நண் பர்தமைப்
போல்
வானமதில் பாதையொன்றும் வகுத்துக்கொண்
டாயுனக்கே
அணுவளவும் பிசகாமல் அவ்வழியே செல்கிறநின்
இணையில்லாக் கடமையுள்ளம் எந்தமக்கும்
வேண்டுமம்மா!
சோராத உனதுழைப்பால் சுறுசுறுப்பை யாங்களுமே
தீராத உறுதியொடு தெரிந்துகொண்டே இயங்க
வைத்தாய்

3\. ஞாயிறைநீ சுற்றுவதன் நல்லநோக்கம் யாதோசொல்
பேயிருளை அகற்றியொளி பெறச்செயலால்
சுற்றுவையோ!
ஞாயிறேஉன் னையுமீன்ற நற்றாயென் பதனாலோ
ஞாயிறேஉன் மக்களுக்கு நலம்பலவும் செய்வதாலோ!
நீயியங்கா திருந்துவிடின் நிலைத்திடுமோ உயிர்
வாழ்க்கை
தாயுனையே மக்களெல்லாம் தலைவணங்கி
வாழ்த்துதுமே!

---

1-1: தொல்லுலகத்தாய் — பூவுலகம். 1-2: உயர்கதிர் — ஞாயிறு. 1-3: இப்பகுதி அங்கப் பிரதட்சணத்தைக் குறிக்கிறது. 2-1: வலமிடும் நண்பர்: செவ்வாய், புதன் முதலிய மற்ற கோள்கள். 2-2: பூவுலகம் நாள்தோறுக் ஒரே மாதிரியாய் இயங்கும் ஒழுங்குநிலையைம் (Cosmos) குறிக்கின்றது. 3-2: பூவுலகக்கோள், ஞாயிற் றினிடமிருந்து பிய்த்துக் கொண்டு பிறந்த ஒரு பொறி எனச் சொல்லப்படுகின்றது.

# I. உலகு உய்ய !

## தாய்த்தலை யன்பு:

ஒருவருக் கொருவர் செலுத்தும் அன்புகட்குள்ளே தாய் சேயிடத்துச் செலுத்தும் அன்பே தலையன்பாகும். இதனைத் 'தாய்த் தலையன்பு' என்பர். இவ்வளவு பிணை யன்புடைய தாயையே குறைத்துக் கூறும் பழமொழி யொன்று உண்டு. ''தாயாயிருப்பினும் சேயாயிருப்பினும் வாயும் வயிறும் வேறு'' என்பதே அப்பழமொழி. இதனால் அறியப் பெறுவதாவது: ஒவ்வோர் உயிரும் தன்னலத் தையே பெரிதாகக் கருதும் என்பதாகும்.

பெற்றோருக்கும் பிள்ளைக்கும் இடையேயுள்ள தொடர்பே இத்தகைய தெனின், கணவன் மனைவியர், உடன் பிறந்தவர்கள், மற்ற உற்றார் உறவினர், நண்பர் முதலியோரிடையேயுள்ள தொடர்பு எத்தகையதா யிருக்கக் கூடும் என உய்த்துணரலாம்.

## உலக நலம்:

உலகில், தன்னலம் மட்டும் கருதுபவரே மிகப்பலரா வர்; குடும்பத்தார் நலனையும் கருதுபவர் இவரினும் குறைந்தவரே; உற்றார்-உறவினர்-நண்பர் ஆகியோரின் நலனையும் நோக்குபவர் இவரினும் இன்னும் குறைந்த வரே; அண்டை அயலார் ஊரார் ஆகியோரின் நலனையும் கருதுபவர் இவரினும் மேலும் குறைந்தவரே; நாட்டின் நல னைக் கருதுபவர் இன்னும் மிகவும் குறைந்தவரே. உல

கின் நலனைக் கருதுபவரோ விரல் விட்டு எண்ணத்தக்க அளவு மிக மிக மிகக் குறைந்தவராவர்.

## திருக்குறள் திறனாய்வு:

உலகில், ஆங்காங்கே, அவ்வக் காலத்தில், உலகம் உய்ய வேண்டும் என்னும் உலக நோக்கு உடையவர் ஒரு சிலர் தோன்றத்தான் செய்தனர். தமிழ் நாட்டில், இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவராகக் கூறப்படும் திருவள்ளுவர் உலக நோக்கு உடையவராகத் திகழ்ந்தார். இவர் பற்றிய செய்தி பின்னால் ஒரு தலைப்பில் போதிய அளவு விரிவாகத் தரப்படும் இவர், ஆயிரத்து முந்நூற்று முப்பது பாக்கள் கொண்ட தமது திருக்குறள் நூலில், அறுபதுக்கும் மேற்பட்ட பாடல்களில், உலகம் என்ற சொல்லையும் இப்பொருளுடைய 'வையம்' முதலிய சொற்களையும் கையாண்டுள்ளார். உலகத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நூலாதலின், திருக்குறள், 'உலகப் பொது மறை' என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப் பெறுகிறது. உலக இலக்கியங்கள் பலவற்றுக்கு அறிஞர்கள் பலர் 'திறனாய்வு' (criticism) எழுதியுள்ளனர். அவற்றுள், திருவள்ளுவரின் திருக்குறள் தொடர்பாகச் சுப்பிரமணிய பாரதியார் செய்துள்ள திறனாய்வு மிகச் சிறந்ததாகும். அதாவது:

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு''

என்பதாகும். திருவள்ளுவர் உலகு உய்யத் தம் நூலில் பல வழி துறைகளை வகுத்துத் தந்துள்ளார்.

வடலூர் வள்ளலார்:

"அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும், ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" என்று இறைவனிடம் வேண்டியவர், வடலூர் வள்ளலார் என்று வழங்கப் பெறும் இராமலிங்க அடிகளாராவர். இவர் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வடலூர் என்னும் ஊர்ப்பகுதியில் வாழ்ந்தவர். இவர் பற்றிய செய்தியும் போதிய அளவு பின்னால் ஒரு தலைப்பில் தரப் பெறும். திருவள்ளுவரைப் போலவே, இவரும், உலகம் உய்ய வேண்டும் என்னும் பரந்த பொது நோக்குடன் 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' என்னும் ஓர் அமைப்பினை நிறுவிப் பாடுபட்டவர். 'ஒருமையின் உலகெலாம் ஓங்குக' என்று பாடிய வள்ளலார், 'உலகம் உய்ய வந்தவர்' என்னும் உயரிய கருத்தினை, இவர்தம் அணுக்கத் தொண்டருள் ஒருவர், பின்வரும் பாடலுள் அறிவித்துள்ளார்:

"உலகம் தழைக்க வந்துதித்த உருவே வருக! ஓதாதே
உற்ற கலைகள் அனைத்தினையும் உணர்ந்தோய்
வருக!"

இந்தப் பாடலால், இராமலிங்க அடிகளார், 'உலகம்' உய்ய வந்தவர் என்பதும், மற்றவரும் இவரைப் போலவே இந்தத்துறையில் பணியாற்ற வேண்டும் என்ற படிப்பினையும் கிடைக்கும்.

உலகத் தொடக்க நூல்கள்:

நம் முன்னோர்கள் சிலர், தம் நூல்களை 'உலகம்' என்ற சொல்லிலிருந்தே தொடங்கியுள்ளமை ஈண்டு கருதற்பாலது:

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு"

என நக்கீரர் திருமுருகாற்றுப் படையைத் தொடங்கியுள்ளார்.

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்"

எனச் சேக்கிழார் பெரிய புராணத்தைத் தொடங்கியுள்ளார்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்"

எனக்கம்பர் தம் இராமாயணநூலைத் தொடங்கியுள்ளார்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

எனத் திருவள்ளுவர் தம் திருக்குறள் நூலின் முதல் பாவிலேயே உலகைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு இன்னும் பெரியோர்களின் நூல்களைத் துருவிப் பார்க்கின், அவர்தம் ஓரே உலகக் கோட்பாடு தெற்றென விளங்கும்.

## தன்னல வேட்டை

உலகம் உய்ய உழைத்த இத்தகைய பெரியார்களோடு தன்னல வேட்டைக்காரர்களை ஒத்திட்டுப் பார்க்குங்கால் மிகவும் வேதனையா யிருக்கிறது. பிறரது வாழ்வைப் பொறுக்காதவர் பலர் வையத்தில் உளர். பக்கத்து வீட்டுக்காரனுக்கு இரண்டு கண்களும் கெட்டுவிடுவது உறுதியாயின், எனது ஒரு கண்ணை இழக்க யான் உடன்படுவேன் என்று ஒருவன் கூறியதாகச் சொல்லப்படும் கதை அறிந்

ததே! தேளால் கொட்டப்பட்ட ஒருவன் மற்றவர் சிலரை யும் தேள் கொட்டும்படிச் செய்த கதையும், மூக்கு அறு பட்ட ஒருவன் மற்றவர் சிலரின் மூக்குகளும் அறுபடும்படிச் செய்த கதையும் வழங்கப்படுவதைக் கேட்கலாம். வால் அறுந்த நரியொன்று மற்ற நரிகளும் வால் இழக்கும்படிச் செய்த கதை போன்றவையே இவை. பிறர்க்கு நல்லது செய்யாவிடினும் தீயது செய்யாதிருக்கலாமே! ஈண்டு நரி வெரூஉத்தலை யார் பாடியுள்ள

''நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்'' (195)

என்னும் புறநானூற்றுப் பாடல் பகுதி கருதத் தக்கது தன்னல வேட்டைக்காரர்கள், பெரியோர்கள் பாடியுள்ள பின் வரும் பாடல்களைப் படித்து நாணித் திருந்த வேண் டும். அப்பாடல்களாவன:

''தாமின் புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'' (திருக்குறள்–399

''நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்''
(திருமூலர்-திருமந்திரம்-85)

''எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே''
(தாயுமானவர்: பராபரக்கண்ணி-221)

''ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்
யானடையும் சுகத்தினை நீர் தானடைதல் குறித்தே''

"எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே
எண்ணிநல் லின்புறச் செயவும்
அவ்வுயிர் களுக்கு வருமிடை யூற்றை
அகற்றியே அச்சநீக் கிடவும்
......இச்சை காண் எந்தாய்"

"கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த
கடுந்துயர் அச்ச மாதிகளைத்
தருணநின் னருளால் தவிர்த்தவர்க் கின்பம்
தரவும்வன் புலைகொலை யிரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
உளுற்றவும்.........இச்சை காண் எந்தாய்".

"மண்ணுல கதிலே உயிர்கள் தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தேனும்
கண்ணுறப் பார்த்துஞ் செவியுறக் கேட்டும்
கணமும் நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்
இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணுமவ் வருத்தம் தவிர்க்கநல் வரந்தான்
நல்குதல் எனக்கு இச்சை எந்தாய்"

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்த்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோரென்
னேருறக் கண்டுளந் துடித்தேன்

ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்".

(மேலுள்ள ஐந்து பாடல்கள்: இராமலிங்க அடிகளார்)

தன்னலக்காரர்கள் மேற்காட்டியுள்ள பெரியோர் களின் பாடல்களைப் படித்துணர்ந்து பொது நலத்தின் பக்கம் உள்ளம் திருப்புவாராக! அவர்கட்கு 'ஆற்றுப்படை' என்னும் பண்பினையும் அறிவுறுத்தவேண்டியுள்ளது:

ஆற்றுப்படை:

ஒருவர் ஓரிடத்தில் தாம் பெற்ற பெரு வளத்தைப் பெறாத பிறர்க்கும் அறிமுகப்படுத்தி அவ்விடம் சென்று அத்தகைய வளத்தைப் பெற்று வருமாறு வழிப்படுத்தி யனுப்புதல் 'ஆற்றுப்படை' யாகும். (ஆற்றுப் படை= ஆற்றுப் படுத்துதல் --- வழிப்படுத்துதல்). இப்பண்பு, மக்கட் பண்புகளுள் உயரிய எல்லைக் கொடு முடியாகும். இப்பண்பமைந்த தனித் தனிப் பாடல்கள் பல, தமிழ் மொழியில் இருப்பதன்றி, புறநானூறு, பதிற்றுப் பத்து, புறப் பொருள் வெண்பா மாலை முதலிய நூல்களிலும் இடையிடையே இடம் பெற்றுள்ளன. மற்றும் முழு முழு ஆற்றுப் படை நூல்களும் தமிழில் உண்டு.

இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டனவாகக் கருதப்படும் திருமுருகாற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, கூத்தர் ஆற்றுப்படை (மலைபடுகடாம்) ஆகிய சங்க நூல்கள் முழு முழு ஆற்றுப்படை நூல்களாகும். பிற்காலத்தும், புலவ ராற்றுப் படை, திருத்தணிகை யாற்றுப்படை, திருபாணாற்றுப்படை, ஞானியார் ஆற்றுப்படை முதலிய நூல்கள் தோன்றின. கி.பி.

1951 ஆம் ஆண்டில் 'செந்தமிழ் ஆற்றுப்படை' என்னும் நூல் (சுந்தர சண்முகனாரால்) இயற்றி வெளியிடப்பட்டுள்ளது.

தமிழர்கட்கு ஆற்றுப்படைப் பண்பு மிகவும் பழங் காலத்திலேயே இருந்தது. இற்றைக்கு மூவாயிரம் ஆண் டுக்கு முற்பட்டதாகச் சொல்லப்படும் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில் ஆற்றுப் படைக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அஃதாவது:-

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்"

(தொல்-பொருள்-புறத்திணையியல் - 36

என்பது தொல்காப்பிய நூற்பாப் பகுதி. 'இலக்கியம் கண்ட தற்கு இலக்கணம்' என்பர். இதன்படி நோக்கின், தொல் காப்பியக் காலத்துக்குப் பல்லாண்டுகட்கு முன்பே-அதா வது-இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழர் களிடத்தில் இப்பண்பு இருந்தது என்பது புலனாகும். இந்தக் கருத்துக்களை யெல்லாம் அறிந்து, தன்னல வேட் டையாளர்கள் உலகம் உய்வதற்குரிய பாதையில் தாமும் தம் பங்கினைச் சிறிதேனும் செலுத்துவாராக!

உலகம் என்பது:

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே"

என்பது, சேந்தன் திவாகர நிகண்டு - மக்கட் பெயர்த் தொகுதியின் (17-ஆம்) நூற்பா ஆகும். 'உலகம்' என் பதற்குத் திவாகர நிகண்டு கூறியுள்ள விளக்கம் வேறு

கோணத்தில் கூறப்பட்டுள்ளது. அஃது ஈண்டு நமது நூலுக்கு ஏற்புடைத்தாகாது. நாம் எடுத்துக் கொண்ட 'உலகு' என்பது, இடவாகு பெயராய், உலகில் உள்ள உயர்ந்தோர்-தாழ்ந்தோர் ஆகிய உயர் திணை உயிரிகள் அனைவரையும், மற்றும், அஃறிணை உயிரிகள் அனைத்தையும் குறிப்பதாகும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய இராமலிங்க அடிகளாரின் அறிவுரைப்படி, நாம், நம் ஒத்த உயர்திணை உயிரிகளையே யன்றி, மற்ற அஃறிணை உயிரிகளையும் துன்புறுத்தாது - கொல்லாது - கொன்று புசியாது - பேணிக் காக்க வேண்டும். உலகு உய்தல் என்றால், உலக உயிரிகள் எல்லாம் உய்தல் என்பதாகும்.

## உலகு உய்வழி:

'திருமண மக்கள் வாழ்க வாழ்க' என்று சொல்லி வாழ்த்தினால் போதாது; வாழும் வழி முறைகளைச் சொல்லி வாழ்த்தலே பயனுடைத்து; வழி முறைகளைச் சொன்னால் மட்டும் போதாது; அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்தாலே நல் வாழ்வு பெற இயலும். அவ்வாறே, 'உலக உயிர்கள் உய்க உய்க' என்று பரிந்துரைத்து வாழ்த்தினால் போதாது. உய்யும் வழி துறைகளைச் சொல்லி வாழ்த்த வேண்டும்; வழி துறைகளைச் சொன்னால் மட்டும் போதாது; அவற்றைக் கடைப்பிடித்தால்தான் உலகு உய்ய முடியும்.

அஃறிணை உயிரிகட்கு நாம் எந்த அறிவுரையும் பரிந்துரையும் கூறி முன்னேற்ற முடியாது. அவை அன்று தொட்டு இன்று வரை ஒரே மாதிரியாய் இருந்து வருகின்

றன. அதற்கு உரிய காரணம் அவற்றின் உடலமைப்பே யாகும். மக்களினம் மட்டும் காலத்துக்குக் காலம் முன் னேறிக்கொண்டிருப்பதற் குரிய காரணம், நெட்ட நெடுக நிற்கும் நிலையிலும் தொழில் செய்யும் முறையிலும் கை கால்கள் பொருந்திய உடல் அமைப்புடன் பகுத்தறி வும் பெற்றிருப்பதே யாகும். எனவே, உலக உயிர்கள் உய்வதற்கு உரிய வழிதுறைகளாகக் கூறப்பட இருப்பவை மக்களினத்திற்கே யாம். மக்கள் அவற்றைக் கடைப் பிடித்துத் தாமும் உய்ந்து அஃறிணை உயிர்களையும் உய் விக்கலாம்.

## உய்யும் வழி துறைகள்:

மந்திரத்தால் மாங்காய் விழாது. ஊழ் வினையை நம்பி வறிதே சோம்பி யிருப்பின் வாழவியலாது. நன்கு எண்ணித் துணிந்து, செய்யக் கூடாதனவற்றை விலக்கி, செய்ய வேண்டியவற்றை ஆய்ந்து தேர்ந்து செயலில் இறங்க வேண்டும். வாழ்க்கையில் எவ்வெவற்றை விலக்கி எவ்வெவற்றைப் பின்பற்றிச் செயலாற்றின் உலகு உய்யும் என்பதற்குரிய வழி துறைகள் அடுத்து வரும் தலைப்புக் களில் ஆய்ந்து விரிவாக விளக்கப் பெற்றுள்ளன. இனி அவற்றைக் காண்போமே!

# 2. மக்கள் தொகைக் கட்டுப்பாடு

இந்த உலகமே தேவையில்லாதது - என்ற அடிப்படையில் நோக்குங்கால், உலகில் மக்கள்தொகை பெருக வேண்டியதில்லை - குறையலாம் - குறைந்துகொண்டே போகலாம் என்னும் செய்தி தானே பெறப்படும். உண்டாகி விட்ட உலகத்தில் தோன்றிவிட்ட மக்கள் இனத்தை அறவே அழிக்க முடியாது. அப்படியே ஏதோ ஓர் ஆற்றல் அழித்தாலும், மக்கள் இனம் தோன்றுவதற்குத் தொடக்கத்தில் எது காரணமாயிருந்ததோ - அந்தக் காரணம் மீண்டும் மக்கள் இனத்தை உண்டாக்கிவிடும். எனவே, மக்கள் இனத்தைப் பெருக்குவதை நிறுத்திக் குறைக்கும் முயற்சியில் ஈடுபடுதலே இன்று வேண்டற்பாலது.

## நாடும் வீடும்:

இதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. சில நாடுகட்கு மக்கள் பெருக்கம் தேவைப்படுகிறது; சில நாடுகட்கு மக்கள் குறைப்பு தேவைப்படுகிறது. ஒரு நாட்டிலேயே ஒரு சிலர் மக்கள் பிறப்பைக் குறைக்கக் கூடாது என்கின்றனர்; வேறு சிலர் குறைக்கவேண்டும் என்கின்றனர். இது தொடர்பாக, சமய வாதிகட்கும் சமூகச் சீர்திருத்தக்காரர் கட்கும் இடையே நிரம்பக் கருத்து வேறுபாடு உண்டு.

உலகில் மக்கள் தொகை குறைய வேண்டுமென்றால், நாடுகளில் மக்கள் தொகை குறையவேண்டும் என்பது பொருளாகும்; நாடுகளில் குறைய வேண்டும் என்றால்

வீடுகளில் மக்கள் பயிர் குறையவேண்டும் என்பது பொருளாகும். குறைந்த மக்களும் நிறைந்த செல்வமும் உள்ள நாடுகளில் வாழ்க்கை வளமாக உள்ளது; இத்தகைய நாட்டினர்க்கு இதுபற்றிக் கவலையில்லாமல் இருக்கலாம். நிறைந்த மக்களும் குறைந்த செல்வமும் உள்ள நாடுகளில் வாழ்க்கை வறுமையால் வரண்டு கிடக்கின்றது; இத்தகைய நாட்டினர்க்கு இதுபற்றிக்கவலைப்பட வேண்டியுள்ளது. மக்கள் தொகையைக் குறைப்பது, கடவுள் தலையில் கையை வைப்பதாகும் – அதனால் தங்கள் பிடிப்பு போய்விடும் எனச் சமயவாதிகள் அஞ்சுகின்றனர். வாழ்க்கை வளம் பெற வேண்டுமே எனச் சீர்திருத்தவாதிகளும் அரசியல் தலைவர்களும் கவலையுற்றுக் கதறுகின்றனர். மாறுபட்ட இந்தச் சிக்கல்கட்குத் தீர்வு காணவேண்டும்.

மக்கள்பேறு:

'பேறு' என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பெரிய செல்வம், பெரிய வாய்ப்பு, பெரிய பாக்கியம் என்றெல்லாம் பொருள் உண்டு. இந்தச் சொல்லுக்கு இந்தப் பொருள் எவ்வாறு கிடைத்தது? மக்கள் (குழந்தைகள்) பெரிய செல்வமாகப் பண்டு கருதப்பட்டனர். அவர்களைப் பெறுவது (அடைவது) பெரிய வாய்ப்பாக – பெரிய பாக்கியமாகக் கருதப்பட்டது. எனவே, இதற்கு 'மக்கள் பேறு' என்னும் பெயர் வழங்கப்படலாயிற்று. இவ்வாறு சிறப்புப் பெயராக உருவெடுத்த 'பேறு' என்னும் சொல், பிற்காலத்தில் எல்லா வகையான வாய்ப்பு வசதிகட்கும் பொதுப் பெயராகிவிட்டது. இதற்கு எடுத்துக்காட்டாக, 'வீடு பேறு' (மோட்சம்) என்னும் ஒன்று போதாதா? இதனால் அறியப்படுவதாவது; பண்டைக் காலத்தில் குழந்தைகளைப் பெரிய செல்வமாகக் கருதினர் என்பதாகும்.

திருவள்ளுவர் தமது திருக்குறள் நூலில் 'மக்கள் பேறு' என்னும் தலைப்பில் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். ஈண்டு மக்கள் என்பது குழந்தைகளைக் குறிக்கும். வள்ளுவர் கூறுவன: பேறுகளுக்குள் சிறந்தது மக்கள் பேறுதானாம். மக்களே சிறந்த செல்வமாம். குழந்தைகளின் கை பட்ட உணவு அமிழ்தினும் இனியதாம்; பிள்ளைகளின் உடலைத் தொடுதல் பெற்றோர் உடலுக்கு இன்பமாம்; அவர்தம் சொல் செவிக்கு இன்பமாம். தம் குழந்தைகளின் சொற்களைக் கேளாதவர்களே குழலும் யாழும் இனியன என்பார்களாம். இவற்றைக் கூறிய வள்ளுவர் பெற்றோரின் கடமையையும் பிள்ளைகளின் கடமையையும் கூறவும் மறந்தாரிலர். கூரைமேல் ஏறிக் கொள்ளி வைக்கும் பிள்ளையைச் சிறந்த பேறாக ஆசிரியர் குறிப்பிடவில்லை. 'அறிவு அறிந்த' - நல்லறிவு மிக்க மக்களையே சிறந்த பேறாகக் கூறியுள்ளார். அங்ஙனமெனில், மக்களை அறிவிற் சிறந்தவர்களாக உருவாக்கி வளர்க்கவேண்டும் என்னும் பெற்றோரின் பொறுப்பும் இதில் அடங்கியுள்ளது.

> ''பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கள்பேறு அல்ல பிற''. (61)

என்பது திருக்குறள் பாடல். புறநானூற்றுச் சுவையான செய்தி யொன்று காண்போமே.

''மாபெருஞ் செல்வராயினும், குறுகுறு என நடந்தும் சிறிய கையை நீட்டி உணவில் இட்டும் தொட்டும் துழாவியும் வாயால் கவ்வியும் நெய்ச்சோற்றை உடம்பின்மேல் சிந்தியும் சிதறியும் மனத்தை மயக்கிக் கவரும் குழந்தைகளைப் பெறாதார்க்கு வாழ்நாள் பயன் அற்றதாகும்''-என்பது, பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் பாண்டிய மன்

னன் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றின் கருத்தாகும்.

"படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே". (188)

என்பது மன்னனது பாடல். இவ்வாறு இலக்கியச் செய்திகள் பல காட்டலாம்.

இவ்வாறான பிள்ளையின்பத்தால் மிகுதியாகப் பிள்ளைகளைப் பெற்றுத் தள்ளியவர் பலர்.

தம் உடைமைகளைத் துய்க்கப் பிள்ளைகள் வேண்டுமே என்று பெற்றவர் பலர்.

தம் உணவுக்காகப் பயிரிடுவதுபோல், தம்மை இறுதிக் காலத்தில் பேணிக்காப்பதற்காகப் பிள்ளைகளைப் பெற்றவர் பலர்.

காட்டு விலங்கு முதலியவற்றின் தொல்லைகளிலிருந்து தற்காத்துக் கொள்ளவும், உழவுத்தொழில் முதலியவற்றை உடனிருந்து செய்யவும், எதிரிகளுடன் போரிட்டுத் தற்காத்துக் கொள்ளவும் ஆள் துணை – ஆள்வலு தேவை என்பதற்காகப் பிள்ளைகளை மிகுதியாகப் பெற்றவர் பலர்.

பண்டு, கொள்ளை நோய், பிறநோய்கள், மருத்துவ வசதியின்மை போன்ற காரணங்களால், பத்துப் பிள்ளைகள் பெற்றால் இருவரோ மூவரோ நிலைப்பதே கடினமாயிருந்ததனால், போவது போக நிற்பது நிற்கட்டும் எனப் பிள்ளைகளைத் தொடர்ந்து பெற்றுக்கொண்டேயிருந்தவர்கள் பலர்.

பிள்ளைப் பேற்றின்போது தாயும் சேயும் இறந்துவிடுவது பண்டு மிகுதியாய் நேர்ந்ததனால், மனைவியின் வாழ்நாள் காலத்துக்குள் இயன்றமட்டும் விரைந்து-விரைந்து மிகுதியாய்ப் பிள்ளைகளைப் பெற்று வைத்துக் கொள்வோம் என்ற எண்ணத்தால் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டே யிருப்பதில் முனைப்புக் காட்டியவர் பலர்.

பிள்ளை பெறாவிடின் நரகமே கிடைக்கும்; 'புத்' என்னும் நரகத்திலிருந்து மீட்கும் 'புத்திரர்கள்' பிறந்தால் தான் நாம் நரகத்திற்குப் போகாமல் வீடுபேறு அடைவோம்; பிள்ளையிலாதாரைப் 'பாவிகள்' என்றும், வீடு நிறையப் பிள்ளைகளைப் பெற்று 'வைத்திருப்பவர்களே புண்ணியவான்கள்' என்றும் போற்றப் பெறுவர் - என்ற மூட நம்பிக்கையால் பிள்ளைப் பயிர் விளைவித்தவர் பலர்.

சமுதாயத்தில் தாம் சிறு பான்மையினரா யிருப்பதால் தம் சமூகத்தைப் பெருக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் மிகுதியாகப் பிள்ளைகளைப் பெறுபவர்கள் பலர்.

காமப் பசியின் கொடுமையால் பிள்ளைகளை மிகுதியாகச் 'சாகுபடி' செய்பவர்கள் பலர். மிகுதியினால் 'சாகும் படி' நேர்ந்துகொண்டிருப்பதும் உண்டு.

செல்வச் செழிப்பு உள்ள நாடுகள் செல்வத்தைத் துய்க்கவும் ஆள் வலு வேண்டியும் பிள்ளைகளைப் பெற ஊக்கம் அளிப்பதால் அத்தகைய நாடுகளில் பிள்ளைப் பேறு மிகுவதும் உண்டு.

சில நாடுகளில் அலுவலாளர்க்கு 'பஞ்சப் படி' (Dearness Allowance), 'வீட்டு வாடகைப் படி' (House Rent Allowance) முதலியன கொடுக்கப் படுவதுபோல, சில நாடுகளில் 'பிள்ளைப் படி' (Charge de Famille) கொடுப்பதும் உண்டு. பிரான்சு (France) போன்ற சில நாடுகளில், பிறக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் இவ்வளவு பணம் எனப் 'பிள்ளைப் படி' கொடுக்கப்படுகிறது. சுவீடன் (Sweden) நாட்டில் பிள்ளை பெற ஊக்குவிப்பு நடைபெறுவதாக ஓர் இதழில் (பத்திரிகையில்) படித்திருக்கிறேன். அச் செய்தி வருமாறு: சுவீடனில் செல்வச் செழிப்பு மிகுதி; மக்கள் குறைவு; எனவே, பிள்ளை பெறுவோர்க்கு நிரம்பப் 'படி' (Allowance) கொடுக்கப்படுகிறது. திருமணம் ஆகாதவர்கள் வேறு வழியில் பிள்ளை பெற்றாலும் 'படி' தரப்படுகிறது. இதில் ஒரு வியப்பு என்னவெனில், திருமணம் ஆகிப் பிள்ளை பெறுவோர்க்குத் தரும் படியை விட, திருமணம் செய்துகொள்ளாமல் வேறு வழியில் பிள்ளை பெறுவோர்க்கு அளிக்கும் பிள்ளைப் படியின் அளவு மிகுதியாம். எப்படியாவது நாட்டில் பிள்ளைகள் நிரம்பப் பிறந்தால் போதும் என அரசு ஊக்கம் அளிப்பது இதனால் புலனாகிறது. இதில் இன்னும் ஒரு வியப்பு என்னவெனில், திருமணம் செய்து கொண்டு முறையாகப் பிள்ளை பெறுபவர்களும் தாங்கள் திருமணம் செய்து கொள்ளாமல் பிள்ளை பெற்றதாகக் கூறி மிகுதியான பிள்ளைப் படியைப் பெறுவது உண்டாம். இச்செய்திகள், சிலஆண்டுகட்கு முன் ஓர் இதழிலிருந்து யான் படித்து அறிந்தவை. சுவீடன் நாட்

டில் இப்போது நடைமுறை எப்படி உள்ளதென யான் அறியேன். இச் செய்திகளில் ஏதேனும் தவறான கூறு இருக்குமாயின், சுவீடன் அரசும் மக்களும் என்னைப் பொறுத்தருள வேண்டும்.

வளமுள்ள சுவீடன் போன்ற நாடுகட்கு இது பொருந் தலாம். இருக்கும் வளத்திற்குமேல் மக்கள் தொகை மிகுதி யாயுள்ள இந்தியா போன்ற நாடுகட்கு இது பொருந்தாது. இந்தியாவிலும் மக்கள் தொகை குறைவாக இருந்த அந்தக் காலத்தில், மிகுதியான பிள்ளைப் பேற்றுக்கு யாரும் தடை சொன்னதில்லை. இப்போது வளம் மிகுந்துள்ள நாடுகளும் பிள்ளைப் பேற்றைப் பெருக்கிக்கொண்டு போனால் பின் னர் ஒரு காலத்தில் இந்தியாவினது போன்ற நிலையை அடைய வேண்டியிருக்கும்.

வேண்டும் காரணங்கள்:

பிள்ளைப் பேற்றைக் குறைக்கக்கூடாது என்போர் கூறும் காரணங்கள் இந்தக் காலத்தில் எளிதில் மறுக்கத் தக்கனவே. முதல் காரணம்: பிள்ளைப் பேறு கடவுளின் செயல்-கடவுளின் அருள் - எனவே, கடவுளின் செயலுக்கு மாறாகச் செயற்கை முறையில் தடை செய்யலாகாது என்பது சிலரது எதிர்ப்பு. பிள்ளைப் பேறு கடவுளின் செய லன்று; மக்களின் செயலேயாகும். கடவுளின் செயல் எனில் மாந்தரால் மருத்துவ வசதி கண்டுபிடிக்கப்படாத அந்தக் காலத்தில், பிறந்த பிள்ளைகளுள் பெரும்பாலோரைக் குழந்தைப் பருவத்திலேயே கடவுள் சாகடித்து வந்தது ஏன்? விரைவில் இறக்கப் போகும் குழந்தைகளைப் பிறப் பித்த வீண்வேலை எதற்கு? பிறப்பித்த எல்லாக் குழந் தைகட்கும் போதுமான வயதும் உண்டி உடை உறையுள்

முதலியனவும் கடவுளால் ஏன் கொடுக்க முடியவில்லை? எனவே, பிள்ளைப் பேறு கடவுளின் செயல் அன்று; மாந்தரின் செயலே. ஒரு சிலர்க்கு ஒரு பிள்ளையும் பிறக்காமையும் வேறு சிலர்க்குச் சில பிள்ளைகளே பிறப்பதும், மற்றையோர்க்கு மிகுந்த பிள்ளைகள் பிறப்பதும் இயற்கையின் அமைப்பாகும். எனவே, கடவுள் பெயரைக் கெடுக்கலாகாது.

அடுத்த காரணம்: பிள்ளையின்ப மாகும்: பிள்ளைகள் இருவர் மூவரால் பெறும் இன்பம் போதாதா? மிகுதியான பிள்ளைகளால் துன்பமே யன்றி இன்ப மில்லை என்பதை யாரும் அனுபவத்தால் அறியலாம்.

அடுத்தது: உடைமைகளைத் துய்க்க: இருக்கும் பிள்ளைகள் துய்த்தால் போதும். மிகுதியான செல்வத்தில் குறிப்பிட்ட பகுதியைச் சமுதாயத்துக்கு அளித்து விட வேண்டும். தம் பிள்ளைகளும் உழைத்து வாழவேண்டும்.

அடுத்தது: இறுதிக் காலத்தில் பெற்றோரைப் பேணிக் காக்க: இஃது ஒத்துக் கொள்ளவேண்டியதே. இருவர் –மூவர் பேணிக் காக்கப் போதாதா? அளவற்ற பிள்ளைகள் இருப்பின், அந்தப் பிள்ளையிடம் போ – இந்தப் பிள்ளையிடம் போ எனப் பிள்ளைகள் பெற்றோரைப் பிடித்துத் தள்ளுவதைப் பார்க்கிறோமே! சில இடங்களில் மகன் ஒத்துக்கொள்ளினும் மருமகள் ஏற்றுக் கொள்வதில்லையே! "மூன்று பிள்ளைகள் பெற்றவர்கட்கு முக்கூட்டில் சோறு – நான்கு பிள்ளைகள் பெற்றவர்கட்கு நாற்சந்தியில் சோறு" (அஃதாவது பிச்சைச் சோறுதான்) – என்னும் பழமொழி ஈண்டு நினைவு கூரத் தக்கது.

அடுத்தது: ஆள் துணை–ஆள் வலு: இந்தக் காலத்தில் அரசின் காவலும் துணையும் சீர்பெற இருப்பதால், தனிப் பட்டவர்க்கு மிகுந்த ஆள் வலுவேண்டா.

அடுத்தது: சேயும் தாயும் மிகுதியாகச் சாவது: இந்தக் காலத்தில் புதிய மருத்துவ வசதிகள் பெருகியிருப் பதால் சாவு மிகவும் குறைவு. எனவே, இது பற்றிய அச் சம் வேண்டா!

அடுத்தது: பிள்ளை பெறாதவர் பாவிகள்: பொறுப் பற்று மிகுதியான பிள்ளைகளைப் பெற்றுப் போட்டுச் செல்பவர்களே பாவிகள்; இவர்கள் தமக்கும் தொல்லை தேடிக்கொண்டவராவர்–தம் பிள்ளைகட்கும் சமுதாயத் துக்குங்கூட தொல்லை விளைவித்தவராவர். எனவே, இவர்களே கொடும் பாவிகள் ஆவர்.

அடுத்தது: சமுதாயத்தில் சிறுபான்மையினராயிருப் பது: சிறுபான்மையினருக்குப் பெரும் பான்மையினர் தொல்லை தரலாகாது; தொல்லை தர அரசும் இடம் தர லாகாது. சிறுபான்மையினர்க்கும் அரசு போதிய ஆதரவு தரவேண்டும். இவ்வாறு நடைபெறின், சிறுபான்மையினர் என்ற அச்சத்திற்கு இடமில்லை. இந்த ஆதரவு இந்தக் காலத்தில் கொடுக்கப்பட்டு வருவதாகவே தெரிகிறது. எனவே கவலை வேண்டா. சிறுபான்மையினர்க்குப் புரட் சிகரமான ஒரு வேண்டுகோள் வருமாறு: சிறு பான்மையி னர்பிள்ளைப் பேற்றைப் பெருக்குவதும், பெரும்பான்மையி னர் பிள்ளைப் பேற்றைச் சுருக்குவதும் ஒரே சமயத்தில் தொடர்ந்து நடைபெற்று வரின், ஒரு காலத்தில் இரு சாரா ரும் மக்கள் தொகையில் சமமாகி விடுவர். இந்த நிலைமை நேரக்கூடாது. இருவேறு சமூகத்தினர் சமமாக உள்ள

இடங்களில் அடிக்கடிக் கலகம் ஏற்படக் கொலை-குத்து -வெட்டு நேர்வதையும், ஒரு சாரார் சிறுபான்மையின ராயும் மற்றொரு சாரார் பெரும்பான்மையினராயும் உள்ள இடங்களில் இவ்வாறு கலகம் நேராமையையும் உல கியலில் காணலாம். எனவே, இரு வேறு சமூகத்தினரும் ஒரே சமூகத்தினராய் ஒன்றி விடுவது நன்று.

அடுத்த காரணம்: பிற நாடுகளுடன் போர் புரிவதற் காக ஆள் வலு தேவை: உலகில் போர் கூடாது. ஒரு நாட்டினர் மற்ற நாட்டினருடன் ஒன்றி வாழ வேண்டும். பிள்ளைகளை மிகுதியாகப் பெறுவித்துப் போரின் பெய ரால் வீணே பலி கொடுப்பது கொடுமையிலும் கொடுமை.

அடுத்தது: இரண்டு பிள்ளைகள் மட்டும் பெற்றிருந் தால், இரண்டும் இறந்து விடின் என்ன செய்வது என்ற அச்சம்: இந்த அச்சம் ஒப்புக்கொள்ளக் கூடியதே! பிள் ளைகள் குறைவாயிருப்பதால் முழுக் கவனத்தையும் செலுத்தி -முழு முயற்சியையும் செலவிட்டு விழிப்புடன் பேணிக்காத்தால், மருத்துவ வசதி மிகுந்த இந்தக் காலத் தில் பெரும்பாலும் இறப்பு நேராது. அவ்வாறு நேர்ந்து போயினும், பிள்ளை யிலார்க்குப் பொதுவாகச் சமூகம் பெரிய உதவி புரிய வேண்டும். சிறப்பாக, அரசு அவர் களைச் சிறந்த முறையில் பேணிக் காக்க வேண்டும். பிள்ளையிலார் பிறர் பிள்ளைகளைத் தத்து எடுத்துக் கொண்டும் மன நிறைவு பெறலாம்.

அடுத்தது: பல பிள்ளைகள் பெற்றால்தான் ஒரு பிள்ளை நல்ல பேர் சொல்லும் என்று சிலர் கூறும் சப்பைக் கட்டுக் காரணமாகும்: இவர்கள், பெற்றோருக்குப் பதினான் காவது பிள்ளையாகிய 'இரவீந்தர நாத் தாகூர்' போன்ற

வர்களை எடுத்துக் காட்டுவர். தாகூர் நோபல் பரிசு பெற்ற உலக இலக்கிய மேதை யல்லவா? இவருடைய பெற்றோர் இரண்டு பிள்ளைகளோடு நிறுத்திக் கொண் டிருப்பின் இரவீந்திரநாத் தாகூர் உலகிற்குக் கிடைத்திருப் பாரா? ---என்றெல்லாம் கூறுவர். இன்னும், இவர் பத் தாவது பிள்ளை- அவர் பதினைந்தாவது பிள்ளை-எனப் பலரைக் குறிப்பிட்டு அடுக்கிக் கொண்டே செல்வர்.

இங்கே அடியேனைப் பற்றி ஒரு சிறிது உரைக்க ஒப்பு தல் வேண்டுகிறேன்: யான் என் பெற்றோர்க்குக் கடைக் குட்டி-பன்னிரண்டாவது பிள்ளையாவேன். எனக்கு முன் பிறந்த பதினொருவரும் ஒரு நற்பெயரும் தேடாது மறைந்து போயினர். யான் ஒருவனே, பொதுவாக மக்கட் சமூகத்துக்கும், சிறப்பாக எனது தாய் நாடு - தாய்மொழி - இலக்கியம் முதலியவற்றுக்கும் ஒரு சிறிதாவது உழைத் துக்கொண் டிருக்கிறேன். என் பெயர் சண்முகம்; என் தந்தையாரின் பெயர் சுந்தரம்; இந்த இரு பெயர்களையும் இணைத்து என் பெயரைச் 'சுந்தர சண்முகனார்' என வழங்கும்படிச் செய்து கொண்டேன். என் தந்தையார் 1942 ஆம் ஆண்டில் இறந்த பின்பும் இன்று (1986) வரை யும் அவரது பெயர் மறையாதபடிக் காத்து வருகிறேன். என் தந்தையார் பெரிய கணியர் (சோதிடர்). யான் பிறந்ததும், என் தந்தையார் என்பிறப்புக் குறிப்பைப் (சாதகத்தைப்) பார்த்து விட்டு, நம் பெயரைச் சொல்லக் கூடிய பிள்ளை பிறந்து விட்டான் - இனி அடுத்த பிள்ளை வேண்டா - என எண்ணிப் பிள்ளை பெறுவதை என் னோடு நிறுத்திக் கொண்டார் போலும்! இது வேடிக்கைக் கூற்று என விடுக்க. என் தந்தையார் சில பிள்ளைகளோடு அமைந்திருப்பின், ஒரு சிறிதாவது பொதுப்பணி புரியும் யான் எங்கள் குடும்பத்துக்குக் கிடைத்திருக்க மாட்டேனே

என்று சிலர் கூறலாம். இங்கே எனது பட்டறிவைக் கொண்டு, இந்தக் கொள்கையை மறுக்க முற்படுவேனாக:-

என் தந்தையார் என்னைத் தவிர மற்ற பிள்ளைகளைப் படிக்க வைக்க வில்லை - முன்னுக்குக் கொண்டு வரவில்லை. மற்றவர்களுள் சிலரையாவது படிக்கவைத்திருந்தால் அவர்களும் நல்ல பெயர் சொல்லியிருப்பர். என்னைப் பெற்றிருக்க வேண்டியதில்லை. பிள்ளைச் சுமையின் மிகுதியினால் ஒன்றும் செய்ய முடியாமற் போயிற்று. எல்லாப் பிள்ளைகளையும் கெடுத்து விட்டோமே- ஒரு பிள்ளையையாவது முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற பொறுப்புணர்வு இறுதியிலாவது அனுபவத்தின் வாயிலாகத் தோன்றியதால் என்னையாவது முன்னுக்குக் கொண்டுவந்தார் போலும்.

எங்கள் பன்னிருவருள், மூவர் குழந்தைப் பருவத்திலேயே இறந்து போக, தமக்கையர் இருவர் பிளளைப் பேற்றின் போது இறந்து போக, மீதி எழுவரே ஓரளவு நீண்ட நாள் நிலைத்தோம். எங்கள் பெற்றோர் இருவரும் இறந்து போயினர். பிள்ளைகளாகிய யாங்கள் எழுவருள் நால்வர் ஆடவர் – மூவர் பெண்டிர். இந்தப் பெண்கள் மூவரும் சிற்சில சமயங்களில் தாய் வீட்டுக்கு வந்து போவது வழக்கம். இஃது உலகியலே. இந்தப் பெண்கட்குச் சோறு போட வேண்டி நேர்ந்ததாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ, என் பெரிய அண்ணனின் மனைவியாகிய என் பெரிய அண்ணியார், "ஏழு குட்டி போட்டு விட்டுப் போனாள், இன்னும் தொலைக்கிறேன் - ஏழு குட்டி போட்டு விட்டுப் போனாள், இன்னும் தொலைக்கிறேன்" – என, இறந்து போன என் அன்னையாரைக் குறிப்பிட்டு அடிக்கடி வைவது வழக்கம்.

இதைக் கேட்கக் கேட்க எனக்குக் குருதி கொதிக்கும். ஆனால் யான் ஒன்றும் பதில் பேசியது கிடையாது.

என் அண்ணியார் வைதது இருக்கட்டும். யானே சில சமயங்களில் என் பெற்றோரை நொந்தது உண்டு. எனக்குத் திருமணம் ஆவதற்குமுன்பே - என் இருபதாம் வயதில்–என் பெற்றோர் இருவரும் இருதிங்கள் இடைவெளியில் அடித்தடுத்து இறந்து விட்டனர். என் அண்ணன்மாரும் அண்ணிமாரும் தமக்குள் பொருது கொண்டு என் திருமணத்தைக் கவனிக்கவில்லை. எனவே, யான் என் பொறுப்பில் பெண் தேடி ஏதோ திருமணம் எனச் செய்து கொண்டேன். என் மண ஏற்பாடு எனக்குப் பல்லாண்டுகள் வரை மன நிறைவு இன்றிக் குறையாகவே இருந்தது. இதனால், வயதான காலத்தில் என்னைப் பெறாமல் இருந்திருக்கலாமே எனப் பெற்றோரை நொந்ததுண்டு. மூளைக் கட்டி (Brain Tumour) நோயால் யான் பல முறை ஊதிய இழப்புடன் உயிரோடு போராடுவது உண்டு; இப்போதும் உயிரோடு போராடிக் கொண்டே இந்த நூலை எழுதிக்கொண்டிருக்கிறேன். வயதான காலத்திலும் காம வெறி குறையாமல் என்னைப் பெற்றார்களே என்று யான் இது போன்ற நேரங்களிலும் நோவதுண்டு. பொறுப்பற்று என்னைப் பெற்றனரே – இந்த ஆண்டு என் பெற்றோர்க்கு நினைவுநாள் (திவசம்) கொண்டாடக் கூடாது என்று சில ஆண்டுகளில் யான் என் மனைவியிடம் கூறுவதுண்டு. விடாப் பிடியாய் என் மனைவி நினைவுநாள் கொண்டாடுவாள். எங்கட்குப் பிள்ளைகள் இருவரே என்பதையும் கூறிக்கொள்கிறேன். எண்ணத்தின் சிதறலால் சில சமயம் என் பெற்றோரை நொந்த யான், பன்னிரண்டாவது - கடைக்குட்டிப் பிள்ளையாகிய என்மேல்

அளவு கடந்த பற்று - பாசம் வைத்திருந்த என் பெற்றோர் பால் மிக்க கடமையுணர்வு உடையவனே.

என் சொந்த வரலாற்றை இங்குக் குறிப்பிட்டமைக் காகப் பொறுத்தருள வேண்டுகிறேன். பட்டறிவு வாயி லாகச் சில படிப்பினைகளை எடுத்துக்காட்டவே என் சொந்த வரலாற்றை ஈண்டு தந்தேன். சில படிப்பினை களாவன: (1) மிகுதியான பிள்ளைகளைப் பெற்றமை யால், எல்லாரையும் சிறந்த முறையில் பேணிக்காக்க முடி யாமை'(2) இளம் பருவத்திலேயே சிலர் இறக்கநேர்ந்தமை. (3) அடிக்கடிப் பிள்ளைகளை இழந்தமையால் பெற்றோர் கள் பெருந்துயர் எய்தியமை. (4) எல்லாப் பிள்ளைகட்கும் எதிர்காலத்துக்கு வேண்டிய வாய்ப்பு வசதிகட்கு வித்து இட முடியாது போனமை. (5) சாகுங் காலத்தில் என்னை ஆதரவு இன்றி விட்டுப் போகின்றமை குறித்து ஆற்றொ ணாத்துயரம் அடைந்தமை. (6) எல்லாவற்றுக்கும் மேலாக இறந்த பிறகும், 'பல குட்டி போட்டு விட்டுப் போனார் கள்' என என் அண்ணியாரின் வசை மொழிகளை வாங் கிக் கட்டிக் கொண்டமை. இன்ன பிற. இந்தத் தீமைகள் யாவும் மிகுதியாகப் பிள்ளைகள் பெறுவோர்க்கு உண்டு என்பதைப் படிப்பினையாகக் கொள்ளலாம். பெற்றோர் கள் ஆண்மகன் ஒருவனையும் பெண்மக்கள் எழுவரையும் பெற்றுப் போட்டுவிட்டுப் போன குடும்பங்களில், ஆண் மகன் ஒருவன், உடன் பிறந்த பெண்கள் எழுவர்க்கும் திரு மணம் செய்து வைக்கவும் தொடர்ந்து சீர் வரிசைகள் செய்து கொண்டிருக்கவும் படும் பாடு சொல்லும் தரத்த தன்று. இந்த நிலையை ஏற்படுத்திய பெற்றோர்கள் பெரும் பாவிகளே.

அடுத்து,- பிள்ளைகளை மிகுதியாகப் பெறுவதற்கு உரிய முதன்மையான பெரிய காரணம் காமப் பசியின்

கொடுமையாகும்: இந்தப் பசி ஓரறிவு உயிர் முதல் எல்லா வகையான உயிரினங்கட்கும் உண்டு. இதனை வெல்வது கடினமே. உயிர்கட்கு உள்ள இயல் பூக்கங்களுள் (Instincts) இந்த 'இனப்பெருக்கக் காம ஊக்கம்' (Instinct of Reproduction) என்பதும் ஒன்று. அஃறிணை உயிரிகளால் இயலாவிடினும் உயர்திணை உயிரியாகிய மக்களினம் இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல், விலங்குகட்கும் மாந்தர்க்கும் வேற்றுமையில்லாது போய்விடும்; அடுத்தடுத்துப் பல குட்டிகள் போட்டுக் கொண்டிருக்கும் பன்றிகளின் கதையாகிவிடும். இயற்கை முறையில் பிள்ளைப் பேற்றைக் கட்டுப்படுத்த இயலாவிடினும் செயற்கை முறையிலாவது கட்டுப்படுத்த முயல வேண்டும். மகவூக்கம் (Parental Instinct) அளவோடு இருக்க வேண்டும்.

இது காறும், பிள்ளைப் பேற்றைக் குறைக்கக்கூடாது என்போர் கூறும் காரணங்கட்கு மறுப்புக்கள் தரப்பட்டன. மிகுதியான பிள்ளைப் பேறு கூடாது என்பதற்குரிய காரணங்கள் சில தம்மில்தாமே மேலே பெறப்பட்டிருப்பினும், அவற்றை இன்னும் சிறிது சிறப்பாக விதந்து காண்பாம்:

வேண்டாக் காரணங்கள்:

1) மிகுந்த பிள்ளைப் பேற்றால் சில குழந்தைகள் இறந்து போவது உண்டு.

2) இடைவெளி இன்மையால் தாய்க்கும் சேய்க்கும் நோய் உண்டாதல்-உடல் நலம் கெடுதல்-விரைவில் சாவை நோக்கிச் செல்லுதல்.

3) எல்லாருக்கும் உணவு, உடை, உறையுள் முதலிய வசதிகள் போதாமல் வறுமையால் வாடுதல். ஆனால், செல்வர்கட்கு வறுமை இன்மையால் அவர்கள் மிகுதியாகப் பிள்ளைகள் பெறலாமே என்று வினவலாம். உண்டாக்கப் படும் பொருள்கள் எல்லாம் செல்வர்களின் குடும்பங்கட்குச் சரியாகிவிடும்; மற்றவர்கள் எங்கே போவது? இதனால் விலைவாசி ஏற்றம் பெறும்; ஏழைகளின் நிலைமை என்னாவது?

4) எல்லாப் பிள்ளைகட்கும் வாழ்க்கைக்குப் போதுமான வாய்ப்பு-வசதிகளை இப்போதும் அளிக்க முடியாது-எதிர்காலத்தில் அவர்களின் வாழ்க்கை வளம் பெறுவதற்கு வேண்டிய வித்தும் இடமுடியாது.

5) பிள்ளைப் பெருக்கத்தைக் குறிப்பிட்ட நாடு சுமக்க முடியாமல் பிற நாடுகளிடம் உதவிக்குக் கெஞ்சவேண்டி வரும். இதனால் மற்றவர்க்கும் தொல்லை கொடுத்ததாகும்.

6) எல்லா நாடுகளிலும் இவ்வாறு மக்கள் தொகை பெருகி விட்டால், இந்த மண்ணுலகுக்குமேல் வேறு உலகங்களில் இடம் தேட வேண்டியதுதான்.

7) பிள்ளைகள் பெருகப்பெருக, அவர்களுக்காக மிகுந்த செல்வம் சேர்த்து வைக்கத் தீய வழிகளில் செல்லவேண்டி வரலாம். இதனால், பொய் ,புரட்டு, ஏமாற்று, வஞ்சகம், களவு, கள்ள வாணிகம், கள்ளக் கறுப்புப் பணம், கள்ளக் கணக்கு, கையூட்டு (இலஞ்சம்), கலப்படம், பிறர் பொருளைக் கவர்தல்-கையாடல், கொலை, கொள்ளை முதலிய கொடிய தீமைகள் ஏற்படும்.

8) நாடும் வீடு போன்றதே. வீட்டில் பிள்ளைகள் பெருகினால் என்ன நிலைமை ஏற்படுமோ-அது போன்ற நிலைமையே நாட்டில் மக்கள் தொகை பெருகினாலும் ஏற்படும். செர்மனியிலும் இத்தாலியிலும் மக்கள் தொகை பெருகிவிட்டதால் முறையே ஹிட்லரும் முசோலினியும் வேறு நாடுகளைப் பிடிக்க முயன்றதால் இரண்டாவது உலகப் பெரும்போர் தோன்றியதாகச் சொல்லப்படுகிறது

9) உலகில் வாழ்க்கையில் பெரும்பகுதி துன்பமாகவே உள்ளது. ஒவ்வொருவரும் தம் வாழ்நாளைக் கடத்தி முடிக்க எவ்வளவோ பாடு படவேண்டியுள்ளது. எனவே, பிள்ளைகளைப் பெற்றுத் தள்ளிப் பெருந்துன்பங்கட்கு உள்ளாக்குவது பெரிய பாவம்.

10) பொதுவாகப் பெரும்பாலும் மாந்தர்கள் நேர்மையற்றவர்கள். எல்லாத் துறைகளிலும் மாந்தர்கள் ஊழல் புரிகின்றனர். நேர்மையான மாந்தன் ஒருவனைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காகக் கிரேக்க மெய்யறிவாளராகிய 'சாக்ரடீசு' என்பவர், பகலில் விளக்கு எடுத்துக் கொண்டு போனதாகக் கூறப்படும் வரலாறு அறிந்ததே. எனவே, பொல்லாத மக்கட் பிறவிகளைப் புழுக்க வைப்பதேன்?.

இதுகாறும் கூறியவற்றால், வீட்டில் பிள்ளைப் பெருக்கம்-உலகில் மக்கள் பெருக்கம் கூடாது என்னும் கொள்கை தெற்றென விளங்கலாம். கணவன் மனைவியர் இருவரும் தமக்குப் பதிலாகப் பிள்ளைகள் இருவரைப் பெற்று உலகுக்குத் தந்து விட்டுப் போனால் போதும். இதனால், வீட்டுக்கும் நாட்டுக்கும் உலகுக்கும் அவர்கள் நன்மை செய்தவர்களாவர். இந்த அளவில் சென்றாலேயே, எதிர்காலத்தில் ஏராளமாகப் பெருகிவிடக்கூடிய அச்சம் உள்ளது. எனவே கட்டுப்பாடு மிகவும் இன்றியமையாதது.

## கட்டுப்பாட்டு முயற்சிகள்:

இயல்பூக்கங்களுள் காமப் பசிநோய்-காமவெறி நோய் ஒன்று; அதை வெல்வது கடினம்-என்பது முன்னரே கூறப் பட்டுள்ளது. இந்த நிலையில், பிள்ளைப் பேற்றைக் கட்டுப் படுத்துவது எப்படி? இதற்காக உலகநாடுகள்-உலகப் பேரறிஞர்கள், பிறப்புக் கட்டுப்பாடு' (Birth control), குடும்பத்திட்டம், (Family planning), 'குடும்பக்கட்டுப் பாடு' (Family Limitation) முதலிய பெயர்களில் எவ்வளவோ முயற்சி எடுத்து வருவது கண்கூடு. இதற்கு உலக மக்களின் ஒத்துழைப்பு வேண்டும். இயற்கைக் கட்டுப்பாட்டாலும் செயற்கைக் கட்டுப்பாட்டாலும் இந்த முயற்சியில் வெற்றிகாண முடியும். இவை குறித்துச் சிறிது ஆராயலாம்.

## இயற்கைக் கட்டுப்பாடு:

கணவனும் மனைவியும் பிள்ளைகள் இருவரை இடைவிட்டுப் பெற்றபின், காம வேட்கையை-காம வெறியை அடக்கி, மனக் கட்டுப்பாட்டுடன் தாம் உடலுறவு கொள்ளாமல் இருப்பதே இயற்கைக் கட்டுப்பாடாகும். இந்த முறையையே அண்ணல் காந்தியடிகள் போன்றோர் பரிந்துரைத்துள்ளனர். காந்தியடிகளின் இந்தக் கருத்தை எழுதுபவர்கள், அதைத் தொடர்ந்து, இது, காந்தியடிகள் போன்றோரால் இயலுமே தவிர எல்லாராலும் இயலாது என்னும் "ஒப்பாரி" வைக்கத் தவற வில்லை. இயற்கைக் கட்டுப்பாடு ஏன் முடியாது? உலகில் திருமணம் செய்து கொள்ளாத ஆடவர்களும் பெண்டிரும் துறவியர்களும் எவ்வாறு வாழ்கிறார்கள்? இவர்களுள் சிலர்மீது களங்கம் சுமத்தினும் பலர்மீது களங்கம் கற்பிக்க முடியாது. எனவே, எல்லாரும் முயன்று பார்க்கலாம். இயற்கைக் கட்டுப்பாட்டைக் கைக்கொள்ள முடியாதாரின் நிலைமை என்ன

வெனில், அவர்கள் செயற்கைக் கட்டுப்பாட்டைக் கடைப் பிடிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

செயற்கைக் கட்டுப்பாடுகள்:

கணவனும் மனைவியும் உடலுறவு செய்து கொண்டே பிள்ளை பிறக்காதிருக்கும் வழியைப் பின்பற்றுதலே செயற்கைக் கட்டுப்பாடாகும். இந்தக் கட்டுப்பாட்டு முறை பலவாகும். அவற்றுள் சில காண்போம்:-

(1) கணவனும் மனைவியும் கூடா நோன்பு கொள்ளும் முறை இயற்கைக் கட்டுப்பாட்டு(Abstinence)முறை ஆகும் இது முடியாதவர்கள், பெண்ணின் வீட்டு விலக்கு(Menses) நாளுக்குப் பின் எத்தனையாவது நாள்களில் கூடினால் கருத்தரிக்கும்-எத்தனையாவது நாள்களில் கூடினால் கருத்தரிக்காது-என்பதையறிந்து, கருத்தரியா நாள்களில் கூடலாம். இந்த முறை ஆங்கிலத்தில் 'Safe Period method' அல்லது 'Rhythm Method' என்று வழங்கப்படுகிறது. இந்த முறையில் கருத் தரியா நாள்களைச் சரியாகக் கணித்தறிவது இன்றியமையாததாகும். பூப்பு (விலக்கு) வந்து தலைமுழுகியபின் அடுத்த பன்னிரண்டு நாளும் கருத் தரிக்கும் காலம் ஆதலின், அந்தக் காலத்தில் தலைவன் தலைவியைப் பிரியாது கூடினால் கருத்தரிக்கும் என்பதாகப் பழந்தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளது.

> "பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
> நீத்தகன்று உறையார் என்மனார் புலவர்"
>
> (தொல்–பொருள்–கற்பியல் - 46)

என்பது தொல்காப்பிய நூற்பா.

''தீண்டாநாள் முந்நாளும் நோக்கார் நீராடியபின்
ஈராறு நாளும் இகவற்க என்பவே
பேரறி வாளர் துணிவு'' (42)

என்பது ஆசாரக் கோவை நூற்பாடல்.

''பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீராடிய பின் ஈராறு நாளும்
கருவயிற் றுறூஉங் கால மாதலிற்
பிரியப் பெறாஅன்'' (அகத்திணை யியல் - 11)

என்பது நம்பியகப் பொருள் விளக்க நூற்பா.

'பூப்பின் புறப்பாடு' என்னும் தொல்காப்பிய நூற்பாவின் உரையில், 'பூப்பின் முன் ஆறு நாளும் பின் ஆறு நாளும் என்று உரைப்பாரும் உளர்'-என உரையாசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்துள்ளார். இதனால், பூப்பின் முன் ஆறு நாளும் பின் ஆறு நாளும் கருத்தரிக்கும் காலமாகும் என்னும் கொள்கையும் உண்டு என்பது புலப்படும்.

இந்தக் கால அறிவியல் முறையில் கருத்தரிக்கும் காலம் (Fertile Period) வேறு விதமாகக் கூறப்படுகிறது. முற்றும் முடிந்த முடிவா யில்லாமல் தோராயமாகக் கூறப்படும் ஒரு கருத்து வருமாறு: ''பூப்பு வந்து நீராடியபின் ஆறாம் நாள் முதல் இருபத்தோராம் நாள் வரையும் கருத்தரிக்கும் காலமாகும்; பிள்ளை வேண்டாதார் இந்த நாட்களில் கூடலாகாது. இதுவே சரியான கணக்கு என்றும் சொல்லமுடியாது. இந்தக் கால அளவு பெண்ணுக்குப் பெண் மாறுபடலாம். ஒரு பெண்ணுக்கே திங்களுக்குத் திங்கள் மாறுபடலாம். கவனித்துச் செயல்பட வேண்டும்'' -என்பதுதான், இந்தக் காலத்தில் கூறப்படும் ஒருவகைக்

கருத்தாகும். இஃதும் இயற்கைக் கட்டுப்பாட்டு முறை யைச் சேர்ந்ததாயினும், காலம் பார்த்துச் செயல்பட வேண்டியிருத்தலின், ஒரு வகைச் செயற்கைக் கட்டுப் பாட்டு முறைபோல் எண்ணத் தோன்றுகிறது.

2) அடுத்த கட்டுப்பாட்டு முறை 'கணவனது கவன முறை' (Husband Careful Method) ஆகும். உடலுறவு கொண்டிருக்கும்போது, கணவனது விந்து (Semen = ஆண் கரு) வெளிப்படும் நேரத்தில், அவன் தன் ஆண் குறி உறுப் பைப் பெண் குறி உறுப்பிலிருந்து உடனே எடுத்துவிட வேண்டும். இதனால், ஆண் கரு பெண் கருவோடு சேர்ந்து குழந்தை உருவாக வாய்ப்பில்லாமல் போகிறது. காம எழுச்சியினால்-உணர்ச்சி வயப்பட்டு மயங்கி விடாமல் கணவன் கவனமாக உடனே இதைச் செய்ய வேண்டு மாதலின், இது 'கணவனது கவன முறை' எனப்படும். இந்த வெளியாக்கும் முறை (Withdrawal Method), உணர்ச்சியின் உயர் எல்லைக் கட்டத்தில் உள்ள ஒரு சில ரால் முடியாதுதான்! முடிந்தால் நல்லதே! இந்த முறை எளியது; செலவு இல்லாதது; துன்பம் தராதது; தொன்று தொட்டுப் பல நாடுகளிலும் பலராலும் பின்பற்றப்படுவது. பிள்ளை வேண்டாதவர், ஆண் கரு பெண் உறுப்புக்குள் சிந்த விடாதபடிக் கவனமாக இம் முறையைப் பின்பற்றிப் பயன் காணலாம்.

3) அடுத்த முறை: கருத்தடை நுரை மாத்திரை யைப் பயன் படுத்தலாகும். இத்தகைய மாத்திரை ஒன் றைப் புணர்ச்சிக்கு முன் பெண் உறுப்புக்குள் செலுத்த வேண்டும்; பின்பு புணர்ந்தால், பெண் உறுப்பிலிருந்து கசி யும் நீரில் இந்த மாத்திரை கரைந்து ஆண் கரு அணு பெண் கரு முட்டையுடன் சேராதவாறு தடுத்து விடும்-

ஆண் கரு அணுவை அழித்தும் விடும். இதற்கு 'அணு மருந்திடல் முறை' (The Spermicidal Method) என்று பெயராம்.

4) எலுமிச்சம் பழத்தைப் பாதியாக வெட்டி ஒரு பாதியைக் குடைந்து பள்ளமாக்கிப் பெண் உறுப்புக்குள் வைத்துப் புணர்ந்தால் ஆண் கரு பெண் கரு முட்டையை அடைய முடியாதவாறு தடை ஏற்படும். மற்றும் இப் பழத்தின் புளிப்பு ஆண் கருவை அழித்து விடுமாம்.

5) இவ்வாறே, பஞ்சுச் சுருள் (Cotton Plug), கடல் பஞ்சு (The Sponge) ஆகியவற்றைப் பெண் உறுப்புக்குள் வைத்துப் புணரினும் ஆண் கரு பெண் கரு முட்டையை அடையாதவாறு தடை ஏற்படும்.

6) தேனையோ வேப்பெண்ணெயையோ ஆண் உறுப்பிலும் பெண் உறுப்பிலும் தடவிக் கொண்டு புணர்ந்தாலும் கரு ஏற்படாதாம். தேனின் இனிப்பும் வேப்பெண்ணெயின் கசப்பும் ஆண் கருவை அழித்து விடுமாம்.

7) பெண் உறுப்புக்குள் வளையம் வைத்துப் புணர்வது ஒரு வகை முறை. மருத்துவ வல்லுநரின் அறிவுப்படி இதைக் கவனமாகக் கையாள வேண்டும்.

8) புணர்ச்சி முடிந்ததும் பெண் படுத்திராமல் உடனே எழுந்துவிட வேண்டும். கோழிபோல் குந்திக்கொண்டிருந்தால் ஆண் விந்து வெளியாகி விடலாம் என இம் முறை பரிந்துரைக்கப்படுகிறது.

9) ஒரு வகுப்பாரில், பெண்கள் ஆண்களின் மீது இருந்து புணர்ச்சி செய்வதாகவும், அந்த வகுப்பினரிடையே பிள்ளைப் பேறு குறைவாயிருப்பதாகவும் சொல்

லப்படுகிறது. தனிப்பட்ட வேறு சிலரும் இம்முறையைக் கையாளுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இதனால் ஆண் கரு பெண் கரு முட்டையை அடையும் வாய்ப்புக் குறைந்து கரு ஏற்படாமல் இருக்குமாம்.

10) பெண் புணர்ச்சி முடிந்ததும், கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு குந்துதலும் எழுதலும் மாறி மாறிச் சிறிது நேரம் செய்யின் ஆண் விந்து வெளியாகி விடலாம் என ஒரு முறை சொல்லப்படுகிறது. தும்முதலும் முக்குதலும் செய்தாலும் ஆண் விந்து வெளியாகலாமாம். தும்முவதற்காக மிளகுத் தூளையோ புகையிலைத் தூளையோ மூக்கில் மோந்தால் தும்மல் வரலாம்.

11) புலால் உணவு கொள்பவரினும் மரக்கறி உணவு கொள்பவருக்குப் பிள்ளைப் பேறு குறைவு என்பது ஒரு வகைக் கருத்து. அரிசி யுணவு பிள்ளைப் பேற்றை மிகுதியாக்கும் என்பது சப்பான் நாட்டு ஆராய்ச்சியாளரின் கருத்தாகும். வேறு சிலரும் இதை ஒப்புக்கொள்கின்றனர். எனவே, அரிசி உணவையும் புலால் உணவையும் குறைக்கலாம்.

12) மருத்துவரைக் கேட்டறிந்து கருத்தடை மருந்துகளையும் கருத்தடை உணவுப் பொருள்களையும் உட்கொள்ளலாம். பப்பாளிப் பழம் கருவைத் தடுக்கும் என்பது ஒரு வகைக் கருத்து. இதனால் பப்பாளிக்குக் கர்ப்பாக்கினி' என்னும் பெயரும் உண்டு.

13) ஆண் உறுப்பில் உறை மாட்டிக் கொண்டு புணர்தலும், பெண் உறுப்புக்குள் உறை செருகிப் புணர்தலும் கருவைத் தடுக்கும். இதனால், ஆண் கரு பெண் கரு

முட்டையை அடைய முடியாதபடி உறைக்குள்ளேயே தங்கிவிடும். இதில் கவனம் வேண்டும்.

14) இவை எல்லாவற்றையும் விட நம்பிக்கையான முறை அறுவை மருத்துவமாகும். ஆடவன் அறுவை மருத்துவம் செய்துகொண்ட பின்னர் எந்தப் பெண்ணோடு புணரினும் பிள்ளை பிறக்காது.

15) கணவன் செய்து கொள்ளாவிடினும், மனைவி அறுவை மருத்துவம் செய்து கொண்டு பிள்ளைப் பேற்றைத் தவிர்க்கலாம். இது நம்பகமான பயன் முறையாகும். இந்த அறுவை முறை இப்போது பரவலாகச் செய்யப்பட்டு வருகிறது. இதற்கு மக்கள் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்.

கொடிய முறைகள்:

இவ்வாறு பலவகை முறைகளைக் கொண்டு வீட்டிலும்-நாட்டிலும்-உலகிலும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தலாம்-கட்டுப்படுத்த வேண்டும். முற்காலத்தில் சில நாடுகள் மக்கள் தொகையைக் குறைக்கச் சில தீய வழிகளைப் பின்பற்றின. கொள்ளை நோய்களாலும் போர்களினாலும் மிகுதியான சாவுகள் நேர்ந்ததல்லாமல் வேறு வழிகளும் பின்பற்றப்பட்டன: பல்வேறு ஆப்பிரிக்கப் பழங்குடி மக்கள், ஆத்திரேலியப் பழங்குடியினர், அமெரிக்கச் சிவப்பு இந்தியர், பழையகிரேக்க,சீனக் குடிமக்கள், இந்தியாவின் பழைய இராசபுத்திர,குசராத்தியக் குடிமக்கள் முதலியோர் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தச் சில குழந்தைகளைக் கொலை செய்தனராம்.

உலகில் பல இனத்தவரிடையே, பெண்களை வீட்டில்

தனியிடத்தில் தங்கவைத்தல், கணவனையும் மனைவியையும் நீண்ட நாள் பிரிந்திருக்கச்செய்தல், கைம்பெண் மணத் தடை முதலியவற்றின் வாயிலாகக் கட்டுப்பாடு செய்யப் பட்டு வந்தது.

சில நாடுகளில் கருப்பு (பஞ்சம்) காரணமாக முதியவரைக் கொலை செய்தல், பிணியாளரைத் துறவு பூணச் செய்தல் முதலிய முறைகள் கையாளப்பட்டனவாம்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் கருச் சிதைவு வாயிலாகவும் பிள்ளைப்பேறு தடுக்கப் பட்டது. பல நாடுகளில் கருச் சிதைவுக்கு அரசு தடை விதித்திருந்தும், இது மறைவாக நடந்துகொண்டுதான் இருந்தது. இப்போது சில வகைக் கருச் சிதைவுகட்கு அரசுகள் ஒப்புதல் அளித்து வருகின்றன.

இந்தக் கொடிய முறைகளை நோக்க, அறுவை மருத்துவ முறை மிகவும் மேலானதாகும். கருத்தடை முறையை மதத் தலைவர்களும் அரசுகளும் பல நாடுகளில் எதிர்த்ததும் கருத்தடை பற்றிய நூல்கட்கு அரசு தடை விதித்ததும் உண்டு; இதைப் பரப்பியவர்கள் ஒறுப்புக்கு (தண்டனைக்கு உள்ளானதும் உண்டு.

## எதிர்ப்பின் காரணங்கள்

சில பல காரணங்களைக் காட்டிச் சிலர் கருத் தடையை எதிர்க்கின்றனர். அக்காரணங்களுள் சில:-

கருத்தடையும் ஒருவகைக் கொலைக் குற்றமேயாகும் என்று சொல்லப் படுகிறது. அங்ஙனமெனில், கொசு, ஈ, எறும்பு, மூட்டைப் பூச்சி முதலியவற்றைக் கொல்வதற்கு என்ன பெயராம்? புலால் புசிக்கலாமா? இவை அஃறிணை

உயிர்கள் எனில், உயர்திணை உயிர்களும் கொல்லப்படுகின்றனவே. ஒரு முறை வெளியாகும் ஆணின் விந்தில் சுமார் முப்பது கோடி ஆண் கரு உயிர் அணுக்கள் உள்ளனவாம். ஓர் ஊசி முனையில் உள்ள விந்தில் ஆயிரக்கணக்கான உயிர் அணுக்கள் உள்ளனவாம். இவற்றுள் ஓர் உயிர் அணு மட்டுமே பெண் கரு முட்டையுடன் கலந்து குழந்தையை உருவாக்குகிறதாம். மற்ற உயிர் அணுக்கள் அழிந்து போகின்றனவாம். பெண் கருமுட்டையும் இப்படியே. இங்கே பலகோடி உயிர்கள் கொல்லப்படுகின்றனவே. எனவே, இந்தக் காரணம் காட்டி மறுக்க முடியாது.

கருத்தடையால் உடல் நலம் கெடுகிறது-மூளைக் கோளாறு(பைத்தியம்)ஏற்படுகிறது-என்றெல்லாம் சொல்லி எதிர்க்கப்படுகிறது. எல்லாருக்கும்இப்படி ஏற்படுவதில்லை; எங்கோ இரண்டொருவர்க்கு ஏற்படுவது விதிவிலக்காகும்; இவர்கட்கும் உடல் நலக் கேடு வேறு காரணங்களாலும் ஏற்படலாம். ஒரு சில மருந்துகள் ஒருசிலருக்கு ஒத்துக் கொள்ளவில்லைதான். அதற்காக எல்லாருமே அம்மருந்துகளைக் கொள்ளாமல் விட்டுவிடுகின்றனரா என்ன?

ஆணும் பெண்ணும் கருத்தடை அறுவை மருத்துவம் செய்துகொள்வதால் சமுதாயத்தில் ஒழுக்கக் கேடு உண்டாவதாகச் சொல்லப்புடுகிறது. அஃதாவது, ஆடவன் தன் மனைவியல்லாத மற்ற பெண்களுடனும், பெண் தன் கணவன் அல்லாத வேறு ஆண்களுடனும் உடலுறவு கொள்ள இதனால் வழி ஏற்படுகிறது; இதனால்தான், மனைவிமேல் நம்பிக்கையில்லாத ஆடவர் சிலர், மனைவி கருத்தடை செய்து கொள்வதைத் தடுத்துத் தாம் கருத்தடை செய்து கொள்கின்றனர்; ஆண் பெண் கருத்தடை முறையினால், கற்பொழுக்கம் கெட, மக்கள் வாழ்க்கை விலங்குகளின்

வாழ்க்கையைப் போல் ஆகிவிடுகிறது-என்றெல்லாம் கூறப் படுகிறது. எல்லா ஆடவரும் பெண்டிரும் கற்பு நலம் கெட்டு ஒழுக்கக் கேட்டுக்கு உள்ளாவதில்லை. ஒரு சிலரே அவர்க்கே உரிய தீய பண்பினால் தீய வழியில் செல்வர் கருத்தடை செய்துகொள்ளதாரிடையும் கற்பு கெட்டு ஒழுக்கக் கேடு உண்டாவதைக் காணலாம். எனவே, எல்லா ரையும் ஒரே தட்டில் வைத்து நிறுத்துப் பார்க்கக் கூடாது.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திக் கொண்டே போனால் ஒரு காலத்தில் மக்கள் இனமே அழிந்துவிடக் கூடுமே என ஒரு சிலர் அச்சம் தெரிவிக்கலாம். இதனால் ஒன்றும் மக்களினம் அழிந்து விடாது-அழிக்கவும் முடியாது. அங்ஙனம் அழிந்தாலும், முன்தோன்றியது போல் மீண்டும் தோன்றிப் புழுத்துவிடும்.

எனவே, இன்ன பிற காரணங்களைக் கூறிக் கருத் தடையை எதிர்ப்பதோ மறுப்பதோ பொருந்தாது. அவ் வாறு எதிர்ப்பது மக்களினத்துக்குச் செய்யும் தீமையே யாகும்.

## பரப்பும் முயற்சிகள்

கருத்தடை நூல்களுக்கும்-வெளியீடுகட்கும், கருத் தடைப் பரப்புகைக்கும் (பிரசாரத்துக்கும்) தடை விதித்த நாடுகள் உட்பட, பரப்புநரை ஒறுப்புக்கு உள்ளாக்கிய நாடுகள் உட்பட, உலக நாடுகள் பலவும் இப்போது கருத் தடையை ஆதரிக்கவும் பரப்பவும் தொடங்கி விட்டன. இந்தியாவில் இம் முயற்சி முழு மூச்சாக நடைபெற்று வருகிறது.

தொடக்கத்தில் இம் முயற்சியில் ஈடுபட்டுத் தொடங்

கிய பெருமை, ஏ. டாயின்பி, மால்தஸ், திருமதி மேரிகார் மிக்கேல் ஸ்டோப்ஸ் (இங்கிலாந்து), டாக்டர் கார்வே, திருமதி தன்வந்தி ராமராவ் (இந்தியர்) முதலிய உலகப் பேரறிஞர்களைச் சாரும். ஸ்டோப்சும் அவர் கணவரும் முதல் பிரிட்டிஷ் கருத்தடை மருத்துவ மனையை ஏற்படுத்திய பெருமைக்கு உரியவர் ஆவார்கள். மேற்கூறிய அறிஞர்களைப் பின்பற்றிப் பல நாடுகளிலும் பலர் இம் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அரசுகளும் ஒத்துழைத்து வருகின்றன.

இது சார்பாகப் பல்வேறு முயற்சிகள் செய்து வரலாம். மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு ஆராய்ச்சி நிலையங்களைப் பல இடங்களிலும் ஏற்படுத்தி ஆராய்ச்சி செய்வித்து அரிய வழிமுறைகளை மக்கள் இனத்துக்கு அளிக்கலாம். இதற்கு வேண்டிய மருத்துவ மனைகளைப் பல இடங்களிலும் அமைக்க வேண்டும். சிறு சிறு வெளியீடுகள், தனிநூல்கள், செய்தி இதழ்கள், கூட்டங்கள், மாநாடுகள், வானொலி, தொலைக் காட்சி (டெலிவிஷன்), திரை ஓவியம் (சினிமா), விளம்பரப் பலகைகள் முதலிய துணைக் கருவிகளின் வாயிலாகப் பரப்புதல் (பிரசாரம்) செய்ய வேண்டும்.

தீய முறையில்-பெரிய அளவில் காம வேட்கையைத் தூண்டும் திரை ஓவியங்களையும் இதழ்களையும், நூல்களையும் கட்டுப்படுத்த வேண்டும். காம வெறியைத் தூண்டும்திரை ஓவியத்தைப் பார்த்துச் சுவைத்துவிட்டு வீட்டுக்கு வரும் கணவனும் மனைவியும் வேலையைத் தொடங்கி விடுவரே! காம உணர்ச்சியை அன்று-காம வெறியைத் தூண்டுகிற திரை ஓவியங்களையும் இதழ்களையும் நூல்களையும் நாட்டில் உலாவவிட்டு, இன்னொரு புறம் குடும்பக் கட்டுப்பாட்டைப் பரப்பும் முயற்சி, அறியாமையும்

பித்துக்கொளித் தனமுமாகும். இது, 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்'- என்ற மாதிரியாக இருக்கிற தன்றோ?

இவ்வாறு பல வழிகளில் நயமாக முயன்று பார்த்தும் பயன் இல்லையெனில், இரண்டு-ஏறினது மூன்று குழந்தை கட்குமேல் பெறக்கூடாது என்ற சட்டத்தை இயற்றிப் படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். இள மைத் திருமணங்களைத் தடுத்து, காலம் கடந்த திருமணங் கட்கு அரசுகள் ஆதரவு அளிக்க வேண்டும்.

### பதினாறும் பெறுதல்

பிள்ளை பெறும் நோக்காடு பெண்கட்கேயன்றி ஆண் கட்கு இல்லை. பிள்ளைகளை வளர்ப்பதில் உள்ள தொல் லைகளும் ஆண்களினும் பெண்கட்கே மிகுதி. இஃதறியா மையால், ஆடவர் பெண்டிரைத் தம் காம வெறிக்கு அடிக் கடி ஆளாக்கிப் பிள்ளை பெறும் பொறிகளாக (இயந்தி ரங்களாக) மாற்றக் கூடாது. சில குடும்பங்களில், பெண்க ளின் கட்டுக்கு அடங்காத காமப் பசியைத் தணிக்கவே, ஆண்கள் விருப்பம் இல்லாமலேயே அடிக்கடி உடலுறவு கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்படுவதாகவும் ஒரு கருத் துச் சொல்லப்படுகிறது. இவ்வாறு புகல்வது தாய்க்குலத் தைத் தாழ்த்துவதாகும். எல்லாப் பெண்டிரும் இத்தகை யர் அல்லர். எங்கோ ஒரு சிலர் இருக்கலாம்; அவர்களும் மனத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். இந்தத் துறையில் இருபாலாரும் கட்டுக்கு அடங்கித் தங்களையும் சமுதா யத்தையும் காக்க வேண்டும்.

குறிப்பாகத் தமிழ் நாட்டில் வழங்கப்படும் ஒரு செய் தியை ஈண்டு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. பெரியவர்கள்

இளந் திருமண மக்களை நோக்கி, ''பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க'' என வாழ்த்தும் மரபு தமிழ் நாட்டில் உண்டு. மக்கள், 'பதினாறும் பெறுதல்' என்றால் பதினாறு பிள்ளைகள் பெறல் எனத் தவறான பொருள் கொண்டு பிள்ளைகளைப் பெற்று அடுக்கத் தொடங்கிவிடுகின்றனர். 'பதினாறும் பெறுதல், என்றால், பதினாறு பேறுகளையும் (பாக்கியங்களையும்) பெறுதல் என்று பொருள் கொள்ளலே சரியாகும். பதினாறு பிள்ளைகளைக் குறிக்குமெனில், 'பதினாறும்' என 'உம்' போட வேண்டியதில்லை; 'பதினாறு பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' என்று சொன்னால் போதும். 'பதினாறும்' என்ற உம்மை, பேறுகள் பதினாறு உள்ளன - அத்தனைப் பேறுகளையும் பெறுக என்ற பொருளைத் தன்னில் தானே தருகிறது. திரை ஓவியம் பார்த்து விட்டு வரும் கணவனும் மனைவியும் இதைக் கவனித்து நடந்து கொள்ள வேண்டும். உண்மையில் பெற வேண்டிய பதினாறு பேறுகளைக் காளமேகப் புலவர் பின்வரும் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

''துதி, வாணி, வீரம், விசயம், சந்தானம், துணிவு, தனம்,
அதிதானியம், சவுபாக்கியப் போகம், அறிவு, அழகு,
புதிதாம் பெருமை, அறம் செயல், நோயகல், பூண், வயது,
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே.''

இந்தப் பேறுகளுள், 'சந்தானம்' என்னும் சொல்லால் 'மக்கட்பேறு' குறிக்கப்பட்டுள்ளது. எனவே, பிள்ளைப் பேறு பதினாறு பேறுகளுள் ஒன்றென உணர்க.

மரம் வைத்தவன்:

'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்ற மாட்டானா' என்பது தமிழ் நாட்டில் வழங்கும் ஒரு பழ மொழி. இங்கே 'மரம்' என்பது பிள்ளையையும், ''வைத்தவன்' என்பது கடவுளையும் குறிக்கும். அஃதாவது, கடவுள் செயலால் பிள்ளைகள் பிறக்கின்றனராம்; எனவே கடவுள் பிள்ளைகளைக் காப்பாற்று வாராம். இதை நம்பித் தான் மரங்களை (பிள்ளைகளை) வைத்து விட்டுப் போய் விடுகின்றனர் போலும்! இது தவறான கருத்து. ஒவ்வொருவரும் தத்தம் சொந்த முயற்சியாலும் மக்கட் சமுதாயத்தின் ஒத்துழைப்பாலுமே தண்ணீரைப் பெற முடியும். எனவே, கடவுளின் பேரால், பொறுப்பு இன்றிப் பிள்ளைகளைப் பெற்றுத் தள்ளுபவர்கள், அவர்களை நன்முறையில் முன்னுக்குக் கொண்டுவர இயலாமையால், அந்தப் பிள்ளைகளின் வசை மொழிகளையும் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான்! ஈண்டு,

''அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னும்
ஆடையும் ஆதரவாய்க்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் என்னைக்
குறித்த தல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்தில் என்றன்
துடுக் கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தை ஆகிய
பாதகனே''.

என்னும் பாடலின் உட்பொருளை ஊன்றி நோக்குக.

எனவே, மக்கள் பொறுப்பு உணர்ந்து, வீட்டில் பிள்ளைப் பேற்றைக் குறைத்தால் வீட்டிலும் நாட்டிலும் வளம் பெருகும். மொத்தத்தில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டால் உலகச் சமுதாயம் ஒழுங்கு பெறும். வேண்டாத மக்கள் பிறவியால் ஏற்படும் தொல்லைகளைக் குறைக்கவும், மக்கள் சமுதாயம் உய்யவும், வாழ்வை எளிதாக்கி இன்பமுடையதாகச் செய்யவும் கடைப் பிடிக்க வேண்டிய முயற்சிகளுள், இந்தக் கட்டுப்பாடு, முதன்மையானதும் மிகவும் இன்றியமையாததும் ஆகும்.

இன்பமா - துன்பமா?

மதலையைப் பெறுநாள் துன்பம்,
வளர்த்திடு நாளும் துன்பம்,
விதலை நோய் அடையில் துன்பம்,
வியன் பருவத்தும் துன்பம்,
கதமுறு கால தூதர்
கைப்பற்றில் கணக்கில் துன்பம்,
இதமுறல் எந்நாள் சேயால்
எற்றைக்கும் துன்பம் ஆமால்''.

பிள்ளைகளால் ஒரு சிறிது இன்பம் இருப்பினும், மேற்கூறிய பாடலோ, பிள்ளைகளால் துன்பமே யன்றி இன்பமேயில்லை எனச் சிறிதும் கண்ணோட்டம் இன்றிக் கண்டிக்கிறது. எனவே, குழந்தைகளை அளவோடு பெற்று வளமோடு வாழ்க! அதனால் உலகு உய்க!

# 3. மூட நம்பிக்கைக்கு முற்றுப் புள்ளி

மக்கள் வாழ்க்கையை எளிமைப்படுத்திக் கொண்டு உய்வுபெற, மூடநம்பிக்கைகட்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். சாதி சமயம், நாள் - நிமித்தம் (சகுனம்) பார்த்தல், மந்திரம்-மாயம், ஊழ்வினை, பழைமையில் பற்று, கணியம், முதலியவற்றின் பெயரால் மக்கள் கொண்டுள்ள மூட நம்பிக்கைகட்கு அளவேயில்லை. இந்த அறியாமைச் செயல், பல்வேறு நாடுகளிலும் பல்வேறு மக்களிடையேயும் உள்ளது. இதனால், பொருட் செலவு, காலப் பாழ், முயற்சி விரயம், செயல்தடை, கால நீட்டிப்பு, மன அமைதியின்மை முதலிய இழப்புகள் ஏற்படுவதன்றி, இறப்பும் நேரிடுகின்றது; முன்னேற்றங்கள் தடைப்படுகின்றன.

## சாதி வேறுபாடு:

சாதி வேறுபாடு கூடாது என அருளாளர் பலர் அறிவித்துச் சென்றிருந்தும், அவர்கள் நடைமுறையில் செயல்படுத்திக் காட்டியிருந்தும், மக்கள் பலர் இந்தக் கொடுமையை விட்டாரிலர். 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது திருவள்ளுவர் மொழி. ஔவையார் என்னும் பெண்பாற் புலவர், மேல்சாதி - கீழ்ச்சாதி என்பவற்றுக்கு அழகான விளக்கம் அளித்துள்ளார்:

"சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி". (நல்வழி - 2)

என்பது ஔவை அருள்மொழி. பிறர்க்கு உதவுபவரே மேல்சாதியினர்; உதவாதவர் கீழ்ச்சாதியினரே என்று இப் பாடலில் கூறியுள்ளார். அதி வீர ராமன் என்னும் பாண்டிய மன்னன் தனது வெற்றி வேற்கை என்னும் நூலில்,

"கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே". (31)

"நாற்பால் குலத்தில் மேற்பால் ஒருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே", (32)

"எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்". (33)

"அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்". (34)

எனக் கூறியுள்ளான். ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன், புறநானூற்றுப் பாடல் ஒன்றில்

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே". (183)

என மொழிந்துள்ளான். கற்றறிந்தவரே மேல் சாதியினர் எனவும், அல்லாதவர் கீழ்ச்சாதியினர் எனவும் பாண்டிய மன்னர் இருவரும் பகர்ந்துள்ளனர்.

சமூகச் சீர்திருத்தம் பேசும் நாத்திகர் என்றல்லர் - ஆத்திகப் பெரியோர்களே - மேல் சாதிகள் எனக் கூறப் படும் இனங்களில் பிறந்த ஆத்திகப் பெரியோர்களே கூட சாதி வேற்றுமையைக் கண்டித்துள்ளனர். பிராம

ணர்க்கு அடுத்த உயர்சாதி எனப்படும் வேளாள மரபில் பிறந்த திருநாவுக்கரசர் தமது தேவாரப் பாடல் ஒன்றில்,

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்"

(திருமாற்பேறு பதிகம்) என்று வினவுகிறார். தமிழ்நாட்டு அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர் எனப்படும் மாணிக்க வாசகர்,

"சாதிகுலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத்
தடுமாறும் ஆதமிலி" (கண்டபத்து - 5)

எனத் தமது திருவாசக நூலில் கூறியுள்ளார். இந்தக் காலப் பிராமணக் குலத்தைச் சேர்ந்த சுப்பிரமணிய பாரதியார்,

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி உயர்ந்த மதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்". (15)

எனப் 'பாப்பா பாட்டு' பகுதியில் கூறியுள்ளார். ஔவை யார் கூறியுள்ளபடி பிறர்க்கு உதவும் அன்புடையவர்க ளும், அதிவீர ராம பாண்டியன் கூறியுள்ளாங்குக் கல்வி யறிவு உடையவர்களுமே மேல் சாதியினர் ஆவார் எனப் பாரதியார் பகர்ந்துள்ளார்.

ஆயினும், கல்லாத கருமிகள் சிலர், தங்களை மேல் சாதியினர் என்று சொல்லிக்கொண்டு மற்றவரைக் கீழ் மைப் படுத்துகின்றனர் - கொடுமைப் படுத்துகின்றனர்

தம் சாதியார்க்கே உதவி செய்வது ஒரு வழக்கமாக உள்ளது. இவர்கள், கீழ்ச் சாதியினர் எனச் சிலரைக் குறிப்பிட்டுக் கொண்டு, அன்னாரைத் தொடுதலோ - அன்னார் காண உண்ணுதலோ செய்வதில்லை; அன்னார் தொட்ட கலத்திலுள்ள தண்ணீரையும் அருந்துவதில்லை. அன்னார் தொட்டுத் துழவிய கலத்திலுள்ள நீரையும் பருகாதவர்கள் அன்னார் தொட்டுத் துழவிய எண்ணெயையும், நெய்யையும் மோரையும் பாலையும் பயன்படுத்துகின்றனர். இஃது உலக வியப்புகளுள் ஒன்றாகும். தம்மால் எளிதில் பெறக்கூடிய தண்ணீருக்கு மட்டும் தீட்டு உண்டு; தம்மால் எளிதில் பெறமுடியாத மற்ற பொருள்கட்குத் தீட்டு இல்லை போலும்! இக்கொடியவர்களைத் திருத்துவதற்கு உரிய வழி, மற்றவர்கள் இவர்கட்கு எத்தகைய உதவியும் ஒத்துழைப்பும் தராமல், இவர்களைச் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைப்பதேயாகும்.

மேல் சாதியினர் மூவகைத் தீட்டுகள் வைத்திருக்கின்றனர். கீழ்க் குலத்தாரைத் தொட்டால் வரும் தீட்டு ஒன்று; இது 'தொட்டு முட்டு' எனப்படும். (முட்டு = தீட்டு) இதனினும் கொடியது 'கண்டு முட்டு' ஆகும்; அஃதாவது, கண்டாலேயே தீட்டாம். இதனினும் கொடியது 'கேட்டு முட்டு' ஆகும்;அஃதாவது, கீழானவரைப் பற்றிக் கேட்பதே தீட்டாம்: சில சமய வாதிகளும் பிறசமய வாதிகளிடத்தில் இதைப் பின்பற்றுகின்றனர். என்ன கொடுமை யிது! சாதி வேற்றுமையின் பெயரால் நடக்கும் சண்டை சச்சரவுகள் மிகப் பல; கொலைகளும் நடப்பதும் உண்டு. மக்களினம், ஒன்றே குலம்' என உணர்ந்து சாதி வேற்றுமைக் கொடுமையைக் கைவிடவேண்டும்; சமுதாயத்தில் பிற்பட்டிருப்பவரையும் உயர்த்துவதற்கு உரிய உதவியும் ஒத்துழைப்பும் நல்கவேண்டும். சாதி வேற்றுமையை அறவே அகற்றுவ

தற்கு உரிய முதன்மையான வழியாகிய கலப்புத் திரு மணத்தை மக்களினம் கடைப்பிடிக்க வேண்டும்.

மத வேற்றுமை:

சாதி வேற்றுமையினும் மத வேற்றுமை கொடியதென லாம். சாதி வேற்றுமைக் கொடுமை உள்நாட்டோடு நின்று விடலாம். மத வெறியால் விளைந்த போர்களும் பிணக்குகளும் உலகறிந்த வரலாறாகியுள்ளன. மதத்துக்கு மதம் பகை; ஒரு மதத்துக்குள்ளேயே பல பிரிவுகள்; அந் தப் பிரிவுகட்குள்ளே பல பிணக்குகள்; இந்தப் பிரிவினை களால் உலகில் ஏற்பட்ட - ஏற்பட்டு வரும் விளைவுகளை இங்கே விவரிக்க இடம் போதாது. மதவாதிகள் பலர் மதம் பிடித்து அலைகின்றனர். தத்தம் மதங்களைப் பரப் பவும் தம் மதத்தார்க்கு மட்டுமே நன்மைகள் புரியவும் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொள்கின்றனர்.

இத்தகைய போராட்ட உலகில், மத வெறியைத் தணிக்கவும் அகற்றவும் அரும்பாடுபட்ட அருளாளர் களும் இருக்கத்தான் செய்தனர். தமிழ்நாட்டில் வாழ்ந்த வடலூர் இராமலிங்க வள்ளலார் 'எம் மதமும் சம்மதம்' என்னும் கொள்கையினராய் அதனை உலகில் பரப்பவும் பாடுபட்டார்:

'சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே''.

சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்''.

என்பன அவர்தம் பாடல்கள். இத்தகைய அருளாளர்கள் ஏற்றிக் கொண்டிருக்கும் அருள் விளக்குகள், மதவெறி என்னும் சூறைக் காற்றால் அணைக்கப்பட்டுக் கொண்டுள் ளன;எம் மதத்தினர் கூறும் கடவுள் உண்மைக் கடவுள்? உல கத்தில் எத்தனை கடவுளர்கள் உள்ளனர்? 'ஒன்றே குலம் – ஒருவனே தேவன்' என்பது திருமூலரின் திருமந்திர மொழி. இந்நிலையில், கடவுள் பெயராலும் மதங்களின் பெயராலும் போரிட்டுக் கொள்வது பெரிய மடமை யாகும்.

## இன - நிற வேற்றுமைகள்:

ஆரியர் - திராவிடர் போன்ற இன வேற்றுமை, வெள்ளையர் – கறுப்பர் என்ற நிறவேற்றுமை முதலிய கொடுமைகளும் ஒழிய வேண்டும். ஆப்பிரிக்கக் கண்டத் திலும் அமெரிக்கக் கண்டத்திலும் நிறவேற்றுமையால் ஏற் பட்ட – ஏற்படும் விளைவுகளை எண்ணிப் பார்க்கவே அதிர்ச்சி தருகிறது. கறுப்பர்களைக் காணவும் அவரொடு பழகவும் வெள்ளையர்கள் சிலர் விரும்ப வில்லை. தடுக்க முடியாத இயற்கையின் வன்மையால் கரு நிறத்தைப் பெற்றிருப்பது கறுப்பர்களின் குற்றம் அல்லவே! இவ்வுண் மையை யுணர்ந்து, அவர்களையும் மற்றவர்கள் அணைத்து ஆதரித்துச் செல்வதே அறிவுடைமை யாகும் -- அஃதே உயரிய மக்கட் பண்பாகும். வடலூர் வள்ளலாரின்

"பித்தெலாம் உடைய உலகர்தம் கலகப்
பிதற்றெலாம் என்றொழிந் திடுமோ".
"எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும் தம்முயிர்
போல் எண்ணி யுள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர் அவர்
உளம்தாம் சுத்த

சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமென
நான் தேர்ந்தேன்..''

என்னும் அறிவுரையினை உலகினர் ஓர்ந்துணர்ந்து நடைமுறையில் செயல்படுத்து வாராக!

## நாள்-நேரம் பார்த்தல்:

எந்தச் செயலையும் நல்ல நாளும் - நல்ல நேரமும் பார்த்துச் செய்ய வேண்டும் என்னும் அழுத்தம் திருத்தமான நம்பிக்கை மக்கள் பலரிடையே உள்ளது. மேலை நாட்டினரினும் கீழை நாட்டினரிடையே இந்த நம்பிக்கை மிகுதியாக இருப்பதாகத் தெரிகிறது. பொறுமையாகச் செய்யக் கூடிய செயல்களை - எப்போது வேண்டுமானாலும் காலம் தள்ளிச் செய்யலாம் என்பதான செயல்களை, முன் கூட்டி நல்ல நாள் – நல்ல நேரம் பார்த்துச் செய்வதால் இழப்பு ஒன்றும் இல்லை; ஆனால் உடனடியாகச் செய்யாவிடின் உயிருக்கே இழப்பு நேரிடும் படியான செயல்களைக் கூட - கட்டாயச் செயல்களைக் கூட – உடனே செய்யாமல், நாள் நன்றாக இல்லை-நேரம் நன்றாக இல்லை எனத் தள்ளிப் போடுவது எவ்வளவு பெரிய அறியாமை! இந்த அறியாமை நடைமுறையில் உள்ளது. இதனால் நேரும் இழப்புகள் பல.

'வெள்ளிக்கிழமை வளர்ந்த நாள்,' என்னும் நம்பிக்கை இந்தியாவில் – தமிழ்நாட்டில் உள்ளது. வெள்ளிக் கிழமையில் ஒன்றைத் தொடங்கினால், அது விரைவில் முடியாதாம் – வளர்ந்து கொண்டே போகுமாம். எடுத்துக்காட்டு:

வெள்ளிக் கிழமையில் நோயாளிகளை மருத்துவரிடம் அழைத்துச் செல்லினும் - வெள்ளிக் கிழமையில் மருந்து உட் கொள்ளத் தொடங்கினும் - நோய் விரைவில் குணம் அடையாமல் வளர்ந்து நீண்டு கொண்டே போகுமாம். அதனால் பலர் வெள்ளிக் கிழமையில் மருத்துவம் தொடங் குவதில்லை. இதனால், நோயாளி உரிய நேரத்தில் உரிய மருத்துவம் பெற முடியாமல் இறந்து போனதை, உலகத் தில் அன்று - ஊரில் அன்று - எங்கள் குடும்பத்திலேயே யான் பார்த்திருக்கிறேன். கல்வி யறிவில்லாத மூடப் பெண்களைத் திருத்தவே முடியவில்லையே - என்ன செய்வது! ஆண்கள் சிலரும் இத்தகைய அறியாமைக்கு ஆட்பட்டுள்ளனர். "நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை" என்று அதிவீர ராம பாண்டிய மன்னன் வெற்றி வேற்கை என்னும் நூலின் வாயிலாக அளித்துள்ள அறி வுரை இவர்களின் மரமண்டையில் ஏற வில்லையே - என்ன செய்வது! ஒரு நாளிலேயே நல்ல நேரம் கெட்ட நேரம் என்ற பாகுபாடு பார்த்துச் செயல்படுவது இன்னும் வியப்பு! உயிரைப் பொறுத்ததான மருத்துவம் தொடங்குவதற்கே இப்படி யென்றால், வேறு செயல்கள் தொடங்குவதற்குக் கேட்கவா வேண்டும்!

வெளியில் புறப்படுவதிலும் - வெளியூர்ப் பயணம் தொடங்குவதிலும் இதே தொல்லைதான். நல்ல நாளும் நேரமும் கிடைக்கும் வரையும் ஒத்திப் போட்டுக் கொண்டே போக வேண்டியதுதான். ஆனால், பேருந்து (Bus), புகைவண்டி, வானூர்தி, கப்பல் முதலிய ஊர்திகள் எல்லா நாள்களிலும் எல்லா நேரத்திலும் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. இவற்றுக்கு என்ன வந்து விட்டது? ஆண்டவன் துணை யிருக்கையில் நாளும் கோளும் ஒன்றும் செய்ய முடியாது என்பதாக அருளாளர்கள்

தூண்டி விட்டுள்ள துணிவை மூடர்கள் நம்ப வில்லை - பொருட் படுத்த வில்லை. அருணகிரி நாதர் என்னும் பெரியார் 'கந்தர் அலங்காரம்' என்னும் நூலில்,

"நாள் என் செயும் வினைதான் என் செயும்
எனை நாடி வந்த கோள் என் செயும்" (38)

(கோள்=கிரகம்) என வினவியுள்ளார். திருஞான சம்பந்தர் என்னும் சிவனடியார், திருமறைக் காடு என்னும் ஊரிலிருந்து மதுரைக்குப் புறப்பட்டபோது, நாளும் கோளும் நன்றா யில்லை என்று கூறினவர்க்கு இறைவன் இருக்கையில் நாளும் கோளும் அடியார்கட்கு நல்லனவாகவே இருக்கும் - அஞ்ச வேண்டா - என்ப தாக அவர் பதில் இறுத்துள்ளார். இதனை அவர் பாடிய'

"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனி பாம்பு இரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே".

(சம்பந்தர் தேவாரம்-கோளறு பதிகம்-1.)

என்னும் பாடல் பகுதியால் அறியலாம். எனவே, கடவுளை நம்புபவர்கள் சாவையும் பொருட்படுத்தாமல் நாளும் கோளும் பார்த்துக் கொண்டிருப்பதேன்?

## நிமித்தம் பார்த்தல்:

வெளியில் புறப்படும் போது, இன்னின்னார் எதிரில் வரக் கூடாது-இன்னின்ன பறவை-விலங்குகள் எதிரே வரக் கூடாது-இன்னின்ன ஒலிகள் காதில் விழக்கூடாது என்றெல் லாம் நிமித்தம் (சகுனம்) பார்த்துச் செயல்பாடுகளைப்

பலர் தள்ளிப் போடுகின்றனர்-சிலர் அறவே நிறுத்தி விடுவதும் உண்டு. இஃதென்ன வம்பு? யாரும்-எதுவும் எதிரே வர முடியாமலும், எந்த ஒலியும் காதில் படமுடியாமலும் தடுக்க முடியுமா? இவர்கள் போவதுபோல் அவர்கள் வருகிறார்கள்-இதற்கு என்ன செய்வது! வரக் கூடாதவர்கள் எதிரே வந்து விட்டதால் தங்கள் காரியம் கெட்டு விட்டதாகச் சிலர், எதிரே வந்தவர்களை வைவதுண்டு. இது எவ்வளவு பித்துக்கொளித்தனம்!ஊர்-உலகத்தைக் கட்டுப் படுத்த முடியுமா?

## எண் பைத்தியங்கள்:

சில பைத்தியங்கட்குச் சில எண்கள் பிடிப்பதில்லை. ஐரோப்பியருள்ளும் அமெரிக்கருள்ளும் சிற்சிலர்க்கு 13என்னும் எண் பிடிப்பதில்லையாம். இந்தியர்களுள் சிலருக்கு 8 என்னும் எண் பிடிப்பதில்லை, 'எட்டு வெட்டிக்கொண்டு போகும்' என்பது தமிழர் சிலரின் நம்பிக்கை. இவர்கள், எட்டாம் தேதியிலும் எட்டாவது மணி நேரத்திலும் எந்தச் செயலைத் தொடங்கவும் அஞ்சுவர். 8 என்னும் எண்ணுடைய அறையிலோ- வீட்டிலோ வசிக்கவும் அஞ்சுவர். இவையே யன்றி, இன்னும் ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு எண் ஆகி (இராசி) வந்த எண்ணாம். இவர்களைப் பைத்தியங்கள் என்னாமல் வேறு என்ன வென்பது?

## மந்திரம் மாயம்:

மந்திரம்-மாயம் என்ற பெயரால் மக்கள் கோட்டை விடுவதும் மிகுதியாயுள்ளது. மணி, மந்திரம், ஔடதம் என்னும் மூவகை மருத்துவ முறை முன்னோர்களால் சொல்லப்பட்டுள்ளது என்னவோ உண்மைதான்! ஆனால் கண்டவரெல்லாரும் விண்டது மந்திரம் ஆகாது. நிறைமொழி மாந்தர் கூறும் மறைமொழியே மந்திரமாகும்.

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''

''மறைமொழி கிளந்த மந்திரத் தான''

என்பன தொல்காப்பியம்-செய்யுளியல்(480, 467)நூற்பாக்க ளாகும். திருவள்ளுவரும்

''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்''. (28)

எனத் திருக்குறள் நூலில் கூறியுள்ளார். நோய் போக்கு வதில், நிறைமொழி மாந்தர் கூறிய மறைமொழியாகிய -மந்திரமும் ஒருவகை ஈர்ப்பு முறையே (கவர்ச்சி முறையே) யாகும். இது, ஒருவகை உளவியல் மருத்துவ (Psychologica1 Treatment) முறை எனவும் கூறலாம். ஆனால், கீழ்மக்கள் சிலர்'மந்திரவாதி' என்னும் பெயரை வைத்துக் கொண்டு, பாமர மக்களை ஏமாற்றிப் பணம் பறிப்பது பெரிய அள வில் நடந்துகொண்டுள்ளது. இன்ன மந்திரம் செய்யா விடின் உயிருக்கே ஊறு நேரும் என அவர்கள் மக்களை அச்சுறுத்தித் தம் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கின் றனர். இத்தகையோரை மக்கள் நம்பி ஏமாற லாகாது. இவர்களின் பில்லி-சூனிய ஏமாற்று முறையை எடுத்தெறிய வேண்டும்.

உடல் நோய்க்கு மருந்து உட்கொள்ளாமல் மந்தி ரத்தை உருவேற்றுவதால் (செபிப்பதால்) நோய் தீர்ந்து விடுவதில்லை. இயற்கையாகவே எளிதில் குணமாகக்கூடிய நோய்கள், 'காகம் குந்தியதற்கும் பனம் பழம் விழுந்த தற்கும் சரியாக இருந்தது' என்ற மாதிரியில் ஒரு வேளை குணமாகலாம். எல்லா நோய்களையும் இந்த முறையால் தீர்க்க முடியாது. 'மந்திரத்தால் மாங்

காய் விழாது, என்ற அனுபவ மொழியை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு சிலர், எவ்வகைக் கொடிய நோயாளியையும் மருந்து தராமல் கோயிலில் கொண்டுபோய்ப் போட்டு வழிபாடு செய்கின்றனர். இதனால் குணமாகாமல் இறந்தவர் பலர். என்ன அறியாமை! என்ன கொடுமை!

திபேத்து நாட்டில், முன்பு, நோய் போக்க மருந்து தராமல் மந்திர உருவேற்றலே நடைபெற்றதாம். இதனால் இறந்தவர் எண்ணிலர். மற்றும், மாட்டுக்குச் சூடு போடுவது போல், பெரும்பாலான நோயாளிகட்குச் சூடு போட்டு வந்தனராம். பெரும்பாலும் பயன் பாழே. இப்போதும், பல நாடுகளில், மக்கள், புதிய அறிவியல் மருத்துவ முறையை நம்பாமல், பழைய மருத்துவ முறையை மட்டுமே நம்பிப் பாழ்பட்டுப் போகின்றனர்.

அம்மை, வாந்தி பேதி போன்ற நோய்கட்கு உரிய மருத்துவம் செய்து கொள்ளாமல், கடவுளையே நம்பிப் பூசனை போட்டுப் போய்ச் சேர்ந்தவர்கள் பலர். அம்மை நோய் தீர அம்மை குத்திக் கொள்வதற்கும், வாந்தி பேதி (காலரா) நோய் போக ஊசி மருந்து ஏற்றிக் கொள்வதற்கும் அஞ்சி ஓடி மறையும் 'மாமேதைகள்' இன்றும் உள்ளனர். மக்களினம், இன்னும் பழைய மூட நம்பிக்கைகட்கு இடந்தராமல், புதிய அறிவியல் முன்னேற்ற முறைகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

### ஊழ்வினை நம்பிக்கை:

'நம் கையில் என்ன இருக்கிறது? எல்லாம் பழைய ஊழ்வினைப்படியே நடக்கும்; நாம் செய்வதற்கு ஒன்றும் இல்லை' எனக்கூறி அயர்ந்து சோர்ந்து அப்படியே அமர்ந்து விடுபவர்கள் பலர். எல்லா மதத்தினரும் பெரும்பாலும்

ஊழ்வினையை நம்புவதில்லை. இந்து, சமணம், புத்தம் ஆகிய மதத்தினரே பெரும்பாலும் ஊழ்வினையை நம்புகின்றனர். ஊழ் வினையை நம்பி உட்கார்ந்து கொண்டிருந்தால் உணவு கிடைக்குமா? உழைப்பு இன்றி ஒன்றும் பெற முடியாது. சிலர் பெறுகின்றனரே எனில், பிறர் உழைப்பால் அவர்கள் பெறுகின்றனர்; இஃது இயற்கையாய்-தற்செயலாய் அவர்கட்குக் கிடைத்துள்ள வாய்ப்பாகும். அரசு கண்டிப்பான நடைமுறையைப் பின்பற்றின் எவரும் வாளா இருக்கமுடியாது.பிறர் உழைப்பில் பிழைப்பவர்களும் செயல் புரிந்தால், இன்னும் நாட்டில் வளம் பெருகுமே!

செயலாற்றுவதின்றி ஊழ்வினையை நம்பி வாளா இருப்பது ஒருபுறம் இருக்கட்டும்! நோய்தீர்ப்பதிலும் ஊழ்வினையை நம்பி வளா இருக்கலாமா? இங்கே எனது சொந்த அனுபவம் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். 1962-ஆம் ஆண்டு மூளைக்கட்டி (Brain Tumour)நோயால் யான் பெரிதும் துன்புற்றேன். ஆறு திங்கள் கால அளவுக்குமேல் தனி மருத்துவரிடமும் புதுச்சேரி மருத்துவ மனையிலும் மருத்துவம் பார்த்துக்கொண்டும் பயனில்லை. உயிருக்கு இறுதிக் கட்டம் நெருங்கிக் கொண்டிருந்தது. சென்னைக்குச் சென்று, மூளை-நரம்பு மருத்துவ வல்லுநரிடம் மருத்துவம் செய்து கொள்ளுமாறு புதுச்சேரி மருத்துவ மனையினர் அறிவுரை தந்தனர். படுக்கையில் கிடந்த யான், என்னைச் சென்னைக்கு அழைத்துச் செல்லுமாறு என் குடும்பத்தினரிடமும் நெருங்கிய உறவினரிடமும் வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர்கள் கூறியதாவது: ''ஆறு மாதமாக வைத்தியம் பார்த்தோமே-நோய் குணமாகும் கிரகம் இருந்தால் இவ்வளவு நாள் குணமாகியிருக்காதா? சென்னைக்குச் சென்றால் மட்டும் குணமாகி

விடுமா?'' என்பது அவர்கள் தந்த ஆறுதல் மொழி. ஆனால் எனது விடாப் பிடியால் யான் சென்னை சென்று மருத்துவம் செய்துகொண்டேன். நோய் ஓரளவு குணமா யிற்று. அதன் பின்னர்ப் பலரும் பாராட்டும் பல நல்ல நூல்கள் எழுதியுள்ளேன். ஊழ் வினையை நம்பி யான் சென்னை செல்லாமல் புதுச்சேரியிலேயே இருந்திருந்தால், என் குடும்பத்தினர் என்னை இழந்திருப்பர்; தமிழ்மொழி பல நல்ல நூல்களை இழந்திருக்கும். எனது இந்த அனு பவத்தை, மக்களினத்தின் பொது நன்மைக்காக ஈண்டு தந்தேன். ஊழ் வினையை நம்பி வாளா இருக்க வேண்டா! முயற்சி திருவினை யாக்கும்.

பழமையில் பற்று:

> ''பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே''

என்பது பவணந்தியாரின் நன்னூல் பாடலாகும்.'புதுமைக்கு இடமளித்துப் பழமை மாறுகிறது' என்னும் பொருளுடைய "The old order changeth, yielding Place to new'' என்னும் ஆங்கில மொழி, லார்டு டென்னிசன் (Lord Tennyson) அவர்களின் பாடல் பகுதியாகும். பழையன கழிதலும் புதியன புகுதலும் காலப்போக்கில் குற்றமாகா வெனினும், பழையன எல்லாமே கழிந்து விடவேண்டும் - புதியன எல்லாமே புகுந்துவிட வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. பழையனவற்றிலும் புதியனவற்றிலும் உள்ள நல்லனவற்றைக் கொள்ளலாம் -அல்லனவற்றைத் தள்ளலாம். இந்தக் கருத்துக்கு, ''பழைய காலைத் தூர்க் காதே-புதிய காலை விடாதே'' என்னும் பழமொழி துணை புரியும். ஆனால், பகுத்தறிவற்ற பாமர மக்கள், புதியனவற்றைச் சிறிதும் கொள்ளாமல், பழையன

வற்றையே முற்றும் பின்பற்றுவது பேதைமையாகும். இவ்வாறு பழமையில் மட்டும் பற்றுடைய பாமரப் பெண் மக்கட்கும், இன்னும் திருத்தமுறாது பழைய காட்டுமிராண்டி முறையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் பழங்குடி மக்கட்கும், போதிய கல்வியறிவு அளித்து, அவர்களையும் திருத்தி முன்னேறச் செய்வது அரசின் கடமை மட்டுமன்று-சமுதாயத்தின் கடமையுமாகும்.

## கனா நம்பிக்கை:

கனாவிலும் நல்லகனா-கெட்டகனா என இருப்பதாகவும், இன்ன விதமான கனா கண்டால் நல்ல பயனும்-இன்ன விதமான கனா காணின் கெட்ட பயனும் உண்டாவதாகவும் விவரிக்கும் கனா நூல் என்னும் கலை நூல் உண்டு. மக்களின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே இந்த நூல் தோன்றியிருக்க வேண்டும். கனவுக்கும் நடைமுறைப் பயனுக்கும் உண்மையில் தொடர்பேயில்லை. கனா நூல் ஒருவகை மூட நம்பிக்கை நூலே. கனாக்களைக்கண்டு, அவற்றிற்கு என்னென்னவோ பயன்கள் கற்பித்து மக்கள் அல்லல் உறுவது மிகவும் இரங்கத்தக்கதாகும். இந்த நிலைமை நீங்க வேண்டும்.

## கணியம் (சோதிடம்):

கணிய நூல்கள் பல உள்ளன. மக்களுள் பெரும்பாலோர் கணியத்தில் (சோதிடத்தில்) மிகுந்த நம்பிக்கை உடைவராயுள்ளனர். கணியர்களிடம் தங்கள் பிறப்புக் குறிப்பைக் (சாதகத்தைக்) காட்டிப் பயன் கேட்கின்றனர்.

நல்லன நடக்கும் எனக் கூறின் இன்புறுவதும், அல்லன நடக்கும் எனக் கூறின் துன்புறுவதும் மக்கள் இயல்பு- கணியர் (சோதிடர்) கூறியபடி நல்லன நடைபெறவில்லை யெனில் மக்கள் பெரிய ஏமாற்றமும் மனத்துயரும் அடைந்து சோர்ந்து விடுகின்றனர். இந்த வீண் சுமை ஏன்? கணியம் பார்த்தே எந்தச் செயலையும் தொடங்குவது பலர்க்குப் பழக்கம். நாளும் கோளும் நன்றாயில்லை எனக் கணியர் கூறி விடுவாராயின், சிலர் தள்ளிப் போடுவதும், சிலர் அறவே செய்லை நிறுத்தி விடுவதும் உண்டு. எடுத்த தற்கெல்லாம் கணியம் பார்த்தால் வாழ்க்கை என்னாவது? கணியர்கள், காசுக்காக, இல்லாதனவும் பொல்லாதனவும் கூறி ஏய்ப்பதும் உண்டு.

கணி நூலின் வாயிலாக எல்லா உண்மைகளையும் எதிர்கால நடைமுறைகள் யாவற்றையும் கூறிவிட முடியாது. கோள்களின் இயற்கையமைப்பை மையமாகக் கொண்டு, அறிஞர்களால் சில உண்மைகள் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன. அறிஞர்கள் கூறுவனவற்றுக்கும் காசுக் காகக்கணியம் பார்ப்பவர்கள் கூறுவனவற்றுக்கும் இடையே வேற்றுமை மிக உண்டு. அறிவியல் அடிப்படையில் கிடைத் துள்ள சில உண்மைகள்:-

ஞாயிற்றினிடம் காணப்படும் புள்ளிகட்கும் பூவுலக உயிர்கட்கும் தொடர்பு இருப்பதாக ஆராய்ச்சியாளர் கள் கூறியுள்ளனர். ஞாயிற்றில் புள்ளிகள் மிகுதியானால் மழை மிகுதியாம்; புள்ளிகள் மிகுதியாயின் உலகில் போர் நடக்குமாம்-பொருளாதார நெருக்கடி ஏற்படுமாம். கி.பி. 1939 ஆம் ஆண்டில் இவ்வாறு புள்ளிகள் மிகுந்ததால் இரண்டாவது உலகப் பெரும் போர் தொடங்கப் பெற்றதாகக் கூறப்படுகிறது. ஒரு திங்களில் பதினைந்து

நாட்களுக்குள், ஞாயிற்றுப் பிடிப்பும் (சூரிய கிரகணமும்) திங்கள் பிடிப்பும் (சந்திர கிரகணமும்) ஒரு சேர ஏற்படின், உலகில் போர் மூளுமாம் - அரசு அழியுமாம் – பஞ்சம் உண்டாகுமாம். இரண்டாவது உலகப் பெரும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த 1944 ஆம் ஆண்டு, இவ்வாறு, ஒரே திங்களின் பதினைந்து நாட்களுக்குள் இருவகைப் பிடிப்புகளும் (கிரகணங்களும்) நடைபெற்றனவாம். இந்தச் செய்தியை நம்முன்னோர்கள் அறிந்திருந்தனர் என்பதை,

> ''அருக்கனையும் சோமனையும் ஐம்மூன்று நாளில்
> பொருக்கில் அரவங்கள் தீண்டின் - செருக்களத்து
> மன்னர் மடிவார் மடியாரே யாமாயின்
> அன்னம் அரிதாய் விடும்''.

என்னும் தனிப் பாடல் உணர்த்தும். வானத்துக் கோள்களின் நிலையில் ஏற்படும் மாறுதல்களின் விளைவுகளைப் பல முறை பட்டறிவு வாயிலாக அறிந்ததைக் கொண்டு முன்னோர்கள் சில செய்திகளை எழுதிவைத்துச் சென்றுள்ளனர். அவற்றுள் பல உண்மையாகவும் உள்ளன. இரு கிரகணங்களும் தோன்றுவது சரியாயிருப்பதைப் பார்க்கலாம். இதனால்தான், ''சாத்திரம் பொய்யென்றால் கிரகணத்தைப் பார்'' என்னும் பழமொழி எழுந்துள்ளது. ஆனால், இக்கால அறிவியல் ஆராய்ச்சி அறிஞர்கள் கணிக்கும் வானிலை முறைக்கும், அக்கால முன்னோர்கள் கணித்த வானிலை முறைக்கும் இடையே வேறுபாடு உண்டு.

முழு நிலவின்போது கடல் பொங்குகிறது. அமாவாசை நாளிலும் கார்த்திகை நாளிலும் செரிமானம் குறைவென்பதால், அந்நாளில் உண்ணா நோன்பு வைத்

திருப்பதாக ஒரு கருத்து கூறப்படுகிறது. அமாவாசை நாளில் மட்டும் சிறிது தொலைவு கூட நடக்க இயல வில்லை எனக் கற்றறிந்த அம்மையார் ஒருவர் பலமுறை கூறியதை யான் கேட்டிருக்கிறேன். இவ்வாறு இன்னும் பல நடை முறைகளைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். எனவே, கோள்களுக்கும் உயிர்களுக்கும் ஏதோ தொடர்பு உள்ளது என்பதை நம்பலாம் போலும்!

ஆனால், இந்தக் காலத்தில், போதிய அறிவியல் ஆராய்ச்சி யில்லாதாரால் பார்த்துச் சொல்லப்படும் கணியம் (சோதிடம்) என்னும் பெயரால், காலத்தையும் காசையும் செலவிட்டுக் கவலையை விலைக்கு வாங்கிக் கட்டிக் கொள்வது ஏற்புடைத் தாகாது.

கடவுள் வழிபாடு:

கடவுள் வழிபாடு என்பது, ஒரு வகை மன ஆறுதலை -மன நிறைவைத் தருவது. இதனை ஒருவகை 'உளவியல் மருத்துவம்' (Psychological Treatment) என்று கூறலாம்,- அவ்வளவே. இஃது அளவோடு இருக்க வேண்டும். மிகுந்த பொருளையும் காலத்தையும் முயற்சியையும் இதில் செல விட்டு வீணாக்கி, பின்னர், நினைத்தது நிறைவேறாதாயின் கடவுளை நோவதில் பயன் இல்லை.

எனவே, மக்களினம், இனியாயினும் எல்லா வகை யான மூட நம்பிக்கைகட்கும் மூடப் பழக்க வழக்கங்கட்கும் பெரிய முற்றுப் புள்ளி வைத்துவிட்டு வாழ்க்கையை எளிமையாக்கிக் கொண்டு, ஆக்க வேலைகளில் காலத்தை யும் முயற்சியையும் செலவிடுவதே உய்யும் வழியாகும்.

# 4. பொருளியல் கோட்பாடு

## பொருளின் இன்றியமையாமை:

மக்கள் வாழ்க்கை எளிதாய் - இனிமையாய் நடைபெறப் 'பொருளியல் கோட்பாடு' (Economic System) மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். பொருள் இல்லாமல் உலகில் வாழ முடியாது. பொருள் இருப்பின், பொருட்படுத்தக் கூடாதவரும் பலராலும் பொருட் படுத்தப் பெறுவர். கல்லாவிடினும் பொருள் உள்ளவரை எல்லாரும் எதிர் கொண்டு போற்றுவர். இல்லாதவரை மனைவி, தாய் உட்பட எல்லாரும் இகழ்வர். இல்லாதவரின் வாய்ச் சொல்லுக்கு மதிப்பு இல்லை. என்றும் இ.·.து உலக இயற்கை. இக் கருத்தினை,

"அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு". (247)

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்". (751)

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு". (752)

"அறஞ்சாரா நல்குரவு ஈன்றதாயானும்
பிறன் போல நோக்கப் படும்". (1047)

என்னும் திருவள்ளுவரின் திருக்குறள் பாக்களாலும்,

"கல்லானே யானாலும் கைப்பொருள்ஒன் றுண்டாயின்

எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்- இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற் றீன்றெடுத்த தாய் வேண்
டாள்

செல்லா தவன்வாயிற் சொல்''. (34)

என்னும் ஔவையாரின் நல்வழிப் பாடலாலும் இன்ன பிற வற்றாலும் அறியலாம். எனவே, பொருளை எப்படி பெறுவது - பொருளாக்கம் எவ்வாறு வளர்ந்தது - என்ற வரலாறு அறியப்பட வேண்டிய தாகும்.

## தொடக்க காலப் பொருளியல்;

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட (Pre-Historical -Period) காலமாகிய - மக்கள் வாழ்க்கையின் தொடக்க காலத்துப் பொருளியல் (Primitive Economics) இயற்கையை யொட்டி அமைந்திருந்தது. அப்போது மனித முயற்சி அவ்வளவாகத் தேவைப்பட வில்லை. இயற்கையாகக் கிடைத்த காய் - கனி - கிழங்கு முதலியவற்றை அப்போது மக்கள் உண்டனர்; விலங்கு - பறவை முதலிய வற்றைக் கொன்றும் தின்றனர். அப்போது மக்கள் தொகை குறைவாயிருந்ததால், இயற்கையாகக் கிடைத்த உணவுப் பொருள்கள் போதுமானவையாயிருந்தன. இயற்கையாகக் கிடைத்த நீரைப் பருகினர். குகைகளிலும் மரங்களின் கீழும் மேலும் தங்கியிருந்தனர்.

நாளடைவில் நெருப்பின் பயனை அறிந்து சமைத்து உண்ணக் கற்றுக் கொண்டனர். கற்களாலும் மரங்களாலும் கருவிகள் செய்து பயன் படுத்தினர். ஆண்கள், வேட்டையாடுதல் முதலிய வற்றால் உணவுப் பொருள்களைத் தேடிக் கொண்டு வருதலும் பெண்கள் சமைத்தலும் முதலியனவாக ஆண் - பெண் வேலைப் பகிர்வும் ஏற்பட்டது. இந்தக் காலம் கற்காலம் (Stone Age) எனப்படும்.

## பழங்காலப் பொருளியல்

வரலாற்றுத் தொடக்க காலமாகிய 'பழங்காலத்துப் பொருளியல்' (Ancient Economics), இயற்கையினின்றும் செயற்கையை நோக்கி முன்னேறத் தொடங்கியது. மக்கள் கண்ட இடங்களில் திரிவதை விட்டு நிலையான குடியிருப்பு அமைத்துக் கொண்டனர். உலோகத்தால் கருவிகள் செய்து கொண்டனர். தேவைக்கு ஏற்ப உழவு, நெசவு, கம்மியம் முதலிய தொழில்கள் செய்து பல்வகைப் பொருட்களை உண்டாக்கம் (உற்பத்தி) செய்தனர். ஒருவர் உண்டாக்கிய பொருள் இன்னொரு சாரார்க்குப் பண்ட மாற்று முறையில் கிடைத்தது. ஒரு நாட்டுப் பொருள்கள் வேறு நாடுகட்குத் தரை வழியாகவும் கடல் வாயிலாகவும் பண்ட மாற்று முறையில் சென்றடைந்தன. கைத் தொழிலுடன் கலையுணர்வும் ஏற்பட நாகரிகம் அரும்பலாயிற்று.

## இடைக் காலப் பொருளியல்:

பண்டைக் காலத்துக்கும் இக்காலத்துக்கும் இடைப்பட்ட காலத்துப் பொருளியலில் (Mediaeval Economics) மேலும் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அறிவியல் (Science) இடம் பெற லாயிற்று. சமூக வாழ்வும் கூட்டுறவு முறையும் ஏற்பட்டன. உள்நாட்டினருடனும் வெளி நாட்டினருடனும் வாணிகம் பெருகலாயிற்று. உழவுத் தொழிலில் முதலாளி - தொழிலாளி முறை ஏற்பட்டது. வணிகரோ - முதலாளியோ மூலப் பொருள்களை வழங்க அவற்றைக் கொண்டு தொழிலாளர்கள் தம் வீடுகளிலேயே பல்வேறு பொருள்களை உண்டாக்கம் செய்து தந்தனர். கூலி தொடக்கத்தில் நெல், உடை முதலிய பொருளாகக் கொடுக்கப்பட்டது; நாளடைவில் உலோக நாணயங்கள் ஏற்பட்டுக் கொடுக்கப்படலாயின. அப்போது ஆலை போன்ற

பொறிகள் (இயந்திரங்கள்) இல்லை. வாணிகம் செழித்து வளரலாயிற்று.

புதுயுகப் பொருளியல்:

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து 'புதுயுகப் பொருளியல்' (Modern Economics) தொடங்கிற்று எனலாம். அறிவியல் வளர்ச்சியால் பல்வேறு பொறிகள் (இயந்திரங்கள்) தோன்றின. இதனால்'தொழில் புரட்சி (Industrial Revolution) தோன்றிற்று. கைத்தொழில் பொறித் தொழிலாயிற்று - குடிசைத்தொழில் பொறிக் கூடத் தொழிலாயிற்று - தனியாரின் சொந்தத் தொழில் கூலித் தொழிலாயிற்று. முதற்பொருளும் (மூலதனமும்) முதலாளி முறையும் இன்றியமையாமை பெற்றன. முதல் உள்ளவர்கள் முதலாளிகள்- முதல் இல்லாதவர்கள் கூலிக்காரத் தொழிலாளிகள் என்ற பாகுபாடு ஏற்பட்டது.

இக்காலத்தில் ஊதிய நோக்கும் வாணிக நோக்கும் முதலிடம் பெறலாயின. தேவைக்காக உண்டாக்கம் என்ற நிலைமைக்கு மேலாக, ஊதியத்துக்காக (இலாபத்திற்காக) உண்டாக்கம் என்ற நிலை ஏற்பட்டது. பொருள்களைப் பெருவாரியாக உண்டாக்கி, விளம்பரம் செய்து, விற்பனைக் களம் (Market) தேடலாயினர். சில்லறை விற்பனையாளர், மொத்த விற்பனையாளர், இடைத்தரகர் ஆகியோர் தோன்றினர். வாணிகத்துக்கு உதவியாக வங்கிகள் ஏற்பட்டன. நாணய மாற்று முறையும் (Exchange) நடைமுறைக்கு வந்தது. போக்குவரவு ஊர்தி வசதிகள், தந்தி, தொலை பேசி முதலிய வாய்ப்புகள் ஏற்பட்டதால், தொலைவிலுள்ள நாடுகள் நெருங்கி வரலாயின. வாணிகம் வளமாய் நடைபெறலாயிற்று. உண்டாக்கச் செலவுக்கு ஏற்பப் பொருள்கட்கு விலை வைக்கப்பட்டது. தொழிற்

சங்கங்கள், கூட்டுறவுக் கழகங்கள், வாணிகக் கழகங்கள் (Chambers of Commerce) முதலியன தோன்றின.

பொறிகளின் உதவியால் பொருள்கள் பெருகின. உழவுத் தொழிற்கு முதற்கொண்டு பொறிகளைப் பயன்படுத்தி உண்டாக்கத்தைச் செழிக்கச் செய்து ஒருசிலர் பணம் கொழித்தனர். இவ்வகையில் செல்வமும் வயலும் உள்ளவர்கள் பெரிய பொருளாளிகளாகவும், அவையில்லாதார் ஏழைகளாகவும் மாறினர். இதனால் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டன. இது நிகழ்ந்து கொண்டிருக்கும் போதே, மக்கள் தொகை உண்டாக்கத்துக்குமேல் பெருகத் தொடங்கியதால், பொருள் பற்றாக்குறை, விலைவாசி யேற்றம், பொருளாதார நெருக்கடி ஆகியவை ஏற்பட, ஏழை மக்கள் இன்னலுக்கு உள்ளாயினர். வளமுள்ள இடங்கட்கு எதிராக வறுமையும் வளர்ந்து வரலாயிற்று. இத்தகைய நிலை தொடர்ந்து கொண்டிருப்பதை இயற்கை ஏற்றுக்கொள்ளாது.

## பொருளியல் கூறுகள்:

பொருளியல் கோட்பாட்டில் இன்றியமையாக் கூறுகள் நான்கு உள்ளன. ஒன்று; உண்டாக்கம் (உற்பத்தி-Production)ஆகும்; வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைத் தேவையான அளவுக்குக் குறையாமல் உண்டாக்க வேண்டும்.

இரண்டு:மாற்று(Exchange)ஆகும். வாழ்க்கைகுத்தேவையான பொருள்கள் யாவும் ஒவ்வோரிடத்திலும் உண்டாக்கப்பட்டு விட வியலாது. ஓரிடத்தில் சில பொருள்களும் வேறிடத்தில் சில பொருள்களும், ஆங்காங்குள்ள சூழ்நிலைக்கேற்ப உண்டாக்கப்படும். ஓரிடத்தார் தம்மிடம் இல்லாத பொருள்களை வேறு இடங்களிலிருந்து வாங்கிக்

கொள்வதும், ஆங்கில்லாத பொருளகளைத் தாம் அவ்வி டங்கட்கு அனுப்புவதும் 'மாற்று' எனப்படும். இது முதலில் ஒரு பண்டம் தந்து வேறு பண்டம் வாங்கிக் கொள்ளும் பண்ட மாற்றாக நடைபெற்று வந்தது. பின்னர்ப் பணம் கொடுத்துப் பண்டம் வாங்கும் 'பணப் பொருளியல்' (Money Economy)நடைமுறைக்கு வந்தது. ஆயினும், இன் றும், நாட்டுக்கு நாடு பண்ட மாற்று நடைபெறுவதும் உண்டு.

மூன்றாவது 'பகிர்வு'(Distribution)ஆகும். உண்டாக்கப் பட்ட பொருள்களோ-அவற்றால் ஆய ஊதியமோ பலர்க் கும் கிடைக்கும்படி பங்கீடு செய்வதே 'பகிர்வு' ஆகும். முதல் வைத்தோர்க்கும் உழைப்பு தந்தவர்க்கும் இயக்கும் அமைப்புக்கும் (organization) உரிய பங்கு கிடைக்குமாறு பகிர்வு செய்ய வேண்டும்.

நான்காவது 'நுகர்வு'(consumption)ஆகும். உண்டாக்கப் பட்ட பொருள் பலராலும் நுகரப்படுவதே(அனுபவிக்கப்படு வதே) நுகர்வு ஆகும். நுகர்வதற்காகவே முதல் வைப்பு, உழைப்பு, அமைப்பு, உண்டாக்கம் முதலிய யாவும் நிகழ் கின்றன. 'தேவையே கண்டுபிடிப்பின் தாய்' Necessity is the mother of Invention) என்ற பட்டறிவு மொழி ஈண்டு ஒப்பு நோக்கற்பாற்று. எனவே, பொருள்கள், நுகர்வதற்கு ஏற்ற தரம் உடையனவாகவும் பொருத்தமான விலை கொண்டனவாகவும், உரிய நேரத்தில் உரிய அளவு கிடைப் பனவாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான், 'நுகர்வு' என்னும் குறிக்கோள் வெற்றி பெற்றதாகும்.

புரட்சிப் புயல்:

மேற்கூறிய செய்திகளை யெல்லாம் இணைத்து நோக் குங்கால், (சமுதாய) மன்பதை அமைப்பில், சிறுபான்மை

யோர் செல்வர்களாகவும் பெரும்பான்மையோர் வறிஞர் களாகவும் இருக்கும் நிலை சிலரின் உள்ளத்தை உறுத்த லாயிற்று. சிறுபான்மைச் செல்வரிடையே 'நுகர்வு' பெரு மளவில் இருப்பதும் பெரும்பான்மை வறிஞர்களுக்கு 'நுகர்வு'எட்டாததாக இருப்பதும் ஆன நிலைமை தொழி லாளர் புரட்சியைத் தோற்றுவிக்கலாயிற்று. இதனால்' சமுதாயத்தில், செல்வர்கட்கும் வறியவர்கட்கும் இடையே-முதலாளிகட்கும் தொழிலாளிகட்கும் இடையே பல மோதல்கள் முகிழ்க்கலாயின; நுகர்வு எல்லாருக்கும் சம மாகக் கிடைக்க வேண்டும்-என்னும் புரட்சிக் கருத்து புய லாக வீசத் தொடங்கியது. இவ்வாறாகக் 'கம்யூனிசம்' என்னும் பொதுவுடைமை இயக்கத்திற்கு வித்திடப்பட்டது. பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிரானது முதலாளி முறைக் கொள்கை; எனவே இதனை முதலில் கண்டு, பின் னர்ப் பொதுவுடைமைக்குச் செல்வோம்.

## முதலாளி முறைக் கொள்கை:

பொறிகளின் (எந்திரங்களின்) உதவியால் 'தொழில் புரட்சி' தோன்றிப் பொருள் வளங் கொழித்ததையடுத்து 'முதலாளி முறை' (capitalism) ஏற்பட்டது. முதலாளி முறை என்பது, தனி மனிதர், அரசின் விதிகட்கு உட்பட்டு தம் கைம் முதலைக் கொண்டு தொழில் நடத்திப் பொருள் வளம் பெருக்கித் தாம் பெருஞ் செல்வராவதாகும். இம் முறையில் தேவை நோக்கினும் ஆதாய நோக்கே முத லிடம் பெற்றது. தொழிலமைப்பு முதலாளிகளின் முழு உடைமையாகும்; ஊதியம் முழுவதும் அவர்கட்கே உரியது. மூலப் பொருள்களுடன் தொழில் அமைப்பையும் தொழி லாளரின் உழைப்பையும் அவர்கள் விலைக்கு வாங்கிக் கொண்டு தொழில் நடத்துவர்; அவர்கள் வைத்ததே

விலை-அவர்கள் கொடுத்ததே கூலி. தொழிலாளிகள் உழைத்துத் தேய்வதும், முதலாளிகள் தொழிலாளிகளை ஆட்டிப்படைப்பதும், தொழிலாளிகள் முதலாளிகளை எதிர்பார்த்து வாழ்வதும், இம்முறையில் இயற்கையாயின. முதலாளிகள் கொழுக்கலாயினர்.

## பொதுவுடைமைக் கொள்கை:

முதலாளி முறைக் கொள்கைக்கு எதிர்மாறானது கம்யூனிசம்(communism)என்னும்பொதுவுடைமைக்கொள்கையாகும். 'communis' என்னும் இலத்தீன் சொல்லுக்கு 'பொது - பொதுவான-சமூகம் தொடர்பான - என்பது பொருளாகும். 'சோஷலிசம்' (Socialism) என்பதும் ஏறக்குறைய இதுவேதான். சமூகத்தின் பொது நலத்தைக்கருதி நாட்டிலுள்ள உடைமைகள் முழுவதையும் சமூகப் பொதுவுடைமையாக்குவது சோஷலிசமாகும். 'சோஷலிசம்' என்னும் பெயரைக் கம்யூனிசம் என்னும் சொல்லுக்குச் சிறிது முற்பட்டதாகக் கொள்ளலாம் போலும்!

கார்ல் மார்க்ஸ் (Karl Marx: 1818-1883) என்னும் செர்மனி அறிஞர் பொதுவுடைமைக் கொள்கையின் தந்தை யாவார். இவர் 1848 ஆம் ஆண்டு இக்கொள்கையை வெளியிட்டார். இது விரைவாகப் பரவத்தொடங்கியது. முதல் முதலாக இந்தக்கொள்கை 'லெனின்' என்பவரால் பின்பற்றப்பட்டு ரஷ்ய நாட்டில் நடை முறைக்கு வந்தது; அங்கே கம்யூனிச ஆட்சி ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து உலகில் பல நாடுகளில் இக்கொள்கை பரவிற்று. இதன் பயனாய் இப்போது உலகில் பல நாடுகளில் கம்யூனிச ஆட்சி நடைபெறுகிறது. இது மார்க்ஸ் அவர்கள் வெளியிட்ட கொள்கையாதலின், இதற்கு மார்க்சிசம் (Marxism)என்ற பெயரும் உண்டு. இதன் இன்றியமையாக் கோட்பாடுகளாவன–:

1. எல்லா இயற்கை வளங்களும் தொழில் நிறுவனங்களும் நாட்டின் உடைமையாகும்.

2. தனிப்பட்டவர்க்குச் சொத்துரிமை யில்லை. எல்லாம் சமூகச் சொத்துக்களாகும்.

3. உண்டாக்கும் பொருள்கள் யாவும் சமூகத்தின் பொது வுடைமை யாகும்.

4. வருவாயைச் சமூக மக்களிடையே பரவலாகப் பங்கீடு செய்ய வேண்டும்.

5. தனியார் தொழில் முயற்சிக்கு இடமில்லை; சமூகக் கூட்டுத் தொழில் முயற்சிக்கே இடமுண்டு.

6. உண்டாக்கம் (உற்பத்தி) தனியாரின் ஊதிய (இலாப) நோக்குக்காக அன்று; சமூகப் பொதுநல நோக்கத்திற்கேயாம்.

7. புதிய சமூக அமைப்பைப் படைப்பவர்களாதலின் தொழிலாளர்கள் மிகவும் இன்றியமையாதவர்களாவர்.

8. நிலம் (வயல்) தனியுடைமையன்று; பயிரிடுபவரின் தரத்துக்கும் ஆற்றலுக்கும் ஏற்பப் பகிர்வு செய்து தந்து பயிரிடுவிக்கப்படும்.

9. ஒவ்வொருவரும் தத்தம் ஆற்றலுக்கு ஏற்ப வஞ்சனையின்றி உழைக்க வேண்டும்.

10. அனைவர்க்கும் தேவையை நிறைவு செய்யும் பொருள்கள் அளிக்கப்பட வேண்டும்.

இன்ன பிற, பொதுவுடைமை இயக்கத்தின் இன்றியமையாக் கோட்பாடுகளாகும்.

பண்டைப் பொதுவுடமை:

இக்காலத்தில் அரசியல் சட்டத்தின் வாயிலாகப் பொதுவுடைமைக் கொள்கை புகுத்தப்பட்டுள்ளது – புகுத்தப்படுகிறது. இந்தப் பொதுவுடைமைக் கோட்பாடு உலகத்துக்குப் புதியதன்று; பண்டைக் காலத்திலேயே இதன் சாயல் உலகத்தில் இருந்தது. அப்போது இக்கொள்கை 'அறநெறி' என்ற பெயரில் மக்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது. அறநூல்களும் மதநூல்களும் இதனைப் பரிந்துரைத்தன. திருவள்ளுவர் தமது திருக்குறள் நூலில் பல கோணங்களில் இதனைப் பரிந்துரைத்துள்ளார்: விருந்தோம்புபவன் வீட்டில் செல்வம் சேருமாம். தன் இனத்தைக் கரைந்து உண்ணும் காகம்போல், தன் செல்வத்தைப் பலர்க்கும் பகிர்ந்தளித்து உண்ணுபவனுக்குச் செல்வம் நிரம்பச் சேரும். பகுத்து உண்டு பல உயிர்களையும் காக்க வேண்டும். இன்ன பிற வள்ளுவரின் அறவுரை, இச்செய்திகளை,

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்" (84)

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள" (527)

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (322)

என்னும் திருக்குறள் பாக்களால் அறியலாம். இன்னும் திருவள்ளுவர் 'ஈகை' என்னும் தலைப்பின் கீழ், இல்லாதவர்க்கு உதவ வேண்டியதை வற்புறுத்தியுள்ளார்; 'ஒப்புரவு அறிதல்' என்னும் தலைப்பின் கீழ், உலகத்துக்கு உதவி உலகத்தோடு ஒத்து வாழ வேண்டும் எனப் பொதுவுடை

மைக் கொள்கைக்கு முத்தாரம் சூட்டியுள்ளார். திருவள்ளுவரின் பொருளியல் கோட்பாடொன்று மிகவும் வியப்பளிக்கிறது. அஃதாவது:-

''காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள'' (527)

என்னும் பாடலின் வாயிலாக, 'பிறர்க்கு உதவி செய்பவனிடமே செல்வம் உண்டாகும்' என்று கூறியிருக்கும். கருத்து, புரியாத ஒரு புதிர் போல் தோன்றுகிறது கொடுக்கக் கொடுக்கச் செல்வம் குறையுமே தவிர, மேன்மேலும் உண்டாவதெப்படி? என்ற ஐயம் எழலாம். இதில் ஒரு புரட்சிக் கருத்து இலை மறை காயாய் அடங்கியிருக்கிறது. அஃதாவது:- ''பிறர்க்கு உதவுபவனிடமே செல்வம் சேரவும் இருக்கவும், அரசும் சமூகமும் அனுமதிக்க வேண்டும்; ஊர்க்குள் பழுத்த பழமரம் போல் பிறர்க்குப் பயன் படாதவனது செல்வத்தைப் பறிமுதல் பண்ண வேண்டும்'' என்னும் புரட்சிக் கருத்தே அஃது. நாலடியார் என்னும் நூலில் உள்ள

''துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்த கூழ் பல்லாரோ டுண்க'' (2)

என்னும் பாடல் பகுதி ஈண்டு எண்ணத்தக்கது. பகடு என்றால் காளைமாடு. பாடல் ஆசிரியர் மாந்தனை நோக்கிக் கேட்கிறார். ''என்னையா! வயலில் காளைகள் நடந்து உழுததால் விளைந்து வந்த உணவுப் பொருளை நீ மட்டும் உண்ண வேண்டுமா? உனக்காகக் காளைகள் உதவி செய்திருக்க, நீ மட்டும் பலர்க்கும் பகுத்தளிக்காது உண்ணுவது முறையாகாது; காளைகளின் உழைப்பு பலர்க்கும் பயன் படவேண்டுமல்லவா? என்று கேட்கின்றார்.

இவ்வாறாக, எல்லா மொழிகளிலும் உள்ள-எல்லா மதங்களையும் சார்ந்த அறநூல்கள் யாவும், பலர்க்கும் பகுத்தளிக்க வேண்டும் என்னும் பொதுவுடைமைக் கொள்கையின் இன்றியமையாக் கூறை வற்புறுத்திக் கொண்டுள்ளன. இங்கே, சுப்பிரமணிய பாரதியாரின் புரட்சிப் பாடல் ஒன்று அதிர்ச்சி தருகிறது.

''தனி யொருவனுக்கு உணவில்லை யெனில்
சகத்தினை அழித்திடுவோம்''.

என்பது அந்தப் பாடல் பகுதி. உலகில் ஒருவனுக்கு உணவு கிடைக்க வில்லை யெனினும் இந்த உலகமே அழிவதாகுக! என்று பாரதியார் புரட்சிக் கனல் கக்குகிறார். திருவள்ளுவரோ, உலகில் ஒருவன் இரந்து (யாசித்து) உயிர்வாழ நேரிடினும், இவ்வுலகைப் படைத்த கடவுளே கெட்டழியட்டும்—என்று கடவுள் தலைமேலேயே கையை வைக்கிறார்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.'' (1062)

என்பது அவரது திருக்குறள் பாடல். எனவே, பொதுவுடைமைக் கோட்பாட்டின் மைய உயிர்நாடிக் கூறு பொதுவாக எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப் படக் கூடியதேயாம்.

### கலப்புப் பொருளியல்

மேலே, முதலாளி முறைக் கொள்கையும் பொதுவுடைமைக் கொள்கையும் பேசப்பட்டன. இவ்விரண்டும் ஓரளவு இணைந்தது போன்றதான 'கலப்புப் பொருளியல்' (Mixed Economies) என்பதும் நடைமுறையில் உள்ளது. இந்தியா

போன்ற நாடுகளில் தனியார் முயற்சியிலும் தொழில் நடப்பதையும் அரசின் முயற்சியிலும் தொழில் நடப்பதையும் காணலாம். சில தொழில்கள் தனியார் நடத்துவதற்கு ஏற்றனவாயும் வேறு சில அரசு நடத்துதற்கு ஏற்றனவாயும் இருக்கும். தனியார் துறைக்கு அரசு உதவுவது உண்டு. தனியார் தொழிலின் ஊதியம் தனியாரைச் சாரும். அரசின் தொழில் ஊதியமோ நாட்டுக்கு-மக்கள் சமுதாயத்துக்கு உரியதாகும். தனியார் தொழில் முயற்சியும் அரசின் விதிகட்கு உட்பட்டிருக்கும்படி கவனித்துக் கொள்ளப்படும். தனியார் தொழில் முயற்சி ஊழல்கள் உடையதாய்க் காணப்பட்டு அதனால் மக்கட்கு நலமில்லை எனத் தெரியவரின், 'தேசீயம்' (Nationalization) என்னும் பெயரால் தனியார் தொழில் நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கப்படும்.

கூட்டுறவு முறை:

ஒரு நாட்டில் முதலாளி நடைமுறையும் அரசு நடைமுறையும் ஆகிய இரண்டும் கலந்து இருப்பது 'கலப்புப் பொருளியல்' எனப்பட்டது. நாட்டில் தொழிலாளர்கள் ஒன்று கூடித் தொழில் செய்து பொருள்களை உண்டாக்கி ஊதியத்தைப் பகிர்ந்து கொள்வது கூட்டுறவு (Co-operation) முறையாகும். இம்முறையில், பொருள்களை உண்டாக்குபவர் வேறு - விற்கும் வணிகர் வேறு-வாங்குபவர் வேறு-இடைத் தரகர் வேறு-என்ற பல நிலைகள் இல்லை-எல்லாம் செய்பவர்கள் குறிப்பிட்ட கூட்டுறவு இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களே யாவர். எனவே, வணிகரும் இடைத் தரகரும் பெறக் கூடிய ஆதாயங்கள் தொழிலாளரையே சேர்ந்து விடுகின்றன. தொழிலாளர்க்குப்

பொருள்கள் குறைந்த விலையில்-அடக்க விலையில் கிடைக்கின்றன. நிறுவனத்தின் ஊதியம் (இலாபம்) தொழிலாளர்க்குப்பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. இந்தக் கூட்டுறவு இயக்கத்துக்கும் அரசின் உதவியும் மேற்பார்வையும் உண்டு. இல்லையேல், முன்னணியில் இருந்து கவனிக்கும் தொழிலாளர் தலைவர்கள், முதலாளிகள் போலவே ஏப்பம்விடத் தொடங்கி விடுவர். இது நடக்கவும் செய்கிறது.

மேலே கூறப்பட்டுள்ள எம்முறையாயினும் சரி-குறிப்பிட்ட முதலாளிகளாலேயோ அரசு என்னும் பெயரில் அரசு அலுவலர்கள் சிலராலேயோ பொது மக்கள் சுரண்டப்படாமல் ஆக்கம் பெறுமாறு செய்விக்கக் கூடிய ஊக்க முறைக் கோட்பாடு எதுவாயினும் ஏற்கத் தக்கதே.

இதுகாறும் பல முறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இவை ஏட்டுச் சுரைக்காயாய் இருந்து விடலாகாது இவற்றை ஆய்ந்து நல்லனவற்றை நாடுகளும் மக்களும் நடைமுறையில் கடைப்படிக்க வேண்டும். ஒவ்வொரு நாடும் தனக்கு ஏற்ற கோட்பாட்டை வகுத்துக் கொண்டு நடைமுறையில் இயங்கி வருவது உண்மையே! ஆனால் சில நாடுகளில், நாட்டுத் தலைவர்களின் ஊழல்களும் பொது மக்களின் பொறுப்பற்ற நிலையும் சேர்ந்து கொண்டு கோட்பாட்டைத் தோல்வியடையச் செய்து விடுகின்றன. உலகில் நல்லதே நடைபெறுக!

### உழைப்பின் இன்றியமையாமை:

மக்களுக்குப் பல 'தேவைகள்' (wants) உள்ளன. அந்தத் தேவைகளுக்கு ஏற்ற பொருள்கள் கிடைத்துவிடின் 'நிறைவு' (satisfaction) ஏற்படுகிறது. தேவைகட்கும் நிறைவுக்கும் இடையே' 'உழைப்பு' (Labour) என ஒன்று வேண்

டியுள்ளது. உழைப்பு இருந்தால்தான் தேவைகள் நிறைவு பெறும். எனவே, பொருளியல் கோட்பாட்டின் அடி ஆணி வேர் 'உழைப்பு' என்பது புலனாகும்.

மக்கள் அன்று தொட்டு இன்று வரை உழைத்தே வாழ வேண்டியுள்ளவர்களாயுள்ளனர். தோட்டி முதல் தொண்டைமான் வரை-அரசன் முதல் ஆண்டி வரை உழைத்தே வாழ வேண்டியவர்களாயுள்ளனர். பிச்சை எடுப்பது ஆண்டியின் உழைப்பு. ஆளுவது அரசன் உழைப்பு. இந்தக் கருத்தை ஔவையார் நல்வழிப் பாடல் ஒன்றில் நன்றாக விளக்கியுள்ளார்: வயிற்றின் கொடுமையால் உணவு தேடுவதற்காக, பிறர்க்கு அடிமை வேலை செய்தலும், வீடு தோறும் சென்று இரத்தலும் (யாசித்தலும்), கடல் கடந்து சென்று தொழில் புரிதலும், நடித்தலும், நாடாளுதலும், பாட்டு இசைத்தலும் ஆகிய பல்வகைச் செயல் புரிந்து உடம்பை வருத்த வேண்டியுள்ளது-என்று கூறியுள்ளார்:

> ''சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல் கடந்தும்
> பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்-போவிப்பம்
> பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
> நாழி அரிசிக்கே நாம்'' (19)

என்பது அவரது நல்வழிப் பாடல். ஆண்டி இரக்கிறான் என்றால், அரசன் வயிற்றுப் பிழைப்புக்காக நாடாளுகிறான் என நையாண்டி செய்துள்ளார்.

நாலடியார்ப் பாடல் ஆசிரியர், உடம்பை 'பாழ் உடம்பு என்கிறார்; வயிற்றுப் பசிக்காக அவ்வுடம்பை வருத்துவதாகச் சொல்கிறார். உடம்பை வருத்துவது என்பது உடல்

உழைப்பேயாகும். இயற்கையின் விதியும் (சட்டமும்) இஃதே. வயிற்றுப் பிழைப்புக்காக உடல் உழைப்பு தேவைப்படுவது ஒருபுறம் இருக்க, உடல் நலத்துக்காகவும் உடல் உழைப்பு தேவைப்படுகிறது. உழைப்பு இல்லாவிடின் உடம்பு கெட்டழியும். 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பது திரு மூலரின் திருமந்திர மொழி. உடல் உழைப்பின்றியே உண்ணக் கூடிய செல்வப் பேறு உடையவர் சிலர், உடல் நலத்திற்காகவே, சிறு தொலைவாயினும் நடக்கின்றனர்-சிறிது நேரமாயினும் விளையாடுகின்றனர். நடந்தும் விளையாடியும் கழிக்கும் நேரத்தை, வீட்டுத் தோட்டத்தில் செடி கொடி வைத்து வளர்த்தல், பொதுப் பணி புரிதல் முதலிய ஆக்க வேலைகளில் கழிக்கலாம். ஒரு கல்லால் இரண்டு மாங்காய் விழுவது போல, இச்செயலால் உடல் நலமும் காக்கப்படுகிறது-ஆக்கமும் உண்டாகிறது. உடம்புக்கு உழைப்பு இயற்கை மருந்தாகும்.

முன்னோர் தேடிய செல்வத்தை வைத்துக் கொண்டு உழைக்காதிருப்பவர்கள், சமூகத்தின் உழைப்பால் உண்டாகும் பொருள்களை நுகர்வதற்கு உரிமையுடையவர் அல்லர். இவர்களின் செல்வம், அரசால் பறிமுதல் பண்ணப்பட வேண்டும். சுப்பிரமணிய பாரதியார் பாடியுள்ள,

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்''

என்னும் பாடல் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

## மூவகைத் தேவைகள்:

இந்தச் காலத்தில் தேவைகள் பெருகிவிட்டன. உடல் தேவை, சூழ்நிலைத் தேவை, உள்ளத்தின் தேவை எனத்

தேவையை மூன்று வகையாகப் பிரிக்கலாம். உணவு, நீர், உறையுள், மருந்து, இன்ன பிற உடல் தேவைகளாம். உடல் தேவை இன்றியமையாத அடிப்படைத் தேவையாகும். நகை, சிறப்பு உணவு, ஒப்பனை (அலங்கார) உடை, பெரிய மாட மாளிகை, மின் பொருள்கள், இன்ன பிற ஆரவார-ஆடம்பர அலங்காரப் பொருள்கள், சூழ்நிலைகளைக் கண்டு ஒருவர்க்கு ஒருவர் பெருமை தேடிக் கொள்வதற்காக எழுந்த சூழ்நிலைத் தேவைகளாம். ஓவியம், சிற்பம், இயல், இசை, கூத்து இன்னபிற கலைக்கூறுகள் உள்ளத்தை (மனத்தை) மகிழ்விக்கும் தேவைகளாம். இவ்வாறாக, அடிப்படையான உடல் தேவைகட்கு மேல் மற்ற தேவைகளும் பெருகிவிட்டதால், அடிப்படைப் பொருள்களோடு ஆரவாரப் பொருள்களையும் கலைப் பொருள்களையும்தொழிற் பொறிகளையும் இன்ன பிறவற்றையும் உண்டாக்க வேண்டியிருப்பதாலும், மக்கள் தொகை பெருகிக் கொண்டிருப்பதாலும், இவற்றிற்கு ஈடுகொடுக்க, இந்தக்காலத்தில் மக்கள் மிகவும் உடம்பை வருத்தியும் மூளையைச் செலவிட்டும் உழைக்கவேண்டியவர்களா யுள்ளனர். கையால் செய்யும் தொழில்களை ஆலைகள் (Mills) செய்யினும், அங்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் உழைப்பு தேவைப்படுகிறது. கைத் தொழில்கட்கும் வாய்ப்பு இருக்க வேண்டும். இந்த வாய்ப்பு இல்லாத இடங்களில் அரசோ, செல்வரோ பொறித்தொழில்அமைப்புகளை நிரம்ப நிறுவிப் பல்லாயிரக்கணக்கான மக்கட்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். செல்வர்கள் செய்யவில்லையெனில், அவர்களிடம் உள்ள செல்வங்களைப் பறித்து அரசு பல்வேறு தொழில்களைத் தொடங்க வேண்டும். அரசு தொழில் துறையை மேற்கொள்ளின், தனி முதலாளி முறையில் காணப்படும் கொள்ளை ஊதியம், கள்ளச் சந்தை, கள்ளக் கணக்கு, கள்ளப் பணம்,

கலப்படம், இன்ன பிற ஊழல்கட்கு இடம் இராது.

## தொழிலாளியும் முதலாளியும்:

இந்தக் காலத்தில் தனி முதலாளிகள் பெருந் தொல்லைகட்கு ஆளாகாமல் இல்லை. அரசு எடுக்கும் நடவடிக்கை ஒரு புறம் இருக்க, தொழிலாளிகளும் அவர்கட்குத் தொல்லை கொடுப்பதைக் காண்கிறோம். பொது மக்கள் சிலர், செல்வர்களைத் தெருவில் கண்டதும், 'புளி மூட்டை' — 'பிளாக் மார்க்கெட்' — 'கள்ள நோட்டு' என்றெல்லாம் கூறித் தூற்றுகின்றனர். சில முதலாளிகட்கு அடிஉதை கிடைப்பதும் உண்டு. முறை தவறிய இச் செயல்கள் கூடா. அப்பன் - பாட்டன் வைத்துப் போன செல்வத்தால் பிறவி முதலாளிகளா யிருப்பவர்கள் சிலரே. வறிய குடும்பத்தில் பிறந்து வறுமையைச் சுவைத்துக் கொண்டே, இரவு பகலாக அயராது உழைத்துத் தம் சொந்த முயற்சியால் இடையில் செல்வர்களான முதலாளிகள் பலராவர். பெரும்பாலான முதலாளிகள், தாமும் தொடக்கத்தில் தொழிலாளிகளா யிருந்து, தமது சொந்த முயற்சியால் உழைத்து முன்னேறி முதலாளி யானவர்களே. இதனால் முதலாளிகள் தரப்பில் சொல்லப்படும் கருத்தாவது: குப்பனும் சுப்பனும் போலவே நாங்களும் தொழிலாளரா யிருந்தவர்களே. குப்பனும் சுப்பனும் சரியாகத் தொழில் செய்வதில்லை; கிடைத்த ஊதியத்தையும் குடிப்பதிலும் சூதாடுவதிலும் செலவிட்டுக் குடும்பத்தை நடுத்தெருவில் நிற்க வைத்தனர். ஆனால் நாங்கள் கடினமா யுழைத்தும் சிக்கனமாய்ச் செலவிட்டும் பணத்தைச் சேமித்துச் சொந்தத் தொழில் தொடங்கி முதலாளிகளாய் முன்னேறி யுள்ளோம். சுப்பன்-குப்பன் முதலானவர்கள் முன்னேறுவதை நாங்கள் தடுக்க வில்லையே.

அன்னவர் ஊதாரித்தனமாய் இருந்து விட்டு இப்போது எங்களை வைவதும் தாக்குவதும் முறையாகுமா? - என்பது முதலாளிகள் தரப்பு வாதமாகும்,

இந்த வாதத்திலும் உண்மை யிருக்கத்தான் செய்கிறது. ஒவ்வோர் ஏழைத் தொழிலாளிக்கும் ஐந்து காணி வீதம் நிலம் இலவசமாகத் தந்தால், அவர்களுள் சிலரே அந்நிலத்தைக் கொண்டு முன்னேறுவர்; மற்ற பெரும்பான்மையினர், சோம்பலாலும் குடியாலும் சூதாலும் இன்ன பிறவற்றாலும் அந்த நிலத்தைத் தொலைத்து விட்டு மீண்டும் ஏழையாகி விடுவர். இது நடவாதிருக்கஅரசின் கண்காணிப்பு வேண்டும். இங்கே திருவள்ளுவரின் கருத்துக்கள் நினைவு செய்யத்தக்கன: யாம் ஒன்றும் இல்லாத ஏழைகளாகி விட்டோம் என்று கூறும் சோம்பேறிகளைக்கண்டால் நிலம் என்னும் பெண் எள்ளி நகையாடுவாள். முயற்சி செல்வம் தரும் - முயலாமை வறுமை தரும். தெய்வத்தால் முடியாததையும் முயற்சியால் முடியச் செய்யலாம். சோராது உழைப்பவர்கள், கெட்ட ஊழ்வினையையும் வென்று விடலாம். இக்கருத்துக்களை

''இலமென்று அசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'' (1040)

''முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்'' (616)

''தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்'' (619)

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்'' (620)

என்னும் குறட் பாக்களால் அறியலாம். எனவே, ஒவ்வொருவரும் கடுமையாய் உழைத்தால்தான் அவரவர் வீடு முன்னேறும் - வீடு முன்னேற நாடு முன்னேறும் - நாட்டின் முன்னேற்றத்திற் கேற்பவே, நாகரிகச் சமூக அமைப்பு உருவாகும்.

## தனியார் துறையும் அரசுத்துறையும்:

தனியார் துறையே சிறந்தது என்பது ஒரு சாரார் கொள்கை. அரசுத் துறையே சிறந்தது என்பது மற்றொரு சாராரின் கொள்கை. தனியார் துறையே சிறந்தது என்பவரின் கொள்கைக்கு உரிய சில சான்றுக ளாவன:-

1. தனியார் துறையில், குறிப்பிட்ட முதலாளியின் மேற்பார்வையில் உருவாகும் பொருள்கள் தரமுடையனவாய் இருக்கும். அரசுத்துறையில் யாருக்கும் அவ்வளவாகப் பொறுப்பு இராது - தொழிலாளர்கள் முறையாய்த் தொழில் செய்யார்.

2 தனியார் கடைகளில் பொருள் வாங்கச் சென்றால் பொருள்கள் விற்பனையாக வேண்டுமே - இழப்பு இன்றி ஊதியம் கிடைக்க வேண்டுமே - என்ற அக்கறையுடைய முதலாளியின் மேற்பார்வை யிருப்பதால், செல்பவர்கள் அன்போடு வரவேற்கப் படுகிறார்கள் - அன்போடு நடத்தப் பெறுகிறார்கள். அரசுத் துறையில் இதை எதிர்பார்க்கவியலாது. பொருள் விற்றால் என்ன - விற்காவிட்டால் என்ன? ஊதியம் வந்தால் என்ன - வராவிட்டால் என்ன? என்பதாக, அரசுத் துறை அலுவலர்கள் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளக் கூடும். தனியார் துறையில், கடையை மூடிய பின் சென்றாலும் கடையைத் திறந்து பொருள்களை விலைக்குத் தருவார்கள். அரசுத்துறை நிறுவனங்களிலோ, நேரமாகி விட்டது

- நாளைவா எனக் கூறுவார்கள். இது பல இடங்களில் நடக்கிறது.

3. தனியார் பேருந்து (Bus) வண்டிப் பயணத்துக்கும் அரசுப் பேருந்து வண்டிப் பயணத்துக்கும் மேற்கூறியவாறு வேறுபாடு உண்டு.

4. தனியார் கல்வி நிறுவனத்தில் கற்கும் மாணாக்கர்களின் தரத்துக்கும் அரசுக் கல்வி நிறுவனங்களில் கற்பவர்களின் தரத்துக்கும் வேறுபாடு உண்டு. முன்னது சிறப்பாகவும் பின்னது அதனினும் மட்டமாகவும் இருப்பதே பெரும் வழக்கமாயுள்ளது.

5. தனியார் மருத்துவமனை - அரசு மருத்துவ மனை, இன்ன பிற நிறுவனங்கள் யாவற்றிலும் தனியார் துறைக்கும் அரசுத் துறைக்கும் மேற்கூறியவாறு வேறுபாடு உண்டு.

இன்ன பிற காரணங்களைக் கூறி, அரசுத் துறையினும் தனியார் துறையில் நிறுவனங்கள் இயங்குவதே சாலச் சிறப்புடைத்து என்று ஒரு சாரார் வாதிடுகின்றனர். இனி, அரசுத் துறையே சிறந்தது என்பவர் கூறும் சான்றுகளாவன:-

1. பெரிய நிறுவனங்களைத் தனியார் இயக்க முடியாது. தொழிலாளர் புரட்சிகளை அரசு அடக்குவதுபோல் தனியாரால் அடக்க முடியாது. அரசுத் துறைக்குக் கிடைக்கும் அளவு, மூலப் பொருள்கள் தனியார் துறைக்குக் கிடைக்கமாட்டா. இதனால் உண்டாக்கம் (உற்பத்தி) குறையும் - பொருள் பற்றாக் குறை ஏற்படும் - விலைவாசி ஏறும் - எனவே மக்கள் வாங்கும் ஆற்றல் இன்றி வருந்துவர்.

2. தனிப்பட்ட முதலாளிகள் ஊதிய நோக்குப் பேரவாவின் காரணமாக மட்டமான பொருள்களையே உண்டாக்குவர் – கலப்படமும் செய்வர் - விலைகளைத் தாறுமாறாக ஏற்றுவர் - உரிய காலத்தில் மக்களுக்குக் கிடைக்க முடியாதவாறு, பின்னால் மிகுந்த விலைக்கு விற்கலாம் என்ற ஆதாய நோக்குடன் பொருள்களைப் பதுக்கிவைப்பர். இதனால் பொருள் தட்டுப்பாடு ஏற்படுவதால் மக்கள் அல்லலுறுவர். மிகுந்த விலையுடன் வெளிக் கொணரும் போதும் மக்கட்குத் துன்பமே யாம்.

3. தனியார் துறையில் முதலாளிகள் தொழிலாளிகளின் வியர்வையை யன்று – குருதியையே கசக்கிப் பிழிந்து குடிப்பர். தொழிலாளிகட்கு உரிய கூலி கிடைக்காது; பெரிய அளவில் தொழிலாளிகள் ஏமாற்றப்படுவர்; அதனால் உண்மையான அக்கறையுடன் உழைக்காமல், ‘ஏனோ - தானோ’ என்ற முறையில் வேலை செய்வர்; இதனால் பொருள்களின் தரம் குறையும்; விரைவில் கெட்டுப் போகும்.

இன்ன பிற காரணங்களைக் காட்டி, தனியார் துறையினும் அரசுத் துறையே மேலானது என மற்றொரு சாரார் வாதிடுகின்றனர்.

### தனியுடைமையும் பொதுவுடைமையும்:

இப்போது இந்தியா போன்ற நாடுகளில் தனியுடைமை - தனிச் சொத்துரிமை யிருப்பதால், நிரம்பப் பொருளீட்ட வேண்டும் – நிரம்பச் சொத்து சேர்க்க வேண்டும் என்னும் பேரவாவால், பலர், அல்லும் பகலும் ஓடியாடி உழைத்துக் கொண்டுள்ளனர். இதனால் பலபொருள்கள் மிகுந்த அளவில் உண்டாக்கப்படுகின்றன. சொத்

துரிமை இல்லையெனில், ஒருவருக்கும் ஊக்கம் உண்டாகாது; ஒவ்வொருவரும் ஏதோ ஓரளவே உழைப்பர். எனவே, பொதுவுடைமையினும் தனியுடைமையே மேலானது என்பது சிலரது வாதம்.

பொதுவுடைமை யின்றித் தனியுடைமையிருப்பின், வாய்ப்புள்ள ஒருசிலர் மட்டுமே ஊரையடித்து உலையில் போட்டுக் கொள்வர். செல்வம் பரவலாகச் செல்லாமல் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே குவிந்துவிடும். இதனால் சிலர் மட்டுமே இன்புறவும் பலர் துன்புறவும் நேரும். எனவே, தனியுடைமை கூடாது - பொதுவுடைமையே வேண்டும் - என்பது சிலரின் வாதம்.

பொதுவுடைமை நாடுகளில் 'தனித் தன்னாட்சி' (சர்வாதிகாரம்) நடைபெறுவதாகவும், சொத்துரிமை இன்மையோடு, பேச்சுரிமை - எழுத்துரிமை - இன்னபிற அடிப்படை உரிமைகளும் இல்லை என்பதாகவும் ஒரு கருத்துக் கூறப்படுகிறது. இக் கொள்கையைப் பின்பற்றாத நாடுகளில், சொத்துரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை முதலிய சனநாயக - மக்களாட்சி உரிமை யாவும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, 'சர்வாதிகார - வல்லாட்சி' வேண்டா - 'சனநாயக - மக்கள் ஆட்சியே' வேண்டும் என்பது ஒருவகை வாதம். இந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு காண வேண்டுமே!

சனநாயக சோஷலிசம்:

'சன நாயகம்' (Democracy) என்பது மக்களாட்சி முறையாகும். இதில், மக்களுக்குச் சொத்துரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை முதலிய உரிமைகள் யாவும் உண்டு. 'சோஷலிசம்' (Socialism) என்பது, பொதுவுடைமைக் கொள்கைச் சார்பாகும். இதில், மக்களுக்குப் பேச்சுரிமை

யும் எழுத்துரிமையும் இருந்தாலும் இருக்கும் - சொத்துரிமை மட்டும் இல்லவே யில்லை. பொதுவுடைமை நாடுகள் சிலவற்றில் எழுத்துரிமை, பேச்சுரிமை போன்ற அடிப்படை உரிமைகளுங்கூட இல்லை என்பதாகவே சொல்லப் படுகிறது. எனவே, 'சனநாயகம்' என்பதும் 'சோஷலிசம்' என்பதும் ஒன்றுக்கொன்று நேர் எதிரான கொள்கைகளாகும். எதிர்மாறான இந்த இரண்டையும் இணைப்பது தான் 'சனநாயக சோஷலிசம்' ஆகும்.

'சனநாயக சோஷலிசம்' என்னும் கொள்கை 'கூழுக்கும் ஆசை - மீசைக்கும் ஆசை' என்பது போலல்லவா இருக்கிறது? எனச் சிலர் இதைக் கிண்டல் செய்யலாம்; தண்ணீரை நோக்கித் தாவும் தவளையையும் தரையை நோக்கித் தாவும் எலியையும் இணைத்துக் கட்டிப் போட்டது போல் இருக்கிறது இது எனச் சிலர் கேலி செய்யலாம். இக்கொள்கையை வெற்றி பெறச் செய்வது கடினமே! ஆனால், முயன்றால் முடியக் கூடியதே இது! இக்கொள்கை வெற்றி பெறின் மக்கள் இனத்துக்கு நன்மையே.

சன நாயக சோஷலிசம் (Democratic Socialism– குடியரசுப் பொதுமை) என்னும் கொள்கை, இந்தியாவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. என் தாய்நாட்டில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதற்காக யான் சொல்லவில்லை- உண்மையான நடுவுநிலைமையுடன் இந்தக் கொள்கையை வரவேற்கிறேன். இந்தக் கொள்கையின்படி என்னென்ன திட்டங்கள் இருக்க வேண்டும் என்பதையும் என் கருத்தாக வெளியிடுகிறேன்.

மின் விசிறியின் கீழே அழகிய நாற்காலியில் அமர்ந்து பணிபுரியும் அரசியல் அலுவல்கட்கு (உத்தியோகங்கட்கு)

எல்லாரும் செல்ல முடியாது - ஒருசிலரே செல்ல முடியும். இதற்குக் காரணம் போதிய இடம் இன்மை மட்டுமன்று. வயல்வெளியில் உழவுத் தொழில் புரிதல், நெசவு, கட்டட வேலை முதலிய தொழில்களைச் செய்வதற்குப் போதிய ஆட்கள் கிடைக்க மாட்டார்கள் என்பதும் இன்றியமையாக் காரணமாகும். 'எல்லாரும் பல்லக்கு ஏறினால் சுமப்பவர் யார்' என்னும் பழமொழியை ஈண்டு ஒருபுடை ஒப்புமையாகக் கொண்டு நோக்கவேண்டும்.

அங்ஙனமெனில், ஒருசிலர் மட்டும் பல்லக்கு ஏற மிகப் பலர் சுமப்பது முறையா? - என்ற வினா எழலாம். இதற்கு வேறு 'மாற்று' உண்டு. உழவு, நெசவு, கட்டடம் முதலிய கம்மிய வேலைகள், இன்ன பிறவற்றை யெல்லாம் அரசுத் தொழில் (உத்தியோகம்) போலவே அமைத்துச் செயல்பட வைக்கவேண்டும்.

இப்போது அரசுத் துறையில், 'வேலை தேடித் தரும் நிறுவனம்' (Employment Exchange) என்னும் ஓர் இயக்கம் செயல்பட்டு வருகிறது. படித்து வேலையில்லாமல் இருப்பவர்கள் இந்த நிறுவனத்தில் தம் பெயரையும் படிப்பு முதலியவற்றையும் பதிந்து வைக்கின்றனர். வேலைக்கு ஆட்கள் தேவைப்படும் வேறு நிறுவனத்தார்கள் இந்த நிறுவனத்துக்கு எழுதுகிறார்கள்; இந்த நிறுவனம் உரிய ஆட்களை அனுப்பி வைக்கிறது. இது போலவே, ஒவ்வொரு தொழிலையும் ஒரு வாரியமாகக் கொண்டு, ஒவ்வொரு தொழிலுக்கும் வேலை தேடித் தரும் நிறுவனம் அமைக்க வேண்டும். இஃது அரசின் கண்காணிப்பில் நடைபெறலாம். ஒவ்வொரு தொழிலுக்கும் உரிய ஆள் கூலியை அரசு இந்த நிறுவனத்தின் வாயிலாக முன்கூட்டித் திட்டப்படுத்தி வைக்க வேண்டும். குறிப்பிட்ட

இத்தனை நாட்கட்கு உழவுத் தொழில் செய்ய இத்தனை ஆட்கள் வேண்டும் - கட்டட வேலை முடியும் வரை இத்தனை ஆட்கள் வேண்டும் - என்று இந்த நிறுவனத்தைக் கேட்டு உரிய ஆட்களைப் பெற்றுக் கொள்ளலாம். எல்லாத் தொழில் துறைக்கும் இந்த முறை ஒத்து வராவிடினும், ஒரு சில தொழில்களுக்காவது இது ஒத்துவரலாம். வந்த வரையும் வரட்டுமே. 'வீட்டு வாடகை நிறுவனம்' என ஒன்று செயல்படுகிறதல்லவா? வாடகைக்கு வீடு கிடைக்காதவரும், வாடகை தந்து வீட்டில் குடியிருக்க ஆள் கிடைக்காதவரும் இந்த நிறுவனத்தின் வாயிலாகத் தேவையை நிறைவேற்றிக் கொள்கின்றனரல்லவா? இது போலவே எல்லாத் துறைகளிலும் முயன்று பார்க்கலாம்.

இந்த முறை ஒத்துவராத தொழில்கட்குக் 'கூட்டுறவு இயக்கம்' தொடங்கி அதன் வாயிலாகப் பலருக்கும் உரிய முறையில் தொழிலும் தக்க ஊதியமும் கிடைக்கச் செய்யலாம். இப்போது கூட்டுறவு இயக்கம் சில துறைகட்கு நடைமுறையில் இருந்து வருவதாகத் தெரிகிறது. இன்னும் எல்லாத் துறைகட்கும் இவ்வியக்கத்தைப் பரப்பிச் செயல்பட வைக்க வேண்டும். எல்லாத் துறைகட்குமே அரசு கூலி யளவைத் திட்டப்படுத்த வேண்டும்.

மேற் கூறியவாறு, புதுப் புது வேலை தேடித் தரும் நிறுவனங்களும் புதுப் புதுக் 'கூட்டுறவு' இயக்கங்களும் தோற்றி, அனைவருக்கும், அரசு அலுவல் போன்ற முறையில் வேலை கிடைக்க வாய்ப்பு உண்டாக்க வேண்டும். அரசுத் துறை மூலமோ பிறவற்றின் மூலமோ வேலை கிடைக்காதவர்கட்கு அரசு பண உதவி செய்து சிறு சிறு கைத்தொழில்கள் தொடங்க ஊக்கமளிக்க வேண்டும்; இது மட்டும் போதாது; இவர்கள் உண்டாக்கும் பொருள்கட்கு

விற்பனை வாய்ப்பும் (Market) அரசு ஏற்படுத்தித் தரவேண்டும். இவ்வாறு அரசுத் துறையிலும் தனியார் துறையிலும் தொழில் ஒழுங்காய் நடப்பதற்கு இந்தத் திட்டத்தில் இடம் இருக்க வேண்டும். தனியார் துறையும், அரசின் விதிமுறைகட்கு உட்பட்டு அரசின் கண்காணிப்புடன் நேர்மையாக இயங்க வேண்டும்.

எல்லாரும் வேலை செய்ய வேண்டும். முன்னோர் வைத்துப்போன உடைமைகளைக் கொண்டு, வேலை செய்யாமல் உண்டுகொண்டிருப்பவர்களையும் தொழிற்படுத்த வேண்டும்; அவர்கள் மறுப்பார்களாயின் தண்டனை தர வேண்டும்; அவர்களின் உடைமைகளைப் பறித்து, நடந்து கொண்டிருக்கும் தொழில் துறைகளின் முதலீட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

எந்தத் துறையில் தொழில் புரியினும், தொழிலாளர்க்குத் தக்க ஊதியம் கிடைக்கச் செய்ய வேண்டும்; இது மட்டும் போதாது; ஆதாயத்தில் தொழிலாளர்க்கும் உரிய பங்கு அளிக்க வேண்டும். ஒவ்வொருவரும் செய்யும் வேலைக்கும் கூலியின் அளவுக்கும் ஏற்ப ஆதாயத்தைப் (இலாபத்தை) பங்கீடு செய்ய வேண்டும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் - உழைப்புக்கு ஏற்ற ஆதாயப் பங்கு - என்ற முறையை ஏற்படுத்தினால், ஒவ்வொருவரும் உண்மையாய் உழைப்பர். அரசுத்துறை நிறுவனங்களில் கிடைக்கும் ஆதாயத்தை, அரசு, நாட்டு மக்கள் அனைவரின் நலனுக்கும் செலவிட வேண்டியிருப்பதால், தொழிலாளர்க்குச் சமமான பங்கு தர இயலாவிடின், உரிய ஊதியத்துடன், 'விருப்ப மிகை ஊதியமும்' (Bonus) அளிக்க வேண்டும்.

இந்தத் திட்டத்தில் எல்லாருக்கும் சொத்துரிமை இருக்க வேண்டும். ஆனால், சொத்துரிமைக்குச் சிற

றெல்லையும் (Minimum) பேரெல்லையும் (Maximum) அமைக்க வேண்டியது இன்றியமையாததாகும். சிற்றெல்லையாக நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு வீட்டு மனையாவது இருக்க வேண்டும். பேரெல்லையை வல்லுநர் குழு அமைத்து வரையறுக்க வேண்டும. வீடு, நிலம், நகை, பணம் (ரொக்கம்) முதலிய எல்லாவற்றுக்குமே உச்ச வரம்பு (Ceiling) வரையறுக்கப்பட வேண்டும். இதனால், சமுதாயத்திலுள்ள மேடு பள்ளங்கள் ஓரளவாயினும் சமன் செய்து நிரவப்படலாம். மக்களாட்சிப் பொதுமைக் கொள்கைக்கு (சனநாயக சோஷலிசக் கொள்கைக்கு) இது மிகவும் உகந்ததாகும். சொத்துரிமை விரும்புபவர்கள், பேரெல்லையாகிய உச்ச வரம்பைக் கொண்டு மனநிறைவு அடைய வேண்டும்.

இதுகாறும், பொருளியல் அடிப்படையில் மேலே கூறப்பட்டுள்ள பல கோட்பாடுகளுள், 'மக்களாட்சிப் பொதுமை' (சனநாயக சோஷலிசம்) என்னும் கோட்பாடு உலகுக்கு உகந்ததாகும்-என்ற முடிவுக்கு இப்போது வர முடியும்.

## செல்வர்க்கு அழகு:

இதனால், மாபெருஞ் செல்வர்கள் தம் உடைமைகளுள் பெரும் பகுதியை இழக்க வேண்டி வருமே எனத் தயங்கலாம். "செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்" என்பது, அதிவீரராம பாண்டியன் என்னும் மன்னன் இயற்றிய 'வெற்றி வேற்கை' என்னும் நூலின் பாடலாகும். 'மிகப் பெரிய கூட்டமாயுள்ள சுற்றத்தார்களையெல்லாம் தாங்கிக் காப்பாற்றுவதே செல்வர்க்கு இலக்கணமாகும்'- என்பது இதன் பொருள். பெருஞ் செல்வர்கள், நாட்டில் உள்ள மக்கள் அனைவரையும் தம் சுற்றத்தாராக மதித்துத் தம் உடைமைகளை வாரி வழங்க வேண்

டும். இவ்வாறே, மாபெருஞ் செல்வ நாடுகளும், மற்ற ஏழை நாடுகட்குப் பொருள் உதவியும் தொழில் உதவியும் இன்ன பிற உதவிகளும் புரிய வேண்டும். உலக மக்களின முழுதும் ஒரே சுற்றம் அல்லவா - ஒரே குடும்பம் அல்லவா?

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடல் பகுதியும்,

''செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே'' (189)

என்னும் நக்கீரரின் புரநானூற்றுப் பாடல் பகுதியும் ஈண்டு நினைவுக்கு வர வேண்டும். 'தப்புந பல'' என்னும் தொடர், அரசால் பறிக்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பாய் உணர்த்துகிறது.

பொருளியலில் மக்களின் கடமை:

இது தொடர்பான சில கருத்துகளை மீண்டும் தொகுத்துப் பார்ப்போம்:-

1) எவ்வளவு அரும்பாடு பட்டுப் பொருளாதாரத்தை உயர்த்தினாலும், பெருகிக் கொண்டிருக்கும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாவிடின் ஒரு பயனும் இராது. உலகில் மக்கள் பெருகுவதுபோல் இடம் பெருகுவதில்லை. எப்போதும் உள்ள இடந்தான் எப்போதும் இருக்கும். மக்களை மட்டும் பெருக்கினால் வீடும் அதனால் நாடும் நலிய வேண்டியே யிருக்கும். எனவே, எந்த முறையைப் பின்பற்றியோ, பிள்ளைப் பேற்றைக் கட்டுப்படுத்த வேண்டியது, பொருளியல் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத கூறாகும்.

(2) நாள்-நேரம் பார்த்தல், ஊழ்வினை நம்பிக்கை பழமையில் பற்று முதலிய மூட நம்பிக்கைகளால், மக்கள் பலர், உரிய காலத்தில் உரியதைச் செய்யாமல் காலத்தைக் கொன்னே கழிக்கின்றனர். நாம் முயற்சி செய்யாவிடின், எவரும் எதையும் கூரையைப் பிரித்துக் கொட்டிவிட முடியாது. எனவே, மூட நம்பிக்கைகளைக் கைவிட்டு முயற்சியில் முனைந்து இறங்க வேண்டும். குமர குருபர அடிகளார் நீதி நெறி விளக்கம் என்னும் நூலில்,

"மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்-செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்".

எனக் கூறியுள்ளாங்கு, மக்கள் கருமமே கண்ணாயிருந்து கடமையாற்ற வேண்டும்.

(3) சிலர் வேண்டாத விளையாட்டுகளிலும் பொழுது போக்குகளிலும் காலத்தை வீணடிக்கின்றனர். 'ஓய்வு' என்பது 'வேலை மாற்றமே' (Change of Programme) யாகும். எனவே, மூளை வேலை செய்து களைத்தவர்கள் உடல் உழைப்பு செய்தலும், உடல் வேலை செய்து களைத்தவர்கள் எழுதுதல்-படித்தல் போன்ற மூளை வேலை செய்தலும் ஓய்வும் பொழுது போக்குமாகும். வாளா படுத்திருத்தலே ஓய்வு என்பதன்று. எனவே, அவரவரும் தம்மால் இயன்ற அளவு காலத்தைப் பயனுடையதாக்கவேண்டும்.

(4) வேலைகளில் உயர்வு தாழ்வு பார்த்தலாகாது. பெரிய வேலை கிடைக்காவிடின் சிறிய வேலை செய்ய

லாம். பின்னர்ப் பெரிய வேலை கிடைத்ததும் அதற்கு மாறலாம். சிறிய தொழிலையே கூட வளர்த்து நாளடைவில் பெரிய தொழிலாக மாற்றலாம்: எனவே, அனைவரும் பயனுள்ள எந்த வேலையாயினும் செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

(5) போர்க் கருவிகள் செய்தல் போன்ற அழிவு வேலைகளில் ஈடுபடாமலும், ஆடம்பரப் பொருள்களையும் வீண்பொழுது போக்குக் கருவிகளையும் செய்வதைக் குறைத்தும் பயனுள்ள ஆக்கவேலைகளையே அனைவரும் செய்யவேண்டும்.

(6) கடவுள் பெயரால் ஏமாற்றுதல், கையூட்டு பெறுதல், கள்ளக் கணக்கு - கலப்படம் - கள்ளவாணிகம்-களவு செய்தல் முதலிய தீய வழிகளில் பொருள் ஈட்டுதலை அறவே ஒழிக்கவேண்டும். ஊழல் இல்லாத - ஒழுங்குமுறை உள்ள உலகத்தை உருவாக்க வேண்டும்: களவுத் துறையில் ஈடுபட்டவருக்கும் கொடுந் தொழில் புரிபவர்க்கும், கொலைத் தண்டனையும் கைகால் குறைப்புத் தண்டனையும் கொடுக்க வேண்டும் எனத் திருக்குறள், சிலப்பதிகாரம், நாலடியார் முதலிய நூல்கள் கூறுகின்றன.

''கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்'' (திருக்குறள் - 549)

''கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று
வெள் வேல் கொற்றங் காண்.''

(சிலப்பதிகாரம் - வழக்குரை காதை:- 94-95)

''அச்சம் பெரிதால், அதற் கின்பம் சிற்றளவால்,
நிச்சம் நினையுங்கால் கோக் கொலையால்.''

(நாலடியார் - 81)

"காணின் குடிப்பழியாம், கையுறின் கால் குறையும்
ஆணின்மை செய்யுங்கால் அச்சமாம்".

(நாலடியார் - 84)

முதலிய இலக்கியங்களைக் காணின் உண்மை விளங்கும்.

## மன்பதையின் தோல்வி:

'தனி ஒருவனுக்கு உணவு இல்லை யெனில் சகத்தினை (உலகத்தையே) அழித்திடுவோம்' என்று சுப்பிரமணிய பாரதியாரும், 'இரந்தும் (யாசித்தும்) உயிர் வாழ்தல் வேண்டின் உலகியற்றியான் (கடவுள்) பரந்து கெடுக' எனத் திருவள்ளுவரும் கனல் தெறிக்கக் கூறியுள்ள கருத்துக்களை மீண்டும் கவனிக்க வேண்டும். இவர்தம் கூற்றின் பிழிவான சாரமாவது: உலகில் ஒருவனுக்கு உணவு இல்லை யென்றாலும், அந்தநிலை, அவன் வசிக்கும் நாட்டுக்கு மட்டும் தோல்வியாகாது; அந்தநிலை உலக மன்பதை (சமுதாயம்) முழுவதின் தோல்வியே யாகும் – என்பது அவர்தம் பாடல்களின் சாரமாகும். உலக மக்களினம் இதை உணர வேண்டுமே!

## வளத்திற் கிடையே வறுமை:

உலகில் வளங்கள் நிரம்ப உள்ளன. அங்ஙன மிருந்தும் வளத்திற்கிடையே வறுமை காணப்படுகிறது. இனியும் இதற்கு இடம் தரலாகாது. அறிவியல் அறிஞர்கள், தம் 'ஆராய்வு' (curiosity) ஊக்கத்தைப் பயன்படுத்தி உலகிலுள்ள வளங்களைக் கண்டுபிடித்து வெளிக் கொணர வேண்டும்; பல தொழில் துறைகட்குரிய வாய்ப்புக்களை ஆராய்ந்து வகுத்துத் தரவேண்டும். அரசினரும் மக்களும், 'படைப்பு' (Construction) ஊக்கத்தைப் பயன்படுத்தி, மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தை

மும் படைக்கவேண்டும். உலக நாடுகள் ஒன்றுக்கொன்று பண்டங்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும். வளத்தின் நடுவே வறுமைக்கு இடம் தரலாகாது.

இவ்வாறு, உலக மக்கள் அனைவரும், வறுமையின்றி வளத்துடன் வாழும் வகையில் பொருளியல் கோட்பாடு களை அமைத்துச் செயல்படுத்தினால் மக்களினத்தின் வாழ்க்கை எளிதாகவும் இனிமையாகவும் நடைபெறும்.

# 5: ஆக்க வேலைகள்

அணுயுகம்:

இந்தக் காலம் அணுயுகம். அமெரிக்க (U.S.A) நாடு சப்பான் நாட்டில் இரண்டு அணுகுண்டுகள் (Atom Bombs) போட்டதிலிருந்து, உலகில் அணுவை அழிவு வேலைக்குப் பயன் 'படுத்தலாகாது - ஆக்கவேலைக்கே பயன்படுத்த வேண்டும் என்னும் பசப்புப் பேச்சு, பரவலாக, உலகம் முழுவதும் ஒப்புக்காவது பேசப்படுகிறது. உலகம் உய்ய வேண்டுமாயின், எந்த உருவத்திலும் அழிவு வேலைக்கு இடம் தராமல், ஆக்க வேலைகளிலேயே மக்களினம் கருத்துச் செலுத்த வேண்டும்.

காலத்தைப் பொன்னினும் போற்றி, சோம்பலால் காலந் தாழ்த்தாது, தோல்விக்குத் துவளாமல், எண்ணித் துணிந்து, கருமமே கண்ணாயிருந்து, வேலைகளில் சிறியது பெரியது என்ற வேறுபாடு கொள்ளாமல், ஆக்க வேலைகளில் மக்களினம் ஈடுபட வேண்டும்; வேண்டாத வேலைகளிலும் விளையாட்டுக்களிலும் காலத்தை வீணாக்காது, பயனுள்ள முறையில் ஓய்வுப் பொழுதைச் செலவழித்து, எளிமையும் சிக்கனமும் கொண்டு அரும்பெருஞ்செயல் ஆற்ற வேண்டும். இந்தக் குறிக்கோளை அடைவதற்கு உதவும் கல்வி அனைவருக்கும் கட்டாயமாக அளிக்கப்பட வேண்டும்.

பாரதியாரின் பரிந்துரை:

சுருங்கக் கூறின், அனைவரும் பயனற்ற துறைகளில் கவனம் செலுத்தாது, ஊக்கமுடன் ஆக்க வேலைகளில் ஈடு

பட்டுக் கடுமையாய் உழைக்க வேண்டும். சுப்பிரமணிய பாரதியார் சில ஆக்கத்தொழில்களைப் பரிந்துரைத்துள் ளார்.

''இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே
யந்திரங்கள் வகுத்திடு வீரே
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடு வீரே
பெரும் புகழ் நுமக்கே யிசைக்கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!'.

''மண்ணெ டுத்துக் குடங்கள் செய் வீரே
மரத்தை வெட்டி மனைசெய்குவீரே
உண்ணக் காய்கனி தந்திடு வீரே
உழுது நன்செய்ப் பயிரிடுவீரே
எண்ணெய் பால்நெய் கொணர்ந்திடு வீரே
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே''.

என்பன பாரதியார் பாடல்கள். அரிய தொழில்களுடன் எளிய தொழில்களையும் பாரதியார் பரிந்துரைத்துள்ளார். எல்லாம் பயனுள்ள ஆக்க வேலைகளே. ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்ற வேலைகளைச் செய்யலாம்.

இதுகாறும் மேலே சுருங்கக் கூறியுள்ளன வற்றை இனிச் சிறிது விரிவாகக் காண்பாம்.

பொன்னினும் சிறந்த பொருள்:

''பொன்னினும் சிறந்த தொரு பொருள் அருங் காலமே'' என்பது தமிழ் முதுமொழி. 'காலம் பொன்னானது, – 'Time is gold' என்பது ஆங்கில மொழி. 'ஒரு நாள் கழியின் வாழ்நாளில் ஒருநாள் குறைந்து விட்டது என்பது பொருள். எனவே, நாள் என்பது உயிரைச் சிறிது சிறிதாக அறுக்கும் வாள் என வள்ளுவர் திருக்குறளில் தெரிவித்துள்ளார்:-

''நாளென ஒன்று போற் காட்டி உயிர் ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்'' (334.)

என்பது திருக்குறள் பாடல். எனவே, காலத்தை வீணே கழித்த லாகாது. காலம் தாழ்த்தல், வாழும் காலத்தைத் திருடும் கள்வ னாகும் என்னும் கருத்துடைய ''procrastination is the thief of time'' என்னும் ஆங்கில அறிவு மொழி ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. எனவே, மக்கள் காலத்தை வீணாக்காது 'ஆக்க வேலைகள்' புரிய வேண்டும். கல்வி நிறுவனங்களில் 'கால அட்டவணை' (Time Table) அமைத்து, இந்த நேரத்தில் இந்தப் பாடம் - அந்த நேரத்தில் அந்தப் பாடம் எனக் குறிப்பிட்டுக் கொண்டு செயல்படுவது போல, ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கைக்கும் கால அட்டவணை அமைத்துக்கொண்டு செயல் படவேண்டும்.

யாரும் காலத்தைக் கொன்னே கழித்த லாகாது. சிலர் அல்லர் - பலர் - 'போர்' அடிக்கிறது, நேரம் போக வில்லையே எனக் கவலை யுறுவதைக் காணலாம். நேரம் 'போக வில்லையே' எனக் கவலை யுறாமல், நேரம்'போத வில்லையே' என்று கவலை யுறும்படி செயல்முறைகளை

அமைத்துக் கொள்ளவேண்டும். 'போர்'அடிக்கிறது என்று கூறும் பேடிகள் உலகுக்குச் சுமையாவர்.

கெடு நீரார் காமக் கலன்:

'கெட்டழியக் கூடியவர்கள் விரும்பி அணியும் அணி கலன்கள் நான்கு உள' என வள்ளுவர் கூறியுள்ளார்: அவற்றுள் முதலாவது காலம் தாழ்த்தலாகும். எந்த வேலையையும் உரிய காலத்தில் முழுவதும் முடித்து விட வேண்டும். முழு வேலையையும் ஒத்திப்போடுவது கூடாது என்பது மட்டு மன்று - ஒரு வேலையை அரைகுறையாய் விட்டுவைப்பதும் கூடாது. அரைக் கிணறு தாண்டலாமா! வேலையை அரைகுறையாய் விட்டு வைப்பினும் அல்லது முழு வேலையையும் தள்ளிப் போடினும், பின்னர்-பின்னர் வேலைகள் மலையாய்க் குவிந்து விடும். குவிந்த பின் செய்யத் தொடங்குவது 'அவசரக் கோலம் அள்ளித் தெளித்த கதை' யாகிவிடும். 'செய்வன திருந்தச் செய்' என்பது ஔவையின் அறிவுரை. வேலையை நிறுத்தி வைத்து வேடிக்கையில் பொழுது போக்குபவர்கள்,'வேலை மலையாய்க் கிடக்கிறதே என்ற உறுத்தலுடன் அமைதி யின்றியே பொழுது போக்கில் ஈடுபட்டிருப்பர். குறை வேலைக்காரர்கள் பொழுது போக்கினால் பெறும் போலி யின்பத்தைவிட, உரிய வேலையை உரிய காலத்தில் முடித்து மனநிறைவு கொள்வதனால் உண்டாகும் இன் பமே பேரின்பமாகும். வாழ்க்கையில் சிறு பகையிருப்பினும் அது பெரிய பகையாக முற்றித் தலைக்கே கேடு விளைப் பது போலக் குறை வேலையும் செய்துவிடும். தீயை முற்றி லும் அணைக்காமல் சிறிதளவு எச்சமாய் (குறையாய்) விட்டு வைத்தாலும் அது பெருகி வளர்ந்து பெருங்கேடு செய்வது போலவே வினைக் குறையும் செய்துவிடும். இதனை

"வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்". (674)

என்னும் திருக்குறட் பாவால் தெளியலாம். எனவே, எந்த வேலையிலும் காலத் தாழ்ப்பு கூடாது.

கெடும் இயல்பினரின் இரண்டாவது அணிகலன் மறதியாகும். வேலையை நினைவில் வைத்துக் கொண்டே காலங் கடத்துபவர்களைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் வேலையை அறவே மறந்து விடுபவர்களை மன்னிக்கவே முடியாது. மறந்தவர்கள் மடிந்தவர்க்கு ஒப்பாவர்.

கெட்டழிபவரின் மூன்றாவது அணிகலன் மடி (சோம்பல்) ஆகும். சோம்பலின் பொல்லாமையைப் பற்றித் திருவள்ளுவர் பத்துப்பாடல்களில் தெரிவித்துள்ளார். மடி குடியையே (குடும்பத்தையே) அழித்து விடும் என்று கூறியுள்ளார். உரிப்பதற்குச் சோம்பல் கொண்டு வாழைப் பழத்தைத் தின்னாமல் வைத்திருக்கும் 'வாழைப்பழச் சோம்பேறிகள்' சமுதாயத்தில் மிக உளர். சமுதாயத்தின் சாபக் கேடான இவர்கள் சவக்குழியில் கிடக்கவேண்டியவர்களாவர்.

கெடுநீராரின் நான்காவது அணிகலன் பெருந் தூக்கமாகும். சிலர், நிலைத்த தூக்க மாகிய சாவுக்குப் பதில், உயிரை வைத்துக் கொண்டே நெடுந்தூக்கத்தில் இருப்பர். இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் எந்த நேரத்தில் எங்கே படுத்தாலும் இவர்கள் உடனே உறங்கிவிடுவர். கோடை வெயிலிலே - நண் பகலிலே- மிளகாய் அரைக்கும் பொறியின் பக்கத்தில் இவர்களை விட்டாலும், நின்றபடி இவர்கள் நெடுந்தூக்கம் தூங்கினும் வியப்படைவதற்கில்லை. இவர்கள் - இல்லை யில்லை - இவைகள் கவலை

யில்லாத பிறவிகள்; கொடுத்து வைத்த பிறவிகள். இப் பிறவிகட்கு உரிய இடம் கல்லறையே யாகும்.

எனவேதான், நெடுநீர் (காலம் தாழ்த்தல்), மறவி (மறதி), மடி (சோம்பல்), துயில் (பெருந்தூக்கம்) ஆகிய நான்கும் கெட்டழியும் இயல்பினர் காமுற்று அணியும் அணி கலன்களாகும் எனத் திருவள்ளுவர் தெரிவித்துள் ளார்:

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்". (605)

என்பது அவரது திருக்குறள் பாடல். 'சோம்பித்திரியேல்,' 'வைகறைத் துயில் எழு' என்னும் ஔவையின் அறிவுரை களைச் சிறுவயதில் முதல் வகுப்பிலேயே புகட்டியுங் கூட மக்கள் திருந்துவதாயில்லை. செம்மறி யாடு படுக்கும் முன்னிரவு)நேரத்தில் படு-வானம்பாடி எழும் (வைகறை) (நேரத்தில் எழுந்துவிடு, என்னும் பொருள் பொதிந்துள்ள "Lie with the lamb and rise with the lark" என்னும் ஆங்கிலப் பழமொழி ஈண்டு ஒப்பு நோக்கற் பாற்று. மற் றும், 'சிறிய காலத் தாழ்ப்பு பெருங் கேட்டை விளைவிக் கும்' என்னும் கருத்துடைய "A small neglect breeds great mischief" என்னும் ஆங்கிலப் பழமொழியும் எண் ணத் தக்கது பருவத்தே பயிர் செய், என்பது ஔவை யின் அறிவுரை. இதனை உழவுத் தொழிலுக்கு மட்டு மன்றி மற்ற தொழில்கட்கும் கொள்ளலாம்.

கருமமே கண்:

ஆக்க வேலையில் ஈடுபட்டிருப்பவர் அதிலேயே கண் ணாயிருக்கவேண்டும்; மெய் வருத்தம் பார்த்தலாகாது; பசியையும் பொருட் படுத்தக் கூடாது; நெடுநேரம் கண் உறங்கலாகாது; எவர் செய்யும் இடையூற்றையும் ஏறி

மிதித்துச் செல்ல வேண்டும். சூழ்நிலையின் கடுமைக்குச் சோர்ந்துவிடலாகாது; பொறாமையில் பிறர் கூறும் இகழ்ச்சியை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளலாகாது; காரியத்திலேயே கண்ணாயிருக்கவேண்டும். இந்த அறிவுரையை, குமரகுருபரர்,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் – செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்."

என்னும் தமது நீதி நெறி விளக்கம் என்னும் நூற்பாடலில் அழகாக அளித்துள்ளார். தனக்கு இன்பம் வேண்டானாய், முயன்று செயலாற்றுவதையே விரும்புபவன், தன் சுற்றத்தாரின் துயர் நீக்கித் தாங்கிக் காக்கும் தூண் போன்றவனாவான் எனவள்ளுவர் கூறியுள்ளார்:

"இன்பம் விழையான் வினை விழைவான் தன் கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்" (615)

என்பது அவரது திருக்குறள் பாடலாகும். 'தன் கேளிர்' என்பதற்குத் தன் மக்களினம் எனப் பொருள் கொள்ளின் பெருமையுடைத்தாகும்.

## தோல்விக்குத் துவளற்க:

ஆக்கச் செயலாற்றுங்கால் எத்தனையோ இடையூறுகள் குறுக்கிடலாம்; தோல்வியே நேரிடலாம்; அதற்காகத் துவண்டு போகக் கூடாது. தோல்வியை வெற்றிக்கு வழிகாட்டிய முன் அனுபவமாகக் கொள்ள வேண்டும். தடைக் கல்லைப் படிக்கல்லாகக் கொண்டு ஏறி மிதித்துச் செல்ல வேண்டும். தோல்வியைக் கண்டு துவளுபவன், சவக்குழியில்

ஒரு காலைத் தானே விட்டுக் கொண்டவனாவான் என்று ஓர் அறிஞர் கூறியுள்ளார்.

இது சார்பாக வள்ளுவர் கூறியுள்ள சில கருத்துக் களைக் காண்போம்: இந்தச் செயல் செய்வதற்கு அரியது என அஞ்சிச் சோராமல் முயன்று செய்யின் வெற்றி கிடைக்கும். எண்ணுவதெல்லாம் உயர்வாகவே எண்ண வேண்டும்; அந்த உயர் எண்ணம் கைகூடாமல் தவறி னாலும், தவறாத தன்மையதாகவே பொருள்படும். காட்டு முயலை அம்பு எய்து பெறும் வெற்றியினும், யானையைக் கொல்ல வேல் எறிந்து அது கிடைக்காமல் தவறிப் போன தோல்வி சிறப்புடைத்து. இச்செய்திகளை,

''அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்'' (611)

''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து'' (596)

''கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது''. (722)

என்னும் திருக்குறள் பாடல்களால் அறியலாம்.

கஜனி மாமூது என்னும் ஆப்கானியத்தான மன்னர் இந்தியாவின் மீது பதினேழு முறை படையெடுத்தபின் வெற்றி பெற்றாராம். ராபர்ட் புரூஸ் (Robert Bruce) என் னும் மன்னன் நாடிழந்து ஒரு குகைக்குள் மறைந்திருந் தானாம். தன்னாட்டை மீட்கப் பல முறை முயன்றும் பயனில்லை. இந்நிலையில், குகைக்குள்ளே ஒரு சிலந்தி ஆறு முறை வலை கட்டியும் கை கூடாமற் போக, அது சோராமல் முயன்று ஏழாவது தடவை கட்டி முடித்த தைக் கண்டு, அரசன் ஊக்கம் கொண்டு, மீண்டும் படை

யெடுத்துச் சென்று வென்று தன் நாட்டை மீட்டானாம். எனவே,ஆக்க வேலைகளில்ஈடுபட்டிருப்பவர்கள், விரைவில் கை கூடாமையைக் கண்டோ அல்லது தோல்வியைக் கண்டோதுவளாமல் அடுத்துமுயன்றால்ஆக்கம் பெறலாம்.

## எண்ணித்துணிக:

''எண்ணித் துணிக கருமம்'' என்பது வள்ளுவர் அறிவுரை. எந்தச் செயலையும் திடுதிப்பென்று தொடங்கி விடாமல், செய்யும் முறையை முன்கூட்டி எண்ணி ஆராய்ந்து திட்டமிட வேண்டும். பின்னர்த்திட்டம் இட்டபடி நடைமுறையில் அதைச் செயல் படுத்த வேண்டும். வெற்றி கிடைக்குமாயின் மேலும் அந்தப் பாதையில் தொடர்ந்து முன்னேறலாம். தோல்வி கிடைப்பின், தோல்விக்கு உரிய காரணங்களை ஆராய்ந்து, மீண்டும் அக் காரணங்கள் நிகழாதவாறு ஆராய்ந்து திட்டமிட்டு அதன் படி செயல்பட வேண்டும். மௌண்ட்பாட்டன் என்னும் ஆங்கிலக் கப்பற் படைத் தலைவர், இந்த நாளில் இத்தனை மணிக்கு நார்வேநாட்டுத் துறைமுகத்தில் தம் படையைத் தரையிறக்க வேண்டும் எனத் திட்டமிட்டுக்கொண்டு சென்றாராம். குறித்தநேரத்தில் தரையிறக்க முடியாமற் போயினும் வெற்றி பெற்று விட்டாராம். பின்னர், குறித்த நேரத்தில் தரையிறக்க முடியாது போனமைக்கு உரிய காரணத்தைப் பற்றிப் படை மறவர்களுடன் ஆய்வு செய்து, இனி அவ்வாறு நிகழாதிருக்க வேண்டும் என்று வலியுறுத்தினாராம். படையைத் தரையிறக்கக் காலம் தாழ்த்த நேரம் எவ்வளவு எனில், ஒரே ஒரு நிமிடம் தானாம். அதாவது, எட்டரை மணிக்குமேல் ஒரு நிமிடம் கூடுதல் ஆய்விட்டதாம். எனவே, முன் கூட்டி எண்ணித் துணிந்து, அவ்வண்ணமே, காலம் தாழ்த்தாது செயல்புரிய வேண்டும் என்பது இதனால் பெறப்படும்.

ஆய்ந்தோய்ந்து பாராதவன் தான் சாவ மருந்து உண்பான், என்பது தமிழ்ப் பழமொழி 'ஒரு செயலில் குதிக்கு முன்பு நன்கு ஆராய்ந்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்' என்னும் கருத்துடைய "Look before you leap" என்னும் ஆங்கிலப் பழமொழி ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

## வேலையில் வேற்றுமையா?

வேலையில் உயர்வு தாழ்வு என்னும் வேற்றுமை பாராட்டலாகாது. எந்தத் தொழில் யாருக்கு வாய்க்கிறதோ அந்தத் தொழில் எத்தகையதாயினும் அதை அவர் கூசாது செய்ய வேண்டும். ஊதியத்தைக் கொண்டு வேலை சிறியது எனத் தோன்றின், பெரிய ஊதிய வேலைக்கு முயலலாம்; அந்த நோக்கத்திற்குக் கல்வியை மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டும் – அல்லது-மேலும் சிறந்த தொழிற் பயிற்சி பெற வேண்டும். இவ்வாறு முயன்று பெரிய ஊதிய வேலைக்குப் போகலாம். ஆனால், தொடக்கத்தில் கிடைக்கும் தொழில் குறைந்த ஊதியத் தொழிலாக இருக்கிறது என்று சோர்ந்து மனக் குறையுடன் செய்வதோ – அல்லது - அந்தத் தொழிலை ஏற்றுக் கொள்ளாமல் கை நழுவ விடுவதோ கூடாது. சிறிய தொழில் என்று வாளா இருந்தால் ஊதியம் வருமா? உழைப்பு இல்லையேல் ஊதியம் இல்லை. (No pains – No gains). பெரிய தொழிலை எதிர்பார்த்துச் சிறிய தொழிலைக் கைவிடலாகாது. 'நாளைக்கு வரும் பலாப் பழத்தினும் இன்றைக்குக் கையில் இருக்கும் களாப் பழம் மேலானது.' "புதரில் இருக்கும் இரண்டு பறவைகளினும் கையில் இருக்கும் ஒரு பறவை மிகுந்த பெறுமானம் உடையது" என்னும் கருத்துடைய "A bird in the hand is worth two in the bush" என்னும் ஆங்கிலப் பழமொழி ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

இந்தக் காலக் கல்வி முறை, இளைஞர்களை நாட்டுக்கு அயலாராக ஆக்கியதோடு வீட்டுக்கும் அயலாராக ஆக்கி விட்டது-என்பதான ஒரு கருத்தை அண்ணல் காந்தியடிகள் வெளியிட்டுள்ளார்கள். இந்தக் காலத்தில் படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் பலர், வெளியில் சிறு தொழில் செய்ய நாணப்படுவதன்றி, வீட்டுக்குத் தேவையான வேலைகளைச் செய்யவும் நாணுகின்றனர். கடைக்குப் போய்ப் பொருள்கள் வாங்கிவரச் சொன்னால், இன்னின்ன பொருள்களையே யான் வாங்கி வருவேன் - இன்னின்ன பொருள்களை வாங்கி வரமாட்டேன் எனப் பட்டியல் கள் தருகிறார்கள். எந்த வேலைக்காகவும் - எப்பொருள் வாங்கி வருவதற்காகவும் வெளியில் செல்வதென்றாலும், ஆடம்பர-நாகரிக உடை உடுக்காமல் வெளியில் புறப்படக் கூசுகிறார்கள்; யான் இந்த எளிய உடையோடு வெளியில் போகமாட்டேன் என்று அறவே மறுக்கிறார்கள். இந்த நிலை நீடிக்கும் வரை வீடும்-நாடும் உருப்படுவது எவ்வாறு?

அமெரிக்கா (U.S.A.) ஒரு செல்வ நாடு. அந்நாட்டில் உள்ள செல்வர் வீட்டுப் பிள்ளைகள், இளமையிலேயே தம் சொந்தச் செலவிற்காகப் பெற்றோரை எதிர்பார்க் காமல், வீட்டுக்கு வீடு நாட்செய்தித்தாள் போடுதல் போன்ற வேலைகள் செய்து பொருள் ஈட்டுவராம். ஏழை களாயிருப்பவரோ, வெளிநாடுகளிலிருந்து படிக்கச் செல்ப வரோ, உணவுக் கடையிலும் (Hotel) வேறு கடைகளிலும் ஓய்வு நேரத்தில் வேலை செய்து பணம் சேர்த்துப் படிப்ப துண்டாம். இதனை, இந்தியா உட்பட எல்லா நாட்டு இளைஞர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும்-குறிப்பாகப் பட்டம் பெற்ற இளைஞர்கள் இதனை உணர வேண்டும்.

எளிமையும் சிக்கனமும்:

வட இந்தியாவில் அண்ணல் காந்தியடிகளும் தென்னிந்தியாவில் பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்களும் போன்றவர்கள் நடைமுறையில் வாழ்ந்து காட்டிக் கற்பித்த எளிமையையும் சிக்கனத்தையும் இளைஞர்கள் உணர்ந்து பின்பற்ற வேண்டும். இளைஞர்கட்கு வழிகாட்டிகளாகப் பெரியவர்களும் நடந்துகொள்ள வேண்டும். உடையிலும் உணவிலும் ஒப்பனைப் பொருள்களிலும் செலவிடும் வீண் ஆரவார - ஆடம்பரங்களை அகற்ற வேண்டும். பெண்கள் நகைப் பைத்தியத்தினின்றும் விடுபட வேண்டும். இதனால் ஒரு நன்மையும் இல்லை. எல்லாம் அளவோடு இருந்தால் போதுமானது. ஒருவரைப் பார்த்து ஒருவர் வீண் ஆடம்பரங்களை வளர்த்தலாகாது. 'காரியம் பெரிதே தவிர வீரியம் பெரிதில்லை' என்பது பழமொழி. கடின ஆக்க வேலை உழைப்பு என்னும் ஒரு காலையும், எளிமையான சிக்கன வாழ்வு என்னும் மற்றொரு காலையும் கொண்டு மக்கள் நடைபோட வேண்டும்.

ஆக்க வேலையில் கண்ணும் கருத்துமாயிராமல், ஆடம்பரத்தில் காலை வைத்துவிடின், கடன் வாங்கி ஏழையாக வேண்டி வரும். கடன் இல்லாதவனே பெரிய செல்வனாவான், ஈண்டு தெலுங்கு அறிஞராகிய வேமன்னர் அருளியுள்ள "அப்பு லேனி வாடு யதிக சம்பன்னுடு" (கடனில்லாதவன் பெரிய பணக்காரன்), "அப்பு லேனி வாடு யதிக பலுடு" (கடனில்லாதவன் பெரிய வல்லமையுடையவன்) என்னும் வேமன்ன பத்திய நூலின் பாடல் பகுதிகள் கவனிக்கத் தக்கன.

செய்யும் வேலைக்குத் தகக் கிடைக்கும் வருவாய்க்கு ஏற்ற செலவே செய்ய வேண்டும். வருவாய்க்குமேல்

– 8

செலவு செய்வது தன்னையே அழித்துக் கொள்வதாகும். 'வருவாய் குறைவாயிருப்பினும் செலவு அதற்குமேல் போகாதிருப்பின் தாழ்வு ஒன்றும் இல்லை. அளவறிந்து வாழாதவன் வாழ்க்கை முதலில் ஆரவாரமாய்த் தோன்றிப் பின் அறவே கெட்டழியும் என வள்ளுவர் கூறுகிறார்.

"ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை" (478)

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்" (479)

என்பன அவர்தம் திருக்குறள் பாடல்கள். ஈண்டு, 'கடன் பட்டவன் துன்பப்படுவான்' என்னும் கருத்துடைய "He that goes a - borrowing goes a - sorrowing" என்னும் ஆங்கிலப் பழமொழியும், 'ஒரு காசு மிச்சம் செய்தால் ஒரு காசு ஈட்டியதாகும்' என்னும் கருத்துடைய "A penny saved is a penny gained" என்னும் ஆங்கில அனுபவ மொழியும், 'சட்டை தைப்பதற்குத் துணிக்கு ஏற்ப வெட்டு' என்னும் கருத்துள்ள "Cut your coat according to cloth" என்னும் ஆங்கில முது மொழியும் ஒப்புநோக்கற்பாலன. ஆடம்பரம் இன்றி எளிமையாகவும் சிக்கனமாகவும் வாழின், சிறு சிறு மிச்சம் சேர்ந்து பெருந்தொகையாகும். 'சிறு துளி பெருவெள்ளம்' - 'Drops of water make an ocean' - என்பன பழமொழிகளாகும். எனவே, ஆக்க வேலையில் ஈடுபட்டால் மட்டும் போதாது; எளிமையையும் சிக்கனத்தையும் இளைஞர் - முதியோர், ஆடவர் -மகளிர் அனைவரும் கடைப் பிடிக்க வேண்டும். இல்லையேல் வேலை செய்தும் கடனாளியாக வேண்டிவரும்.

## வேண்டாத வேலைகள்:

செய்ய வேண்டிய ஆக்க வேலைகள் இருக்க, செய்ய

வேண்டாத வீண் வேலைகள் பலவற்றை மக்கள் செய்து கொண்டுள்ளனர். அவற்றுள் சில காண்போம்:

1. கடவுள்-மதம்-கோயில்-என்ற பெயரால் செய்யப் படும் வேலைகள், காலம்-முயற்சி-பொருள் அத்தனையை யும் பாழடிக்கின்றன. கடவுள் வழிபாடு கட்டாயம் உள்ளத்தில் இருக்க வேண்டும்.

2. முகப்பூச்சு (Face Powder), உதட்டுச் சாயம் (Lip Stick), சாந்துகள், இன்ன பிற ஒப்பனைப் பொருள் களை உண்டாக்குதல் மிகவும் இன்றியமையாததா? பொருள் போவதின்றி, சில பைத்தியங்கள் ஒப்பனை செய்துகொள்வதில் நெடுநேரம் செலவிடுகின்றன. பொரு ளாக்கத்துக்குப் பயன்படுவதால் இரும்புக்கே மதிப்பளிக்க வேண்டிய இக்காலத்தில், ஒன்பான் மணிகளால் (நவரத் தினங்களால்) ஆய அணிகலன்கள் தேவைதானா? பொன், வெள்ளி போன்றவை மருத்துவத்துறைக்குப் பயன்படுவது தவிர வேறு எதற்குத் தேவை? தங்கத்தை அடிப்படை யாகக் கொண்டு உலகப் பொருளாதாரம் அமைவதாக நடைமுறையில் இருக்கும் நிலை மறு ஆய்வுக்கு உரிய தாகும். இரும்பைவிட தண்ணீர் இன்றியமையாதது; ஆனால் இரும்பினும் தண்ணீர் எளிதாகவும் மிகுதியாகவும் விலை குறைவாகவும் கிடைப்பதால், இரும்பினும் தண்ணீர் எளிமையாய் மதிக்கப்படுகிறது. இது போலவே, பொன், வெள்ளி, மற்றும் ஒன்பான் மணிகள் முதலியவற்றினும், இரும்பு இன்றியமையாதது; ஆனால், மற்ற வற்றினும் இரும்பு மிகுதியாகக் கிடைப்பதால், இரும்பு மற்ற மணி களினும் குறைத்து மதிப்பிடப்படுகிறது. ஆனால் உண்மை இஃதன்று; இரும்பே இன்றியமையாதது. எனவே, இரும்பை மிகுதியாக உண்டாக்குவதே பெரிய ஆக்கவேலை யாகும்.

3. வெடிகள், வாணங்கள் முதலியவற்றை உண்டாக்குவதும் பயன்படுத்துவதும் நூற்றுக்கு நூறு அழிவே தவிர ஆக்கமே யில்லை. உலக நாடுகள் போர்ப்படைக் கலங்களையும்-கருவிகளையும் மிகுதியாகப் படைத்து வைத்திருப்பதற்குத் தொடக்கத்தில் வித்திட்டவை இந்த வெடி-வாணங்களே யாகும். இவற்றின் பொல்லாமையை உணர்ந்து இவற்றைப் போக்கிவிட வேண்டும்.

4. கலை என்னும் பெயரால், நடனம் என்னும் கலை நடம் ஆடிக்கொண் டிருக்கிறது. ஒரு பெண்ணையோ, உடன் இரண்டொருவரைச் சேர்த்தோ, மூன்று மணி நேரம் ஆடவிட்டுப் பலர் பணம் கொடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நடனம் கற்றுக் கொண்ட பெண் எத்தனை ஆண்டுகள் நடனம் ஆடிக்கொண்டிருக்க முடியும்? ஓரளவு வயது கடந்தபின் நடனம் ஆட முடியுமா? ஆடினாலும் பலரும் பணம்தந்து பார்ப்பார்களா? இசை, ஓவியம், தையல் முதலிய கலைகளைக் கற்றுக்கொண்டாலும் கிழவியாகும்வரை பயன்படுத்தலாம். நடனத்துக்கு ஓரளவே இடம் தரல்வேண்டும்.

5. இயல்தமிழ், இசைத்தமிழ், கூத்துத் தமிழ் எனத் தமிழை மூவகையாகக் கூறுவது மரபு. இந்த முக்கலைகளும் பண்டு தமிழகத்தில் பெரிய அளவில் வளர்ச்சி பெற்றிருந்தன. இடைக்காலத்தில் தமிழகத்தில் சமண-பௌத்த மதத்தினரின் செல்வாக்கு ஓங்கியபோது கூத்துத் தமிழ் குன்றலாயிற்று. நடனமும் அருவருப்பான நாடகங்கள் சிலவும் காம வெறியைத் தூண்டிச் சமூகத்தில் ஒழுக்கக் கேட்டை உண்டாக்கியதால், அந்தச் சமண-பௌத்த ஆற்றல்கள் கூத்துத் தமிழைக் குலைத்து விட்டன. இந்த வரலாற்றுச் செய்தியைப் படிப்பினையாகக் கொண்டு, நாடகங்களிலும் திரையோவியங்களிலும்

அருவருக்கத்தக்க மட்டமான காமக் காட்சிகளைக் களைந்தெறிய வேண்டும். இல்லையேல், காமக் காட்சி களைக் காட்டும் நிறுவனங்கள் கலைக்கூடங்களாகக் கருதப்படாமல், காமத்தை உற்பத்தி செய்யும் காமத் தொழிற்கூடங்களாகவே கணிக்கப்படும்.

விளையாட்டு ஆக்க வேலையா?:

மனத்தின் பொதுப் போக்குகளுள் (General Tendencies) விளையாட்டும் ஒன்று என உளவியலார் (Psychologists) உரைக்கின்றனர். அன்று தொட்டு இன்றுவரை-குழந்தைகள் முதல் முதியோர்வரை, பல நோக்கங்களுடன் பலவகை விளையாட்டுகளை ஆடுகின்றனர். விளையாட்டின் நோக்கங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்:

1. ஓய்வுக்காக விளையாடுவது: வேறு வேலை செய்து களைத்துப் போனவர்கள் ஓய்வுக்காக விளையாடுவர். சில வேலைகள் செய்யும்போது களைத்துப்போன சில உறுப்புக்கள் விளையாட்டின்போது ஓய்வு பெறுவதாகக் கூறுவதுண்டு.

2. பொழுதுபோக்குக்காக விளையாடுவது: வேலையில்லாதவர்கள்-வேறு வேலை செய்யாதவர்கள், பொழுதைப்பிடித்துத் தள்ளுவதற்காக விளையாடுவது இது.

3. ஓய்வு நேரத்தை இன்பமான பொழுது போக்காக மாற்ற விளையாடுவது: இ∴து, 'ஓய்வு நேரப் பொழுது போக்குக் கொள்கை (Recreation Theory) எனப்படும்,

4. புத்துணர்வு பெறவும் புதுத் தெம்பு பெறவும் விளையாடுவது (Refreshment Theory) ஒருவகை நோக்கமாகும்.

5. உடல் வலிமை பெறவும் உள்ளம் துணிவு பெறவும் விளையாடுவது: இது போர்ப் பயிற்சிக்கு வித்தாக இருப்பதும் உண்டு.

6. பெரியவர்களைப் பின்பற்றிச் சிறுவர்கள் தம்மையறியாமலேயே எதிர்காலத்துக்குப் பயிற்சி பெறுவதுபோல் கருதும்படி விளையாடுவது: அப்பா அம்மா குடும்ப விளையாட்டு, மணல் வீடு கட்டி மணல் சோறு ஆக்கும் விளையாட்டு, கடைவிற்கும் விளையாட்டு, பள்ளிக்கூட விளையாட்டு, பேருந்து (Bus) விளையாட்டு, அரசன்-அமைச்சன் விளையாட்டு முதலியன இன்னவை.

7. குழந்தைகளோ மற்றவர்களோ, தம்மையறியாமலேயே மிகுதியான ஆற்றலை உடம்பினின்றும் செலவழித்து வெளியேற்றும் கூறும் விளையாட்டில் அமைந்துள்ளது. இது 'மிகுதியாற்றல் வெளிப்பாட்டுக் கொள்கை' (Surplus Energy Theory) எனப்படும்.

8. கூட்டுறவு நோக்கும் சமுதாய நோக்கும் விளையாட்டில் உள்ளதாகச் சொல்வதுண்டு. இதனால் பிள்ளைப் பருவத்திலேயே கூட்டுறவு உணர்ச்சி மலர்கிறது. 'தான்' என்னும் தனிமைநிலை மாறித் 'தாம்' என்னும் பொதுநிலை-பரந்த மனப்பான்மையான கூட்டுறவு நிலை ஏற்படுகிறது. மற்றும், தலைவனுக்குக் கீழ்ப்படிதல், விதிகட்குக் கட்டுப்படுதல், ஒருவர்க்கு ஒருவர் விட்டுக் கொடுத்தல், உதவி செய்தல், தோல்விக்குத் துவளாமை, வெற்றிக்கு இறுமாப்புறாமை முதலிய சமூக உணர்வுகள் உண்டாகின்றன. இதனால்தான், சுப்பிரமணிய பாரதியார் தம் 'பாப்பா பாட்டு' பகுதியில் ''கூடி விளையாடு பாப்பா-ஒரு குழந்தையை வையாதே பாப்பா'' என்று கூறியுள்ளார்.

9. விளையாட்டின் வாயிலாகச் சில உடல்நோய் களையோ மன நோய்களையோ தீர்த்துக் கொள்ளும் மருத்துவநோக்கும் இதில் உண்டு.

10 பந்தயம் வைத்து விளையாடுவதும், போட்டிப் பரி சுக்காக விளையாடுவதுமாகிய பொருளியல் நோக்கும் சிலருக்கு உண்டு. இஃது அவ்வளவு சிறந்த தன்று. இந்த முறையில், தோல்வி ஏற்படின் சோர்ந்து துவள வேண்டி வரும்; எதிர் ஆட்டக்காரரின் மீது பகையும் காழ்ப்பும் சினமும் பொறாமையும் கொள்ள நேரிடும்.

11, தற்பெருமைக்காகவும் வீர உணர்வை வெளிக் காட்டுவதற்காகவும் விளையாடுவதும் உண்டு.

12, விளையாட்டு வாயிலாகச் செயல்களை எளிதாக வும் இன்ப மாகவும் செய்வதும் உண்டு. இது 'விளை யாட்டு முறை' (Play way) எனப்பெறும். சிறார்கட்குக் கல்வி கற்பிக்க உளவியலார் இந்த விளையாட்டு முறை யைப் பெரிதும் பரிந்துரைத்துள்ளனர். விளையாட்டாகக் கல்வி கற்பிப்பதும் கற்பதும் எளிது. விளையாட்டாக வேலை வாங்குவதும் உண்டு. 'அவர் அதை ஒரு விளை யாட்டாகச் செய்து முடித்து விட்டார்' என்று கூறும் உல கியல் வழக்காற்றைக் கேட்டிருக்கலாம். சில வேலை களைச் செய்பவர்கள் விளையாடிக் கொண்டும் பாடிக் கொண்டும் செய்வதைக் காணலாம். இதனால் வேலை ஒரு வேலையாகத் தெரியாமல் விளையாட்டாகவே எளி தாகவும் இன்பமாகவும் செய்யப்படும். 'ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பு இருக்காது' என்ற உலகியல் மொழி ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

இவ்வாறு விளையாட்டுகட்குப் பல நோக்கங்கள் கற் பிப்பது உண்டு. நல்ல நோக்கங்களுடன் விளையாடுவதை

ஒருவகை ஆக்கவேலை என்று கூறலாம். இந்த ஆக்க வேலை நோக்கங்களுடன் விளையாடுவது இன்றியமை யாதது மாகும். நல்ல விளையாட்டுக்குப் பின் தொடங்கும் வேலை, விறுவிறுப்பாகச் சூடு பிடித்து நடை பெறும். இதனால்தான், பாரதியார், குழந்தைப் பருவத்திலேயே தூண்டிவிடும் முறையில்,'ஓடி' விளையாடு பாப்பா' என்று பாடியுள்ளார். ஆண் சிறுவர்களி னும் பெண் சிறுமிகள் ஓடி விளையாடுவது குறைவு-உட்கார்ந்து விளையாடுவதே மிகுதி என்பதனால்தான், பாப்பாவைநோக்கி, "ஓடி விளையாடு பாப்பா" என்று பாரதியார் பாடினார்போலும்! பொதுவாகப் பாப்பா வுக்குச் சொல்லப்பட்டிருப்பினும், இந்த அறிவுரையைத் தம்பிகளும் கொள்ளலாம். எனவே, ஆக்கவேலைகளுள், தகுந்த-முறையான விளையாட்டுக்களும் அடங்கும்.

## வேண்டாத விளையாட்டுக்கள்:

உடலுக்கும் உள்ளத்துக்கும் செயல்வெற்றிக்கும் சமூக நலவாழ்க்கைக்கும் ஊக்கம் விளைவிக்கும் ஆக்க விளையாட்டுக்கள் தவிர மற்றவை வேண்டாத விளை யாட்டுக்களாம். சூதாட்டங்கள், பணம் ஈட்டப் பந்தயம் வைத்து ஆடும் ஆட்டங்கள், உயிருக்கு ஊறு விளைவிக் குமோ என அஞ்சக் கூடிய 'சர்க்கஸ்' (Circus) காட்சி போன்ற ஆட்டங்கள், இன்னும் கேட்டால், 'கிரிக்கெட்' (Cricket) போன்ற ஆட்டங்கள், உலக நாடுகள் ஒன்றோ டொன்று போட்டிபோட்டு ஆடும் ஆட்டங்கள், இன்ன பிற வேண்டாத விளையாட்டுக்களேயாகும்.

தனியாரின் பணப் பந்தய ஆட்டங்களும், உலக நாடு களின் போட்டிப் பந்தய ஆட்டங்களும், பண இழப்பு-முயற்சி இழப்பு-கால இழப்பு ஆகியவற்றுடன், பகை-

காழ்ப்பு-போட்டி பொறாமை-பொச்சரிப்பு-போர் முதலிய தீய விளைவுகளை உண்டாக்குவதால், இவை தேவை தானா என்பதை மக்களினம் மறு ஆய்வு செய்ய வேண்டும். குதிரைப் பந்தயமானது, பொது மக்களின் நல்வாழ்வைச் சூறையாடும் ஒருவகைச் சூதாட்டமே யாகும். இதற்கு அரசு உடன்பாடு தரலாமா? அச்சத்துடனும் திகிலுடனும் ஆடப்படுவதும் அச்சத்துடனும் திகிலுடனும் பார்க்கப்படுவது மாகிய 'சர்க்கஸ்' போன்ற ஆட்டங்கள் வேண்டியவையா என்பதையும் அரசும் மக்களும் எண்ணிப் பார்க்கவேண்டும். விளையாட்டு வினையாகக் கூடாது'' என்பது பழமொழி. (வினை = தீய விளைவு).

## கிரிக்கெட் ஆட்டம்:

'கிரிக்கெட்' (Cricket) ஆட்டம் முதல் முதலாக இங்கிலாந்தில் தோன்றியது. பின்னர், ஆங்கிலேயர்கள் கால்வைத்த இந்தியா, பாகிஸ்தான், தென் ஆப்பிரிக்கா, இலங்கை, நியூசிலாந்து, ஆத்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் (west Indies) முதலிய நாடுகளிலும் பரவிற்று. கிரிக்' (Cric) என்னும் சொல்லுக்குத் தடி-மட்டை என்பது பொருள். மட்டையால் மரப்பந்தை அடித்து ஆடும் ஒருவகை ஆட்ட மாதலின் இது 'கிரிக்கெட்' எனப் பெயர் பெற்றிருக்கலாம் என்கின்றனர். இதில், பக்கத்துக்குப் பதினொருவர் வீதம் நின்று ஆடுவர். இது, ஒரு மணி நேரத்திலோ அல்லது இரண்டு-மூன்று மணி நேரத்திலோ ஆடக் கூடிய தன்று; இதை ஆடக்குறைந்தது ஒரு நாள் முழுவதுமாவது தேவைப்படும். இதன் 'தேர்வுப் போட்டிப் பந்தயம்' (Test Match) ஐந்து நாட்கள் ஆடப் பெறும். ஒரு நாட்டிற்குள்ளேயே ஆடுவதன்றிப் பிற நாடுகட்குச் சென்று ஆடுவதும் உண்டு. ஒரு மணி நேரம்-அல்லது அரைநாள்-ஏறினது ஒருநாள் ஆகும் என்றாலும்

பொறுத்துக்கொள்ளலாம். ஐந்து நாட்களாக-சில சமயங்களில் ஆறுநாட்களும் கூட ஆடும் இந்த ஆட்டத்தை ஏற்றுக்கொள்வது சரியாகாது. இதனால் யாது பயன்?

போட்டிப் பந்தயத்தைப் பல்லாயிரவர் காசு தந்து கட்டணச் சீட்டு (Ticket) வாங்கி ஐந்து நாட்கட்குப் பார்ப்பதுண்டு. இதனால் அனைவருக்கும் மிகுதியான காலமும் பொருளும் முயற்சியும் வீணுவது கண்கூடு. இதனால்தான், ஆங்கிலேயராகிய 'பெர்னார்டு ஷா' என்பவரே இந்த ஆட்டத்தைப் பற்றி நையாண்டி செய்துள்ளார். (பக்கத்துக்குப்) "பதினொரு முட்டாள்கள் விளையாடுகின்றனர்; அதனைப் பதினோராயிரம் முட்டாள்கள் பார்த்துக் கொண்டுள்ளனர்-" "(Eleven fools are playing and eleven thousand fools are watching" என்பது அவரது நையாண்டி உரை. பதினோராயிரவர் பார்த்துக்கொண்டிருப்பது மட்டு மன்று; இந்த ஆட்டத்தின் விளக்கவுரை (Commentary) பல நாடுகளின் வானொலியின் வாயிலாகப் பரப்பப்படுதலின், பல நூறாயிரவர் இதனைக் கேட்டுக் காலத்தைப் பாழடிக்கின்றனர். இந்த ஆட்டத்தை நேரில் காண்பதற்காகக் கல்லூரி மாணுக்கர்பலரும்அலுவலகஅலுவலாளர் பலரும்விடுமுறை எடுத்துக்கொள்வது மட்டும்வியப்பன்று;இந்த ஆட்டத்தின் விளக்கவுரையை வானொலியில் கேட்பதற் கென்றும் தொலைக்காட்சியில் (T.V.யில்)பார்ப்பதற்கு என்றும் மிக்க பலர் விடுமுறை எடுத்துக் கொண்டு காலத்தை வீணாக்குவது மிகவும்வேடிக்கையாயிருக்கிறது. கேட்பதோடு நிற்கின்றார்களா?ஆட்டம் முடிந்த பின்னரும்-விளக்கவுரை முடிந்த பின்னரும், இதைப் பற்றி ஒருவர்க்கு ஒருவர் நெடு நேரம் பேசிக் காலத்தை வீணடிப்பது இன்னும் பெரியவேடிக்கை யாகும். கிரிக்கெட் ஆட்டத்தைப் பற்றி ஒன்றும் தெரியாதவர் என்று பிறர் நினைப்பது குறைவு

எனக்கருதி மற்றவர்களும் தெரிந்தவர்களைப் போல் நடிப்பதுண்டு.

ஆடுபவர்களைப் பற்றி மதிப்புரை சொல்வது இன்னும் மிகப் பெரிய வேடிக்கை யாகும். இவர் இத்தனை 'ஓட்டங்கள்' (Runs) எடுத்தார்; இவர் இத்தனை 'விக்கெட்டுக்களை' (Wickets) வீழ்த்தினார்; அவர் இத்தனை 'சிக்சர்' (Sixer = ஆறு ஓட்டங்கள்) அடித்தார்; அவர் இத்தனை பவுண்டரி' (Boundary = நான்கு ஓட்டங்கள்) அடித்தார்; இவர் இத்தனை 'நூறு' (Century)= சதம்) எடுத்தார்; அவர் இத்தனை இரட்டை 'நூறு' (இரட்டைச் சதம்) எடுத்தார். தேர்வுப் போட்டிப் பந்தயங்களில் இவர் இதுவரை இத்தனை ஆயிரம் ஓட்டங்கள் (Runs) எடுத்துச் சாதனை புரிந்துள்ளார்; அவர் அத்தனை ஆயிரம் ஓட்டங்கள் (Runs) எடுத்து உலகிலேயே இதுவரை முதன்மையான உச்ச எல்லை (Record) பெற்றுள்ளார், இவர் இத்தனை முறை பந்து (Catch) பிடித்தார் என்றெல்லாம் ஆடுபவர்களைப் பற்றி மதிப்பீடு செய்து கூறுவது வழக்கம்.

பெர்னார்டுஷா கூறியுள்ளபடி இது பெரிய பைத்தியக்காரச் செயலாகத் தோன்ற வில்லையா? யார் எத்தனை ஓட்டங்கள் எடுத்தால் என்ன? யார் எத்தனை நூறுகள் (சதங்கள்) எடுத்தால் என்ன? காது அற்ற ஊசிக்கும் இதனால் பயன் உண்டா? ஐந்து நாள்–ஆறு நாள் விளையாடிக் காலத்தையும் காசையும் கொல்லும் இந்த விளையாட்டு வேண்டியதுதானா? மக்கள் இனத்துக்கு இதனால் இழப்பே தவிர, நன்மையான நேர்ப்பயன் ஒன்றுமில்லை. இதற்கு இவ்வளவு விளம்பரம் கொடுப்பது வேண்டியதேயில்லை. பெருகிக்கொண்டிருக்கும் மக்களினத்துக்கு வேண்டிய அடிப்படைத் தேவைப் பொருள்களை ஆக்கவே

நேரம் போதாதிருக்கக் கூடிய எதிர்காலத்தில், இந்த வீணான விளையாட்டுக்கட்கெல்லாம் நேரம் கிடைப்பது அரிது. எனவே, வேண்டாத விளையாட்டுக்களைப் படிப் படியாகக் குறைத்துக் கொண்டுவந்து, பின்னர் அறவே விலக்கிவிடுவதே எதிர்கால நன்மைக்கு வேண்டற்பால தாகும். (நானும் ஒரு கிரிக்கெட் பைத்தியம். இப்போது பைத்தியம் தெளிந்து விட்டது).

ஓய்வும் பொழுதுபோக்கும்:

குறிப்பிட்ட ஒரு வேலையைச் செய்து முடித்தவர்கள் படுத்துத் தூங்குவதுதான் 'ஓய்வு' என்பதில்லை. வேறு விதமான வேலை செய்தலும் ஓய்வாகும். அஃதாவது, 'வேலை மாற்றமும்' (Change of programme) ஓய்வு ஆகும். மூளை வேலை செய்து களைத்தவர்கள், படித்தல் – எழுது தலை விட்டு, தோட்டத்திற்குச் சென்று காய்கறிச் செடி களைக் கவனித்து அவற்றிற்கு ஆவன செய்வதும் ஓய்வு ஆகும். உடல் வேலை செய்து களைத்தவர்கள், அதை விட்டுவிட்டு, செய்தித்தாள் படித்தல் - நூல் படித்தல் போன்ற மூளைவேலை செய்வதும் ஓய்வு ஆகும். உடல் உழைப்பாளிகட்கு மூளை வேலையும், மூலை வேலைக் காரர்கட்கு உடல் உழைப்பும் ஓய்வு ஆகும். வாளா அமர்ந் திருப்பதும் தூங்குவதுமே ஓய்வு எனக் கொண்டு காலத் தைக் கொன்னே கழிக்க வேண்டா. இதனால்தான் சுப்பிரமணிய பாரதியார்,

> ''ஓடி விளையாடு பாப்பா - நீ
> ஓய்ந்திருக்க லாகாது பாப்பா''

என்று கூறியுள்ளார். எனவே, வறிதே ஓய்ந்து அமர்ந்திரா மல் வேறு மாற்று வேலை செய்யலாம். ஒரு துறை

வேலை செய்யும் போது களைத்துப் போன உடல் உறுப்புக்கள், வேறு துறை வேலை செய்யும் போது இளைப் பாறுவதாகக் கூறப்படுவது ஈண்டு எண்ணத்தக்கது.

அடுத்து, - பொழுது போக்கு என்னும் பெயரில் சிலர் அல்லர் - பலர், பொழுதை வீணே போக்குகிறார்கள். எந்த வேலையும் செய்யாமல் உண்ணும் செல்வ வாய்ப்புப் பெற்றவர்கள் பொழுதைப் போக்குவது ஒருவகை; வேறு வேலை செய்பவர்கள் ஓய்வுப் பொழுதைப் போக்குவது இன்னொரு வகை; வேலையுள்ளவர்களே வேலை செய் யாமல் வீண் பொழுது போக்குவது வேறொரு வகை.

எவராயினும் பொழுதைப் பயனுள்ள முறையில் போக்க வேண்டும். சூதாட்டம், குதிரைப் பந்தயம், வேண்டாத விளையாட்டுக்கள், இன்ன பிறவற்றில் பொழுதைப் போக்கலாகாது. மிகுந்திருக்கும் பொழுதைப் பின்வரும் பயனுள்ள வேலைகளில் கழிக்கலாம்: வீட்டு வேலை, தோட்ட வேலை, தேனீ வளர்ப்பு, கோழிப் பண்ணை, சிறுகைத்தொழில்கள், இன்ன பிற 'தற்காப்பு வேலைகள்' செய்யலாம். மற்றும், குளம் - கால்வாய் வெட்டுதல், ஏரி – குளத்தில் தூர் எடுத்தல், சாலை அமைத்தல், எழுத்தறியாதார்க்கு எழுத்தறிவித்தல், மக்களின் மூட நம்பிக்கைகளைப் போக்குதல், நோய்த் தடுப்பு முறையை மக்கட்கு விளம்பரம் செய்தல், இலக் கியக் கழகம் - கலைக்கழகம் - சீர்திருத்தக் கழகம் – இன்ன பிற பொது அமைப்புக்களில் சேர்ந்து பொதுப்பணி புரி தல், இன்ன பிற 'சமூகக் காப்பு வேலைகள்' செய்யலாம். மற்றும், செய்தித்தாள் படித்தல், நல்ல நூல்களைப் படித்து இன்புறுதல் – அறிவைப் பெருக்குதல், நல்லவ ரோடு கலந்து பழகி உரையாடி நற்பண்புகளை வளர்த்துக்

கொள்ளுதல், இன்ன பிற ஆக்கச் செயல்களிலும் ஈடுபட லாம். இங்கே, 'ஹென்றி வுட்டன்' (Henry wotton) என் னும் ஆங்கிலப் புலவர், "Character of a happy life" என் னும் தலைப்பில் பாடியுள்ள ஒரு பாடலின் பகுதி நினை வுக்கு வருகிறது:

"And entertains the harmless day
with a well - chosen book or friend".

என்பது அந்தப் பாடல் பகுதி. தேர்ந்தெடுக்கப் பெற்ற ஒரு நல்ல நூலோடு அல்லது நல்ல நண்பர் ஒருவரோடு தீங்கற்ற பொழுதைக் கழிக்க வேண்டும் என இப்பாடற் பகுதி அறிவுறுத்துகிறது. திருவள்ளுவரும், இவ்வாறு, நல்ல வர்க்கும் நல்ல நூலுக்கும் ஒரு தொடர்பு செய்துள்ளார். பண்புடைய நல்லவரது தொடர்பு, படிக்கப் படிக்க - எடுத்துச் சொல்லச் சொல்ல நயம் பயக்கும் நூலைப் போலப் பழகப் பழக இனிக்கும் என்று கூறியுள்ளார்.

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு." (783)

என்பது அவரது திருக்குறள் பாடல். கற்றறிந்தவர்கள் நல்ல கருத்துக்களைக் கலந்து பேசிப் பழகி மகிழ்வதனி னும் சிறந்த இன்பம் தேவர் உலகத்திலும் இல்லை என் னும் கருத்துடைய

"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்
தும்பர் உறைவார் பதி" (137)

என்னும் நாலடியார்ப் பாடல் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

'ஹென்றி வுட்டன்' கூறியுள்ள 'well - chosen book' என்னும் தொடரை ஊன்றி நோக்க வேண்டும். தேர்ந் தெடுக்கப்பெற்ற நல்ல நூல்களைக் கற்க வேண்டும் என்கிறார். கற்கத்தகுந்த நூல்களைப் பிழையின்றிக் கற்க வேண்டும் என்னும் பொருளில் "கற்க கசடு அறக் கற் பவை" என வள்ளுவர் கூறியிருப்பதும் காண்க. மற்றும் 'கல்விக்கு அளவில்லை; கற்பவரின் வாழ்நாட்கள் சிலவே அவற்றுள்ளும் பிணிகொள் நாட்கள் பல; எனவே, நீர் கலந்த பாலிலுள்ள நீரைப் பிரித்துப் பாலை மட்டும் பருகும் அன்னத்தைப் போல, பொருந்தாதனவற்றை விலக்கி, நல்ல அமைப்புடைய நூல்களையே கற்க வேண்டும் என்னும் கருத்துடைய

"கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே, நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து" (135)

என்னும் நாலடியார்ப் பாடலும் ஈண்டு எண்ணத்தக்கது. இப்பாடலில் உள்ள 'ஆராய்ந்து', 'தெரிந்து' என்னும் சொற்களையும், ஹென்றி வுட்டன் பாடலில் உள்ள 'well chosen' என்னும் தொடரையும் ஒப்பிட்டுக் காண்க. எனவே, நல்ல நூலோடும் நல்லவர்களோடும் பொழுதைப் போக்க வேண்டும்.

பொழுது போக்கு என்னும் பெயரில் நாள் முழுவதையும் வீணே போக்கிக்கொண்டிருத்தலாகாது – நாள் முழுதும் விளையாடிக் கொண்டிருத்தலாகாது. 'வேலை செய்ய வேண்டிய நேரத்தில் வேலை செய் – விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடு' என்னும் கருத்துடைய

"Work while you work,
Play while you play"

என்னும் ஆங்கில மொழி அறிவுரையைக் கவனிக்க வேண்டும். இதையேதான், சுப்பிரமணிய பாரதியார்,

"காலை எழுந்தவுடன் படிப்பு-பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா".

என்னும் பாப்பா பாட்டின் வாயிலாக அறிவுறுத்தியுள்ளார்.

படித்து அரசு அலுவல் பார்க்கும் பலர், விளையாட்டுகளில் கழிக்கும் நேரத்தில் ஒரு சிறு பகுதியையாயினும் பயனுள்ள சிறு சிறு வேலைகளில் கழிக்கலாம். ஆசிரியனாகிய யான், 1955 ஆம் ஆண்டுக் கோடை விடுமுறையில், புதுச்சேரி - விளையாட்டுத் திடல் ஒன்றில் பூப்பந்து (Badminton) ஆட்டம் நாடோறும் ஆடிக்கொண்டிருந்தேன். அப்போது எங்கள் வீட்டில்-வீடு பழுது பார்க்கும் வேலை நடந்து கொண்டிருந்தது. பழுது பார்க்கும் கொத்தனார், யான் பந்து விளையாடிக் கொண்டிருப்பதை ஒருநாள் பார்த்தார். அவர் மறுநாள், வீட்டில் என்னை நோக்கி 'ஏன் வாத்தியார் ஐயா, பந்தை அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் மாறி மாறி அடித்துத் தள்ளிக்கொண்டிருக்கிறீர்களே -இதனால் என்ன பயன்? வீண் முயற்சி தானே இது? என வினவினார். சரியான கேள்வி-கேட்க வேண்டிய கேள்வி. அவர் வினாவிற்கு என்னால் விடையளிக்க இயல வில்லை. எனவே, படித்தவர்கள் விளையாட்டுக்களில் கழிக்கும் நெடு நேரத்தில் சிறிதளவையாயினும் பயன் தரும் சிறு சிறு வேலைகளில் செலவிட வேண்டும்.

படித்துப் பட்டம் பெற்று வேலையில் அமர்ந்திருக்கும் பலர், பள்ளிக்கூடங்களிலிருந்து வெளியேறியவுடன் படிப்பைப் பரண்மேல் தூக்கி வைத்தவர்களே யாவர். தொடர்ந்து ஓய்வு நேரத்தில் படிக்கும் பழக்கம் பலருக்கு இருப்பதில்லை. தாம் பட்டம் பெற்றதும், பல்கலைப் புலவர்களாகிவிட்டதாகக் கருதி, நூல்களைத் திரும்பிப் பார்ப்பதேயில்லை. என்ன அறியாமை! 'படித்தவர்கட்கு எல்லா நாடுகளும் தம் நாடுகள் போன்றன-எல்லா ஊர் களும் தம் ஊர்கள் போன்றன-எனவே, ஒவ்வொருவரும் சாகும் வரையும் படித்துக்கொண்டிராமைக்குக் காரணம் என்ன?-எனத் திருவள்ளுவர் வினவுகிறார்.

''யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு''. (397)

என்பது அவரது திருக்குறள் பாடல். இங்கே வள்ளுவர் சாகும் வரை படிக்குமாறு பரிந்துரைத்திருப்பது, பள்ளி யில் சேர்ந்து பட்டம் பெறுவதற்காகப் படிக்கும் படிப்பை யன்று;சாகும் வரையும் ஓய்வு நேரங்களில் படிக்கவேண்டும் என்றே அவர் பரிந்துரைத்துள்ளார். எனவே, பல துறையி னரும் ஓய்வு நேரங்களில் படித்தலும் செய்ய வேண்டும். ஒரு திங்களுக்கு ஒரு புதிய முழு நூலையாயினும் படித்து முடிக்க வேண்டும். இதனால், சமுதாயத்தில் நற்பயிற்சி யும் நற்பயனும் பெருகும்.

இளைஞர்கள் சிலரும் தொழிலாளர்கள் சிலரும் நாடோறும் திரையோவியம் (சினிமா) பார்ப்பதும், ஒரு நாளைக்கு இரண்டு-மூன்று முறை திரையோவியம் பார்ப் பதும் உண்டு. இன்னவர் நாள் முழுவதையுமே பொழுது

போக்காகக் கொள்கின்றனர். இதனால், காலமும் காசும் பாழாகுவதுடன், உடல் நலமும் ஒழுக்கமுங்கூட ஒருசேரப் பாழாகின்றன. அந்தோ அளியர்!

கல்வி நிறுவனங்களிலே இந்தக் காலத்தில் நிலவும் போக்கிரித்தனச் (Rowdyism) செயல்கட்குத் திரையோவியக் கொட்டகைகளில்தான் வித்து இடப்படுகிறது என்பது அறிஞர் சிலரின் கருத்து. திரையோவியக் கொட்டகைகளில் சீழ்க்கை அடிப்பதும் கூச்சல் போடுவதும் குழப்பம் செய்வதும் கைதட்டுவதும் கேலி-கிண்டல் செய்வதும் ஆகிய தீச் செயல்கள் யாவற்றையும் அப்படியே கல்வி நிறுவன வகுப்புகளிலும் வந்து செய்கின்றனர். கல்வி உருப்படுமா? கற்றவர்கள் ஒழுக்கம் உடையவர்களாக இருப்பார்கள் என்னும் கருத்தில், 'ஒரு கல்விக்கூடம் திறப்பது, ஒரு சிறைச் சாலையை மூடியதாகும்' என்பதாக, பிரெஞ்சுப் பேரறிஞர் 'ரூசோ' (Rousseau) என்பவர் கூறியுள்ளார். ஆனால் இந்தக் கால நடைமுறையை நோக்குங்கால், கல்வி நிறுவனங்களில் மாணாக்கர்கள் என்னும் பெயரில் இருப்பவர்களே சிறைக் கூடத்துக்குச் செல்ல வேண்டியவர்களைப் போல் தோன்றுகின்றனர். காலத்தின் கொடுமை என்னே!

எனவே, திரையோவியங்களின் எண்ணிக்கையும் திரையோவியக் கொட்டகைகளின் எண்ணிக்கையும் குறைய வேண்டும். உண்டாக்கப்படும் ஒரு சில திரையோவியங்களும் நல்ல தரம் உடையனவாக-நல்லறிவும் நல்லொழுக்கமும் புகட்டுவனவாக அமைய வேண்டும். இதற்கு மாறாக, காசையே கண்ணாகக் கொண்டு, மக்களைக் கவரும் முறையில் கீழ்த்தரமான காட்சிகளைப் படம் பிடித்துத் திரையோவியம் என்னும் பெயரில் காட்டுகின்றனர். படத் தணிக்கை

யாளர்கள் என்ன செய்கிறார்கள் என்பதே புரியவில்லை! எனவே, தொடர்புடையவர்கள் இந்தத் துறையைத் தூய்மையுடையதாக்க வேண்டும். இல்லையேல் அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை இப்படியே நீள விடின், பொழுதுபோக்கு எனப்படுவது பழுது பார்க்க வேண்டியதாகி விடும்.

ஆக்க முயற்சிகள்:

மக்கள் இயந்திரங்கட்கு அடிமையாகிவிட்ட இந்தக் காலத்தில், சிறு சிறு கைத்தொழில்கட்கும் வாய்ப்பு இருக்க வேண்டும். பாய் பின்னுதல், கூடை முடைதல், பொம்மை செய்தல், விளையாட்டுக் கருவிகள் செய்தல், உடை தைத்தல், உடைகட்குப் பூ பின்னுதல்(Embroidery), கைப்பை பின்னுதல், வீட்டிலேயே சிறுசிறு தச்சு வேலை–சிறுசிறு நெசவு வேலை, இன்ன பிற ஆக்க முயற்சி வேலைகட்கு வாய்ப்பு உண்டாக்கித் தரவேண்டும். சிறார், முதியோர், பெண்டிர் ஆகியவர்கள் வீட்டிலேயே இத்தகைய ஆக்க முயற்சியை மேற்கொண்டு ஓய்வு நேரத்தைத் தக்க முறையில் செலவிடவும்-அதே நேரத்தில் வருவாய் பெறவும் இது வழி வகுக்கும். அரசும் கற்றறிந்த அறிவியல் ஆராய்ச்சியாளரும் ஆய்ந்து, மக்கள் ஓய்வுப் பொழுதை நன்முறையில் கழிப்பதற்கு உரிய வழிவகை வாய்ப்புக்களை உண்டாக்கித் தரவேண்டும்; விற்பனைக்கும் வழி வகுக்க வேண்டும்.

பொழுது போக்குக் கலைகள்:

மேற்கூறிய கைத்தொழிற் கலைகளுடன் இசை, ஓவியம் இதழ்கட்குக் கதை - கட்டுரை - கவிதை எழுதுதல், இன்ன பிற கலைகளிலும் ஓய்வுப் பொழுதைக் கழிக்கலாம். ஓய்

வுப் பொழுது முழுவதும் சீட்டு ஆடுவதும் மற்ற சூதாட்டங்கள்ஆடுவதும் வீண் அரட்டை அடிப்பதும் முதலிய வெட்டி வேலைகளை விட்டுவிட்டு, இசைக் கழகங்கட்குச் சென்று இசைகேட்டு மகிழலாம். இலக்கியக் கழகங்கட்குச்சென்று இலக்கிய உரைகளைக் கேட்டு இன்புறுவதுடன் நல்ல நடைமுறைப் படிப்பினைகளையும் பெறலாம். இவ்வாறாகப் பல துறைக் கலைகளில் ஓய்வுப் பொழுதைப் போக்கி இன்புறலாம். இதனால் தீயன எண்ணுதலும்-பேசுதலும்-செய்தலுமாகிய தீமைகட்கு இடமின்றி நன்மைக்கே இடமிருக்கும்.

## கல்வி என்னும் பல்கடல்:

'கல்வி என்னும் பல் கடல்' என்பது திருவாசகப் பகுதி. 'கல்வி கரையில கற்பவர் நாள் சில' என்பது நாலடியார்ப் பகுதி. 'கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு' என்பது ஔவையாரின் தனிப்பாடல் பகுதி. இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே, மாணிக்க வாசகர் தமது திருவாசகநூலில் கல்வியைப் பல கடலாகக் கூறியுள்ளார். அப்போதே தமிழ் மொழியில் பல துறைக் கல்வி பெருகியிருந்தது என்பது இதனால் புலனாகும். கம்பரும் தமது இராமாயண நூலில், 'தமிழ் அளக்க முடியாத பெரிய கடல்' என்னும் பொருளில் 'தமிழெனும் அளப்பரும் சலதி' என்று கூறியுள்ளார். ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே கல்வி கடலாகப் பரந்து விரிந்து-ஆழ்ந்து அகன்று பெருகியிருந்ததெனில், இந்த இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள கல்வியின் பெருக்கத்தை அளவிட முடியுமா? "Art is long, but life is short' என்னும் ஆங்கில மொழியும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

கல்வி என்னும் பல்கடலைக் கடக்க முடியாதெனினும் அதன் ஒரு கரையையாவது உலக 'மக்கள் அனைவரும் தொட்டாவது பார்க்க வேண்டும். கல்வி பெறாத மக்களைப் பெரும்பான்மையினராக வைத்துக் கொண்டு ஒரு நாடோ-உலகமோ எவ்வாறு முன்னேற முடியும்? வளர்ச்சி பெற்ற சில நாடுகளில் மட்டுமே கற்றோர் தொகை பெருகியுள்ளது. வளர்ச்சி பெறாத பெரும்பாலான நாடுகளில் கற்றவர் தொகை மிகவும் குறைவே. இந்த நிலையில் எந்த ஆக்க முயற்சியும் போதிய வெற்றி பெற முடியாது.

எனவே, பொதுவாக உலக மக்கள் அனைவரும்-சிறப்பாக ஒவ்வொரு நாட்டின் மக்கள் அனைவரும் கல்வி கற்றிருக்க வேண்டும். ஒய்வு நேரத்தில் பொழுது போக்காகக் கற்கும் கல்வியை இங்கே குறிப்பிடவில்லை: அனைவரும் இளம் பருவத்திலிருந்து கற்க வேண்டிய அடிப்படைக் கல்வியே இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல இடங்களில் பல நாடுகளில் வாழ்ந்த மக்கள், தங்கள் அனுபவங்களை எழுதி வைத்துச் சென்றுள்ளனர். அந்த அனுபவங்களின் தொகுப்பே கல்வி என்பது. இன்னின்ன பொருள்கள் இன்னின்ன தன்மையுடையன - இன்னின்னது செய்யின் இன்னின்னது நேரும்-இன்னின்ன மரஞ்செடி கொடிகள் இன்னின்ன பயனளிக்கும்-என்பன முழுவதையும் ஒவ்வொருவரும் தம் வாழ்நாளிலேயே வாழ்ந்து தெரிந்துகொள்ள முடியாது. ஆயிரம்-ஆயிரம் ஆண்டுகளாக முன்னோர் பலர் அனுபவித்து அறிந்து எழுதி வைத்துவிட்டுப் போன செய்திகளை, உடம்பில் புதுக்குருதி ஏற்றிக் கொள்வது போல் நாம் அறிந்து கொள்கிறோம். மூவாயிரம் ஆண்டுகளாக எழுதி வைத்துள்ள நூல்களைப் படித்தவர்கள்,

மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவர்களாக மதிக்கப்பெறுவர். எனவே, இவர்தம் வயதில் மூவாயிரம் ஆண்டைக் கூட்டிக் கொள்ளவேண்டும். பல நாடுகளில் வாழ்ந்தவர்கள் எழுதியுள்ள நூல்களைப் படிப்பவர்கள், பல நாடுகளில் வாழ்ந்த அனுபவம் உடையவர்களாக மதிக்கப் பெறுவர். இவ்வாறாக, கற்ற இளைஞர் ஒருவர், பல நாடுகளில் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவராகக் கணிக்கப் பெற்று, ஒன்றும் கல்லாத முதியவர் ஒருவரைவிட மிகவும் வயதில் மூத்தவராகப் போற்றப்படுவார். கல்லாத முதியவரினும் கற்றறிந்த இளைஞர்க்கு உள்ள மதிப்பு இஃதாகும்.

மன வயது:

உளவியல் கருத்துப்படி ஒருவரின் வயது இரண்டு வகைப்படும். உடல் பிறவி எடுத்த வயது, மனவயது (Mental Age) என்பன அவை. பிறவி எடுத்த உடல் வயதால் மூத்த ஒருவர் கல்வியறிவு பெறாதாராயின் அவர் மனவயதால் சிறியவரேயாவார். கல்வியறிவு பெற்றவர் உடல் வயதால் சிறியவராயினும் மனவயதால் பெரியவராவார். இந்த உளநூல்(Psychology) கருத்தைப் பண்டைக் காலத் தமிழ் அறிஞர்களும் பகர்ந்துள்ளனர்.

‘ஒரு குடும்பத்தில் பிறந்த பல பிள்ளைகளுள், வயதால் மூத்த அண்ணனுக்கு மதிப்பு இல்லை; கல்வி அறிவால் மூத்த தம்பிக்கே மதிப்பு உண்டு. அறிவால் மூத்த அந்த இளைஞனையே அரசும் மதித்துச் செயற்படுத்தி அவன் வழியே செல்லும்’-என்னும் கருத்தை, ‘ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்’ என்னும் பாண்டிய மன்னனே புறநானூற்றுப் பாடல் ஒன்றில் பகர்ந்துள்ளான்:

“ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசுஞ் செல்லும்”. (183)

என்பது மன்னனின் புறநானூற்றுப் பாடல் பகுதி. மற்றும், அதிவீர ராமபாண்டியன் என்னும் மன்னன், தனது வெற்றி வேற்கை என்னும் நூலில்,

"அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்". (34)

என்று கூறியுள்ளதும் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கதாம். இதுகாறும் கூறியவற்றால், கல்வியின் இன்றியமையாமையும்-பெருமையும்- பயனும் புலனாகும்" எனவே, இத்தகைய பயன்சால் கல்வியை உலக மக்கள் அனைவருக்கும் அளிக்கவேண்டும்.

கட்டாயக் கல்வி;

நாகரிகப் பகுதியில் வாழ்பவர்களுள்ளும் பலர் தம் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை; அனுப்பினும் அடிப்படைக் கல்வி பெறும்வரை விட்டு வைப்பதில்லை. குழந்தையைக் கவனிக்கவும்-வீட்டு வேலைகள் செய்யவும்-சிறு வயதிலேயே பொருள் ஈட்டவும் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்தால் பள்ளிக்கு அனுப்புவதில்லை. இதற்கு இடம் தரலாகாது. பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாதவர்க்குக் குற்ற வரி (அபராதம்) விதிக்கப்படும் என்பதாக அரசு அறிவித்து அனைவரையும் பள்ளிக்குக் கொணர வேண்டும்; ஏழைப் பிள்ளைகட்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அரசு செய்ய வேண்டும். பலர் பெண் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை. அரசு அதற்கும் இடம் தராமல் கட்டாயக் கல்வி (Compulsory Education) முறையை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். பழங்காலத் தமிழகத்தில் படித்த பெண்பாற் புலவர்கள் பலர் இருந்தமை ஈண்டு நினைவு கூரத்தக்கது.

'கற்கக் கூடிய நல்ல நூல்களைப் பிழையின்றிக் கற்பாயாக' என்னும் கட்டளைப் பொருளில், திருவள்ளுவர்,

'கற்க கசடறக் கற்பவை' எனத்தம் திருக்குறள் நூலில் கல்வியைக் கட்டாயப்படுத்தியுள்ளார். இப்பகுதியில் உள்ள 'கற்க' என்னும் சொல், விதித்தல் பொருளில் அஃதாவது கட்டாயக் கட்டளைப் பொருளில் வந்துள்ள 'வியங்கோள் வினைமுற்று' என்பதைத் தமிழ் இலக்கணம் கற்றோர் அறிவர். மற்றும், 'கற்க கசடறக் கற்பவை' என்னும் தொடரிலுள்ள 'வை' என்னும் ஒன்று தவிர்த்த மற்ற எழுத்துக்கள் அனைத்தும் வல்லெழுத்துக்களாய் அமைந்து கல்வியைக் கட்டாயப்படுத்தி வலியுறுத்தும் நயத்தைக் கண்டு மகிழ வேண்டும். ஆசிரியரின் உள்ளத்தில் எழுந்த கட்டாய உணர்வு, அப்படியே எழுத்திலும் இடம் பெற்று விட்டது.

கல்வியறிவில்லாத - நாகரிகம் அற்ற மக்களால் அவர் கட்கு மட்டும் தொல்லை என்பதில்லை; அவர்களால் மற்றவர்க்கும் தொல்லை மிகுதி. சுற்றுப் புறம் கெட்டழிந் திருக்கும் போது நாம் தங்கியிருக்கும் இடம் மட்டும் தூய் மையாய் இருந்தால் போதுமா?எனவே, பிற்பட்ட மக்கள், பழங்குடி மக்கள், மலை-காடு வாழ் மக்கள் முதலிய அனைவரும் கட்டாயமாகக் கல்வி பெற அரசு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்குக் கற்றவர்களும் உதவவேண்டும். பிற்பட்டவர்களும் முன்னேறினால்தான், முன்னணியில் உள்ளவர்களும் நலமாக வாழ முடியும். ஔவையார் கொன்றை வேந்தன் என்னும் நூலில் பாடியுள்ள,

"நாடெங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை" (49)

என்னும் பாடல் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

### பயனுள்ள கல்வி

பலர் படித்துப் பட்டம் பெற்று வெளிவந்ததும் பிழைப் புக்கு வழியின்றித் திண்டாடுகின்றனர்-கிளர்ச்சி செய்கின்

றனர்-வேலை தருமாறு புரட்சி செய்கின்றனர். இதற்குக் காரணம் கல்வி முறையில் உள்ள குறைபாடேயாகும். அனைவருக்கும் அடிப்படைக் கல்வி தந்ததும், அனைவரையும் ஒரே மாதிரியான பட்டப் படிப்புகட்கு அனுப்பாமல் முன் கூட்டியே பிரித்து விட வேண்டும். பல தொழில் துறைக் கல்வியை ஏற்படுத்தி, யார் யாருக்கு எவ்வெத் தொழிலில் திறமையும் ஆர்வமும் (Aptitude Special skills) மிகுதியாக உள்ளனவோ - அவ்வவரை அவ்வத் தொழிற் கல்விக்கு அனுப்ப வேண்டும். படித்து முடித்ததும், அவர்கள் தாம் கற்ற தொழிலைச் செய்து வாழவழி தேடிக் கொள்ளலாம். பெரிய அளவில் கணக்கும் அறிவியலும் எடுத்துப் பட்டம் பெற்றவர்கள், எழுத்தர் (Clerk) வேலைக்கும் காவலர் (Police) வேலைக்கும் போகும் கேலிக் கூத்தைக் காண்கிறோம். இவர்கட்குப் பெரிய அளவில் கணக்கும் அறிவியலும் ஏன்? இவ்வாறே, பலர், படித்த படிப்புக்கும் செய்யும் தொழிலுக்கும் தொடர்பேயின்றிப் பணி புரிகின்றனர். எனவே, படித்த படிப்பு பயனின்றிப் பாழாய்ப் போகாதவாறு கல்வித் திட்டமும் தொழில் திட்டமும் அமைத்து நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு பயனுள்ள முறையில் கல்வி அளிக்கப்படாவிடின், 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது', 'பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது' என்னும் பழமொழியை மெய்ப்பித்தவர்களாவோம்.

## தொழிற் கல்வி

தொழில் கல்வி என்பது, அடிப்படைக் கல்விக்குமேல் பல துறைத் தொழில்களைக் கற்றுக் கொடுக்கும் கல்வியாகும். வீட்டுக்கு முன்னாலும் பின்னாலும் பயனற்ற அழகுச் செடி கொடிகளை வளர்ப்பது போல, பெயருக்கு முன்னாலும் பின்னாலும் 'படாடோபம்' ஆன பட்டங்

களைப் போட்டுக் கொள்ளும்படியான படிப்பு தேவை யின்று. காயோ - கனியோ - கிழங்கோ - கீரையோ-பூவோ தரும் பயனுள்ள செடி கொடிகளை வளர்ப்பது போல, படித்து வெளியேறியதும் பணம் ஈட்ட உதவும் தொழிற் கல்வி பெரிய அளவில் தரப்படல் வேண்டும். அலுவலக எழுத்தர் வேலைக்கு மட்டும் தகுதியுடைய B.A., M.A. பட்டதாரிகளை உண்டாக்கம் செய்வது போதாது. மா பெருந் தொழில்களை ஏற்று நடத்தும் தொழில் வல்லுநர் களை உண்டாக்கம் செய்ய வேண்டும். கல்வித் துறையில் தொழில் முறை மிகுதியாக இடம் பெற வேண்டும் எனக் கல்வி வல்லுநர் பலரும் பரிந்துரைத்துள்ளனர்.

## செயலின் இன்றியமையாமை

'தாமஸ் ஹென்றி ஹக்ஸ்லி' (Thomas Henry Huxley: 1825-1895) என்னும் ஆங்கிலேய அறிஞர் தொழில் நுட்பப் பள்ளிகளின் தேவையை வற்புறுத்தியுள்ளார். பயன் தராத கிரேக்க மொழிப் பாடம் இவரது இயக்கத்தின் பயனாக நீக்கப்பட்டது. 'ழான் ழாக் ரூசோ' (J.J. Rousseau) என் னும் பிரெஞ்சு நாட்டு அறிஞர் செயலின் இன்றியமையா மையை வலியுறுத்தியுள்ளார். முதலில் செயல்-பிறகேசொல் -என்பது இவர் கோட்பாடுகளுள் ஒன்றாகும். "வாழ்வது உயிரை நீட்டிக்க அன்று - செயலுக்காகவே யாம்; நம் பொறி புலன்களையும் மற்ற அனைத்து வகை உறுப்புக் களையும்செயற்படுத்த வேண்டும்." (To live is not merely to breathe; it is to act; it is to make use of our organs, our senses, our faculties and of all those parts of our-selves") என்பது, ரூசோவின் கல்வித்துறைத் தொடர் பான அறிவுரையாகும். 'வில்லியம் ஹியர்டு கில்பாட்ரிக் (William Heard Kilpatrick) என்னும் அமெரிக்க அறிஞர், 'கல்வியின் முக்கியக் குறிக்கோள் செயல் ஆகும்' என்று

கூறியுள்ளார். ''நீ எதைச் செய்கிறாயோ அதைத்தான் கற்கிறாய்'' ('You learn what you practise) என்பது இவர் முழக்கங்களுள் ஒன்று. 'செய்து கற்றல்' (Learning by doing) என்பது, இந்தக் காலப் புதிய கல்விக் கொள்கையாகும்.

அண்ணல் காந்தியடிகளோ, தொழில் வாயிலாகக் கல்வி கற்பிக்க வேண்டும் எனத் திட்டமிட்டார்கள். மாணாக்கர்களின் வாழ்க்கைக்கு அடிப்படையான ஆதாரமான ஊதியம் அளிக்க உதவும் கல்வியாக இருக்க வேண்டும் என்பது அவரது கொள்கை. அதனால் இந்தத் திட்டத்திற்கு 'ஆதாரக் கல்வி' (Basic Education)என்னும் பெயர் வழங்கப்பட்டது. படிக்கும்போதே ஊதியமும் கிடைக்கச் செய்யும் நல்ல திட்டமாகும் இது. இந்த மாதிரியான திட்டத்தைச் சில மாறுதல்களுடன் அறிஞர் பலர் பரிந்துரைத்துள்ளனர்.

## குடும்ப - வாழ்க்கைக் கல்வி

குடும்பக் கல்வியும் வாழ்க்கைக் கல்வியும் உடன் அளிக்க வேண்டும். படித்துப் பட்டம் பெற்று வெளியேறும் இளைஞர் பலர்க்குக் கடைக்குச் சென்று ஒரு பொருள் வாங்கி வரவும் தெரியாது. குடும்பத்தை எவ்வாறு நடத்துவது என்பது பற்றியும் சிறிதும் தெரியாது. 'Home Science' என்னும் பெயருடன் அளிக்கப்படும் கல்வி, பெண்கட்கே யன்றி, தக்க முறையில் ஆண்கட்கும் அளிக்க வேண்டும். உயரிய - நேரிய-சீரிய முறையில் வாழ வழி வகுக்கும் அற நூல்கள் பல உள்ளன. அந்த அறநூல் (Moral) கல்வியும் புகட்டப்பட வேண்டும். சமுதாயத்துடன் ஒன்றி இணைந்து வாழ்வது எப்படி என்ற முறையை விளக்கும் சமுதாயக் கல்வியும் (Sociology) அளிக்கப்பட

வேண்டும். பள்ளிக்கூடப் பாடத் திட்டத்தில் (Syllabus) இவற்றிற்கெல்லாம் இடமிருக்க வேண்டும்.

முதியோர் கல்வி:

உரிய இளமைப் பருவத்தில் கல்வி கற்கும் வாய்ப்பு இல்லாமற் போனவர்க்கு வயது வந்த பின்னர் அளிக்கும் கல்வி முதியோர் கல்வி (Adult Education) எனப்படும். முதியோர் என்றால் கிழவர் என்பதில்லை. படிக்காத இருபது வயது இளைஞரும் இந்தத் திட்டத்தில் அடங்குவர். இவர்கட்கு இராப் பள்ளிக்கூடம் வைத்துக் கல்வி புகட்டவேண்டும். இவர்கட்குக் கல்வியின் இன்றியமையாமை, சீர்திருத்தம், அறியாமை நீக்கம், நோய்த் தடுப்பு முறை, குழந்தை வளர்ப்பு, கைத்தொழில், பொதுத் தொண்டு, ஒற்றுமை, சமூகத்தோடு ஒன்றி வாழும் முறை, நல்ல பழக்க வழக்கம், இன்னபிறவற்றைக் கற்பிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். 'எதையும் தாங்கும் இளமையில் கற்க முடியாதவன் முதுமையில் கற்பது அரிது' என்னும் கருத்தில், முன்றுறை அரையனார் என்பவர், தமது 'பழமொழி' என்னும் நூலில் கூறியுள்ள

"ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ" (1)

என்னும் பாடல் பகுதியை, முதியோர் கல்வி மூலம் நாம் பொய்யாக்க வேண்டும்.

இராப் பள்ளிகளில் சார்ந்து எழுத்து கற்றுக் கொண்டு படித்தறிய முடியாதவர்க்குக் கேள்வி (காதால் கேட்டல்) வாயிலாகக் கல்வியறிவு புகட்டலாம். எழுத்து கண்டு பிடிக்காத பழங்காலத்திலும் கல்வி இருந்தது. அப்போது கருத்துக்களும் பாடல்களும் வாய் வழியாகச் சொல்லச்,

செவி வழியாகக் கேட்டுக் கற்றுக் கொள்ளப்பட்டன. இப்போதும், பின் தங்கிய சில நாடுகளில் - சில இடங்களில் இந்த முறை பின்பற்றப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இது கேள்விக் கல்வியாகும். திருவள்ளுவர் திருக்குறளில் இந்தக் கேள்விக் கல்வியைப் பத்துப் பாடல்களின் வாயிலாக விளக்கியுள்ளார்.

'கற்றில னாயினும் கேட்க' என்பது திருக்குறள். 'கேள்வியும் கல்வி யாகும்' என்பது திவாகர நிகண்டு. 'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்' என்பது தேவாரம். 'கற்றலின் கேட்டலே நன்று' என்பது பழமொழி நாற் பாடல். எனவே, சொற்பொழிவு, வானொலி, திரைப் படம், தொலைக்காட்சி முதலியவற்றின் வாயிலாக வயது வந்தோர்க்கு அறிவு கொளுத்திப் புத்துலகத்தைப் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும். இவ்வாறாக உலகமக்கள் அனைவருக்கும் கட்டாயம் கல்வியறிவு அளிக்கப்பட வேண்டும்.

கடலை தின்னும்போது ஒரு கடலை சொத்தையாகவோ அழுகலாகவோ இருப்பினும் அது மற்ற கடலைகளையும் கெடுத்து விடுதல் போல, சமூகத்தில் ஒரு சிலர் கல்லாக் களி மக்களாயிருப்பினும் சமுதாயம் முழுவதுக்குமே அது கேடாகும். எனவே, அனைவருக்கும் கல்வியளிப்பது பெரிய ஆக்கச் செயலாகும். இதனால் அனைவரும் ஆக்க வேலைகளில் ஈடுபட வாய்ப்பு உண்டு.

பாரதியாரின் பட்டியல்:

சுப்பிரமணிய பாரதியாரின் பரிந்துரையுடன் இந்தப் பகுதி தொடங்கப் பெற்றது; மீண்டும் அவரது பரிந்துரைப் பட்டியலுடன் இந்தப் பகுதியை முடிக்கலாம். இமயமலையின் எவரெஸ்ட் கொடுமுடியை அடைவதற்குரிய முயற்சி

யிலிருந்து, நிலா உலகிற்குச் (சந்திர மண்டலத்துக்குச்) செல்வதற்குரிய முயற்சி உட்பட, பல ஆக்கவேலை முயற்சிகளை முன்கூட்டிப் பாரதியார் தம் பாடல்களில் பட்டியல் படுத்தியுள்ளார்; பட்டியல் வருமாறு:-

''வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்; அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்;
பள்ளித் தலமனைத்தும்கோயில்செய்குவோம்;எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்''.

''சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்;
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்;
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்''.

''வெட்டுக் கனிகள் செய்து தங்கம் முதலாம்
வேறு பல பொருளும் குடைந்தெடுப்போம்;
எட்டுத் திசைகளிலும் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம்''.

''முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே;
மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே,
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே''.

''கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்;
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப் போம்''

“காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்;
ராச புத்தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கம் அளிப்போம்”

“பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்;
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக்கு அவை கொடுப்போம்”

“ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்;
ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம்;
உண்மை சொல்வோம், வண்மைகள் செய்வோம்”

“குடைகள் செய்வோம், உழுபடைகள் செய்வோம்;
கோணிகள் செய்வோம், இரும் பாணிகள் செய்வோம்;
நடையும் பறப்பு முணர் வண்டிகள் செய்வோம்;
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்”

“மந்திரம் கற்போம், வினைத் தந்திரம் கற்போம்;
வானை யளப்போம், கடல்மீனை யளப்போம்;
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்;
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்”

“காவியம் செய்வோம், நல்ல காடு வளர்ப்போம்;
கலை வளர்ப்போம், கொல்லர் உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம், நல்ல ஊசிகள் செய்வோம்;
உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்”

இது பாரதியாரின் பரிந்துரைத் தொழில் பட்டிய லாகும். பலவகையான தொழில்களையும் பரிந்துரைத்து, எவையேனும் விட்டுப்போயிருந்தால் அவையும் அடங்கும் அளவில் 'உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய் வோம்' என முடித்துள்ளார் பாரதியார். மக்களினம் இத் தகைய ஆக்க வேலைகளில் ஈடுபட்டால் பொருள் வளம் கொழிக்க வாழ்க்கை எளிதாகவும் இனிதாகவும் நடை பெறும்.

# 6. போரில்லா உலகம்

போர் ஊக்கம்:

மக்களுக்கு இயற்கையாகச் சில ஊக்கங்கள் உள்ளன; அவை 'இயல் பூக்கங்கள் (Instincts) எனப்படும். அவற்றுள் 'போர் ஊக்கம்' (Pugnacity) என்பதும் ஒன்று. மக்களினத்தில் குழந்தைப் பருவத்திலேயே இந்த ஊக்கம் தோன்றி விடுகிறது. தன் விருப்பத்தை நிறைவு செய்து கொள்ளக் குழந்தை போராடுகிறது. தன் விருப்பம் நிறைவேறாவிடின், குழந்தை அழுகிறது; தலையைத் தரையில் முட்டிக் கொள்கிறது; கைகளாலும் கால்களாலும் தரையையும் எதிரில் இருப்பவரையும் புரண்டுகிறது; திட்டுகிறது; அடிக்கிறது; கண்ணில் கண்ட பொருள்களையெல்லாம் சிதைக்கிறது - எடுத்து வீசி அடித்து உடைக்கிறது; இன்னும் என்னென்னவோ செய்கிறது. இந்தப் போர் ஊக்கம் முதுமை எய்தி இறக்கும் வரையும் பல உருவங்களுடன் தொடர்கிறது.

கணவன் - மனைவி போர், பெற்றோர் - பிள்ளை போர், உடன் பிறந்தார் போர், உறவினர் போர், குடும்பப் போர், சாதி - மத - இன - நிற - மொழி வெறிப் போர், குழுப்போர், வீட்டுக்கு வீடு போர், தெருவுக்குத் தெரு போர், ஊருக்கு ஊர் போர், வட்டத்துக்கு வட்டம் போர், நாட்டுக்கு நாடு போர், உலகப் போர் - என்பனவாகத் தனி மாந்தர் போரிலிருந்து உலகப் போர் வரையும் நிகழ்வதற்கு, உயிரோடு இயற்கையாக ஒன்றியுள்ள

போர் ஊக்கமே வித்தாக உள்ளது. இன்னும், நாம் வாழும் பூவுலகிற்கும் வேறு உலகிற்கும் இடையே போர் நிகழ வில்லை; அதுவும் ஒரு காலத்தில் நிகழுமே என்னவோ! மேல் உலகத் தேவர்கட்கும் கீழ் உலக அரக்கர்கட்கும் எத்தனை - எத்தனையோ போர்கள் நிகழ்ந்த தாகப் புராணக் கதைகளில் படிக்கிறோம். ‘படே படே’ கடவுளர் கூட அரக்கர்களுடன் போரிட்டதாகப் புராணங்கள் கூறு கின்றன.

கடவுளர்கள் செய்ததாகக் கூறப்படும் கற்பனைப் போர்களை விட்டுவிடுவோம். மக்களுக்குள் நிகழ்ந்த - நிக ழும் போர்களுக்குத் காரணம், தம் நலமும் தம்குழு நல முமேயாகும். இதனால், போர் ஊக்கத்தை. தற்காப்பு ஊக்கங்களுள் ஒன்றென உளவியல் அறிஞர்கள் உரைக்கின் றனர்.

அரசர்கள்:

பழங்காலத்தில், நாகரிகம் இன்றிக் காட்டு மிறாண்டி களாய் வாழ்ந்த மக்கள், தம் நலம் கருதி, ஒரு வர்க்கு ஒருவரோ, ஒரு குழுவினரோடு மற்றொரு குழுவினரோ அடிக்கடிப் போரிட்டுக் கொண்டனர். நாளடைவில், ஒரு குழுவிற்கு ஒரு தலைவர் - ஓர் ஊருக்கு ஒரு தலைவர்- என்ற மாதிரி அமைப்பு ஏற் பட்டது. இந்தத் தலைவர்கள் குழுச் சண்டையையும் ஊர்ச் சண்டையையும் அடக்கி ஒழுங்கு செய்து வந்தனர். காலம் கடக்கக் கடக்கத் தலைவர்கள் அரசர்கள் ஆயினர்; அரச அமைப்புகள் தோன்றின. ஊருக்கு ஓர் அரசர் உண் டாயினர்; ஊர்களின் எல்லைகள் வரையறுக்கப் பட்டன. வரையறுக்கப்பட்டபோதே போருக்கும் வித்து இடப்பட்டு விட்டது.

ஊருக்கு ஊர் முளைத்திருந்த அரசர்கள், உள் கலகம் ஏற்படாமல் ஊரில் தம் ஆட்சி நிலைத்திருக்கவும், பக்கத்து ஊர்களின் மன்னர்கள் தம் நாட்டின்மேல் கண் வைக்காதிருக்கவும், தாம் பக்கத்து ஊர்களைப் பற்றிக் கொள்வதற்காகவும் போர்ப் படைகளை அமைத்துக் கொண்டனர். 'சிரங்கு பிடித்தவன் கையும் இரும்பு பிடித்தவன் கையும் சும்மா இருக்கா' - என்பது பழமொழி. படையமைக்கப்பட்டதும், பல காரணங்களால் போர்களும் அரும்பலாயின.

ஓர் ஊருக்கு அரசராயிருந்தவர், போர்களின் வாயிலாகப் பல ஊர்களைப் பற்றிக் கொண்டு பேரரசரானார்; பின்னர் மேலும் பற்பல ஊர்களைப் பிடித்துக் கொண்டு பெரும் பேரரசரானார். ஓர் ஊருக்கு அரசன் என்ற நிலை மாறி ஒரு நாட்டின் வேந்தர் என்ற உயரிய நிலை உண்டாயிற்று. இவ்வாறு நாடுகள் தோன்ற மாமன்னர்களும் தோன்றலாயினர்.

### மற முறைக் காலம்:

மன்னர்களின் தோற்றத்தைத் தொடர்ந்து, காலாள் படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை முதலிய படைகளும் தோன்றின. படை மறவர்கள் பலர் திரட்டப் பட்டனர். மன்னர்களும் மறவர்களும் மற்போர், விற்போர், வாட்போர், மற்றும் யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றில் பயிற்சி பெற்றனர். தம் நாடு-அயல் நாடுகள் என்ற பாகுபாடு புகுத்தப்பட்டது; இதன் பயனாய் நாட்டுப் பற்று என்னும் மாயை நரம்புக்குள் (Injection) ஏற்றப்பட்டது. வீட்டுக்கொரு வீரராவது படையில் சேர்க்கப்பட்டனர்; வேண்டியபோது வீட்டிலுள்ள ஆடவர்கள் அனைவருமே வீரர்களாய் மாறினர்.

நாட்டுக்காக மறப் போர் புரிவது கடமையாகக் கருதப் பட்டது. நாட்டின் நன்மைக்காகப் போரில் உயிர் துறப் பது புகழ்ச் செயலாகப் போற்றப்பட்டது. இன்னும் சொல்லப் போனால், போரில் புண்பட்டுச் சாவதே புகழ்ச் சாவாக மதிக்கப்பட்டது. இதனால், இயற்கையாக இறந்த வர்களையும் மார்பைக் கிழித்துப் புண் உண்டாக்கி அடக் கம் செய்தனர். இந்த அளவுக்குப் போர் வெறி ஏற்றப் பட்டிருந்தது. போரில் இறந்த வீரர்கட்குக் கல் நாட்டி அவர்களைக் கடவுளாக்கி வழிபாடு செய்ததன் வாயி லாகக் கோயில்களும் சிலைகளும் வழிபாடுகளும் தோன்ற வித்து இடப்பட்டது.

போரில் புற முதுகு காட்டி ஓடுவது கோழைத்தன மெனப் பழிக்கப்பட்டது. இந்தப் பழி ஓடியவர்களோடு நில்லாது அவர்தம் குடுபத்தையும் சார்ந்தது - அவர் களைப் பெற்றெடுத்த தாய்மார்களையும் உறுத்தியது. தன் மகன் போரில் புற முதுகிட்டு ஓடி விட்டான் என யாரோ சொல்லக் கேட்ட மறத்தாய் ஒருத்தி, அஃது உண்மையாயின், அவனுக்குப் பால் கொடுத்த என் மார் பகத்தை அறுத்துக் கொள்வேன் எனச் சூளுரைத்து வாளு டன் போர்க்களம் புக்கபோது, தன் மகன் மார்பில் விழுப் புண் பட்டு மாண்டு கிடந்தமை கண்டு, அவனைப் பெற்ற போது அடைந்ததினும் பெரு மகிழ்வு எய்தினாளாம். மறத்தாய் மற்றொருத்தி, தன் தந்தை, தன் கணவன், தன் அண்ணன் தம்பியர் அனைவரும் போரில் மாண்டு போக, எஞ்சியிருந்த தன் இளஞ் சிறு மகனை யழைத்து, தலைவாரி ஒப்பனை செய்து, புத்தாடை யுடுத்திப் போர் வாளும் தந்து போருக்குப் போய் வெற்றியுடன் வருக என்று வாழ்த்தியனுப்பினாளாம். இத்தகைய மறச் செயல் களைப் பற்றிப் புறநானூறு போன்ற தமிழ் நூல்களில்

விரிவாகக் காணலாம்.உலகின் பல்வேறு பகுதிகளிலும் இத் தகு நிலைமை நீடித்தது. இவ்வாறாக 'மற முறைக்காலம்' (வீர யுகம்) ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருந்தது.

## போர்க் கல்வி:

போர் முறைகளும் போர் வரலாறுகளும் இலக்கியங் களாக எழுதப்பட்டன. 'இலக்கியம் கண்டதற்கு இலக் கணம்' என்பதற்கு ஏற்பப் போர் இலக்கண நூல்களும் எழுந்தன. தமிழில், தொல்காப்பியம், திருக்குறள், புறப் பொருள் வெண்பா மாலை முதலிய நூல்களில், போர் இலக்கணம் விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மற்றும் உலக மொழிகள் பலவற்றிலும் போரைப் பற்றிக் கூறும் நூல்கள் பல எழுந்தன. இவ்வெழுச்சியைத் தொடர்ந்து முறையாகப் போர்க் கல்வியும் போர்ப் பயிற்சியும் அளிக்கப் பட்டன. இந்தக் காலத்தில் இராணுவக் கலைக் கழகங்கள் அமைத்துப்படைப்பயிற்சி தருவது போலவே அந்தக் காலத் திலும்நடந்தது. இதனை,

> "படையும் மற்றும் கல்வி பயில் களமும் கழகம் ஆகும்"

என்னும் சேந்தன் திவாகர நிகண்டு நூற்பாவால் அறியலாம்.

## அமைதியின்மை:

உலகத்தில் இந்தக் காலத்தில் இருக்கும் அளவுக்கு அந்தக் காலத்தில் அமைதி யிருந்ததாகத் தெரியவில்லை. தமிழ் வழங்கும் நிலப்பகுதியை எடுத்துக் கொள்ளின் இப் பகுதிக்குள் எத்தனையோ அரசர்கள் இருந்தனர். இவ் வாறே எல்லாப் பகுதிகளிலும் இருந்தனர். ஆங்காங்கிருந்த

அரசர்கள் ஒருவரோ டொருவர் எப்போதும் பொருது கொண்டனர். தீவட்டிக்கொள்ளை, ஊர்களை எரித்தல், பெண்களைக் கற்பழித்தல், பெண்களைக் கடத்திச்செல் லுதல் முதலிய கொடுமைகள் நடந்தன. இதனால் பொது மக்கள் பட்ட தொல்லைகட்கு அளவேயில்லை. எந்த அரசருக்கும் எந்த ஊரும் நிலையில்லை. இதனால்தான் "எந்த ஊர்-எந்த ராசா-எந்தப் பட்டணம்" என்னும் மொழி எழுந்தது போலும்!இந்தக்காலத்தில் தலைவர்கள் 'குளிர் பதன' அறைக்குள் (Air condition Room) இருந்து கொண்டு படைமறவர்களை மட்டும் போர்க்கு அனுப்பு வது போல் அந்தக்காலத்தில் நடைபெறவில்லை. அரசர் களே மறவர்கட்கு முந்திப்போர்க்களத்தில் நின்று போரா டினர். போரில் அரசர்கள் இறப்பது மிகுதி. கொலைத் தண்டனையால் திருடன் இறப்பது போல், போரினால் அரசர்கள் இறந்தனர். இதனால், "அரசன் பெண்டாட்டி யும் திருடன் பெண்டாட்டியும் கைம்பெண்டாட்டிகள் (விதவைகள்) "-என்னும் முதுமொழி எழுந்தது.

அறப்போர்:

இந்தக் காலத்தில் குழந்தைகள் விடுதி, முதியோர் இல்லம், கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள், திருக் கோயில்கள் முதலியவற்றின் மீதும் சிறிதும் இரக்கம் இன்றிக் குண்டுமாரி பொழியும் மறப்போர் முறையை அந்தக்காலத் தமிழ் மன்னர்கள் பின்பற்ற வில்லை. இரு வேறு எதிர் தரப்பினர் எதிர் எதிரே நின்று ஆடும் விளை யாட்டுக்குச் சில விதி முறைகளை வகுத்திருப்பது போல, அந்தக் காலத் தமிழ் வேந்தர்களும் போருக்கென்று சில அறநெறிகளை வகுத்துக் கொண்டு போரிட்டனர். இதற்கு 'அறப்போர்' என்னும் பெயர் வழங்கப் பெற்றது. ஒரு

நாட்டின் மீது படையெடுப்பதென்றால், 'திறந்த வீட்டில் நாய் நுழைவது போல்'' 'திடு திடு' வென்று உள்ளே போய் விடுவது அக்கால வழக்கமன்று. ''இந்த நாட்டின் மீதுபோர் தொடுக்கப் போகிறோம்; எனவே, இந்தநாட்டி லுள்ள ஆக்களும் (பசுக்களும்) பார்ப்பனரும் பெண்களும் பிணியாளரும்இன்னும் பிள்ளைபெறாதோரும் துறவியரும் முதலானோர் போரின் விளைவைத் தாங்க முடியாதாத லின்வெளியேறித்தற்காப்பு செய்து கொள்வாராக'' என்று முன்கூட்டி அறிவிப்புச் செய்து விட்டே பின்னர்ப் போருக்கு எழுவர். இதனை, நெட்டிமையார் என்னும் புலவர் பாடிய,

''ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்'' (9)

என்னும் புறநானூற்றுப் பாடல் பகுதியாலும், சிவஞான முனிவர் இயற்றிய

''மண்டமர் மேல் கொடு வந்தனம் இன்னே
தண்டக நாட்டுறை தாபதர் நோயோர்
பெண்டிரும் நும்மரண் ஏகுதிர் பென்டென்று
எண்டிசை யார்ப்ப இசைப் பறை சாற்றி''

என்னும் காஞ்சிப்புராணப் பாடலாலும், திருத்தக்கதேவர் இயற்றிய

''நன்பால் பசுவே துறந்தார் பெண்டிர் பாலர் பார்ப்
பார்
என்பாரை ஓம்பேனெனின் யான் அவனாக என்றான்''
(443)

என்னும் சீவக சிந்தாமணிப் பாடலாலும் இன்ன பிற இலக்கியங்களாலும் அறியலாம். மற்றும், ஈண்டு, தொல் காப்பியப் புறத்திணை யியலிலுள்ள 'முழு முதல் அரணம்' எனத் தொடங்கும் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையில் உள்ள,

"சிறப்புடை அரசியலாவன:-மடிந்த உள்ளத்தோனை யும், மகப் பெறாதோனையும், மயிர் குலைந்தோனையும், அடிபிறக்கிட்டோனையும் (புறமுதுகு காட்டி ஓடுபவனை யும்), பெண் பெயரோனையும் படையிழந்தோனையும், ஒத்த படையெடா தோனையும் பிறவும் இத்தன்மையுடை யோரையும் கொல்லாது விடுதலும், கூறிப் பொருதலும் முதலியனவாம்"- என்னும் பகுதி கூர்ந்துநோக்கத் தக்கது. புறமுதுகிட்டு ஓடுபவன்மேல் அம்பு எய்வது, புற முதுகிட்டு ஓடுவதைக் காட்டிலும் மிகவும் கோழைத் தனமான இழிந்த செயலாகக் கருதப்பட்டது. மற்றும். கழாத் தலையார் என்னும் புலவர் பாடியுள்ள "அறத்தின் மண்டிய விறல் போர் வேந்தர்" (62)என்னும் புறநானூற்றுப் பாடல் தொடரும் ஈண்டு ஒப்பு நோக்கற் பாற்று. அறப்போர் முறையில் முன்னறிவிப்புச் செய்தா லும், நமது மொழியறியாத ஆனினம் வெளியேறுதாகலின், மாற்றரசரின் கொட்டிலில் உள்ள ஆனிரையை ஓட்டிக் கொண்டு வந்து விடுதல் மரபு. இதனைத் தொல்காப்பி யர்' *'ஆதந்து ஓப்பல்' என்னும் பெயரால் குறிப்பிட்டுள் ளார். இந்த 'மாடு பிடி' சண்டைக்குத் தமிழ் இலக்கண நூல்களில் 'வெட்சித் திணை' என்னும் பெயர் கொடுக்கப் பட்டுள்ளது.

---

* தொல் - பொருள் - புறத்திணையியல் - 2

## படை மடம்:

படைக்கலம் (ஆயுதம்) இழந்த இராவணனை நோக்கி, 'இன்று போய் நாளை வா' என்று இராமன் கூறியதாக இராமாயண வரலாறு அறிவிக்கிறது. போரின் நடுவே மனம் சோர்ந்து போனவனையும் மயிர் முடி குறைந்தோனையும் புறமுதுகிட்டு ஓடுபவனையும் படைக்கலம் இழந்தவனையும் சமமான படைக்கலம் உடைத்தாயில்லாதவனையும் கொல்லாது காப்பாற்றி அனுப்புவது, போர்த்துறையில் ஒருவகை மடச் செயல் அல்லவா? இத்தகு செயலுக்குப் 'படை மடம்' என்னும் பெயர் தமிழ் நூல்களில் வழங்கப்பட்டுள்ளது.

பழைய செய்திகளாகிய- தமிழர்களின் அறப்போர் முறையினையும் படை மடத்தினையும் இங்கே தந்திருப்பதின் நோக்கம், இந்தக் காலத்தினராயினும் இனி எந்தக் காலத்தினராயினும், எல்லாத் துறைகளிலும் அறநெறியைப் பின்பற்ற வேண்டும் என்பதை அறிவிப்பதேயாம்.

## போர்த் தூது:

இந்தக் காலத்தில் இரு நாடுகட்கிடையே போர் நிகழாது தடுக்க 'ஒன்றிய நாடுகளின் மன்றம்' (United Nation) முயல்வது போல, அந்தக் காலத்திலும் போர்த் தூது முயற்சி பெரிய அளவில் நடைபெற்றுள்ளது. பாண்டவ மன்னர்கள் கண்ணபிரானைக் கௌரவ மன்னர்களிடம் தூது அனுப்பியதாகப் பாரத நூலும், இராமன் அங்கதனை இராவணனிடம் தூது அனுப்பியதாக இராமாயண நூலும், முருகன் வீரவாகுவைச் சூரபதுமனிடம் தூது அனுப்பியதாகக் கந்த புராண நூலும் கூறுகின்றன. இந்த மூன்று தூதுக்களும் வெற்றி பெறவில்லை. ஆனால் தூது முயற்சிகளின் வெற்றிச் செய்திகள் சில, பழந்தமிழ் இலக்

கியங்களில் கூறப்பட்டுள்ளன. இதனை இன்றைய உலகம் அறிந்து கொள்வது நன்று. இற்றைக்கு (1986)ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன், நலங்கிள்ளி, நெடுங் கிள்ளி என்னும் மன்னர் இருவருக்கு இடையே நிகழ விருந்த போரை, கோவூர்கிழார் என்னும் புலவர் தூது செய்து தடுத்தாராம். இவரே, மலையமான் திருமுடிக் காரி என்னும் மன்னனின் மக்களைக் கிள்ளி வளவன் என் னும் மன்னன் கொல்லாதவாறு தடுத்துக் காத்தாராம். ஔவையார் என்னும் பெண்பாற்புலவர், அதியமான் நெடு மான் அஞ்சி என்னும் மன்னனிடமிருந்து, தொண்டை மான் இளந்திரையன் என்னும் மன்னனிடம் தூது சென்று அமைதி காத்தாராம். இன்ன பிற செய்திகளைப் புறநா னூறு போன்ற நூல்களால் அறியலாம்.

போர்த் துறையாம் மறத்துறையிலேயே காலத்தைக் கழித்துக்கொண்டிருந்த 'தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்' என்னும் பாண்டிய மன்னனை, மருதனிள நாகனார் என்னும் புலவர், மறத்துறையை அறவே விட்டு அறநெறிகளைப் பின்பற்றுமாறு செய்வித்த வரலாறு மதுரைக் காஞ்சி என்னும் நூலால் அறியப்படு கிறது. இவ்வாறே, மாடலன் என்னும் பெரியார், சேரன் செங்குட்டுவன் என்னும் மன்னனது சீற்றத்தைத் தணித்து, மறத்துறையை விட்டு அறத்துறையைப் பின்பற்றுமாறு செய்வித்த வரலாறு, சிலப்பதிகார நூலில் தெரிவிக்கப் பட்டுள்ளது. புத்தத் துறவியர், கலிங்கப் போரை வென்ற பேரரசன் அசோக மன்னனுக்குப்போரினால்விளைந்திருந்த துயரநிலைகளைச் சுட்டிக்காட்டி, இனிப் போர்த்துறைப் பக்கமே உள்ளத்தைத் திரும்பச் செய்யாது அறத்துறை நெறிகளையே பின்பற்றுமாறு மாற்றிய வரலாறு உலகம் அறிந்ததாகும்.

மேற்கூறிய தூது முயற்சிகளையும் அமைதி காத்த அரும் பணியையும் இன்றைய உலகம் எண்ணிப் பார்க்க வேண்டும்; அறிவுக் கண்ணைத் திறந்து பார்க்க வேண்டும்.

## போரின் கொடுமைகள்:

போரின் கொடிய விளைவுகளைச் சொல்லி முடியாது. மாண்டு போகும் மறவர்களின் பெற்றோர், மனைவி, மக்கள், மற்றும் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் முதலானோர் அடையும் மனத்துயருக்கு அளவேயில்லை. எவ்வளவு பணம் தந்து ஈடுசெய்யினும் 'ஆள்' கிடைக்க முடியுமா? உற்றார் உறவினர்கள் இருக்கட்டும். மாண்டுபோனமறவர்களின் மனநிலை அப்போது எப்படியிருந்திருக்கும்? மாண்டவர் போக, மாளாமல் குத்துண்டும் வெட்டுண்டும் புண்பட்டு உயிரோடு போராடிக் கொண்டிருந்தவர்கள் நிலை எவ்வாறிருந்திருக்கும்? பின்னர்ப் புண் குணமாகி உயிர் பிழைத்துக் கொண்டவருள்ளும் கை-கால்-கண் போன்ற உறுப்புக்களை யிழந்து வாழ்வோரின் துயரநிலை எத்தகையது? இக்கொடுமைகளையெல்லாம் போர் வெறித்தலைவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும்.

மறவர்களின் நிலையும் அவர்தம் குடும்ப நிலைமையும் ஒரு புறம் இருக்க, இருந்த செல்வமும் உணவுப் பொருள்களும் தீர்ந்து போனமை, கட்ட டங்கள் – ஆற்றுப் பாலங்கள் முதலியவற்றின் அழிவு, உற்பத்திக் குறைவு, போக்கு வரவுச் சீர் குலைவு முதலியவற்றால் பசியும் – பஞ்சமும் - பற்றாக் குறையும் ஏற்பட்டு மக்களினம் படும்பாடு சொல்லுந்தரத்ததா? உலகப் பெரும் போர்களால் உலக மக்களினம் முழுவதும் பட்ட பாடுகள் அறியாதனவா? இப்போது உலகம் - உலக நாடுகள் நெருங்கியிருப்பதால்,

எவையேனும் இரண்டு நாடுகளுக்குள் போர் ஏற்படினும், அது, உலகின் மற்ற பகுதிகளுக்கும் தொல்லை யுண்டாக் குவது நேரிடை அனுபவச் செய்தியாகும் அல்லவா?

போர்களின் பட்டியல்:

போர்களின் பட்டியல் ஒன்றை இங்கே தரின், மக்க ளினத்தின் மதி கெட்ட செயல் புரிய வரலாம். வரலாற் றுக் காலத்துக்கு முற்பட்ட காலமும் - வரலாற்றுத் தொடக்கக் காலமும்- வரலாற்றுத் தொடக்கக் காலத்தை யடுத்த பிற்பட்ட காலமும் - ஆகிய பழங் காலத்திலும் மிகப் பழங் காலத்திலும் நிகழ்ந்த போர்களை விட்டுவிடு வோம். ஓரளவு மக்களினம் நாகரிகம் பெற்று முன்னேற் றம் அடைந்துள்ள காலமாகிய இற்றைக்குச் (1986) சற் றேறற் குறைய ஐந்நூறு அல்லது ஆயிரம் ஆண்டுகட்கு உட்பட்ட கால அளவில் நடைபெற்ற பெரும்பாலான போர்களைப் பட்டியல் படுத்திப் பார்ப்போம்:-

அமெரிக்க உரிமைப் போர், ஆசியாகோப்போர், ஆப் கானியப் போர், இந்தியாவில் முசுலீம் மன்னர்களின் போர்கள், இந்தியாவில் ஐரோப்பியர்களின் போர், இத்தாலி - அபிசீனியப் போர், முதல் உலகப் பெரும் போர், இரண்டாவது உலகப்பெரும் போர், ஏக்கர் போர், ஏழு ஆண்டுப் போர், ஏழு வாரப் போர், கர்நாடகர் போர், கலிங்கப் போர், கார்லிஸ்ட்டுப் போர்கள், கிரை மியப் போர், குவிபெக் போர், கூர்க்கர் போர், சாலமிஸ் போர், சிலுவைப்போர், சீக்கியப் போர், சீன உள்நாட்டுப் போர், சீன-ஜப்பானியப் போர், தலைக் கோட்டைப்போர் தீப கற்பப் போர், நேஸ்பிபோர், நைல் போர், பக்சார் போர், பங்க்கர் குன்றுப் போர், பர்மியப் போர், பால்க் கன் போர்கள், பியூனியப் போர், பிரிட்டிஷ் உள்நாட்டுப்

போர், பிளாசிப்போர், பிளெனிம் போர், பிஷப்புப்போர், போயர் போர், பல்ட்டாவா போர், மகாராட்டிரப் போர், மார்ஸ்ட்டன் மூர்போர், மாஜான்டா போர், முக்டன் போர், மைசூர்ப் போர்கள், ரான்தம் போர், ருஷ்ய - ஜப்பானியப் போர், ரோகில்லாப் போர், ரோஜா போர், லூட்சன்போர், வாட்டர் லூபோர், வால்மீ போர், வர்துன்போர், ஜப்பானிய - கொரியப் போர், ஜென் கின்ஸ் காதுப் போர், ஸ்ட்டாம் போர்டு பாலப் போர், ஸ்பானிய வார்சுரிமைப் போர், வடகொரிய-தென் கொரியப் போர், சீன – இந்தியப் போர், இந்திய பாகிஸ்தான் போர், இஸ்ரேல் - அரபு நாடுகளின் போர், வட - தென்வியட்நாம் போர், ஈரான் - ஈராக் போர், முதலியன நாகரிக மக்களின் நகையாடலுக் குரிய போர்களாகும். இவையேயன்றி, இப்போது, வல்லரசுகளின் கெடு பிடிப் போர் வேறு உலகத்தை மிரட்டிக் கொண்டிருக்கிறது.

போர்க் காரணங்கள்:

பல்வேறு காரணங்களால் போர்கள் எழுந்தன. அவற்றுள் சில:— புதிய நாடு பிடிக்கும் அவா, எல்லையைப் பெருக்கிக் கொள்ளும் விருப்பம்,தாமோ-தம் முன்னோரோ விட்டவற்றினை மீண்டும் பிடிக்கவேண்டும் என்ற முயற்சி, நீ பெரியவனா- நான்பெரியவனா - நீ உயர்ந்தவனா-நான் உயர்ந்தவனா என்ற உயர்வு தாழ்வுச் சிக்கல்கள், மதம் -இனம்-நிறம் முதலிய வேறுபாட்டு வெறியுணர்வு, விடுதலை வேட்கை, பொதுவுடைமை - தனியுடைமை போன்ற கொள்கைச் சிக்கல்கள், பிறநாடுகளில் வாணிகச் சந்தை பிடிக்கும் நோக்கம், செல்வ வளமுள்ள நாடுகளில் உள்ள செல்வப் பொருள்களைத் தாம் கொண்டுவந்து விடவேண்டும் என்ற பேரவா முதலியனவாம். பரந்த

மனப் பான்மை யிருப்பின், இவையெல்லாம் எளிதில் விலக்கிக் கொள்ளக் கூடிய காரணங்களே யாகும்.

இருக்கும் நாட்டை ஒழுங்காய் ஆண்டால் போதாதா? மானில் ஒரு புள்ளி ஏறினால் என்ன - குறைந்தால் என்ன - என்பார்கள்; அதுபோல, எல்லை சிறிது நீண்டால் என்ன- குறைந்தால் என்ன? எத்தகைய வேறுபாட்டுணர்வும் கூடாது. விடுதலை விரும்பும் நாடுகட்கு விடுதலை கொடுத்து விடவேண்டியது தான்! இன்னொருவரின் பகுதிகளை விட்டுக்கொடுத்து விட வேண்டியதே! எத் தகைய வேற்றுமையும் கூடாது; எல்லாரும் நிகர் - எல் லாரும் வாழவேண்டும் என்னும் ஒரே கொள்கையே - ஒரே உணர்வே - எல்லார்க்கும் இருக்க வேண்டும். பிற நாடுகளைச் சுரண்டும் பேரவாவை அறவே விட்டொழித்து விட வேண்டும். இன்ன பிற நன்முறைகளைக் கடைப் பிடிக்கின், போரைப் போர் செய்து துரத்திவிடலாம். இல்லையேல், துடைக்க முடியாத துன்பங்கட்கு மக்களினம் உட்பட வேண்டியதுதான்!

### களம் கண்டு இரங்குதல்:

இற்றைக்குச் (1986) சுமார் இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்பு, தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன், தமிழ் நாட் டில் தலையாலங்கானம் என்னும் இடத்தில், தன்னை எதிர்த்த பகை மன்னர் எழுவருடன் பொருது வெற்றி பெற்றான் என்பது, பழங்காலத் தமிழக வரலாறு. இதனை அம்மன்னன்மீது நக்கீரர் என்னும் பெரும்புலவர் பாடிய 'நெடுநல் வாடை' என்னும் நூலால் அறியலாம். அந்தப் பாண்டிய மன்னன், இரவிலே, தன் இருப்பிடத்தினின்றும், புண்பட்டுக் கிடக்கும் போர்மறவர்களைக் காணப் புறப்

பட்டானாம். சுடர் விளக்குகள், வாடைக்காற்றால் தெற்கு நோக்கி அசைந்து ஒளி தந்துகொண்டிருந்தனவாம். வேந்தனுக்கு முன்னால் சென்ற படைத்தலைவன், புண் பட்டுக் கிடக்கும் மறவர் ஒவ்வொருவரின் நிலையையும் முறையாக அறிவித்துக் கொண்டிருந்தானாம். மழைத்துளி போட்டுக்கொண்டிருந்ததால் நனைந்த குதிரைகள் தம் உடலை உதறுவதால் வெளிப்படும் துளிகள் மன்னன் மீது பட்டனவாம். மழையையும் பொருட்படுத்தாது குடையின் துணையுடன் மன்னன் சென்று கொண்டிருந்தானாம். இடப் பக்கத் தோளின்மேல் போட்டுக்கொண்டிருந்த மேலாடை நழுவ, அதை மன்னன் இடக்கையால் பற்றிக் கொண்டானாம்; வலக்கையை மறவன் ஒருவனது தோளின் மேல் வைத்துக்கொண்டு சென்றானாம். புண் பட்டுக் கிடந்த மறவர் ஒவ்வொருவரையும் இரக்கத்துடன் நோக்கி இன்முகங் காட்டி இனியன கூறி ஆறுதல் செய் தானாம்; நள்ளிரவிலுங்கூட படுக்கைக்குச் செல்லாமல், புண்பட்டுக் கிடந்த மறவர்கட்கு ஆகவேண்டியவற்றைக் கவனித்துக்கொண்டு, இரவு முழுதும் மறவர் சிலருடன் போர்க்களப் பகுதி முழுவதையும் சுற்றித் திரிந்து கொண்டேயிருந்தானாம். உள்ளம் உருக்கும் இந்த நிகழ்ச்சி யினை அறிவிக்கின்ற – அந்த நெடுநல் வாடை என்னும் நூலில் உள்ள பாடல் பகுதியினை இங்கே கட்டாயம் தர வேண்டும். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு நிகழ்ந்த இந்நிகழ்ச்சியினை இன்றைய உலகம் சுட்டாயம் அறிந்து கொள்ள வேண்டும். அந்தப் பாடல் பகுதி வரு மாறு:- (நெடுநல் வாடை – அடி: 171-188)

“களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம் போந்து
வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்

தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கிற் பரூஉச்சுடர் அழல
வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்
புடைவீழ் அந்துகில் இடவயின் தழீஇ
வாள்தோள் கோத்த வன்கட் காளை
சுவன்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே''.

என்பது உள்ளத்தை நெகிழச் செய்யும் பாடல் பகுதி யாகும். இந்த நெடுஞ் செழியன் என்னும் பாண்டிய மன்னனை, போர்த்துறையாம் மறத்துறையை விட்டு அறத்துறையைப் பின்பற்றுமாறு செய்வித்த பெருமை, மருதனின நாகனார் என்னும் தமிழ்ப் புலவரைச் சாரும். இதனை இம்மன்னன்மீது இவர் பாடிய மதுரைக் காஞ்சி என்னும் நூலால் அறியலாம்.

இவ்வாறே, வட இந்தியப் பேரரசனாகிய அசோக மன்னன், கலிங்க நாட்டை வென்ற பிறகு, புண்பட்ட மறவர்கள் பட்ட பாடுகளையும் கலிங்க நாட்டு மக்கள் எய்திய பெருந்துயரையும் நேரில் கண்டு உள்ளம் நெகிழ்ந்து உருகினானாம்; புத்தத் துறவியரின் தூண்டுதலால் மற

நெறியை விட்டு அறநெறியைக் கடைப்பிடித்துப் புத்த மதத்தைத் தழுவினானாம். இது உலகறிந்த வரலாறு.

போர்க் களத்து உதவி:

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு, வட இந்தியா வில், பஞ்ச பாண்டவர் என்னும் உடன் பிறப்பு மன்னர் ஐவர்க்கும், இவர்களின் பங்காளிகளாகிய கௌரவர் என் னும் உடன்பிறப்பு மன்னர்கள் நூற்றுவர்க்கும் பல நாள் பெரும் போர் நிகழ்ந்தது. இந்தியாவிற்குப் பாரதம் என் பது பழைய பெயராகும். எனவே, இந்தப் போருக்குப் பாரதப் போர் என்னும் பெயர் வழங்கப்பட்டது. தென் பாரதமாகிய தென்னிந்தியாவில் தமிழ்நாட்டின் ஒரு பகுதி யான சேர நாட்டில் அப்போது ஆட்சி புரிந்த 'உதியன் சேரலாதன்' என்னும் தமிழ் வேந்தன், பாரதப் போரில் புண்பட்டும் உணவின்றியும் தவித்தவர்க்கு உணவளித்துக் காப்பதற்கு ஆவனபுரிந்தானாம். அதனால் இத்தமிழ் வேந்தன், 'சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்' எனப் பெயர் வழங்கப் பெற்றானாம். இந்த வரலாறு, புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே போர்க்களத்தில் பொது மன்னர் ஒருவரால் புரியப்பட்ட இந்தப் பேருதவி பற்றியும் இன்றைய உலகம் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே, இது பற்றிய இலக்கியப் பாடல்கள் இரண்டு வருமாறு:-

''அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம் பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது
கொடுத்தோய்.'',

இது, அந்தச் சேரமன்னன் மீது 'முரஞ்சியூர் முடிநாக ராயர்' என்னும் புலவர் பாடிய புறநானூற்று நூலின் (2-ஆம்) பாடல் பகுதியாகும்.

"ஓர்ஐவர் ஈர்ஐம் பதின்மருடன் உடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்"
(சிலம்பு-வஞ்சிக் காண்டம்-வாழ்த்துக் காதை-24)

என்பது இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகார நூற் பாடலாகும். இந்தப் பாடலில் உள்ள 'போற்றாது' என்னும் சொல்லை ஊன்றி நோக்க வேண்டும். கணக்குப் பார்க்காமல், எல்லாருக்கும் ஏராளமாக–தாராளமாகச் சோறு அளித்தான் என்ற செய்தியை இந்தப் 'போற்றாது' என்னும் சொல் அறிவிக்கிறது.

போர்க் களங் கண்டு இரங்கியுருகி ஆவன செய்ததும் போர்க்களத்தில் உணவளித்து உதவி செய்ததும் ஆகிய பழைய வரலாற்றுச் செய்திகளிலிருந்து, கி.பி. பத்தொன்ப தாம் நூற்றாண்டில் தொடங்கப் பெற்ற புதிய செய்தி யொன்றுக்கு வருவோம். அதுதான், செஞ்சிலுவைச் சங்க வரலாறாகும்.

செஞ்சிலுவைச் சங்கம்:

இத்தாலியில் 'சால்பெரினோ' (Solferino) என்னும் ஊருக்கு அண்மையில், மூன்றாம் நெப்போலிய மன்னனுக்கும், பிரான்சிஸ் ஜோசப் என்னும் ஆஸ்திரியா மன்னனுக்கும் 1859-ஜூன்–24 ஆம் நாள் கொடும் போர் நடந்தது. ஆயிரக் கணக்கில் இறந்தவர் போக, புண்பட்டு உயிரோடு போராடிக் கொண்டு 'தண்ணீர்-தண்ணீர்' எனக் கதறித்

துடித்தவர் பலர். அன்று மாலை தற்செயலாய் அவ் வழியே சென்றுகொண்டிருந்த சுவிட்சர்லாந்து நாட்டுச் செல்வர் ஒருவர் அந்தப் பொல்லாத காட்சியைக் கண்டு உள்ளம் துடித்தார்; ஊருக்குள் சென்று சிலரை அழைத்துக் கொண்டு வந்து, புண்பட்டுக் கிடந்தவர்கட்குத் தண்ணீர் தந்தும் புண்களில் மருந்திட்டுக் கட்டுபோட்டும் பல் வகை உதவி புரிந்தார். இதை வளர்த்துவது எதற்கு? இவரது முயற்சியால் உலகில் 'செஞ்சிலுவைச் சங்கம்' (Red cross society) என்னும் இயக்கம் எழுந்தது. இவரது பெயர் 'ஹென்ரி டுனான்ட்' (Henry Dunant) என்பதாகும்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் இந்தச் சங்கம் உண்டாக்கப்பட்டது. இந்தச் சங்கத்தினர், போர் நடை பெறும் இடங்கட்குச் சென்று, இன்னார்-இனியார் எனப் பாராமல் நடுவு நிலைமையுடன் இருதரப்பினர்க்கும் உதவி புரிவர்; இறந்தவர்களை எடுத்துப் போடுதல், புண்பட்டுக் கிடப்பவர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்தல் முதலிய பணிகளைப் புரிவர். இவர்கட்குத் தனி அடையாளமும் இவர்களின் கூடாரங்கட்கும் தனி அடையாளமும் உண்டு. போர் புரிபவர்கள், செஞ்சிலுவைச் சங்கக் கூடாரத்தை யும் சங்கத்தாரையும் தாக்கமாட்டார்கள். போரில்லாக் காலங்களிலும், இயற்கையின் கொடுமைகளால் மக்கள் அல்லல் உறும்போது இந்தச் சங்கத்தினர் வேண்டிய உதவிகள் புரிவர்.

சுவிட்சர்லாந்து நாட்டினரான ஹென்ரி டுனான்ட் என்பவர் இந்த இயக்கத்தைத் தொடங்கியதால், அந்த நாட்டுக் கொடியே இந்த இயக்கத்தின் கொடியாக ஆக் கப்பட்டது. ஆனால் அதில் ஒரு மாறுதல் செய்யப்பட்டது. அந்நாட்டுக் கொடி சிவப்புத் துணியில் வெள்ளைச் சிலுவை பொறிக்கப்பட்டிருக்கும். அதை அப்படியே

மாற்றி, வெள்ளைத் துணியில் சிவப்புச் சிலுவை பொருந்தப் பொறிக்கப்பட்டு இவ்வியக்கத்தின் கொடியாக்கப்பட்டது. ஆனால், எகிப்து, துருக்கி, சிரியா, ஈராக், ஜோர்டான், பாகிஸ்தான் முதலிய முசுலீம் நாடுகள் சிவப்புச் சிலுவைக்குப் பதிலாகச் சிவப்பு இளம் பிறையைக் (Red crescent) கொடியில் பொறித்துக் கொண்டன. ஈரான் நாடு, சிலுவைக்குப் பதிலாக, சிவப்புச் சிங்கமும் செஞ்ஞாயிறும் பொறித்துக் கொண்டது. இவ்வாறான செஞ்சிலுவை, செவ்விளம் பிறை, செஞ் சிங்கம் என்னும் மத அடிப்படையான வேறுபாட்டுக் குறிகள் கூடா. சிவந்த ஞாயிறு எல்லாருக்கும் பொதுவானது. எனவே, உலக நாடுகள் யாவும், இந்த ஒற்றுமை உதவி இயக்கத்திலும் வேறுபாடு காட்டாமல், செஞ்ஞாயிற்றை வெள்ளைத் துணியில் பொறித்து,' செஞ்கிலுவைச் சங்கம்' என்னும் பெயரை மாற்றி 'செஞ்ஞாயிற்றுச் சங்கம்' எனப் பெயர் வழங்குவது நல்லது. திங்களை (சந்திரனை) 'வெண்டிங்கள்' எனவும் ஞாயிற்றைச் 'செஞ்ஞாயிறு' எனவும் வழங்குதல் மரபு.

## விளக்கேந்திய வெள்ளை மைனா:

செஞ்சிலுவைச் சங்கத்தின் தந்தையாகிய ஹென்ரி டுனான்ட் அவர்கட்கு முன்பே, 'பிளாரன்சு நைட்டிங்கேல்' (Florence Nightingale) என்னும் ஆங்கில அம்மையார், போரில் புண்பட்ட வீரர்கட்கு உதவும் பணியில் ஈடுபட்டிருந்தார். மருத்துவத் துறையில் ஈடுபட்டிருந்த இவர், கிரைமியா (crimea) நாட்டுப் பகுதியில் நடந்த போரில் (1854-1856) புண்பட்டுத் துடித்துக் கொண்டிருந்த மறவர் கட்கெல்லாம் வேண்டிய உதவிகளைப் புரிந்தார். இரவிலும் கையில் விளக்கு ஏந்திக்கொண்டு மருத்துவத் தாதி

கள் பலருடன் புண்பட்ட மறவர்கள் படுத்துக் கிடந்த இடமெல்லாம் சுற்றித் திரிந்து ஆவன புரிந்தார். அதனால் இவரை 'The Lady With The Lamp' என்னும் பெயரால் குறிப்பிடுவதும் உண்டு. தமிழ் நாட்டில் தலையாலங் கானம் என்னும் இடத்தில் நடந்த போரினால் புண்பட்ட மறவர்கள் படுத்துக்கிடந்த இடமெல்லாம், இரவு முழுவதும் விளக்கின் உதவியுடன் சுற்றித் திரிந்து புண்பட்ட மறவர்கட்கு ஆவன புரிந்த நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் இங்கே நினைவுக்கு வருகிறான் அன்றோ?

### மனித மடையர்கள்:

அந்தக் காலத்திலும்-இந்தக் காலத்திலும் போர்க் களத்தில் செய்யப்பட்ட-செய்யப்படும் உதவிகளைப் பற்றி இங்கே அறிவித்திருப்பதின் நோக்கம், குறிப்பிட்ட ஒரு கருத்தைச் சுட்டிக்காட்டுவதற்கேயாம். அ.'. தாவது:-மாந்தர் சிலர் ஒரு புறம் போரிட்டுப் புண் உண்டாக்கிக் கொண்டிருப்பதும், வேறு சிலர் அப்புண்ணுக்கு மருந்திட்டுக் கட்டு போடுவதும் ஆகிய விந்தையான- இல்லையில்லை-அறியாமையான-இல்லையில்லை-பைத்தியக்காரத் தனமான செயலைச் சுட்டிக்காட்டுவதற்கேயாம். முதலில் ஒருவன் யாருக்கும் தெரியாமல் வீடுகளில் உள்ள கண்ணாடிக் கதவுகளை உடைத்துக் கொண்டு போவானாம்! பின்னால் ஒருவன், 'கண்ணாடிக் கதவு பழுது பார்ப்பது -கண்ணாடிக் கதவு பழுது பார்ப்பது' என்று கூவிக்கொண்டு வருவானாம்! இது போன்றல்லவா இருக்கிறது அது? ஆடு மாடு முதலிய விலங்கினங்கட்கு வாய் இருந்தால், மனிதர்களை நோக்கி, 'ஏ, மனித மடையர்களே! ஒருவர் புண் உண்டாக்குவதும் இன்னொருவர் புண்ணுக்கு மருந்திடுவதும் என்ன மடத்தனம்?' என்று கேட்டாலும் கேட்கலாம் அல்லவா?

சில ஆண்டுகட்கு முன்பு தென் வியட்நாமுக்கும் வட வியட்நாமுக்கும் போர் நடந்து கொண்டிருக்கையில், இடையே வந்த புத்தாண்டுக்காக மூன்று நாள் போருக்கு விடுமுறை விட்டிருப்பதாகச் செய்தித் தாளில் படித்ததும் வியப்பும் ஏளனச் சிரிப்பும் ஏற்பட்டன. மூன்று நாளைக்குப் போர் இல்லாமல் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்று எண்ணும் மக்களினம், மற்ற நாள்களிலும் போரின்றி அமைதியாய்-மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்று எண்ணாதது, வியப்புடன் வேதனையும் அளிக்கிறது. ஆடு மாடுகள் இவற்றையுணரும் பகுத்தறிவு பெற்றிருப்பின், மனித மடையர்களை எள்ளி நகையாடும்.

## இயற்கைப் பகைகள்:

மாந்தர் தமக்குள் பகைத்துக் கொள்வது பைத்தியமாகும். மாந்தர்க்குப் பொதுப் பகைகள் எவ்வளவோ உள்ளன. பிணி, வறுமை, பற்றாக் குறைகள், மூப்பு, சாவு, மூட நம்பிக்கைகள், நோய்தரும் உயிர் அணுக்கள், புயல், இடி-மின்னல், பேய் மழை, வெள்ளம், வறட்சி, நில நடுக்கம், எரிமலை, தீ முதலிய எண்ணிறந்த இயற்கைப் பகைகளை மக்களினம் எதிர்க்க வேண்டியுள்ளது. இவைகளேயன்றி, சீயம், புலி, கரடி, பாம்பு, முதலை, திமிங்கலம் முதலிய கொடிய உயிரிகளிடமிருந்தும் தம்மைக் காத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னும் எதிர் காலத்தில் வேறுலகத்தாரோடு மோத நேரிடினும் நேரலாம். தமக்குப் பொதுப் பகைகள் பல இருக்க, அவற்றினிடமிருந்து தம் இனத்தைக் காக்க வேண்டிய முயற்சியில் மட்டுமே ஈடுபட வேண்டிய இன்றியமையாமை இருக்க, மக்கள் தமக்குள் பொருது மடிவது மடமையினும் பெரிய மடமையாகும்.

## கருத்து வேற்றுமை:

மக்களுக்குள் கருத்து வேற்றுமையிருப்பது இயற்கையே· சுருங்கக் கூறின்,-என்றைக்கு உலகில் இரண்டாவது மாந் தர் தோன்றினாரோ, அன்றைக்கே கருத்து வேற்றுமையும் தோன்றிவிட்டது; உலகில் கடைசி இருவர் இருக்கும் வரையிலும் கருத்து வேற்றுமையும் இருக்கத்தான் செய் யும். ஆனால் கருத்து வேற்றுமையை அமைதியான முறை யில் தமக்குள் தீர்த்துக் கொள்ளாமல், அதைப் பகையாக மாற்றித் தமக்குள் போரிட்டுக் கொள்வது பொல்லாமை யாகும்.

## தூய்மை செய்தல்:

உயிர்கட்குப் 'போர் ஊக்கம்' (Pugnacity) என்பது இயற்கையாகவே உண்டு என்னும் செய்தி முன்னர்க் கூறப் பட்டுள்ளது. இது உண்மைதான். ஆனால், இந்தப்போர் ஊக்கத்தை, மக்கள் தமக்குள் போர்செய்து கொள்ளப் பயன்படுத்தாமல், திசை மாற்றித் தூய்மை செய்ய வேண் டும். அதாவது மேலே கூறப்பட்டுள்ள இயற்கைப் பொதுப் பகைகளை வெல்வதற்கு இந்தப் போர் ஊக்கத் தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்தக் கொடிய போர் ஊக்கத்தை இவ்வாறு திசை மாற்றித் தூய்மைப் படுத்துவதற்கு, "திசை மாற்றத் தூய்மை" (Sublimation) என்ற மாதிரியான பெயர் உளவியலாரால் வழங்கப்பட் டுள்ளது. இவ்வாறு இந்தப் போர் ஊக்கம் தூய்மை செய் யப்படுமானால், மக்களுக்குள் போர் நிகழ வாய்ப்பு இராது. இயற்கைப் பொதுப் பகைகளை வெல்லவே மக்களினத்துக்குக் காலம் சரியாயிருக்கும்.

முனை முகத்து நில்லேல்:

பல நூற்றாண்டுகட்கு முன்பே, ஔவையார் என்னும் தமிழ்ப் பெண் புலவர், தமது 'ஆத்தி சூடி' என்னும் நூலில் 'முனை முகத்து நில்லேல்' (92) எனப் பாடி வைத்துள்ளார். 'போர் முனைக்குப் போகாதே' என்பது இதன் பொதுக் கருத்தாகும். சிலர் இதற்கு வேறு மாதிரியான கருத்து கூறுகின்றனர். 'போர் நடக்கும் இடத்திற்குப் போகாமல் உனது உயிரைக் காப்பாற்றிக்கொள்' என்னும் கருத்தில் இதனை ஔவையார் பாடியிருப்பதாகப் பொருள் கொண்டு, கோழைத்தனத்துக்கு ஔவையார் வித்திட்டி ருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். அண்மைக் காலத்துக்கு முன் வாழ்ந்த சுப்பிரமணிய பாரதியார் என்னும் புரட்சிக் கவிஞர் ஔவையாரின் கருத்தை நன்கு புரிந்து கொள்ளா மல், ஔவையாருக்கு ஏட்டிக்குப் போட்டியாக, தாம் பாடிய "புதிய ஆத்தி சூடி" என்னும் நூலில், "முனை யிலே முகத்து நில்" (79) என்று பாடியுள்ளார். 'போர் முனை சென்று போரிடு' என்பது இதன் பொதுக் கருத்து. இது புரட்சி வெறியில் பாடப்பட்டதாகும்.

நாட்டில் நடந்த பல்வேறு போர்க் கொடுமைகளைக் கண்டு வருந்திய ஔவையார், உலகில் இனிப் போரே கூடாது எனப் பட்டறிவின் வாயிலாகத் தமது அறிவுரை யினை உலகுக்கு அளித்தார். மற்றும், ஔவையார் அதே 'ஆத்தி சூடி' என்னும் நூலில் இன்னோரிடத்தில், உலகில் போரே கூடாது என்னும் பொருளில் "போர்த் தொழில் புரியேல்" (87) என்று வெளிப்படையாகக் கூறியிருப்பது ஈண்டு கவனிக்கத்தக்கது. இதற்கும் ஏட்டிக்குப் போட்டி யாகப் பாரதியார் தமது புதிய ஆத்திசூடியில் "போர்த் தொழில் பழகு" (74) என்று பாடியுள்ளார். ஆனால் பாரதியாரின் பாடலுக்கும் ஒரு வகையான வழு அமைதி

கூறலாம். ஆங்கிலேயர்கள் இந்தியாவை அடிமைப்படுத்தி ஆண்டுகொண்டிருந்த காலத்தில் இந்திய மக்களுட் பலர், அவர்களை எதிர்த்து விடுதலைக்காகப் போராடிக் கொண் டிருந்தனர். அவ்விடுதலை வீரர்களுள் பாரதியாரும் ஒருவர். எனவே, இந்திய மக்கட்கு வீர உணர்வை ஊட்டுவதற்காக அவர் 'முனையிலே முகத்து நில்', 'போர்த் தொழில் பழகு' என்னும் புரட்சிக் கருத்தை வீசியிருக்கலாம். இது காலச் சூழ்நிலைக்கு ஏற்பப் பாடப்பட்டிருக்கலாம். எனவே, எல் லாக் காலத்துக்கும் இது பொருந்தாது. ஈண்டு, பாரதி தாசன் பாடியுள்ள

"புதியதோர் உலகம் செய்வோம்-கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்"

(பாரதிதாசன் கவிதைகள் - முதல் தொகுதி)

என்னும் பாடல் பகுதி ஒப்பு நோக்கத்தக்கது. போரிடும் உலகத்தை வேரோடும் அழிப்போம் என்று கூறியிருப்பதின் பொருள், 'போரே இல்லாத-அமைதியான புதிய உல கத்தை அமைப்போம்'-என்பதாகும்.

'பந்திக்கு முந்து, படைக்குப் பிந்து' என்னும் பழ மொழியொன்று தமிழ்நாட்டில் வழங்கப்படுகிறது. 'உண் ணும் பந்திக்குச் செல்வோரின் வரிசையில் முன்னால் இரு– போர்ப் படை மறவர் வரிசையில் பின்னால் இரு'– என்ப தாக இப்பழமொழிக்குப் பொருள் செய்து, இஃதும் வீர மற்ற கோழைத்தனத்துக்கு வித்திடுவதாகக் கூறுவதுண்டு. ஊருக்கு ஓர் அரசர் இருந்துகொண்டு ஆண்டு முழுதும் போர் செய்துகொண்டிருந்த அந்தக் காலத்தில், போர் எப்பொழுதும் கூடாது-யாரும் போருக்குப் போகக் கூடாது என்னும் பொருளில் இந்தப் பழமொழி தோன்றி

யிருக்கக் கூடும். 'பந்தி' என்னும் சொல்லுக்கு 'வரிசை' என்பது பொருளாகும். இது, போர்ப்படை வரிசையையும் குறிக்கும்-விருந்து உண்ணுவோர் வரிசையையும் குறிக்கும். எனவே இந்தப் பழமொழிக்கு இந்தக் காலத்தில் வேறு வகையான பொருளும் கூறலாம். அ்.்.தாவது:- போர்ப் படை வரிசையில் முந்தியிரு; ஆனால் போர் கூடாது- போர்ப் படை தொடுப்பதைப் பின்னுக்குத் தள்ளி வை என்பதே அந்தப் புதுப் பொருள். இதற்கு இந்தக் காலத்தில் வேறொரு பொருளும் செய்து கொள்ள வேண்டும்- அது 'பந்தியில் உணவு வழங்கும் அறச் செயலுக்கு முந்து' படையெடுத்துப் பலரைக் கொலை செய்யும் மறச் செயலுக்குப் பிந்து' என்பதாகும். எப்படியோ பழைய 'வீர யுகம்' மாறி, இப்போது 'அமைதி யுகம்' ஏற்பட வேண்டும்.

## புதுப் படைப் பெருக்கம்:

அந்தக் காலத்தில் காலாள், குதிரை, யானை, தேர்ப் படைகள் இருந்தன. வில்-அம்பு, வாள், ஈட்டி, வேல் முதலிய படைக் கலங்கள் பயன்படுத்தப்பட்டன. இயந்திரப் படைக் கருவிகளும் மதில் அரண்களின் மீது பொருத்தி வைக்கப்பட்டிருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. எதிரிகள் எளிதில் வந்து தாக்காதபடி, மலையரண், காட்டரண், மணல் அரண், நீர் அரண் (அகழி-ஆறு), மதில் அரண் முதலிய தடைகள் இருந்தன. உலகப் பெயர் பெற்ற மிகவும் நீளமும் அகலமும் கொண்ட சீன நாட்டின் மதில் அரண் ஈண்டு எண்ணத் தக்கது. அன்று நிலப்படை நீர்ப்படையைத் தவிர வானப் படை இல்லை.

ஆனால், இந்தக் காலப் போர்முறையில் மேற் கூறிய படைக் கலங்களோ அரண்களோ ஒரு சிறிதும் பயனளிக்க

முடியாது. வானவூர்தியில் பறந்து வருவோரை எந்தக் காட்டரணும் மதிலரணும் தடுக்க முடியாது. இக்காலப் படைக் கருவிகளைப் பற்றி விவரிக்க வேண்டியதில்லை. சில வல்லரசுகள், அணுக்குண்டு, நீரகக் குண்டு முதலிய வற்றை விறகு அடுக்குவது போல் அடுக்கி வைத்துக் கொண்டுள்ளன. ராக்கெட் படைக் கருவிகள், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் படைக் கருவிகள், முதலியன இன்று உள. இக்காலத்தில் ஓரிடத்திலிருந்து இன்னோரி டத்துக்குப் படையெடுத்துச் செல்ல வேண்டும் என்பது தேவையில்லை. ஓரிடத்தில் இருந்தபடியே, பல்லாயிரம் கல் தொலைவுக்கு அப்பாலுள்ள மற்றோரிடத்தைத் தாக்க முடியும். அந்த அளவுக்கு மடத்தன மனித மூளை அழிவுக் கருவிகளைப் புதிது-புதிதாய்ப் படைத்துள்ளது.

உலகில் அமைதியாகவும், எளிமையாகவும் இன்பமா கவும் மக்கள் வாழ்வு நடைபெற வேண்டுமெனில், இனிப் படைக்கலங்களைப் படைக்கலாகாது;இருப்பனவற்றையும், ஆழமாகப் பள்ளம் தோண்டித் தரைக்குள்ளே புதைத்து விடவேண்டும். உள் நாட்டுக் கலகங்களை அடக்குவதற்குப் போதுமான படை மறவர்களும் கருவிகளும் இருந்தால் போதும். நாடுகளுக்குள் இனியும் போர் கூடாது.

### போர் தடுப்பு வழிமுறைகள்:

நாடுகள் சமமான ஆற்றல் உடையனவாயிருப்பின் போர் வராது. எல்லா நாடுகட்கும் இது இயலாத முறை யாகும். சிறிய இலங்கையும் (ஸ்ரீலங்காவும்) பெரிய இந்தி யாவும் சமமாக இருக்க முடியுமா? ஒன்றிய அமெரிக்க நாடும் (U.S.A.) ரழ்சியாவும் ஒத்த ஆற்றல் உடையவை; எனவே, இவற்றிற் கிடையே போர் மூளுவது அரிது. ஆனால், இவற்றினும் சிறிய நாடுகளின் நிலை என்ன?

நாடுகளுக்குள் மண்டலச் சார்பு கூடாது. ஒரு சில நாடுகள் கூடி ஒரு கூட்டு மண்டலமாகவும், வேறு சில நாடுகள் கூடி வேறொரு கூட்டு மண்டலமாகவும் அமைவது கூடாது. இதனால் போர் மூள வழி ஏற்படலாம். ஒரு சிறிய நாடு தனக்குப் போதிய வலிமை இல்லாமையால், பக்கத்திலுள்ள பெரிய நாட்டுடன் போர் தொடுக்காமல் நட்பாயிருக்கிறது. பெரிய நாடும், பக்கத்திலுள்ள சிறிய நாட்டுடன் போர் தொடுப்பது வீரமாகாது-கோழைமையாகும் எனக்கருதிப் பெருந்தன்மையோடு அந்தச் சிறிய நாட்டை அணைத்துக் கொண்டு உதவியும் செய்கிறது. இவ்வாறின்றி, ஒரு சிறிய நாடு வேறு பல நாடுகளுடன் கூடி ஒரு கூட்டு மண்டலத்தில் சேருமாயின், அந்த மண்டலத்தின் தெம்பைக் கொண்டு, பக்கத்தில் உள்ள பெரிய நாட்டுடன் ஒத்துப் போகாமல்-நட்பு வளர்க்காமல் முரணிக் கொண்டிருக்கும்; இதனால், பெரிய நாடும் அச்சிறிய நாட்டின் மீது ஒரு கண் வைத்துக் கொண்டேயிருக்கும். எனவே, மண்டலச் சார்பின்மை, போர் தடுப்பு வழிமுறைகளுள் ஒன்றாகும்.

உலக நாடுகள் படைக் கருவிகளைப் படைப்பதையும், படைக் கல்லூரிகள் நிறுவிப் படைப்பயிற்சியளிப்பதையும், நாடுபிடிக்கும் பேரவாவினையும் விட்டொழிக்க வேண்டும். நீ பெரியவனா-நான் சிறியவனா-என்ற உயர்வுச் சிக்கல்-தாழ்வுச் சிக்கல்கட்கு ஆட்பட்டுக் கெடுபிடிப் போர்ப் (Cold war) பூச்சாண்டி காட்டிக் கொண்டிருப்பதை அறவே அகற்ற வேண்டும்.

உலகத்தின் பழைய வரலாறுகளைப் புரட்டிப் பார்க்க வேண்டும். முடி மன்னர் எல்லாரும் பிடி சாம்பலானதை எண்ணிப் பார்க்க வேண்டும். மா அலெக்சாந்தர், நெப்போலியன், ஹிட்லர், அசோகன் முதலியோர் உலகத்தைப்

பிடித்துக் கொண்டு இப்போதும் ஆண்டுகொண்டிருக்கி றார்களா எனச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உலக நிலையாமையை உணர்ந்து, பரந்த மனப்பான்மையுடன் ஒன்றி வாழ வேண்டும். போரின் கொடிய விளைவுகட்கு அஞ்சி, மற உணர்வை விட்டு அற உணர்வைக் கடைப் பிடிக்க வேண்டும்- இன்ன பிற வழி முறைகளால் உலகில் போர் நிகழாதவாறு தடுக்க முடியும்.

விளையாட்டுப்பந்தயப் போட்டிகளையும் யான் வெறுக் கிறேன். இஃதும் போர் ஊக்கத்தைத் தூண்டக் கூடும். ஒரு குழுவில் பலர் கூடி விளையாடுவதால் 'நான்' என்ற குறுகிய மனப்பான்மை நீங்கி 'நாம்' என்ற பரந்த மனப் பான்மை வளரும் என்பதாக ஒரு கருத்துச் சொல்லப்படு கிறது. ஓரளவு உண்மை தான் இது. ஆனால் இந்தவிளை யாட்டுஒரு நாட்டு மக்களுக்குள் நடைபெறுவதோடு நின்று விட வேண்டும். வெற்றிபெற்றவருக்குப் பரிசு கொடுக்கும் முறையும் அகற்றப்பட வேண்டும். இந்தப் பரிசு முறையால் ஒருவருக்கு ஒருவரிடையே காழ்ப்பு உணர்ச்சி ஏற்படலாம். இவ்வாறு ஒரு நாட்டினர்க் குள்ளேயே காழ்ப்பு உணர்ச்சி ஏற்படக் கூடும் எனில், பந்தயப் போட்டிப் பரிசுக்காகப் பல நாட்டினர்விளையாடும்போது மிக்க காழ்ப்பு உணர்வு, ஒரு நாட்டினருக்கும் இன்னொரு நாட்டினருக்கும் இடை யே தோன்றும்அல்லவா? இது நடைமுறையில் இருந்து வரு கிறது. விளையாடிக் கொண்டிருக்கும்இரு நாட்டு வீரர்கள் ஒருபுறம் இருக்க, அந்த இரு நாட்டு மக்களும், போட்டி முடிவைத் தெரிந்து கொள்வதில் காட்டும் பரபரப்பும், முடிவு தெரிந்த பின், தோற்ற நாட்டு மக்கள் காட்டும் தாழ்வுஉணர்வும் சொல்லுந் தரத்தன வல்ல. உலக நாட்டு மக்கள் இவ்வுண்மையை அனுபவத்தில் கண்டறிந்திருப்பர்.

இங்கிலாந்து நாட்டில் தேம்ஸ் ஆற்றங்கரையில் உள்ள 'ஈட்டன்' என்னும் நகரில் புகழ் வாய்ந்த ஒரு கல்லூரி உள்ளது. இங்கிலாந்து நாட்டின் பெரிய அரசியல் வல்லுநர்களும் சிறந்த போர்ப் படைத் தலைவர்களும் இந்தக் கல்லூரியில் படித்ததாகச் சொல்வர். விளையாட்டுக்கு இக் கல்லூரியில் சிறப்பிடம் உண்டு. விளையாட்டு உடலுக்கு உரமும் உள்ளத்துக்கு ஊக்கமும் அளிக்கும் என்பது இக்கல்லூரியின் நம்பிக்கை. ஆங்கிலேயப் படைத் தலைவர்கள் பலர், உலக நாடுகள் பலவற்றில் பெற்ற பெரு வெற்றிக்கு, ஈட்டன் கல்லூரி விளையாட்டுத் திடலில் பெற்ற விளையாட்டுப் பயிற்சியே வித்தாக இருந்தது எனக் கூறுவது வழக்கம். இவ்வாறு 'விளையாட்டு ஊக்கம்' போர் ஊக்கமாக மாறி விடக் கூடாது - அதற்கு இனியும் இடம் தரலாகாது. எனவேதான், விளையாட்டுப் பந்தயப் பரிசுப் போட்டி முறைகளை வெறுக்க வேண்டியுள்ளது

இரு நாடுகட்கிடையே போர் ஏற்படின், செல்வாக்கு உடைய வேறு நாடுகள் சந்து செய்வித்துப் போரை நிறுத்தலாம். ஆனால், 'பாலுக்கும் காவல் – பூனைக்கும் தோழன்' என்ற மாதிரியில் இல்லாமல், உண்மையான அக்கறையுடனும் நடுவு நிலைமையுடனும் சந்து (மத்தியஸ்தம்) செய்யும் பணி நடைபெறவேண்டும். சில வல்லரசுகளின் தூண்டுதல்களால் பல இடங்களில் கலகங்கள் நிகழ்வதை உலகம் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறது. இம்மாதிரியான 'சிண்டு முடி' வேலையைச் செல்வாக்குள்ள வல்லரசுகள் நிறுத்திக் கொண்டு, உண்மையான இரக்க உணர்வுடன் உலகில் அமைதி நிலவ ஒத்துழைக்க வேண்டும். ஒன்றிய நாடுகளின் உலக மன்றமும் (U.N.O), இரு நாடுகட்கிடையே போர் நிகழின் விரைந்து முயன்று ஆவன செய்யின் போரை நிறுத்தி விடலாம். இந்த மன்றத்

தால் இம்முயற்சி செய்யப்படுகிற தெனினும், உடனே விரைந்து செயல்பட்டுத் தொடக்கத்திலேயே போரை நிறுத்துவதாகத் தெரியவில்லை. - நிறுத்தவும் முடிய வில்லை. இப்போது (1980-1986) நடைபெற்றுக் கொண் டிருக்கும் ஈரான் - ஈராக் போரை நிறுத்த முடியாமையே இதற்குத் தக்க எடுத்துக் காட்டா கும். பன்னூறாயிரவர் இறந்த பின்னர் - பல்வகைப் பேரி ழப்புகள் ஏற்பட்ட பின்னர்ப் போரை நிறுத்த முயல்வது கேலிக் கூத்தாகும். குதிரை திருட்டுப் போன பின்பு கொட்டிலைப் பூட்டுவதால் பயன் என்ன?

'ஒரே உலக அரசு' அமையின் உலகில் போரே நடை பெறாது. எங்கேனும் நடப்பினும், அது உள்நாட்டுக் கலகமாகக் கருதப்பட்டு உடனே அடக்கப்படும். ஆனால் இந்த 'ஒரே உலக அரசு' அமைவது இயலக் கூடியதா என்பது பற்றிப் பின்னர்த் தனித்தலைப்பின் கீழ் ஆய்ந்து காண்போம்.

வரலாற்றுப் புகழிடம்:

சிலர் சில இடங்களைக் குறிப்பிட்டு, 'இவை வரலாற் றுப் புகழ் வாய்ந்த இடங்கள்' எனக் கூறுவது உண்டு. அந்த இடங்களின் வரலாற்றைத் துருவிப் பார்ப்போமா யின், இருவேறு நாட்டினர் போரிட்டுக் கொண்டு மடிந்த இடங்களாக அவை இருக்கும். இவ்வாறு அழிவு வேலை நடந்த இடம் வரலாற்றுப் புகழ் வாய்ந்த இடமாகக் கருதப்பட முடியாது. ஆக்க வேலை நடைபெற்ற இடங் களே வரலாற்றுப் புகழ் மிகுந்த இடங்களாக மதிக்கப் பெறும். எனவே, உலகில் வீர யுகம் மாறி அமைதி யுகம் ஏற்பட்டுப் புதிய வரலாறு படைக்கப்பட வேண்டும்.

உலக ஒற்றுமை நிறுவனங்கள்:

நெப்போலியனது வீழ்ச்சிக்குப் பின்னர், போரின் கொடிய விளைவுகளை அனுபவித்து உணர்ந்த உலக அறிஞர்களிடையே, இனி உலகில் போரே ஏற்படாதபடி தடுக்கக்கூடிய உலக ஒற்றுமைக் கழகம் நிறுவவேண்டும் என்ற உணர்வு அரும்பிற்று.

முதல் உலகப் பெரும்போர் முடிந்ததும் பாரிசில் 'உலக அமைதி (சமாதான) மாநாடு' கூடியது. அதன் பயனாய் 'உலக ஒற்றுமைக் கழகம்' உருவாகியது. உலகில் போர் நிகழாது தடுப்பது இதன் இன்றியமையாக் குறிக்கோளாகும். ஆனால் நடைமுறையில் இது இயலவில்லை. இரண்டாவது உலகப் பெரும் போர் தோன்றியதே, இந்த உலக ஒற்றுமைக் கழகத்தின் தோல்விக்குச் சான்றாகும்'

இரண்டாவது உலகப் பெரும் போர் முடிவுற்றதும் இப்போதுள்ள 'ஒன்றிய நாடுகளின் உலக மன்றம்' (U.N.O) 1945-அக்டோபர்-24 ஆம் நாள் முழு வடிவம் பெற்றது. இப்போது இது பெரிய அளவில் இயங்கிக் கொண்டுள்ளது. உலகின் எந்த மூலையிலும் போர் என்ற பேச்சே எழக்கூடாது - உலக ஒற்றுமைக்கும் அமைதிக்கும் ஊறு நேரிடின் உலகத்தார் அனைவரும் ஒன்றுபட்டுக் காக்க வேண்டும் என்பது இதன் தலையாய குறிக்கோள். ஆனால் நிகழ்வது என்ன? இந்த அமைப்பு தோன்றிய பின்னரும் உலகில் எத்தனையோ போர்கள் நடந்து விட்டன. இந்த அமைப்பால் போர்களை உடனே நிறுத்த முடியவில்லை. காலம் கடந்தாயினும் சில போர்களை நிறுத்தியிருப்பது பாராட்டத் தக்கதே. இது போதாது. உடனடியாகப் பயன் காண வேண்டும். 1980 - ஆம் ஆண்டில் தொடங்கி 1986 ஆம் ஆண்டிலும் நடைபெற்றுக் கொண்

டிருக்கும் ஈரான் - ஈராக் போரை இந்த அமைப்பால் இன்னும் நிறுத்த முடியாமைக்கு உரிய காரணத்தை உலக அறிஞர்கள் ஆய்ந்து உணர்ந்து, இனி இத்தகைய நிலை ஏற்படாதவாறு செயல் புரிய வேண்டும். இல்லையேல், போர்கள் நிகழ்ந்து கொண்டே யிருக்கும்.

அரசியல் கட்சிப் போர்:

'வரலாறு தன்னைத் திருப்பிக் கொண்டே யிருக்கும்' (History repeats itself) என்று சொல்வது உண்டு. இதற்கேற்பப் போர்கள் எந்தக் காலத்திலும் எந்த வடிவத்திலாயினும் இருந்து கொண்டே யிருக்கும் போலும்! இப்போதுள்ள ஏதேனும் ஒரு பெரிய நாட்டை எடுத்துக் கொண்டு ஆராயின் இது விளங்கும். (எந்த நாட்டையும் குறிப்பிட வேண்டா.) இந்தப் பெரிய நாட்டில் இப்போது ஒரே அரசே இருக்கிறது. பண்டைக் காலத்திலோ இந்தப் பெரிய நாட்டில் நூற்றுக் கணக்கான மன்னர்கள் இருந்து கொண்டு எப்போதும் ஒருவர்க் கொருவர் போரிட்டுக் கொண்டே யிருந்தனர். இதனால் மக்களுக்கு நிலையான அமைதி இருந்ததே கிடையாது. எப்போது எவன் தாக்குவானோ - எப்போது எவன் வீட்டையும் ஊரையும் எரித்துத் தீ வட்டிக் கொள்ளை நடத்துவானோ - எப்போது எவன் யாரைக் கற்பழிப்பானோ – எப்போது எவன் யாரைக் கடத்திக் கொண்டு போவானோ – எப்போது யார் யார்க்குக் கை கால்கள போகுமோ-எப்போது யார் யார் மடிவார்களோ - என்றெல்லாம் மக்கள் அலமந்து அமைதியின்றி அச்சமும் திகிலும் கொண்டிருந்தனர். இப்போது பெரிய நாடுகளில் பல மன்னர்களின் ஆட்சி மறைந்து ஒரு மன்னரின் முடியாட்சியோ அல்லது

ஒரு கட்சியின் குடியாட்சியோ நடைபெறுகிறது .இதனால், பண்டு பல மன்னர்களின் ஆட்சி யிருந்த போது மக்கள் கொண்டிருந்த அளவுக்கு அச்சமும் திகிலும் இழப்புக்களும் இப்போது இல்லை.

இப்போது, பொதுவுடைமை (கம்யூனிஸ்ட்) நாடுகளில் ஒரே கட்சி உள்ளது - ஒரே கட்சி ஆட்சி நடைபெறுகிறது. இங்கிலாந்து, அமெரிக்கா (U.S.A.) போன்ற நாடுகளில் இரண்டு பெரிய கட்சிகளே மாறி மாறித் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி நடத்துகின்றன. இந்தியா போன்ற நாடுகளில் ஒரு கட்சி ஆட்சி யிருப்பினும், ஈசல்கள் போல எண்ணற்ற கட்சிகள் உள்ளன. ஒரு நாட்டில் எண்ணிலாக் கட்சிகள் இருப்பதால், கட்சிக்குக் கட்சி எப்போதும் பூசலும் போரும் நடைபெறுவதைக் காணலாம். குத்து - வெட்டு கொலைகள் போன்ற கொடுமைகள் நிகழ்வது, எப்போதும் எளிய - இயற்கையாகிவிட்டது. கட்சித் தலைவர்களின் தூண்டுதலால், கட்சித் தொண்டர்கள் எனப்படும் குண்டர்கள் விளைவிக்கும் கொடுமைகட்கு அளவேயில்லை. இதனால், பல மன்னர்கள் இருந்த காலத்தில் மக்கள் அமைதியிழந்து அலமந்தது போலவே, இப்போதும் பொது மக்கள் பல சமயங்களில் அல்லலுற நேர்கிறது.

பொதுமக்களேயன்றி - கட்சித் தொண்டர்களேயன்றி பெரும்பான்மை பெற்றுள்ள கட்சியின் பெயரால் நாடாளும் ஆட்சித் தலைவரும் அமைதியாய்த் தம் பணியை ஆற்றுவதும் இப்போது அரிதாயிருக்கிறது. 'எப்போது நம் ஆட்சி கவிழுமோ - எப்போது எந்தக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளுமோ?' என ஆட்சித் தலைவர் அச்சமும் ஐயமும் கொண்டவராய், ஆட்சியைக் கவனிப்பதை விட, தம்மையும் தம் கட்சியையும் வலுப்படுத்திக் கொள்

வதிலேயே காலத்தையும் கவனத்தையும் முழுமையாய்ச் செலவிட வேண்டியிருக்கிறது. இதனால், அரசின் ஆக்க வேலைகள் தடைப்படுகின்றன - அல்லது - ஆமைபோல் மெல்ல நகர்கின்றன. இதனால், மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்க வேண்டிய நேரத்தில் கிடைப்பதில்லை. எனவே, பல மன்னர்கள் இருந்த அந்தக் காலத்துக்கும் பல கட்சிகள் உள்ள இந்தக் காலத்துக்கும் வேற்றுமை என்ன? 'வரலாறு தன்னைத் திருப்பிக் காட்டும்' (History repeats itself) என்னும் அனுபவ மொழி இப்போது நன்கு விளங்கலாம். அன்று அரசர்கட்கிடையே போர் நடந்தது போல, இன்று அரசியல் கட்சிகட்கிடையே போரும் கலகமும் குழப்பமும் நடந்துகொண்டிருக்கின்றன- அவ்வளவுதான் வேற்றுமை.

உலகம் முழுவதும் ஒரே ஆட்சி முறையிருக்க வேண்டும் என்னும் கொள்கை துளிர்விட்டுக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், ஒரு நாட்டில் ஒரே கட்சி ஆட்சி முறையிருப்பது நன்றே. இவ்வாறிருந்தால், அந்நாட்டுத் தலைவர், தனிப்பெருந்தலைவராய் - சர்வாதிகாரியாய் - தட்டிக் கேட்பாரின்றிக் கொடுமைகள் இழைக்கக் கூடும் என்று பலர் அஞ்சலாம். ஒருவர் அவ்வாறு நடந்து கொண்டால், காலம் பதில் சொல்லும் - ஒரு நாளைக்குக் காலம் அவரைக் காலை வாரிவிட்டு வேறு தலைவரைக் கொண்டு வந்து நாட்டுக்குத் தரும். எனவே, இது குறித்து எவரும் அஞ்ச வேண்டா! "ஒவ்வொரு நாடும் அவ்வக் காலத்திற் கேற்பப் பொருந்துமாறு தனக்கு உரிய தக்க தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்" ("A nation gets the leaders it deserves.") என்னும் அனுபவமொழி இங்கே எண்ணத் தக்கது.

ஒரு நாட்டில் இரண்டு கட்சிகள் இருப்பதிலும் ஒரு நன்மை உண்டு. இரண்டனுள் ஒன்று ஆளும் கட்சியாகவும் மற்றொன்று எதிர்க்கட்சியாகவும் மாறி மாறியிருக்கும். ஆளும் கட்சிக்கு ஓர் எதிர்க்கட்சி யிருப்பது நன்மையே யன்றித் தீமையில்லை. ஆளும் கட்சி, தான் தோன்றித் தனமாகவோ - தன்னை யறியாமலோ - தற்செயலாகவோ தவறு செய்யின், எதிர்க் கட்சிசுட்டிக்காட்டிக்கண்டிக்கும். இதனால், ஆளும்கட்சி தவறைத் திருத்திக்கொண்டு நல் லாட்சி புரிய வாய்ப்பு உண்டாகும். இடித்துக் கண்டிப்பவர் இல்லாதஅரசன், கெடுக்கும் பகைவர் இல்லாமலேயே - தானே கெட்டுவிடுவான் எனத் திருவள்ளுவர் திருக்குறளில் கூறியுள்ளார்.

"இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்". (448)

என்பது அவரது பாடல். எனவே எதிர்க்கட்சி யிருப்பது நல்லதே. இதற்காக, எதிர்க் கட்சியினர், ஏட்டிக்குப் போட்டியாக, ஆளும் கட்சியினர் செய்யும் நற்செயல்கட் குங்கூட குற்றம் கற்பித்துக் கொண்டிருப்பது குற்றமாகும். இது சில நாடுகளில் சில சமயங்களில் நடக்கிறது. இதனால் போரும் பூசலும் ஏற்படுமேயன்றி, நாட்டில் அமைதியான நல்லாட்சி நடைபெறாது.எனவே, படிப்படியாகக் கட்சி களின் எண்ணிக்கை குறைவது நல்லது.

### கட்சிப் பூசலுக்குக் காரணம்:

"கயவர்களின் கடைசி புகலிடம் அரசியல்" (Politics is the last resort of Scoundrels) என, ஆங்கில மேதை பெர்னாட் ஷா கூறியிருப்பதாகச் சொல்வதுண்டு. கயவர் சிலர்க்கு அரசியல் முதல் புகலிடமாகவே அமைவதும்

உண்டு. இதனால், அரசியலில் உள்ள அனைவருமே கய வர்கள் என்பது பொருளன்று; அவ்வாறு கூறுவது பொறுப் பற்ற அறியாமைப் பேச்சாகும். சகட்டு மேனியில், பெர் னாட்ஷா போன்றவர்களின் ஏளனவுரையை வாங்கிக் கட் டிக்கொள்ள வேண்டி வரும் என அஞ்சி எவரும் அரசிய லுக்கு வராதிருப்பின் அரசாட்சி நடப்பது எவ்வாறு? ஒரு சிலராயினும் துணிந்து ஈடுபட்டால்தானே அரசு நடை பெறும்?

நல்ல பொருள்களோடு சில கெட்ட பொருள்களையும் கலப்படம் செய்வதால் நல்ல பொருள்களும் கெட்டு விடு கின்றன. அவ்வாறே அரசியல் கட்சியிலும் கலப்படம் உண்டு. கயவர்கள் சிலர், கட்சிக்குள் புகுந்து கொண்டும் கட்சியைக் கைப்பற்றிக் கொண்டும் கயமைகள் செய்வ தால், கட்சிக்குள் உட்பூசலும், மற்ற கட்சிகளோடு போரும் பூசலும் ஏற்படுகின்றன. இந்தக் கலப்படக் கய வர்களைக் களைந்து எறிந்துவிடின், நாடுகளில் கட்சி அரசாட்சி நன்முறையில் நடைபெறும். அரசியல் கட் சிக்காரர்கள், தம் கட்சியினருடனும் சரி – எதிர்க்கட்சியின ருடனும் சரி – பெருந்தன்மையுடனும் பரந்த மனப்பான் மையுடனும் அமைதியான முறையில் செயல்படின், கட்சி யாட்சி முறையில் போருக்கும் பூசலுக்கும் இடமே யிராது சொல்வது எளிது - செயல்பட வேண்டுமே!

எப்படியோ, உலகம் முழுவதும் போரின் சிறிய சுவடும் இல்லாதபடி, வீரயுகம் மாறி அமைதியுகம் ஏற்பட வேண் டும். மக்களினம், வாழ்க்கையை எளிமையாகவும் இன்ப மாகவும் கழிப்பதற்கு, போர் இல்லாத உலகத்தை உரு வாக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

“புதியதோர் உலகம் செய்வோம் –கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்.

—பாரதிதாசன்

# 7. ஒழுங்கு முறை உள்ள உலகம்

## 1. புறப் பொருள் துறைகள்

### மனிதன் அயோக்கியன்

மக்களினம் உய்ய ஊழல் இல்லாத-ஒழுங்கு முறை உள்ள உலகத்தை அமைக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். உலகில் உள்ள எல்லாவகை உயிர் இனங்களும் தம்நலம் பாராட்டுபவையே_ உயர்திணை எனப்படும் மனிதனும் இதற்கு விதி விலக்கு இல்லை என்பது மட்டு மன்று-மற்ற உயிரிகளினும் மிகுந்த அளவில் தன்னலம் பராட்டுபவன் மனிதன். சுருங்கக் கூறின் 'மனிதன் அயோக்கியன்' என்று கூறுவது பொருத்த முடைத்தாகும். எங்கோ ஒரு சிலர் இதற்கு விதி விலக்கா யிருக்கலாம். அது பேச்சன்று. பெரும்பாலான மனிதர்கள் அயோக்கியர்களே! இதைப் படிக்கும் பலர் என்மேல் சினம் கொள்ளலாம். அறுபத்தைந்தாம் அகவை நடந்து கொண் டிருக்கிறயான், பல துறை மக்களையும் கூர்ந்து நோக்கி முடிவெடுத்தபட்டறிவு கொண்டே இவ்வாறு எழுதுகிறேன்.

மக்கள் ஈடுபட்டுள்ள துறைகளுள் எந்தத் துறையில் ஊழல் இல்லை? ஒவ்வொரு துறையிலும் விரல் விட்டு எண்ணும் அளவில் ஒரு சிலரே ஒழுங்குள்ளவரா யிருக்க லாம்; மற்றவர்கள் ஒழுங்கற்றவர்களே. அரசியலார் அனைவரும்-ஆசிரியர்கள் அனைவரும்-அரசியல் அலுவ லாளர் அனைவரும்-மதத்தலைவர்கள் அனைவரும்-வணிகர் அனைவரும்-உழவர் அனைவரும்- தொழிலாளி

கள் அனைவரும்-முதலாளிகள் அனைவரும்-செல்வர்கள் அனைவரும்-அறிஞர் அனைவரும்-கற்றவர் அனைவரும்-கல்லாதவர் அனைவரும்-கடவுள் அன்பர்கள் (பக்தர்கள்) அனைவரும்-எழுத்தாளர்கள் அனைவரும்-சொற்பொழி வாளர்கள் அனைவரும்-என் மக்கள் அனைவரும் ஒழுங் கும் நேர்மையும் உடையவர்களா? இல்லையே! ஒவ் வொரு துறையிலும் ஊழல்கள் மலிந்துள்ளன.

கையூட்டு (இலஞ்சம்) பெறுதல், ஏமாற்றிப் பிழைத் தல், திருடுதல், கொலை-கொள்ளை புரிதல், கலப்படம்-கள்ள வாணிகம்-கள்ளக்கணக்கு-கறுப்புப் பணம்-வரி ஏய்ப்பு-பதுக்கல்-விலையேற்றம்-மட்டமான பொருள் களை உண்டாக்கம் செய்தல்- இன்ன பிறவற்றில் ஈடுபடு தல், கலகம் செய்தல், சரியான கூலி தராமை, ஒழுங்காக உழைக்காமை, பிறர் பெண்ணை விரும்புதல், கற்பழிப்பு, பொய் புரட்டு பேசுதல், மந்திர-மாயம் என்னும் பெய ரால் ஏய்த்தல், பொய்க்கோலம் புனைந்து வஞ்சித்தல்-முதலிய ஊழல்கள் உலகில் மலிந்துள்ளமை உண்மை தானே!

ஊழலை ஒழிக்கும் வழி:

ஊழல்களைப் போக்குவது எப்படி? இளம் பருவத்தி லிருந்தே, தீயன செய்தால், சாமி கண்ணைக் குத்தும் என்று அச்சுறுத்தி வந்தும் பயனில்லை-தீயன தொடர்ந்து கொண்டுதான் உள்ளன. கடவுள், மதம், சமய அறிவுரை, நீதி நூல்கள்-இன்ன பிற இருந்தும் தீயன நீங்கியதாகத் தெரியவில்லை. கடவுளுக்கு அஞ்சாவிடினும், சமூகம் பழிக்குமே-சமூகத்தின் ஒத்துழைப்பு கிடைக்காதே என அஞ்சியாவது தீயன செய்தலை மக்கள் நீக்கியதாகவோ நிறுத்தியதாகவோ தெரியவில்லை. கடவுள் இருக்கட்டும்-

மக்கள்சமூகம் இருக்கட்டும்-இவற்றிற்கு அஞ்சா விடினும்-மனச்சான்று என ஒன்று உள்ளதே-அதற்காயினும் அஞ்ச வேண்டும் அல்லவா? அதற்கு அஞ்சியும் தீயனவற்றை நீக்கியதாகத் தெரியவில்லை. மன மறிய வஞ்சனை செய்யாதே-வஞ்சித்தால் உன் மனமே உன்னைச் சுடும் என்னும் கருத்தில், திருவள்ளுவர், திருக்குறளில்

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்" (293)

என்று பாடியிருப்பதைப் பெரும் பாலார் பொருட் படுத்தியதாகத் தெரியவில்லை. மனச்சான்றை விற்று-மன மறியத் தீயன செய்து கொண்டேதான் இருக்கிறார் கள். இவர்களின் மனம் இவர்களைச் சுட்டதாகத் தெரிய வில்லை.

கடவுள், சமூகம், மனச்சான்று ஆகியவற்றுக்கும் அஞ் சித் திருந்தாத மக்களைத் திருந்த வைப்பதற்கு உரிய ஒரே வழி, அரசின் கண்டிப்பான-கட்டாயமான- ஆணை யின் (சட்டத்தின்) வாயிலாகத் திருத்துவது தான்! தீய வர்களை அரசு ஆணையின் மூலம் ஒறுப்பதே ஒரே வழி. 'மயிலே-மயிலே இறகு போடு என்றால் போடவே போடாது; அடியாத மாடு படியாது; அடி உதவுவது போல அண்ணன் தம்பியும் உதவமாட்டார்கள்' என்னும் பழமொழிகள் ஈண்டு நினைவு கூரத்தக்கன.

### கொலைத் தண்டனை:

கொடிய குற்றங்கள் செய்பவர்கட்கு எளிய சிறைத் தண்டனை கொடுப்பது போதாது. இதனால், சில நாட் களோ- சில திங்கள்களோ-சில ஆண்டுகளோ சிறையில்

கழித்துத் திரும்பி வந்ததும் திரும்பவும் அதே குற்றங் களைப் புரிகின்றனர். இன்னார்க்கு இது ஒருவகைத் தொழில்போல் ஆகிவிட்டது. எனவே, கொடிய குற்ற வாளிகட்குக் கை-கால் குறைத்தல் போன்ற கொடிய தண்டனைகள் கொடுத்தால்தான் மீண்டும் அத்தகைய குற்றங்களைச் செய்யார். பிறர் பொருளைத் திருடியவர் களின் கை-கால்களைக் குறைக்கும் தண்டனை அரபு நாடுகள் சிலவற்றில் பின்பற்றப்படுவதாகச் சொல்லப்படு கிறது. அது மிகவும் சரியே. சில அரபு நாடுகளிலும் ரஷ்யா போன்றநாடுகளிலும் போட்ட பொருள் போட்ட இடத்திலேயே கிடக்குமாம். யாரும் திருடமாட்டார் களாம். இந்த நிலைமையை மற்ற உலக நாடுகளும் உரு வாக்கத் தயங்குவது ஏன்?

பண்டைக் காலத்தில் இந்தியாவில்-தமிழ் நாட்டில் திருடனுக்குக் கொலைத் தண்டனை கொடுக்கப்பட்டது. இது செங்கோல் முறையாகவே கருதப்பட்டது. திருவள் ளுவர் திருக்குறளில் 'செங்கோன்மை' என்னும் தலைப் பின் கீழ்ப் பின்வருங் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். "குடிமக்களைப் பிறர் அழிக்காமல் காத்துத் தானும் பேணி உதவி செய்து, குற்றம் செய்தவர்களைத் தண்டித் தல் அரசனுக்குப் பழியன்று; அது செங்கோல் ஆட்சி முறையேயாகும். கொலைத் தீர்ப்பினால் கொடியவர் களை அரசன் ஒறுத்து அழித்தல், பயிருக்கு இடையூறாக உள்ள களைதளை உழவர்கள் களைவதற்கு ஒப்பாகும்" இக்கருத்துக்களை,

> "குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
> வடுவன்று வேந்தன் தொழில்" (549)

''கொலையிற் கொடியாரைவேந்தொறுத்தல்பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்'' (550)

என்னும் திருக்குறள் பாடல்களால் தெளியலாம்.

பண்டு தமிழ் நாட்டில், கோவலன்-கண்ணகி என்ற கணவன் மனைவியர், காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து மதுரைக்குப் பிழைப்பு தேடிச் சென்றனர். அங்கே, திருடாத கோவலனைத் திருடன் எனத் தவறாகத் தீர்மானித்துக் கொலை செய்யுமாறு நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் கட்டளையிட்டதால் கோவலன் கொலையுண்டான். இஃதறிந்த கோவலன் மனைவி கண்ணகி கடுந்துயர் உழந்து, மன்னனிடம் சென்று, ஒரு குற்றமும் அறியாத என் கணவனை எவ்வாறு கொல்லலாம் என முறை வேண்டினாள். பாண்டிய மன்னன், கண்ணகியை நோக்கி, ''பெண்ணே, திருடனைக் கொல்லுதல் கொடுங்கோலன்று; நேர்மையான செங்கோல் ஆட்சியே யாகும்'' எனப் பதில் இறுத்தான். இதனை, இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் -வழக்குரை காதையில் உள்ள,

''பெண்ணணங்கே,
கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று
வெள்வேல் கொற்றங் காண் என''. (93-95)

என்னும் பகுதியால் அறியலாம். பின்னர் மன்னன் தன் தவறு உணர்ந்து மயங்கி வீழ்ந்து விட்டானாம். ஆக, இந்நிகழ்ச்சியைக் கொண்டு, பண்டு திருட்டுக் குற்றத்துக்குக் கொலைத் தண்டனை கொடுக்கப்பட்டது என்னும் செய்தி தெளிவாகும். 'திருடன் பெண்டாட்டி கைம்பெண்டாட்டி (விதவை)' என்னும் பழமொழியும் அன்று திருடனுக்குக்

கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது என்பதற்குத் தக்க சான்று பகரும். இந்த முறையை இனி ஒரு நூற்றாண்டு காலமாயினும் உலக நாடுகள் பின்பற்றினால், உலகில் திருட்டு-புரட்டு முதலிய தீய குற்றங்கள் அறவே அழிந்தொழியும்.

மரபு நிலையும் சூழ்நிலையும்:

குடும்ப மரபு வழியாக - பெற்றோர் வழியாக -தாம் பிறந்த பிறப்பு வழியாக ஒருவர்க்கு அமைந்திருக்கும் உடற் கூறும் உயிர்க்கூறும் 'மரபு நிலை' (Heredity) எனப் படும். பழகும் நண்பர் போன்றோரின் சுற்றுப் புறப்பண்பு ஒருவர்க்கு அமைவது 'சூழ்நிலை' (Environment) எனப் படும். ஒருவரையே சிலநேரம் மரபு நிலை வெல்லும் -சில நேரம் சூழ்நிலை வெல்லும். தாம் பிறந்த மரபு உயர்ந்ததா யிருப்பினும், சிலர் கெட்ட சூழ்நிலையால் கெட்டு விடுவதுண்டு - சிலர் கெடாமல் மரபு நிலைக்கு ஏற்ப நன்னிலையிலேயே இருப்பதுண்டு. தாம் பிறந்த மரபு தாழ்ந்ததாயிருப்பினும், சிலர் நல்ல சூழ்நிலையால் திருந்துவதுண்டு; சிலர் திருந்தாமல் மரபு நிலைக்கு ஏற்பத் தாழ்ந்த நிலையிலேயே இருப்பதும் உண்டு.

இது பற்றித் திட்டவட்டமாக ஒன்றும் கூறமுடியாதது போல் தோன்றினும் - ஆளுக்கு ஆள் இது மாறுபடினும், மரபு நிலையைத் தீர்மானிப்பது சூழ்நிலையே என்னும் மறுக்க முடியாத உண்மைக்கு இறுதியில் வந்தேதீர வேண்டும். மக்களினம் தோன்றிய தொடக்கக் காலத்தில் (pre-historical period) மரபுநிலை, சூழ்நிலை என இரு வேறு பிரிவு இருந்திருக்க முடியாது. அப்போது மக்கள் சூழ்நிலைக்கு ஏற்ப இயங்கிக் கொண்டிருந்திருப்பர். நாளடைவில் சமூகம் உருவாக அரசும் உருவாயிற்று. இந்நிலையில்,

சமூகக் கட்டுப்பாடு – அரசு ஆணை ஆகிய சூழ்நிலையால், மக்கள் நல்லொழுக்கம் உடையவராக இருக்க வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்பட்டிருப்பர். இல்லையேல், சமூகத்தின் தண்டனையையும் அரசின் தண்டனையையும் பெற்றாகவேண்டும். சமூகத்தின் தண்டனையினும் அரசின் தண்டனையே, மக்களை நன்னெறியிற் செலுத்தும் ஆற்றல் உடையதாகும்.

இந்தக் கட்டாயக் கட்டுப்பாடு காரணமாக – அரசின் தண்டனைக்கு அஞ்சுதல் காரணமாக - மக்கள் பலர் தொடர்ந்து நன்னெறியில் ஒழுகி வந்தனர். சிலர் மட்டும் இதற்கு விதி விலக்கா யிருந்திருக்கலாம். சமூகம் - அரசு ஆகிய சூழ்நிலையினால், மக்கள் பலரின் உள்ளத்தில் நல்லொழுக்க உணர்வு படிந்து இறுக்கம் பெற்று விட்டது. இத்தகைய நல்லோரின் மரபு, நல்ல மரபு நிலையாக மதிக்கப் பெற்றது; இதற்கு விதிவிலக்காயிருந்து வந்த தீயோரின் மரபு தீய மரபு நிலையாகக் கணிக்கப்பட்டது. அரசு நன்கு கண்காணித்துக் கை - கால்களைக் குறைத்தல், கொலைத் தண்டனை கொடுத்தல் முதலியன செய்திருந்தால், எவ்வகையிலும் சிறிதளவும் தீய மரபு நிலை உருவாவதற்கு இடமிருக்க முடியாது. எனவே, நல்ல மரபு நிலையைத் தீர்மானிப்பது – நல்ல மரபு நிலையை உருவாக்குவது நல்ல சூழ்நிலையே என்ற இறுதியான முடிவுக்கு வரமுடியும். ஆக இந்தக் காலத்திலும், அரசு கண்டிப்பான சட்ட திட்டங்களின் வாயிலாக – கடுமையான தண்டனைகளின் வாயிலாக, ஊழல் இல்லாத ஒழுங்கு உள்ள சமுதாயத்தை உருவாக்க முடியும்.

ஊழலும் ஒறுப்பும்:

வறுமையால் திருடுபவர்களையும் மன்னிக்க முடி

யாது; ஒருவேளை அவர்களை மன்னித்து எளிய தண்டனையோடு விட்டாலும் விட்டு விடலாம். ஆனால் வசதியுள்ளவர்களின் திருட்டை மன்னிக்கவே கூடாது. அதாவது:— அரசு அலுவல் (உத்தியோகத்) துறையில் இருப்பவர்களின் ஊழல்களையும் வணிகர்களின் ஊழல்களையும் மன்னிக்கவே முடியாது. அரசு அலுவலர்கள் கையூட்டு (இலஞ்சம்) பெறுதல், பொதுப் பணத்தைக் கையாடல் போன்ற குற்றங்கள் புரிகின்றனர். இவையும் திருட்டே. இவர்கட்கும் கொலை ஒறுப்பு கொடுக்கவேண்டும். வணிகர்கள் புரியும் கள்ளக் கறுப்புச் செயல்களும் திருட்டே. இவர்களும் கொலை ஒறுப்புக்கு உரியவர்களாவர். வேறு எந்தத் துறையில் இருப்பவர்கள் புரியும் எந்த வகையான தில்லுமுல்லுத் திருட்டுகளுக்கும் உரிய தண்டனை கொலையே. கொலையொறுப்பு தராவிடின், உறுப்பைக் குறைத்த லாவது செய்யவேண்டும்.

## கையூட்டு பிறந்த கதை:

கையூட்டு கொடுப்பதால் வாங்குகிறார்களா? கையூட்டு கேட்பதால் கொடுக்கின்றார்களா? இந்தச் சிக்கல் எளிதில் அவிழ்க்கக் கூடியதே. முட்டை முதலா - பறவை முதலா - என்பது தீர்மானிப்பதற்கு அரியதாயினும் இச் சிக்கலை எளிதாய்த் தீர்க்கலாம். கையூட்டு கொடுப்பதே முதலாவ தாகும். கொடுத்த பிறகுதானே வாங்க முடியும். அதனால் கொடுப்பதே முதலாவதாயிருக்க முடியும்-என்ற பொருளில் இந்தத் தீர்ப்புக் கூறப்படவில்லை. அரசு அலுவலர்கள் மக்களின் நன்மைக்காக அமர்த்தப்பட்டவர்கள். பொது மக்களுள் ஒருவரின் தேவையை, அரசு அலுவலர் ஒருவர் சோம்பலாலோ அல்லது வேலை மிகுதியாலோ விரைந்து நிறைவேற்றாமல் இருக்கலாம். தேவையை விரைவில் நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தேவைக்காரர்

அரசு அலுவலர்க்கு ஏதாவது வெல்லம் தடவிச் சுவை காட்டியிருக்கலாம். நமக்கு ஏதோ கொடுத்தாரே என்ற நன்றியுணர்வின் காரணமாக அரசு அலுவலர் அந்தத் தேவையை நிறைவேற்றியிருக்கலாம். இவ்வாறு கொடுத்து வாங்குவது பின்னர்க் 'கையூட்டு' என்னும் 'சிறப்புப் பெயர் பெற்றுவிட்டது. கையூட்டு பிறந்த கதைகளுள் இஃ தொன்று. மற்றொன்றும் கூறலாம்: அரசு அலுவலர் எந்த உதவியும் எதிர்பார்க்காமலேயே, இயற்கையாகவே, ஒருவ ரின் தேவையை உரிய காலத்தில் பயன்மிக்க முறையில் நிறைவேற்றியிருக்கலாம். அந்த நன்றி பாராட்டும் வகை யில், தேவையை நிறைவேற்றிக் கொண்டவர், நிறைவேற் றிய அலுவலர்க்கு உள்ளம் உவந்து ஏதேனும் அன்பளிப்பு செய்திருக்கலாம். இந்த அன்பளிப்பு பின்னால் கட்டாயப் படுத்தப்பட்டு 'கையூட்டு' என்னும் பெயருக்கு உரியதாய் விட்டது. கையூட்டு பிறந்த இரண்டாவது கதை இது.

இந்தப் பழக்கம் வளர வளர, நாளடைவில், கையூட்டு கொடுப்பதும் வாங்குவதும் கட்டாயமாகி விட்டன. கையூட்டு தந்தால்தான் காரியம் கைகூடும் என்ற நிலை சில துறைகளில் சிலரிடையே ஏற்பட்டது. இது பின்னர்ப் பல துறைகளில் பலரையும் ஆட்கொண்டு விட்டது. இந் நிலையில், இன்னார்க்கு இன்ன தேவையை நிறைவேற்றிக் கொடுத்தால் அவர் இவ்வளவு நன்மையை அடையப்போகி றாரே -ஏன் அவர் நமக்கு ஏதேனும் தரலாகாது-என அரசு அலுவலர் எண்ணி வெளிப்படையாகவே-முன் கூட் டியே கையூட்டு கேட்கும் வழக்கம் உண்டாகி விட்டது. நாளடைவில் இந்தக் கையூட்டுக்கு 'மாமூல்' என்னும் மாபெருஞ் சிறப்புப் 'பட்டம்' சூட்டப்படலாயிற்று. கல்வித் துறையிலும் கையூட்டு-கடவுள் துறையிலும் ஒருவகைக் கையூட்டு-என்னே கொடுமை! கல்வித் துறையும் கடவுள்

துறையும் ஒருவகை வாணிகமாக மாறியது இன்னும் மாபெருங் கொடுமையாகும்.

எவன் என்ன ஆனால் நமக்கு என்ன-எப்படியாவது நமக்குப் பணம் வந்தாக வேண்டும்-அவன் திருடியாவது அல்லது பிச்சையெடுத்தாவது-அல்லது அவன் பெண்டாட்டியின் தாலியை விற்றாவது பணம் கொடுத்தால் சரிதான்—என்ற தன்னலம் சிலரிடையே தலைதூக்கிப் பெரிய அளவில் சொத்து சேர்க்க வேண்டும் என்னும் 'திரட்டு ஊக்கம்' (Aequisition Instinct) செயல்படத் தொடங்கிவிட்டது. கையூட்டு பிறந்த கதை இது.

## கல்வித் துறை

அந்தக் காலத்தினும் இந்தக் காலத்தில் கல்வித்துறையில் வேறுபாடுகள் உள்ளன. கல்வியின் தரத்திலும் வேறுபாடு-கொடுக்கப்படும் கல்வியின் அளவிலும் வேறுபாடு-கொடுக்கப்படும் முறையிலும் வேறுபாடு-ஆசிரியர்களின் நிலையிலும் வேறுபாடு-மாணாக்கர்களின் ஒழுக்கத்திலும் வேறுபாடு-இவ்வாறாகக் கல்வித்துறையில் இன்று பல வேறுபாடுகள் உள்ளன. இந்தக் காலத்தில் பலதுறைக் கல்வி பரவலாகக் கொடுக்கப்படினும், ஆசிரியரிடத்தும் மாணாக்கரிடத்தும் காணப்படும் சில நடைமுறைகள் நிறைவு அளிக்கவில்லை.

'குழந்தை உளவியல்' (Child Psychology), கல்வி 'உளவியல்' (Educational Psychology) ஆகியவை கல்வித்துறையில் நடைமுறையில் பின்பற்றப்படினும், கல்வி நிறுவனங்களில் நல்லொழுக்கம் காணப்படவில்லை. 'ஆசிரியர் நின்று கொண்டு ஒன்றுக்கு இருந்தால் (சிறுநீர் கழித்தால்), மாணாக்கன் நடந்து கொண்டு ஒன்றுக்கு விடுவான்' என்பது

பழமொழி. இது, ஆசிரியர் உட்கார்ந்து கொண்டு ஒன்றுக்கு இருந்த அந்தக் காலத்தில் எழுந்த பழமொழியாகும். பெரும்பாலும் இப்போது ஆசிரியர்கள் நீளக் கால் சட்டை (suit) போட்டுக் கொண்டிருப்பதால் நின்றுகொண்டு தான் ஒன்றுக்கு இருக்கிறார்கள். எனவே இப்போது பழமொழியை மாற்ற வேண்டும். 'ஆசிரியர் உலாத்திக் கொண்டு ஒன்றுக்கு இருந்தால், மாணாக்கன் ஓடிக் கொண்டு ஒன்றுக்கு இருப்பான்' என்பதாகப் பழமொழியைப் புதுப்பிக்கவேண்டும்.

புகை பிடித்தல், சூது ஆடல், கள் உண்ணுதல், காமக் களியாட்டயர்தல், ஒழுங்காக மனச்சான்றுடன் உழைக்காமை, பணம் பறித்துக் கொண்டு மதிப்பெண் (Mark) போடுதல் முதலிய ஒழுங்கின்மைகள் ஆசிரியர்களிடம் காணப்படுவது வருந்தத்தக்கது மட்டுமன்று; கண்டிக்கப்பட வேண்டியதும் தண்டிக்கப்பட வேண்டியதுமாகும். என்மேல் யாரும் சினம் கொள்ளலாகாது. சுமார் நாற்பது ஆண்டு காலம் கல்வித்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள யான், பலரிடம் நேரில் பார்த்தறிந்த பட்டறிவைக் கொண்டே இதனை எழுதுகிறேன். பெரியவர்கள் செய்வதைப் பார்த்துப் 'பின்பற்றுதல்' (Imitation) இளைஞரின் வழக்கம். எனவே ஆசிரியர்கள் ஒழுங்காய் நடந்து கொள்ள வேண்டும்.

நல்லுழைப்பும் நல்லொழுக்கமும் இல்லாத ஒருசார் ஆசிரியர்கள் இருக்கட்டும்! எல்லா நல்லிலக்கணங்களும் உடைய நல்லாசிரியர்களின் உழைப்பும் இந்தக் காலத்தில், காட்டில் காய்ந்த நிலவாய்-கற்பாறையில் கொட்டிய மழையாய்ப் பயனின்றிப் பாழாகிறது. மாணாக்கர் சிலர் இந்தக் காலத்தில் பள்ளிக்கு வருவதில்லை–பள்ளிக்கு வந்தாலும் வகுப்புக்கு வருவதில்லை–வகுப்புக்கு வந்தாலும்

பாடம் கேட்பதில்லை; தாம் கேளாவிடினும் மற்றவர்களை யும் கேட்க விடுவதில்லை; திரையோவியக் கொட்டகை களில் 'கலகலப்பு' (கலாட்டா) செய்வதுபோல் வகுப்பறை யிலும் செய்கின்றனர். ஆசிரியர்கள் கண்டித்தால், அவர் கட்கு அடங்காமல் எதிர்த்துக் கொள்கின்றனர். மாணாக் கர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் உரியவர்களாக ஆசி ரியர்கள் ஆகியுள்ளனர். தலைமை யாசிரியர்களாலும் இவர்களை அடக்க முடியவில்லை. யாருக்காவது தண்டனை தந்தால் மாணாக்கர் அனைவரும் சேர்ந்து கொண்டு 'வேலை நிறுத்தம்' (strike) செய்கின்றனர். பொருள்களை அடித்து உடைத்து நொறுக்குகின்றனர்- எரிக்கின்றனர். பெற்றோர்களின் ஒத்துழைப்பு பிள்ளை கட்குத்தான் கிடைக்கின்றதே தவிர, கல்வி நிறுவனத்துக்குக் கிடைப்பதாகத் தெரியவில்லை. பிள்ளைக்குத் தண்டனை தந்தால், பெற்றோர்கள் சிலர், அரசியல் வாதிகளைக் கையில் போட்டுக் கொண்டு ஆசிரியர்களை அல்லல்கட்கு உள்ளாக்குகின்றனர். பள்ளியில் இருக்க வேண்டிய ஒழுங்குக் கட்டுப்பாடு (Discipline) சீர் குலைந்து போகிறது.

அன்று ஆசிரியர்கள் அமர்ந்து பாடம் கற்பித்தனர்- மாணாக்கர்கள் நின்றுகொண்டு பாடம் கேட்டனர். இன்று எதிர்மாறு. அன்று ஆசிரியர்கள் மாணாக்கர்களை வைத னர்-இன்று மாணாக்கர்கள் ஆசிரியர்களை வைகின்றனர். அன்று ஆசிரியர்கள் பிள்ளைகளை அடக்கினர்-இன்று பிள் ளைகள் ஆசிரியர்களை அடக்குகின்றனர்; அன்று ஆசிரியர் கள் மாணாக்கர்களை அடித்தனர்; இன்று மாணாக்கர்கள் ஆசிரியர்கட்கு அடி உதை கொடுக்கின்றனர்; அடி உதை கொடுப்பது மட்டுந்தானா? ஆசிரியர்களைப் பழித்துச் சுவ ரில் எழுதுவதும் ஆசிரியர்கட்குக் கொடும்பாவி கட்டி

இழுத்து எரிப்பதும் இயல்பாய் நடக்கின்றன. இந்நிலையில் மாணாக்கர்களை அடக்குவது யார்? அடக்குவது எப்படி?'அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும்'-என்பதுபோல வெளியில் இருக்கும் கட்சிகள் அனைத்தும் கல்வி நிறுவனங்கட்குள்ளேயும் உள்ளன. இதற்கு மாற்று யாது?

## கண்ணா? உயிரா?

மாணாக்கர்களிடத்தில் கடுமை காட்டலாமா என்று சிலர் கருதலாம். மாணாக்கர்கட்குக் கண்கள் இருக்கச் செய்ய வேண்டும்; கண்கள் போனாலும், உயிராவது இருக்கச் செய்ய வேண்டும்.

> "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்". (7)

என்பது ஔவையாரின் கொன்றை வேந்தன் பாடல்.

> "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு". (392)

> "கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லா தவர்". (393)

என்பன திருக்குறள் பாடல்கள். இவற்றால், கல்வி கண் போன்றது என்னும் கருத்து பெறப்படுகிறது.

> "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும்". (131)

என்னும் திருக்குறள் பாடலால், ஒழுக்கம் உயிரினும் சிறந்தது என்பது பெறப்படும். எனவே, கல்வியாகிய கண் இன்றியமையாததா? ஒழுக்கமாகிய உயிர் இன்றியமையாததா? கண் இல்லாமல் வாழ முடியும்; உயிர் இல்லாமல் வாழ முடியாதே! எனவே, ஒருவர்க்குக் கல்வி இல்லாவிடி

னும் ஒழுக்கம் இருக்க வேண்டியது மிகவும் இன்றியமை யாதது.

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை''. (1)

என்பது முதுமொழிக் காஞ்சி என்னும் நூலின் பாடல். கல்வி யில்லாவிடினும் ஒழுக்கம் வேண்டும் என்பது கருத்து.

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கங் குன்றக் கெடும்''. (134)

என்பது திருக்குறள் பாடல்.

"ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்''. (11)

என்பது ஔவையின் கொன்றைவேந்தன் பாடல்.

பார்ப்பானுக்கு வேதம் ஓதுதலை விட ஒழுக்கம் முக்கியம் என்பது இவற்றின் கருத்து. சுப்பிரமணிய பாரதியார் முத லான அறிஞர் பலர், கல்வியினும் ஒழுக்கத்தையே வற் புறுத்தி யுள்ளனர். எனவே, கல்வி நிறுவனங்களில் ஒழுங் குக் கட்டுப்பாடு (Discipline) மிகவும் இன்றியமையாத தாகும். அதற்கு அரசு ஆவன செய்து தர வேண்டும்.

பல்வேறு துறைகள்:

ஒவ்வொரு துறையையும் பற்றி விதந்து பேசினால் பெருகும்; விரிவஞ்சி விடுப்பாம். பொதுவாக, தொழில் துறை, உழவுத்துறை, வணிகத்துறை, அரசு அலுவல்துறை, அரசியல் துறை, மருத்துவத் துறை, காவல் துறை, நீதித் துறை-முதலிய பல்வேறு துறைகளிலும் காணப்படும் ஊழல் களை அரசுகள் கண்காணித்து ஒழித்தால்தான், ஒழுங்கு

முறை உள்ள உலகம் உருவாகும். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மொழியிலும் சான்றோர்கள் அருளியுள்ள அற நூல்கள் மலிந்துள்ளன. மக்களினம் அந்நூல்களைக் கற்று அதன்படி ஒழுக வேண்டும். கள்வன் பெரியவனா? காப்பான் பெரியவனா? என்பது பழமொழி வினா- காப்பவனைவிட கள்வனே பெரியவன்-என்பது இதன் விடை. அரசு எவ்வளவுதான் கண்காணித்தாலும், ஒரு சிலராயினும் அரசை ஏய்த்துவிட முடியும். எனவே, அரசின் தண்டனைகட்கு இடம் இல்லாதவாறு, மக்களும் நல்ல நூல்களைக் கற்றும் அதன்படி நன்னெறியில் ஒழுகியும் அரசுக்கு உதவி ஒத்துழைக்க வேண்டும்.

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக". (391)

என்னும் திருக்குறள், மக்களினத்துக்கு வழங்கப் பெற்றுள்ள அரிய பெரிய அறிவுரையாகும்.

## 2. அகப் பொருள் துறை:

தமிழ் நூல்களில் அகப் பொருள், புறப் பொருள் என இருவகையான பொருள்கள் (செய்திகள்) கூறப்பட்டுள்ளன. ஓர் ஆணும் ஒருபெண்ணும் அகம் (மனம்) ஒத்துக் கூடி அக உணர்வால் உணர்ந்து பெறும் இன்பத்தைப் பற்றியது அகப் பொருளாகும். பால் (Sex) உணர்வும் காதல் வாழ்க்கையும் குடும்ப வாழ்க்கையும் அகப் பொருளில் அடங்கும். அகப் பொருள் அல்லாத மற்ற வெளித் துறைகள் யாவும் புறப் பொருள் எனப்படும். மேலே பேசப் பட்டுள்ள தொழில், வாணிகம், கல்வி, அரசியல் முதலிய யாவும் புறப்பொருள் துறையாம். இனி அவற்றினும் வேறான அகப் பொருள் துறை குறித்துச் சிறிது ஆய்வாம்:

இந்தியாவில் ஆணும் பெண்ணும் தாமாகக் காதலித்துத் திருமணம் செய்துகொள்வது மிகவும் குறைவு; பெற்றோர்கள் பார்த்துத் திருமணம் செய்துவைப்பதே மிகுதி. ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்க நாடுகளிலும் காதல் திருமணம் (Love Marriage) மிகுதி. இந்தியாவில் கணவனும் மனைவியுமாயிருப்பவர்கள் சாகும்வரை பிரியாதிருப்பதே இயல்பு. வெளி நாடுகள் பலவற்றில், மணம் செய்து கொண்டு கணவனும் மனைவியுமா யிருந்தவர்கள், பிரிந்து மண விலக்கு செய்து கொள்வதும் வேறு கணவனையும்-மனைவியையும் மறுமணம் புரிந்து கொள்வதும் மிகுதி.

### பிரியாத குடும்ப முறை:

என் தாய் நாடு என்பதற்காகச் சொல்லவில்லை; நடு நிலைமையோடு சொல்கிறேன்; கணவனும் மனைவியும் இறுதிவரை இணைபிரியாதிருக்கும் இந்திய முறையே சிறந்ததாகும். இந்தியாவிலும்-தமிழ் நாட்டில் இந்த முறை மிகவும் இறுக்கம் பெற்றதாகும். மறு பிறவியிலும் கணவனும் மனைவியும் பிரியாதிருக்க வேண்டும் என்பது தமிழர் மரபு என்பதைத் தமிழ் நூல்களால் அறியலாம்: அம்மூவனார் பாடிய குறுந்தொகை நூற் பாடல் கருத்து வருமாறு: இப் பிறவிபோய் மறு பிறவி எடுப்பினும் நீயே என் கணவனாகவும் யானே உன் மனைவியாகவும் இருக்க வேண்டும் எனக் கணவனை நோக்கி மனைவி கூறுகின்றாள்:

> ''இம்மை மாறி மறுமை யாயினும்
> நீயாகியர் என் கணவனை
> யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே'' (49)

என்பது அப்பாடல். நம் காதலிக்கும் நமக்கும் இடையே

யுள்ள பிணைப்பு அழிவது என்பது கிடையாது; மறுமையி லும் அது நிலைக்கும் என்று காதலன் கூறுவதாகப் பரணர் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் கூறியுள்ளளார்.

> ''இறு முறை யென ஒன் றின்றி
> மறுமை யுலகத்தும் மன்னுதல் பெறுமே'' (199)

என்பது பாடல். மறு பிறவி எடுத்தாயினும் என் காதல னை அடைவேன் எனக் காதலி கூறுவதாகக் கொங்குவேள் எழுதிய பெருங்கதை நூலில் ஒரு பகுதி உள்ளது:

> ''அவனுறை உலகத் தழித்துப் பிறந்தாயினும்
> எய்துதல் வலித்த னென்'' (1-36: 114-115)

என்பது பாடல் பகுதி. இப்போது தீவினையால் மறந்து விடினும் அடுத்து வரும் பிறவிகளில் காதலர் காதலியை அடைவார் என்னும் கருத்துடைய பாடல் மாணிக்க வாச கரின் திருக்கோவையாரில் உள்ளது:

> ''மறப்பா னடுப்பதோர் தீவினை வந்திடிற் சென்று சென்று
> பிறப்பானடுப்பினும் பின்னும் துன்னத் தகும் பெற்றி யரே'' (205

என்பது பாடல் பகுதி. இந்தப் பிறவியில் பிரிவது என்ப தில்லை என்று தலைவன் கூற, அங்ஙனமாயின் அடுத்த பிறவிகளில் பிரிந்து விடுவீரோ எனத் தலைவி அழுததாகக் கூறும் பாடல் திருவள்ளுவரின் திருக்குறளில் உள்ளது:

> ''இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்
> கண்ணிறைக் நீர் கொண்டனள்'' (1385)

என்பது பாடல். மேலே கூறியவாறு மறுபிறவிகளில் ஒன்றி யிருக்க முடியாது போயினும், இந்தப் பிறவியிலாவது பிரி யாத முறையையே உலகில் உள்ள மக்களினம் முழுவதும் பின்பற்ற வேண்டியது இன்றியமையாததாகும். இந்திய முறை, குடும்ப வாழ்க்கை எளிதாகவும் இனிதாகவும் நடை பெறுவதற்கு ஏற்ற முறையாகும். அடிக்கடி மண விலக்கும் மறுமணமும் செய்து கொள்ளும் முறை, குடும்ப வாழ்க்கையைத் தொல்லைக்கும் சிக்கலுக்கும் உரியதாக் கும். ஒருவன் பெண்கள் பலரை மாறி மாறி மணந்து பிள்ளைகளைப் பெறுகின்றான்; ஒருத்தி ஆண்கள் பலரை மாறி மாறி மணந்து பிள்ளைகளைப் பெறுகிறாள். இந் நிலையில், ஆணும் பெண்ணும் கை மாறிக்கொண்டேயிருப் பின், இந்தப் பல பட்டறைப் பிள்ளைகளை வளர்ப்பவர் யார்? இப்பிள்ளைகள் யாரிடம் நிலையாய்த் தங்குவார் கள்? இம்முறையினால், இப்பிள்ளைகள், தக்க வளர்ப்பு முறையின்றி மனம் உடைந்து போவதும் போக்கிரிகளாக மாறுவதும் உண்டுஎன்பதாகச் சொல்லப்படுகிறது. பிள்ளை களின் நிலைமட்டும் இத்தகைய தன்று: பெற்றோர்களின் நிலையும் இத்தகையதே. வயது கடந்த முதியோர்கள் எந் தப் பிள்ளையிடம் தங்குவார்கள்? இவர்கட்கு நிலையான புகலிடம் எது? இந்தத் தரங் கெட்ட குடும்ப வாழ்க்கை முறையினால், அரசு, சிறுவர் இல்லங்களும் முதியோர் இல்லங்களும் அமைத்துக் காக்க வேண்டியது தவிர வேறு வழியில்லை.

ஒருவர்க்கு ஒருவரே:

என் உறவினர் குடும்பம் ஒன்றிலிருந்து கணவனும் மனைவியும் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தனர். அங்கே அமெரிக்கர் சிலர், நம் பெண்ணை நோக்கி, இப்போது உனக்குக் கணவராயிருப்பவர் உனக்கு எத்தனையாவது

கணவர்? என்று கேட்டார்களாம். இந்த வினா நமக்கு வியப்பு அளிக்கலாம்; ஆனால் அவர்கட்கு இஃது இயற்கை போலும்! இந்தத் தொற்று நோய் இப்போது இந்தியாவிலும் பரவத் தொடங்கியுள்ளது. காதல் மணத்தை இங்கே யான் குறை கூறவில்லை. இந்தியாவில் - தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் காதல் மணம் மிகுதியாகப் பேசப் பட்டுள்ளது. ஆனால் அந்தப் பழைய காதல் முறை இப்போது தமிழ் நாட்டில் நடை முறையில் அவ்வளவாக இல்லை. பெற்றோர் பார்த்துச் செய்து வைக்கும் திருமணமே மிகுதியாய் நடைபெற்று வருகிறது.

ஆயினும், இன்று, தமிழ் நாட்டிலும் சிறிது சிறிதாகக் காதல் மணம் வளரத்தொடங்கியுள்ளது. மணவிலக்கும் மறுமணமும் கூட தலைகாட்டத் தொடங்கியுள்ளது. ஆனால் இம்முறையைப் பின்பற்றும் பெரும்பாலான குடும்பங்கள் தமிழ் நாட்டில் உருப்பட்டதாக - உருப்படுவதாகத் தெரியவில்லை. இப்பொழுதும் தமிழ் நாட்டில், இறுதிவரையும் ஒருவனுக்கு ஒரு மனைவி - ஒருத்திக்கு ஒரு கணவன் - என்ற முறையே நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பங்கு பின்பற்றப்படுகிறது. ஆனால், இந்தியாவில் - தமிழ் நாட்டில், மனைவி இறந்தால் கணவன் மறுமணம் செய்து கொள்ளும் வாய்ப்பு உள்ளது; கணவன் இறந்தால் மனைவி மறுமணம் செய்து கொள்ளும் வாய்ப்பு இல்லை. இது கொடுமைதான்! இல்லையென்று சொல்லவில்லை. மறுமணம் செய்துகொள்ள விரும்பாத பெண்கள் போக, விரும்பும் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள வாய்ப்பளிப்பதே அறநெறியாகும். இந்தச் சீர்திருத்தமும் இப்போது தொடங்கப்பெற் றுள்ளது.

தென்னிந்தியாவில் காணப்படும் ‘ஒருவர்க்கு ஒரு

வரே' என்ற முறை வட இந்தியாவில் சில இடங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. பல ஆயிரம் ஆண்டுகட்கு முன் வட இந்தியாவில் நடைபெற்ற பாரத வரலாற்றில், 'பஞ்ச பாண்டவர்' எனப்படும் உடன் பிறந்தார் ஐவர்க்கு, துரோபதை என்னும் ஒரு பெண் மனைவியாக இருந்த தாகக் கூறப்பட்டுள்ளது. இப்போதும் சில இடங்களில், குடும்பத்தில் மூத்த மகன் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டால், அவளே, அடுத்த பிள்ளைக்கும் மனைவியாக இருக்கும் முறை உள்ளதாகத் தெரிகிறது.

நாகரிகம் இன்மை:

தென்னிந்தியாவில் ஒருத்தி பலருக்கு மனைவியாய் அமையும் முறை இல்லாவிடினும், மண விலக்கும் மறு மணமும் செய்து கொள்ளும் பழக்கம், பின் தங்கிய இனத்தவர் சிலரிடையே சிறுபான்மை உண்டு. மற்றவர்கள் இவர்களை நாகரிகம் அற்றவராகக் கருதுவது வழக்கம்.

இந்தியாவைச் சேர்ந்தனவும் இந்தியப் பெரு நிலத்துக்கு நெடுந்தொலைவில் வங்கக் கடலில் உள்ளனவும் ஆகிய அந்தமான் – நிக்கோபார் தீவுகளில் வாழும் மக்கள், இந்தியப்பெருநிலத்தில் வாழும் மக்களினும் நாகரிகம்அற்ற காட்டு மிறாண்டிகளாகவும் புதிய உலகை அறியாத பழங்குடி மக்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களிடையே மணவிலக்கும் மறுமணமும் இயற்கை என்பதாகத் தெரிகிறது. பல பிள்ளைகளைப் பெற்ற ஒருத்தி, மற்ற பெண்களை நோக்கி, 'நான் பல பிள்ளை பெற்ற அனுபவசாலி; எனக்கா பக்குவம் சொல்லுகிறீர்கள்?' என்று, தான் பல பிள்ளை பெற்றமையைப் பெருமையாகப் பேசுவது தமிழ்நாட்டில் உண்டு. ஆனால், அந்தமான் – நிக்கோபார் தீவுகளில் உள்ள பெண்கள் சிலர் பெருமையாய்ப் பேசுவது

வேறொன்றைப் பற்றியதாகும். அதாவது! – ‘நான் ஏழு கணவரை மணந்தவள் - நான் எட்டு கணவரை மணந்தவள் - எனக்கா நீ புத்தி சொல்லுகிறாய்? – எனக்கா நீ கற்றுக்கொடுக்கிறாய்?’ என்று தாங்கள் கணவன்மார் பலரை மணந்ததைப் பற்றிப் பெருமையாய்ப் பேசுவது உண்டாம். இவர்களை நாகரிகப்படுத்த இந்திய அரசு ஆவன செய்து கொண்டுள்ளது.

மேற் கூறியதிலிருந்து தெரிவதாவது: அடிக்கடி மணவிலக்கும் மறுமணமும் செய்து கொள்ளும் பழக்கம், அந்தமான்-நிக்கோபார் தீவுகள் உள்ளிட்ட இந்தியாவில், நாகரிகம் அற்ற இனத்தவரிடையே நடைமுறையில் உள்ள பழக்கமாகும்-என்னும் செய்தி பெறப்படுகிறது. எனவே, வேறு வகையில் நாகரிகம் பெருகியுள்ளதாகக் காணப்படும் உலக நாடுகளில், அடிக்கடி மணவிலக்கும் மறுமணமும் செய்து கொள்வது, பண்பற்ற-சீர்திருந்தாத–நாகரிகம்அற்ற செயலாகவே கருதப்படும்; முன்னேறியுள்ள-வளர்ச்சிபெற்றுள்ள நாட்டு மக்கள் இதனை எண்ணிப் பார்க்கவேண்டும்.

கணவன் குறட்டை விடுகிறான்–அதனால் மணவிலக்கு வேண்டும். மனைவி நாகரிமாயில்லை-அதனால் மணவிலக்கு வேண்டும். கணவன் குடிகாரன்–அதனால் மணவிலக்கு வேண்டும். மனைவி நோயாளி – அதனால் மணவிலக்கு வேண்டும்- என்பதாகப் பல செய்திகள் வெளிவருவதை நாளேடுகளில் படிக்கிறோம். இவ்வாறாக, உட்கார்ந்தால் மணவிலக்கு-எழுந்தால் மணவிலக்கு-எடுத்ததற்கெல்லாம் மணவிலக்கு என்ற முறை மக்களினத்தில் நீடித்துக் கொண்டிருக்குமாயின், குடும்ப வாழ்க்கை உருப்படுமா?-குடும்பவாழ்க்கை மனநிறைவு உடையதாக இருக்குமா? ஏன், குடும்பமே இல்லாமல் போய்விடுமே! ஆடு

மாடுகளின் வாழ்க்கைக்கும் மக்களினத்தின் வாழ்க்கைக்கும் வேறுபாடு வேண்டாவா?

மணவிலக்கும் மறுமணமும் அடிக்கடி நிகழும் நாட்டிலே வாழ்ந்த கணவன் மனைவியர் இருவரும் பேசிக்கொண்டதான செய்தியொன்று இங்கே நினைவுக்கு வருகிறது. உண்மையை உணர்த்துவதற்காகவும்-அதே நேரத்தில்-நகைச் சுவைக்காகவும் இச்செய்தி இங்கே தரப்படுகிறது. வீட்டில் இருந்த மனைவி, வெளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய கணவனை நோக்கி, 'உன் பிள்ளையும் என் பிள்ளையும் சண்டை போட்டுக் கொண்டார்கள்-அந்தச் சண்டையை நம்முடைய பிள்ளை விலக்கிவிட்டான்' என்று கூறினாளாம். 'உன் பிள்ளை' என்றது, அவன் வேறு மனைவியிடத்தில் பெற்ற பிள்ளையையாம். 'என் பிள்ளை' என்றது, அவள் வேறு கணவனிடத்தில் பெற்ற பிள்ளையையாம். 'நம் பிள்ளை' என்றது, இவர்கள் இருவருக்கும் பிறந்த பிள்ளையையாம். இவர்கள் இருவரும் இதற்குமுன் வேறுவேறானவரை மணந்துகொண்டிருந்தனர்-பின்னர் அவர்களினின்றும் மணவிலக்குப்பெற்று இவர்கள் இருவரும் மறுமணம் செய்துகொண்டார்கள் என்பது இதனால் தெரிகிறது. இங்கே முறையான ஓர் ஐயம் எழலாம். இருவரும் வேறு பிறரிடத்தில் பெற்ற இரண்டு பிள்ளைகளைவிட, பின்னர் இவர்கள் இருவரும் மறுமணம் செய்துகொண்டு பெற்றபிள்ளை சிறியவனாய் இருப்பானே-சிறியவன், தன்னிலும் பெரிய பிள்ளைகள் இருவரின் அடிதடி சண்டையை எவ்வாறு விலக்கிவிட முடியும்?-என்பதே அந்த ஐயம். சண்டையை விலக்கி விட்ட பிள்ளை, இவர்கள் இருவருக்கும் இப்போது பிறந்த பிள்ளை இல்லை-இவர்கள் இருவரும் முன்பு ஒரு முறை மணம் செய்து 'வாழாத வாழ்க்கை'

நடத்தினர்-அப்போது பிறந்த பிள்ளை அவன்-எனவே, அவன், சண்டையிட்டுக் கொண்ட இருவரினும் மூத்தவனா வான்-அதனாலேயே சண்டையை விலக்க முடிந்தது. எனவே, பெற்றோர்கள் இருவரும், முதலில் ஒரு முறை மணம் செய்துகொண்டார்கள்-பின்னர் மணவிலக்குப் பெற்று வேறுவேறானவர்களை மறுமணம் செய்து கொண்டனர்-பின்னர் அவர்களிடமிருந்தும் மணவிலக்குப் பெற்று, மீண்டும் ஒரு முறை இருவரும் தமக்குள் மறுமணம் செய்து கொண்டனர்-என்பது பெறப்படும். இ்து என்னே வேடிக்கை! வேடிக்கையா? வெட்கம்-வெட்கம்!

ஒருவர் முறையின் கேடுகள்:

ஒருவர்க்கு ஒருவரே என்ற முறைக்கு மாறுபடுபவர்கள் அம்முறையினால் சில கேடுகள் உள்ளதாகக் கூறலாம். அவையாவன:- கணவன் குடிகாரனாகவும் சூதாடியாகவும் இருந்து உடைமைகளையெல்லாம் அழித்துக் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாதவனாயிருந்தால் அவனோடு எவ்வாறு வாழ்வது? மற்றும் திருடனாகவும் கொலைகாரனாகவும் இருந்தால் அவனோடு எவ்வாறு வாழ முடியும்?

ஆண்மையில்லாத பேடியாயும் உடலுறவு கொண்டு இன்பம் அளிக்கும் ஆற்றல் இல்லாதவனாயும் இருந்தால் அவனோடு வாழ முடியுமா?

தீராத நோயாளியாய் இருந்தால் அவனுடன் வாழ்வது எப்படி? எனவே, மனைவி அவனிடத்தினின்றும் மணவிலக்கு செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

இவ்வாறே, மனைவி குடும்பப் பண்பு இல்லாதவளாயும், ஒழுக்கம் கெட்டவளாயும், மலடியாயும், நோயாளியாயும்,

இன்ன பிற குறைபாடு உடையவளாயும் இருப்பின், அவளோடு ஒருவன் எவ்வாறு வாழ்வது? மணவிலக்கைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை. இவ்வாறு சிலர் வாதிடலாம்.இதற்குத் தீர்வு என்ன?-என்றும் கேட்கலாம்.

இதற்குத் தீர்வு காண இந்தியாவை நோக்கவேண்டும். கணவன் தகுதியற்றவனாய் இருப்பினும், இறுதி வரையும் அவனுடன் இணைந்து வாழ்வதே இந்தியப் பெண்களின் இலக்கண மாகும். இதனால் மனைவிக்குச் சிலஇழப்புகள் நேரலாம், ஆயினும், தாம் அடைய வேண்டிய சில நன்மைகளைத் தியாகம் செய்தாயினும் குடும்பப் பெருமையைக் காப்பதே இந்தியப் பெண்களின் இயல்பு. எல்லாருக்கும் இவ்வாறு நேரப்போவதில்லை. எங்கோ ஒருசிலருக்கு இத்தகைய இழப்புகள் ஏற்படலாம். அவர்கள் தம் நலத்தைத் தியாகம் செய்கிறார்கள். நோயாளிக் கணவனை விட்டுப் பிரிந்தால் அவனைக் காப்பவர் யார்? எனவே கடமை உணர்வுடனும் தியாக மனப்பான்மையுடனும் செயலாற்றுவதே மக்கட் பண்பாகும். இதை ஏற்றுக் கொள்ளாத பெண்கள் சிலர் மண விலக்கும் மறு மணமும் செய்து கொள்ளலாம்.

இவ்வாறே, மனைவி மலடியாகவோ-நோயாளியாகவோ-திறமையற்றவளாகவோ இருப்பின், இந்தக் காரணத்தைக் காட்டி மனைவியை மணவிலக்கு செய்வது இந்திய ஆடவரிடத்தில் இல்லை. ஆடவர்களும் தியாக உணர்வுடன் இறுதிவரை மனைவியை வைத்துக் காப்பாற்றி வருகிறார்கள். மனைவி மலடியாயிருப்பின், கணவன் வேறு ஒருத்தியை மணந்து கொண்டு பிள்ளை பெறினும், முதல் மனைவியையும் கைவிடாமல் காப்பதே இந்திய நாட்டு வழக்கம். இத்தகைய தியாக உணர்வு இல்லாதார் சிலர்

மணவிலக்கும்மறுமணமும் செய்து கொள்ளலாம். மனைவி ஒழுக்கம் கெட்டவளாயிருப்பின், கணவன்அவளை விலக்கி விடுவது இயற்கை-இது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. எனவே, கடமை உணர்வுடனும் தியாக உணர்வுடனும் உயரிய மக்கட் பண்புடனும் நடந்து கொள்ளின் இச்சிக்கல் தீரும். இது இந்தியாவில் வெற்றியுடன் நடைபெறுகிறது. இந்த நன்முறையை உலகம் முழுதும் கடைப்பிடித்தால் மனித வாழ்வு முழுமை பெறும்.

## ஒருவர் முறையின் நன்மைகள்:

ஒருவருக்கு ஒருவரே என்ற முறையின் நன்மைகளை இங்கே மறப்பதற்கில்லை- இதனால் குடும்பத்தில் குறை இராது-நிறையிருக்கும்; குழப்பம் இராது-தெளிவு இருக்கும்; சண்டை சச்சரவு இராது-அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும் ஊர்சிரிக்காது-ஊர்மெச்சும்; மணவிலக்குக்காக நீதிமன்றமும் காலுமாய் அலைய வேண்டியதில்லை; கணவனோ-மனைவியோ திக்கற்றவராய்க் கைவிடப்படார்; குழந்தை வளர்ப்பு முறையும் முதியோரைப் பேணும் முறையும் வெற்றியுடன்நடைபெறும். எல்லா வகையிலும் இன்பமே! எனவே இறுதிவரை ஒருவர்க்கு ஒருவரே என்ற நன் முறையை உலகம் முழுவதும் கடைப்பிடித் தொழுகுவதே மக்கட் பண்பாகும். இல்லையேல்,ஆடு மாடுகட்கும் மக்கட்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.

## பால் உறவு

எல்லா உயிர்கட்கும் ஆண்-பெண் பால் உறவு என்னும் இயல்பூக்கம்(Sex Instinct) உண்டு. மரம் செடி கொடிகட்கும் இது உண்டு. இந்தப் பால் ஊக்கத்துக்கு இளம் பருவத்தில் அப்பா அம்மா விளையாட்டிலேயே, திருமண மாதிரி விளையாட்டிலேயே வித்திடப்படுகிறது. உரிய வயது வந்ததும்

இந்தப் பால்உறவுக் கவர்ச்சி (Sex Appeal) பேருருவம் பெறுகிறது. இது தொடர்பாகப் பல ஊழல்கள் - ஒழுங்கின்மைகள் ஆண்களிடத்தும் பெண்களிடத்தும் காணப்படுகின்றன. ஆணோடு ஆணும் பெண்ணோடு பெண்ணும் ஒருவகை உடல் உறவு கொள்வது, பெரியவர்கள் ஒன்றும் அறியாத சிறுவர்-சிறுமியரோடு உடல் உறவு கொள்வது, ஒருவர் விரும்பாமலேயே மற்றொருவர் வற்புறுத்திக் கட்டாயப் படுத்தி (பலாத்காரமாக) உடல் உறவு கொண்டு கற்பழிப்பது முதலிய ஒழுங்கின்மைகள் நடைபெறுகின்றன. 'காமத்துக்குக் கண் இல்லை' என்னும் பழமொழி அனுபவ மொழி போலும்!

## பிறன் இல் விழையாமை;

பிறன் இல் விழையாமை என்றால், பிறன் மனைவியை விரும்பாமை என்பது பொருளாகும். இந்தத் தலைப்பில் திருவள்ளுவர் திருக்குறள் நூலில் பத்துப் பாடல்கள்பாடிப் பிறன் மனைவியை விரும்பக் கூடாது என அறிவுறுத்தியுள்ளார். அவற்றுள் ஒரு பாடலைப் பார்ப்போமே:

''பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு'' (148)

என்னும் பாடலை எடுத்துக் கொள்வோம். பிறன் மனைவியை நோக்காத பேராண்மை (வீரம்), நல்லோர்க்கு அறமும் ஆகும், உயர்ந்த ஒழுக்கமும் ஆகும் என்பது இதன் கருத்து. பாம்பையும் கையால் பிடித்து இழுத்து ஆட்டுவான்; பகைவரையும் பறக்கடிப்பான்; பெரியபோர்க் களத்தில் பம்பரம் போல் சுழன்று பொருது வெற்றிவாகை சூடுவான்-அத்தகைய ஆண்மை (வீரம்) உடையவன் ஒருவன், கட்டழகி ஒருத்தியைக் கண்டால் கலங்குகிறான்-அவளைப் பின் தொடர்கிறான்-அவள் பார்த்தால்

போதும் என்று பல் இளிக்கிறான்- பேசினால் போதும் என்று துவள்கிறான்-அவள் என்ன சொன்னாலும் சொன்னபடியே நடக்கிறான்; இவன் பகைவரிடம் காட்டிய சினம், முறைப்பு, அஞ்சாமை எல்லாம் இப்போது பஞ்சாய்ப் பறக்கின்றன. எதிரியிடம் அகப்பட்டுக் கெஞ்சுகின்ற கோழைபோல் ஆகின்றான் அவளிடம். என்னே வியப்பு? இதனால் தான், ஒரு பெண்ணைப் பொருட்படுத்தி அவளுக்கு அடிமையாகாமல்-கலங்காமல் நிற்கும் காளைத் தன்மையை வெற்று ஆண்மை என்னாமல், 'பேர் ஆண்மை' (பெரியவீரம்) என்றார் வள்ளுவர். பிறன் மனைவியைச் சேராதிருப்பது பேராண்மை என்னாமல் பிறன் மனைவியைக்கண்ணால் ஏறிட்டு நோக்காதிருப்பது பேராண்மை எனக் கூறியுள்ளார். இந்த நுட்பத்தை நுணுகி அறிய வேண்டும். இந்தப் பேராண்மை, அறமும் உயர்ந்த ஒழுங்கும் ஆகும்.

பிறன் மனைவியை விரும்புவதால் உண்டாகும் கேடுகள் பல. ஒரு குடும்பம் பாழாகிறது; பழிபாவம் உண்டாகின்றன; பகையும் போரும் மூள்கின்றன; கொலையும் நடக்கிறது. இராமனின் மனைவியாகிய சீதையை இராவணன் விரும்பியதால், இராமாயணப் பெரும்போர் நிகழ்ந்த வரலாற்றை ஈண்டு நினைவு கூரவேண்டும். ''இந்திரன் கெட்டதும் பெண்ணாலே-சந்திரன் கெட்டதும் பெண்ணாலே'' என்பதையும் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிறன் மனைவியை விரும்பலாகாது எனில், இன்னும் திருமணம் ஆகாத பெண்ணையும் கணவனையிழந்த கைம் பெண்ணையும் விரும்பலாமா என்று வினவலாகாது. திருமணம் ஆகாதவள் இன்னொருவனுக்கு மனைவியாக ஆக . இருப்பவள்-கைம்பெண்ணோ, இன்னொருவனுக்கு

மனைவியாகி இருந்தவள்-எனவே, எல்லாருமே பிறர் மனைவியே என்பதை உள்ளடக்கியே திருவள்ளுவர் 'பிற னில் விழையாமை' என்னும் தலைப்பைத் தந்துள்ளார். கன்னியையோ கைம் பெண்ணையோ திருமணம் செய்து கொள்ள விரும்பலாம்-முறையாகத் திருமணம் செய்து கொள்ளலாம். மணக்காமல் முறைகேடு செய்யலாகாது.

பிறன் மனைவியை வற்புறுத்திப் புணரலாகாது- ஆனால் அவளே விரும்பிவரின், அவளோடு உடலுறவு கொள்ளலாமா என்று வினவலாம். இஃதும் கூடாது. இது, அவளுடைய கணவனை வஞ்சித்த பழிபாவச் செய லாகும். இதனால் இரு தரப்புக் குடும்பங்கட்கும் பேரி ழப்பு நேரும். அவளுடைய கணவன் அறியாமல்-வேறு எவரும் அறியாமல்-அவளோடு தொடர்பு கொள்ள வேண்டி வரும். இதனால் உண்மையான இன்பமும் பெற முடியாது. அச்சத்துடனேயே அனைத்தும் நடைபெற வேண்டியிருக்கும். இதனை,

புக்கவிடத்து அச்சம், போதரும் போது அச்சம்,
துய்க்கும்போது அச்சம், தோன்றாமல் காப்பச்சம்,
எக்காலும் அச்சம் தருமால், எவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்'' (83)

என்னும் நாலடியார்ப் பாடல் நன்கு நவின்றுள்ளது. பிறன் மனைவியை விரும்பி, அவன் வீட்டுக் கொல்லைப்புற வாயிலில் யாருக்கும் தெரியாமல் அவளது வருகைக்காகக் காத்து நிற்கும் முட்டாளைவிட, வடிகட்டிய முட்டாள்- கடைந்தெடுத்த முட்டாள் வேறு யாரும் இல்லை:

''அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்'' (142)

என்பது திருக்குறள் பாடல்.

## கற்பழிப்பு ஒறுப்பு:

திருடனுக்குக் கை-கால் குறைத்தல், கொலை ஆகிய ஒறுப்புகள் தரவேண்டியது போலவே, பிறர் பெண்ணைக் கற்பழிப்பவர்க்கும் தரவேண்டும். திருடனுக்குக் கொலை ஒறுப்பு உண்டு என்பதைச் சிலப்பதிகாரம் அறிவிக்கிறது. கொடியவர்களைக் கொற்றவன் கொலை செய்யலாம் எனத் திருக்குறள் கூறுகிறது. கொடியவர்களுள் கற்பழிப் பவர்கள் மிகவும் கொடியவர்களாவர். பண்டு, பிறர் மனைவியை விரும்பியவருக்குக் கால் குறைத்தல், கொலை ஆகிய தண்டனை உண்டு என்பதை நாலடியார் நூற் பாடல்களால் அறியலாம்.

"காணின் குடிப்பழியாம்; கையுறின் கால் குறையும்;
ஆணின்மை செய்யுங்கால் அச்சமாம்" (84)

"அச்சம் பெரிதால்; அதற்கின்பம் சிற்றளவால்;
நிச்சம் நினையுங்கால் கோக்கொலையால்" (81)

என்பன நாலடியார் நூலின் பாடல் பகுதிகளாகும்.

பிறர் பெண்ணை விரும்புதலைக் கண்டிப்பது மட்டு மன்று; பணத்துக்காக உடம்பை விற்றுப்பிழைக்கும் விலை மகளிரின் தொடர்பும் கூடாது எனத் திருக்குறள், நாலடி யார் முதலிய அறநெறி நூல்கள் கண்டித்துள்ளன. விலை மகளிர் தொடர்பே கூடாதெனின், பிறர் பெண்ணின் தொடர்பு பெரிதும் கொடிய செயலன்றோ?

## பெண்டிரின் குறைபாடுகள்:

ஆடவர் சிலரும் பெண்டிர் சிலரும் இறுதிவரை மணம் செய்து கொள்ளாமலேயே காலம் கழிக்கின்றனர். இவர் களுள் சிலர் இறுதிவரையும் இதில் வெற்றி பெறுவ

தில்லை; இடையிலேயே வழுக்கி விழுகின்றனர். இதனால் தமக்குப் பழியோடு பிறந்த குடிக்கும் இழிவு ஏற்படுகிறது. எனவே, இறுதிவரை நிறை காக்க முடியாத இன்னார், முறையே மணம் செய்து கொள்ளுதலே நன்று.

மணம் செய்து கொண்டு கணவருடன் வாழும் மகளிர் சிலரும், வேறு பிறருடன் கள்ளக் காதல் கொண்டொழுகு வது உலகியலில் கண் கூடு. தன் கணவன் மிகுந்த பேரழகு உடையவனாகவும் இளமைப் பருவத்தினனாகவும எவரை யும் மயக்கும் இசை வல்லவனாகவும் பெண்களின் கண் களைக் கவரும் இனிய பார்வை உடையவனாகவும் நய மான இன்சொல் பேசுபவனாகவும் இருப்பினும், அவனை விட்டுவிட்டு, அயல் ஆடவர்மீது மனம் நாடுவது மகளிர் சிலர்க்கு இயல்பு-என்னும் கருத்தினை, குமர குருபர அடி களார், நீதிநெறி விளக்கம் என்னும் தமது நூற்பாடல் ஒன்றில் தெரிவித்துள்ளார்:-

"ஏந்தெழில் மிக்கான் இளையான் இசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்-வாய்ந்த
நயனுடை இன்சொல்லான் கேள்எனினும் மாதர்க்கு
அயலார்மேல் ஆகும் மனம்". (82)

என்பது அந்தப் பாடல். குமர குருபரர் உலகியலைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். பட்டினத்தார் என்னும் பெரியார் கூறியுள்ள கடுமையான கருத்து ஒன்று அதிர்ச்சி தருகிறது. "கைப்பிடித்து மணந்த கணவன் தன்மேல் கையை வைத்தபடி தூங்கிக் கொண்டிருக்கும்போது, அசையாமல்-ஆடாமல் அவன் கையை எடுத்து அப்பால் வைத்துவிட்டு, அயலான் ஒருவனது இருப்பிடத்துக்கு மனம் ஒப்பிச்சென்று அவ்வயலானுடன் படுத்து உடலுறவு கொண்டுவிட்டு மீண்டும் வந்து தன் கணவன் பக்கத்தில்

படுத்துக்கொண்டு ஒன்றும் அறியாதவள் போல் உறங்கும் வஞ்சகப்பெண்ணை எப்படி நம்பி அவளோடு வாழ முடியும்? ஏ இறைவா'' என்று, பட்டினத்தார், கடவுளை விளித்து நொந்து கூறியுள்ளார். இதனை,

''கைப்பிடி நாயகன் தூங்கையிலே அவன் கையை எடுத்து
அப்புறம் தன்னில் அசையாமல் முன்வைத்து அயல் வளவில்
ஒப்புடன் சென்று துயில் நீத்துப் பின் வந்து உறங்குவளை
எப்படி நான் நம்புவேன் இறைவா கச்சி ஏகம்பனே''.

(திருவேகம்பமாலை-3) என்பது அவரது பாடல். இது போன்ற செய்திகளை அடிப்படையாகக் கொண்டுதான், 'ஆல கால நஞ்சையும் நம்பலாம்-சேலை கட்டிய மாதரை நம்ப முடியாது' எனச் சிலர் கூறிகின்றனர் போலும். ஒரு சிலர் தவறுவதால், அனைவரையும் அவ்வாறு கூறுவது அறநெறியாகாது-அறிவுடைமையும் ஆகாது.

## சமூகக் கட்டுப்பாடு;

மக்கள் தோற்றத்தின் தொடக்கக் காலத்தில், மக்கள் தனித் தனியே சிதறிக் கிடந்தனர். அப்போது ஆண்-பெண் பால் உறவும் ஆடுமாடு போல் கண்டபடி இருந்திருக்கக் கூடும். பின்னர் மக்கள் ஒன்று கூடிச் சமூகமாய்-குழுவாய் வாழத் தலைப்பட்டனர். அதன் பின்னர்ப் பல வகையான சமூகக் கட்டுப்பாடுகள் ஏற்பட்டன. அவற்றுள் ஒன்று பால் உறவுக் கட்டுப்பாடும் ஆகும். இன்னாருக்கு இன்னார் மனைவி – இன்னார்க்கு இன்னார் கணவர் என்ற கட்டுப்பாடு வரையறுக்கப் பெற்று வாழ்க்கை

நடைபெற்றது. ஆணாகட்டும் - பெண்ணாகட்டும் இன்னார் இன்னாரைத் தவிர வேறொருவரையும் விரும்பக் கூடாது என்ற கட்டாயமும் ஏற்பட்டது. இவ்வாறு ஆண்டாண்டு காலமாய் வந்த அடிப்படைப் பழக்கத்தினால், ஆண்-பெண் பால் உறவில், திட்டவட்டமான ஒழுங்கு முறை ஏற்பட்டது. இதன் பயனாய், ஒருவன், தன் தாயுடனோ- தமக்கையுடனோ- தங்கையுடனோ- மகளுடனோ-இன்ன பிறருடனோ உடலுறவு கொள்ள விருப்புவதில்லை. இதேபோல, ஒருத்தி, தன் தந்தையுடனோ-தமையனுடனோ- தம்பியுடனோ- மகனுடனோ இன்ன பிறருடனோ உடலுறவு கொள்ள விரும்புவதில்லை. இந்த ஒழுங்கு முறை, ஆண்டாண்டு காலமாய் ஒழுகிவந்த அடிப்படைப் பழக்கத்தின் பயனாய், உடலோடு மட்டுமன்று-உயிர்ப்பண்போடும் ஊறிப் போன ஒன்றாகும்.

ஒழுங்கு முறையுள்ள இந்த அடிப்படைப் பண்பு இன்னும் பரந்து விரிந்து செல்ல வேண்டும். அதாவது, ஒருவன், தன் மனைவியைத் தவிர, மற்ற மடந்தையரை, தாய் - தமக்கை - தங்கை - மகள் - இன்ன பிறர் போலவே கருதவேண்டும்; இது போலவே, ஒருத்தி, தன் கணவனைத் தவிர, மற்ற ஆடவரை, தந்தை - தமையன் - தம்பி - மகன் - இன்ன பிறர்போலவே கருதவேண்டும். இந்த ஒழுங்குமுறை, உடல் குருதியோடு ஊறிவிடின் - உயிர்ப் பண்போடு இரண்டற இணைந்துவிடின், உலகில் ஆண் - பெண் பால் உறவில் ஒரு சிறிதும் ஊழலுக்கு இடம் இராது. மற்றும், ஆண்களும் பெண்களும் எவ்வாறு பழக வேண்டும் என்ற 'பால் கல்வி' (Sex Education) உலக மக்கள் அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

போலி அன்பு:

கற்புநெறி பிறழ்ந்து தம் கணவர்க்குத் தெரியாமல் வேறு ஆடவருடன் கள்ளத்தனமாக உடலுறவு கொள்ளும் 'விலங்குகள்' ஒருபுறம் கிடக்கட்டும். 'ஒருத்திக்கு ஒருவனே' என்ற கொள்கையுடைய இந்தியா போன்ற நாடுகளில், கற்பு நெறி பிறழாது - வேறு ஆடவரை விரும்பாது - இறுதிவரை தம் கணவருடனேயே நிலைத்திருந்து வாழும் 'பத்தினிப் பெண்டிர்' நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் உளர் என்று கூறலாம். கற்புடைய மகளிர் தொடர்பாகவும் ஒரு குறைக்கு இடம் உண்டு.

கற்புடைய மகளிர் வாழும் பல குடும்பங்களில்கூட கணவன் மனைவியரிடையே உண்மையான அன்பு இருப்பதாகத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்து - யான் அனுபவத்தில் பார்த்து அறிந்துள்ள குடும்பங்கள் சிலவற்றில் கணவன் மனைவியரிடையே போலி அன்பே காணப்படுகிறது. கணவன், தன் குடும்பத்தாரைவிட, மனைவியையும் மனைவியின் தாய் வீட்டாரையுமே மிகவும் விரும்புகிறான். மனைவி, தன் கணவனையும் கணவன் குடும்பத்தாரையும் விட, தன் தாய் வீட்டாரையே மிகவும் விரும்புகிறாள். மனைவி, கணவன் சொல்லைவிட, தன் பெற்றோர் சொல்லையும்உடன் பிறந்தார் சொல்லையுமே மிகவும் மதிக்கிறாள். ஆனால், கணவன், மனைவி சொல்லையே மிகுதியாக மதிக்கிறான். மனைவியின் சொல்லுக்குத் 'தலையணை மந்திரம்' என்னும் சிறப்புப் பட்டம் சூட்டப்பட்டுள்ளது. பெண்பாலாராகிய ஔவையாரே, தம் ஆத்திசூடி நூலில், 'ஏதயல் சொல் கேளேல்' (63) என்று பாடி வைத்திருப்பது ஈண்டு எண்ணத் தக்கது.

தம் கணவரைத் தவிர வேறு ஆடவரை விரும்பாத கற்

புடைய மகளிருள்ளும் சிலர், கணவர் போதிய அளவு புணர்ச்சியின்பம் தராவிடினும், உயர்ந்த சிறந்த ஆடை அணிகலன்கள் வாங்கித் தராவிடினும், போதிய அளவு மற்ற உடைமைகளையும் பெற்றிராவிடினும், தாம் விரும் புவனவற்றையெல்லாம் செய்ய இடம் தராவிடினும், கண வரைப் போதிய அளவு மதிப்பதில்லை. கணவன்மீது அச் சம் இருந்தால் போதாது - உண்மையான அன்பு இருக்க வேண்டும்; கடமையுணர்வு இருந்தால் போதாது – கனிந்த காதல் உணர்வு வேண்டும். ஒப்புக்கு வாழும் குடும்ப வாழ்க்கை போதாது - உண்மையான அன்புடன் வாழும் குடும்ப வாழ்க்கையே வேண்டும்.

மனைவி ஒழுங்காயிருப்பது மட்டும் போதுமா? கணவ னும் ஒழுங்குடன் ஒழுகவேண்டும். சில குடும்பங்களில் ஆடவர் மது அருந்தியும் சூதாடியும் உள்ள பொருள்களை யெல்லாம் இழந்து மனைவி மக்களைத் தவிக்கச் செய்கின் றனர். குடிக்கும் சூதுக்கும், மனைவியை அடித்து உதைத்து அவளது தாலியை முதற்கொண்டு வலிந்து பற்றிச் செல் லும் குரங்குப் பயல்களும் உளர். குடித்துவிட்டு வரின் மனைவியைத் திட்டுவதும் உதைப்பதும் ஆடவர் சிலரின் அன்றாட வாடிக்கையான வழக்கமாகும். மனைவிமட்டும் வேறு ஆடவரை விரும்பலாகாது; ஆடவர் மட்டும் வேறு பெண்டிரை விரும்பலாமா? கட்டின கட்டழகு மனைவி யிருக்க, வேறு 'கழுதைகளுடன்'தொடர்பு கொண்டு மனை வியை நடுத்தெருவில் விடும் மடையரும் உளர். இத்தகைய கணவருடன் மனைவி வாழ்க்கை நடத்துவது எவ்வாறு? எனவே, ஆடவரிடத்தும் உண்மையான அன்பும் ஒழுங்கும் இருக்கவேண்டும்.

## கலந்த காதல்:

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள அன்பு அல்லது காதல் எனப்படுவது, அழகு - புணர்ச்சி - ஆடை அணிகலச் சிறப்பு - மணமகள் விலைப்பணம் (வரதட்சணை-Dowry) - மற்ற உடைமைகள் ஆகியவை காரணமாகச் செயற்கை முறையில் உண்டாகக் கூடியதன்று; இவை காரணமாக உண்டாயின், இவை போனால் காதலும் கனிவும் உடன்போய்விடும். இவ்வாறின்றி, இயற்கையாக இருவர் உள்ளமும் தாமாகக் கலந்த காதலே உண்மைக் காதலாகும். இங்கே குறுந்தொகை என்னும் நூலின் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது. உள்ளங் கலந்த காதலரிடையே பேச்சு காணப்படுகிறது. காதலன் காதலியிடம் கூறுகிறான்: "நாம் இருவரும் கூடுவதற்கு முன்பு, என் தாயும் உன் தாயும் யாரென அறியோம்; என் தந்தையும் உன் தந்தையும் எவரெனத் தெரிந்திலோம்; யானும் நீயும் எந்த வழியிலும் இதற்கு முன் அறிந்தவர் இல்லை; ஆனால், செம்மண் நிலத்திலே பெய்த மழைநீர், அம்மண்ணின் நிறம் - சுவை - மணம் ஆகியவற்றைப் பெற்று அதனோடு இரண்டறக் கலந்து விடுவது போல, உண்மை அன்புடைய நம் இருவர் உள்ளங்களும் இயற்கையாகத் தாமாக ஒன்றிக் கலந்துலள்ளன"-- எனக் காதலன் கூறுகிறான். இனிப் பாடல் வருமாறு:--

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம் முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந் தனவே". (40)

என்பது அந்தக் குறுந்தொகைப் பாடல். இவ்வாறு

இயற்கையாகத் தாமாகக் கலந்த காதல் உள்ளங்கள் வாழும் குடும்ப வாழ்க்கையே உண்மையான - ஒழுங்குள்ள வாழ்க்கை யாகும்.

இது காறும், மேலே, புறப் பொருள் துறையும் அகப் பொருள் துறையும் பேசப்பட்டன; இரு துறைகளிலும் உள்ள ஊழல்கள் - ஒழுங்கின்மைகள் சுட்டிக் காட்டப் பட்டன; ஊழல்களைக் களைந் தெறிந்து ஒழுங்கை நிலை நாட்டக் கூடிய முறைகளும் பரிந்துரைக்கப்பட்டன.

# 8. உலகுக்கு ஒரே பொதுமொழி

உலகுக்கு ஒரே பொது மொழி போதும் என்பதே இந்தத் தலைப்பின் குறிக்கோள். இந்த இலக்கை அடைய, உலக மொழிகள் தோன்றிய - வரலாற்றுக்கு முற்பட்ட பண்டைக் (pre-historical period) காலத்திலிருந்து நாம் பயணம் தொடங்க வேண்டும்.

## கடவுள் தொடர்பு:

மொழிகளைக் கடவுளோடு தொடர்பு படுத்துவது ஒரு மரபாக உள்ளது. தமிழ் மொழியை முருகக்கடவுள் படைத்ததாகச் சொல்வதுண்டு. சிவனாகிய கடவுள் மதுரைத் தமிழ்க் கழகத்தில் புலவர்களோடு தாமும் ஒரு புலவரா யிருந்து தமிழ் ஆராய்ந்தார் என இலக்கியங்கள் கூறுகின்றன.

''சிறைவான் புனல் தில்லைச் சிற்றம் பலத்தும்
என் சிந்தை யுள்ளும்
உறைவான் உயர் மதிற் கூடலின் ஆய்ந்த
ஒண் தீந் தமிழ்...''

என்பது, மாணிக்க வாசகர் அருளிய திருக் கோவையார் என்னும் நூலின் பாடல் (20) பகுதியாகும்.

''கண்ணுதற் பெருங் கடவுளும்
கழகமோடு அமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்தவிப்
பசுந் தமிழ்...''

(திருவிளையாடல் -- திரு நாட்டுப் படலம் (57)

என்பது பரஞ்சோதியாரின் திருவிளையாடல் புராணப் பாடல் பகுதி யாகும். கடவுளும் தமிழ் மொழியை ஆய்ந்து சுவைத்ததாக இப்பாடல்கள் அறிவிக்கின்றன. மற்றும், கிரேக்கர், ஸ்காண்டிநேவியர், எகிப்தியர், சீனர் முதலி யோரிடையேயும், மொழியைக் கடவுள் படைத்தார் என்ற நம்பிக்கை உண்டு. சமசுகிருத மொழியிலுள்ள இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னும் நான்கு வேதங்களையும் கடவுள் படைத்தார் என்று சொல்லுவர். இவையெல் லாம், மொழிக்கும் நூல்கட்கும் பெருமை தேடக் கூறப் படுவன வாகும். சமசுகிருதத்தைத் 'தேவ மொழி' என்று கூறுவதும் இத்தயைதே.

கடவுள் மொழிகளைப் படைத்தா ரெனில், உலகுக்கு ஒரே மொழியை யல்லவா படைத்திருக்க வேண்டும்? பல மொழிகளைப் படைத்தது ஏன்? தொடக்கத்தில் இருந்த மூல மொழிகள் சில அழிந்திருக்கின்றனவே! கிரேக்கம், இலத்தீன், சமசுகிருதம் முதலிய மொழிகள் ஏட்டள வோடு நின்று பேச்சு வழக்கு அற்று விட்டனவே! பிற் காலத்தில் பல்வேறு மொழிகள் புதிதாகக் கிளைத்துத் தோன்றியுள்ளனவே! கடவுள் படைத்தார் எனில், இந்த நிலைமைகள் ஏற்பட்டது ஏன்? முதலில் சில மொழிகளைப் படைப்பதும், பிறகு அவற்றை அழித்து விடுவதும், பின் னர் வேறு சில மொழிகளைப் படைப்பதும் கடவுட் செய லுக்கு ஏற்குமா? இந்தப் பொருந்தாச் செயலைப்பொருந்த வைப்பதற்காகச் சிலர் சப்பைக் கட்டு கட்டி வேறொரு கதை அளக்கின்றனர்: அதாவது:--- முதலில் கடவுள் ஒரே மொழியைத்தான் படைத்தார்; இதனால் ஒரே மொழி பேசிய மக்கள் அனைவரும் ஒற்றுமையா யிருந்ததனால் எல்லாச் செயல்களையும் தாமே எளிதில் முடித்துக் கொண்டனர்; இதனால் திமிர் கொண்டு கட

வுளை மறந்து விட்டனர்; எனவே, இந்நிலையை மாற்றி மக்களைப் பிரிப்பதற்காகக் கடவுள் அந்த ஒரு மொழியைப் பல மொழிகளாகப் பிரித்து விட்டார் - என்பது அந்தக்கதை. இக் கதையில் சிற்சிலர் சிற்சில மாற்றங்கள் கூறலாம்-

இந்தக் கதையின் துணைக் கொண்டு சில செய்திகளை உய்த் துணரலாம். ஒரே மொழி இருப்பது உலக மக்களை ஒன்று படுத்தும் ஒரு கருவியாகும் - ஒரு மொழியிலிருந்து பல மொழிகள் பிரிவதுண்டு - மொழி பிரியப் பிரிய மக்களிடையே பிளவு ஏற்படும் - என்னும் செய்திகள் இக்கதையால் அறியப்படலாம். ஆனால் இது கட்டுக் கதையே! எண்ணற்ற பொருள்களை உலகில் மக்கள் படைத்திருப்பது போலவே, மொழிகளையும் மக்களே படைத்தனர் என்னும் கொள்கையே உண்மையானது. தொடக்கக் காலத்தில் மக்களின் பல்வேறு ஒலிப்புக்களிலிருந்து மொழிகள் இயற்கையாகத் தோன்றத் தொடங்கியிருப்பினும், பின்னர் அந்த ஒலிப்புகட்கு உருவம் தந்து இலக்கிய இலக்கணங்களைப் படைத்து 'மொழி' என்னும் முத்திரை யிட்டமை முற்றிலும் மக்கள் செயலே.

## மொழியின் தோற்றம்:

'உலகுக்கு ஒரே பொது மொழி' என்னும் கொள்கையை உருவாக்க, மொழிகள் தோன்றிய வரலாறு குறித்து ஒரு சிறிது எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. வாயிலிருந்து வெளிப்படும் ஒலியே-ஒலிப்பே மொழியெனப் படுவது. இது இயற்கையாக எழுந்தது என்பர் ஒரு சாரார். பறவை-விலங்குகளின் ஒலிகளைக் கேட்டு அவ்வாறே மக்கள் தாமும் ஒலியெழுப்பினர் என்பர் இன்னொரு சாரார். பல்வேறு உணர்ச்சிகளையும்-மன எழுச்சி

களையும்-வியப்புக்களையும் அடைந்தபோது அவற்றின் காரணமாக மக்கள் பல்வேறு வகை ஒலிகளை எழுப்பினர் என்பர் மற்றொரு சாரார். தம் கருத்தைப் பிறர்க்கு அறிவிப்பதற்காகச் செய்த சைகைகளுக்கேற்ற வாயொலியை மக்கள் எழுப்பினர் என்பர் வேறொரு சாரார். இந்த ஒலி வகைகளே பின்னால் மொழியாக உருவெடுத்தன என்பது பொதுக் கருத்து; இதில் கருத்து வேற்றுமைக்கு இடமில்லை.

பறவை-விலங்குகட்கு மொழியில்லை என்பர்; இது சரியில்லை; அவற்றிற்கும் மொழி உண்டு. வேற்று மொழியாளர்களின் ஒலிப்பை நம்மால் புரிந்துகொள்ள முடியாதது போலவே, பறவை-விலங்குகளின் கருத்தறிவிக்கும் ஒலிப்பையும் நம்மால் புரிந்துகொள்ள இயலவில்லை. அவ்வளவுதான்! கருத்தறிவிக்க மக்கள் முதலில் நீண்ட ஒலி எழுப்பினர்-மக்கள் வாக்கியமாகப் பேசினர் என்பது இதனால் அறியப்படும். வாக்கியம் என்பது பல சொற்களின் தொடர்ச்சி. இந்தச் சொற்றொடர்களிலிருந்து சொற்கள் தனித்தனியே பின்னர்ப் பிரித்து அறியப்பட்டன.

மக்கள் முதலில் தனித்தனிச் சொற்களைப் பேசினர்-பின்னரே சொற்றொடர்களாகப் பேசினர் எனக் காரண காரிய முறையில் மொழி தோன்றியதாகச் சிலர் சொல்வது பொருந்தாது. இன்றும் மக்கள் சொற்றொடர்களாகப் பேசுகின்றனரே யன்றித் தனிச்சொல் பேசுவதில்லை. பண்டுமொழி சொற்றொடராகத் தொடங்கிற்று என்பதே உளவியல் கொள்கைக்கு ஏற்புடையதாகும்.

பேச்சொலி காற்றில் கலந்து மறைந்து போகாமல் நிலைத்து நிற்பதற்காகப் பேச்சொலியைப் பதிவு செய்ய

லாயினர். பேச்சொலிக்கு உருவம் தந்த பதிவே எழுத்து மொழியாகும். பேச்சு மொழி ஒரு மாந்தரின் உண்மை யான உருவம் போன்றது. எழுத்து மொழியோ, அம்மாந் தரின் புகைப்படம் போன்ற செயற்கை அமைப்பாகும்.

## எழுத்து மொழி:

சொற்றொடர்களிலிருந்து தனித்தனிச் சொற்கள் பிரிந்தன என்றோம். சொற்களிலிருந்து தனித்தனி எழுத் துகள் பிரித்து அறியப்பட்டன, 'அரிசி' என்னும் சொல்லை எடுத்துக் கொள்வோம்; அதை அலகிடுங்கால், அ-ரி-சி-என மூன்று ஒலி இருக்கக் கண்டனர். ஒவ்வோர் ஒலிக்கும் ஒரு வரிவடிவக் குறியீடு அமைக்கத் தொடங்கினர். இவ்வாறு பல எழுத்துக்கள் உருவாக, பல எழுத்துக்களைச் சேர்த் துச் சொற்களையும், பல சொற்களைச் சேர்த்துச் சொற் றொடர்களையும் எழுதலாயினர், இது பெரும்பாலும் எல்லா மொழிகட்கும் பொருந்தும். ஆனால், சீனமொழிச் சொல் ஒவ்வொன்றும் படம் போன்ற ஒரு வகைக் குறி யீட்டைப் பெற்றுள்ளது. இதுபோல் இரண்டொரு விதி விலக்கும் இருக்கலாம். படம் போன்றிருப்பினும், பேச்சு மொழிக்குரிய வரிவடிவமாக இருப்பது எண்ணத்தக்கது. இவ்வாறு எழுத்து மொழி தோன்றலாயிற்று. பின்னர் எழுத்து மொழி, பல மொழிகளிலும் பல நூல்களாகப் பரந்து விரிந்து வளர்ந்து வரலாயிற்று.

## ஒலி ஒப்புமை:

பொதுவாக எந்த மொழியை எடுத்துக்கொள்ளினும், அந்த மொழியிலுள்ள ஒரு சொல்லின் வரிவடிவத்தை எழுதுதற்கு வேண்டிய எழுத்துக்கள், பெரும்பாலும் எல்லா மொழிகளிலும் இருக்கும். எடுத்துக்காட்டாக, 'முருகு' என்னும் ஓர் ஒலி வடிவை எடுத்துக் கொள்ளின்,

அதற்குத் தமிழ் மொழியில் 'முருகு' எனவும், ஆங்கில மொழியில் 'Muruku' எனவும், பிரெஞ்சு மொழியில் 'MOUROUKOU' எனவும் வரிவடிவம் கொடுக்க முடியும். இந்தக் கருத்தை இங்கே தந்ததன் நோக்கம், பெரும்பாலான ஒலி வடிவங்கள் எல்லா மொழிகளிலும் ஒத்திருக்கும்-சிறுபான்மை ஒலி வடிவங்களே மொழிக்கு மொழி வேறுபட்டிருக்கும் என்னும் கருத்தை வலியுறுத்துவதே யாகும். எடுத்துக்காட்டாக, இலத்தீன் மொழியிலுள்ள 'F' என்னும் எழுத்து தமிழில் இல்லை. தமிழில் உள்ள குறில்-நெடில் பாகுபாடும், ள, ற முதலிய எழுத்துக்களும் இலத்தீனில் இல்லை. இலத்தீனில் இல்லையெனில், அம் மொழியின் எழுத்தால் எழுதப்படும் பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் இல்லை என்பது பொருளாகும். தமிழில் உள்ள 'ழ' என்னும் எழுத்து இலத்தீனிலும் அதன் நேர் வழிமொழிகளாகிய பிரெஞ்சு, இத்தாலி முதலிய சில மொழிகளிலும் உண்டு. அதாவது 'G' என்னும் வரி வடிவம் அம்மொழிகளில் 'ழெ' எனவும், 'J' என்னும் வரி வடிவம் அம்மொழிகளில்'ழி' எனவும் ஒலிக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில் 'G' என்பது 'ஜி' எனவும், 'J' என்பது 'ஜே' எனவும் ஒலிக்கப்படுகின்றன. 'ழ' என்னும் தமிழ் எழுத்து ஒலி ஆங்கிலத்திலும் இல்லை; இன்னும் உலக மொழிகள் பலவற்றிலும் இல்லை.

மற்றும், சமசுகிருத மொழியில் உள்ள க,ச,ட,த,ப என்னும் எழுத்துக்களின் நந்நான்கு வகை வடிவங்களும், ஹ, க்ஷ, ஷ, ஜ, ஸ, என்னும் கிரந்த எழுத்துகளின் வடிவங்களும் தமிழில் இல்லை. இவ்வாறு சிற்சில வடிவங்களே மொழிக்கு மொழி வேறுபட்டிருக்குமேயன்றி, பெரும்பாலான வடிவங்கள் எல்லா மொழிகளிலும் ஒத்தே இருக்கும்.

சமசுகிருதத்தின் க,ச,ட,த,ப- எழுத்துக்களின் நந்நான்கு வகை வரிவடிவங்களின் ஒலியைத் தமிழில் வேறு வகையில் காணலாம். அகம், பக்கம், தங்கம், தங்ங்கம் (ஒற்றளபெடை) என்னும் நான்கு சொற்களிலும் 'க' என்னும் எழுத்து, வெவ்வேறு வகையான நான்கு ஒலிகள் பெறுவதை அறியலாம. பேசல், அச்சம், தஞ்சம்,தஞ்ஞ்சம் என்னும் நான்கிலும்'ச என்னும் எழுத்தும்,-இடம்,கட்டம். பண்டம், பண்ண்டம் என்னும் நான்கிலும் 'ட' என்னும் எழுத்தும்,-மோதல், அத்தம், பந்தல், பந்ந்தல் என்னும் நான்கிலும் 'த' என்னும் எழுத்தும்,-பதம், அப்பம்,கம்பம் கம்ம்பம் என்னும் நான்கிலும் 'ப' என்னும் எழுத்தும், வெவ்வேறான நந்நான்கு ஒலிகளைப் பெறுவதுணரலாம். மற்றும் 'ஹ' என்னும் ஒலியை 'ஃ அ என்னும் கூட்டெழுத்தொலியாலும், 'க்ஷ' என்பதை'ட்ச' என்பதாலும்,'ஷ'என்பதை'ழ்ச'என்பதாலும்,'ஜ' என்பதை 'ஞ்ச' என்பதாலும் 'ஸ'என்பதை 'ஃச' (சரஸ்வதி = சரஃச்வதி) என்பதாலும், சரிக்கட்டலாம். மற்றும்,'F' என்பதை 'ஃப' என்னும் கூட்டொலியால் (Africa = ஆஃபிரிக்கா) தமிழில் ஒலிக்கலாம் தமிழ் என்பதை 'Thamizh' என ஆங்கிலத்தில் எழுதலாம். வேண்டுமானால் இவ்வெழுத்துகட்கு நேரான புது வரிவடிவங்களைத் தமிழில் உண்டாக்கிக் கொள்ளலாம். இவ்வாறாக, பெரும்பாலும், எந்த ஒரு மொழியின் எழுத்தொலியையும் வேறு எந்த ஒரு மொழியிலும் சரிக்கட்டிக் கொள்ளலாம்.

ஆங்காங்குள்ள தட்ப வெப்பம், பிற சூழ்நிலைகள், இவற்றால் உண்டான குரல் உறுப்பு ஒலி வேறுபாடுகள் முதலியவை காரணமாக, பல்வேறிடங்களில் வாழ்ந்த பல்வேறு மக்களிடையேபல்வேறு ஒலிக் குறியீடுகள் தோன்றின. எனவே, இந்த மொழியில் அந்த எழுத்து இல்லை -

அந்த மொழியில் இந்த எழுத்து இல்லை-என்பதாக நிறை குறை கூறிக்கொண்டிருப்பதில் ஒரு பயனும் இல்லை. இன்னின்ன ஒலித்தொகுதிக்கு இன்னின்ன பொருள் என்பதாகப் பாகுபாடு செய்து கொண்டும், அவற்றிற்கேற்ப வரிவடிவ எழுத்துக்களை அமைத்துக்கொண்டும் மக்கள் மொழிகளைத் தோற்றி வளர்த்து வரலாயினர்.

பல்வேறு மொழிகள்:

இப்போது, போக்குவரவு ஊர்திகள், தொலைபேசி, தொலைக்காட்சி, செய்தித்தாள் முதலிய துணைகளால் உலகம் சுருங்கி நெருங்கியுள்ளது. வெவ்வேறிடங்களில் தொலைவில் உள்ள நாடுகள் பலவும், அண்டை வீட்டுக்கு அண்டை வீடுபோல் ஒன்றோடொன்று மிகவும் நெருங்கியுள்ளன. பண்டைக் காலத்தில் இந்த வாய்ப்பு இல்லை. ஓரிடத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றி இன்னோரிடத்தில் வாழ்ந்த மக்களுக்கு ஒன்றும் தெரியாது. அமெரிக்கக் கண்டமே, இற்றைக்குச் (1980) சுமார் ஐந்நூறு ஆண்டுகட்கு முன்புதான் ஐரோப்பியரால் கண்டு பிடிக்கப்பட்டது. ஆத்திரேலியாவும், ஆப்பிரிக்க நாடுகள் பலவும் இன்னவே, கண்டு பிடிக்க வேண்டியவை இன்னும் உள்ளன.

இவ்வாறாக, மக்கள் வெவ்வேறிடங்களில் பிரிந்து வாழ்ந்ததால், ஆங்காங்கே, ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பல்வேறு மொழிகள் தோன்றியிருந்தன. ஒரே மொழி மக்கள், சில காரணங்களால் வெவ்வேறிடங்கட்குப் பிரிந்து செல்ல, ஆங்காங்கிருந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறு, அந்த ஒரே மொழி பல மொழிகளாகப் பிரிந்ததும் உண்டு. இதற்கு எடுத்துக்காட்டாக, சமசுகிருதத்தின் மூல மொழி

யினையும் அதிலிருந்து பிரிந்த சமசுகிருதம், இந்தி, குச ராத்தி, மராத்தி, முதலிய மொழிகளையும் கூறலாம் ஆங்கிலமும் செர்மனியும் ஒரு மூலப் பொது மொழி யிலிருந்து பிரிந்தனவாகச் சொல்லப்படுகின்றன. தமிழி லிருந்து, மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு, குடகு, கோண்டு, கோதம், கூ, கொங்கணி, தோடம் முதலிய மொழிகள் தோன்றின என்பதைத் தமிழர் அல்லாத மற்ற மொழியினர் ஒத்துக்கொள்ளாவிடினும், தமிழ் உட்பட இவ்வனைத்து மொழிகளும் ஒரே மூலப் பொதுமொழி யிலிருந்து தோன்றின என்பதையாவது அனைவரும் ஒத்துக் கொள்வர்.

மற்றும், ஒரு மொழியினர் பல இடங்களைப் பிடித்துக் கொண்டு ஆட்சி புரியுங்கால், தமது மொழியினை ஆங் காங்கு வேரூன்றச் செய்து விடுவர்; இதனால், ஆங்காங் கிருந்த மொழிகள் மறைய, வந்த புதுமொழி அம்மொழி கட்குள் புகுந்துகொண்டு சில மாறுதல்களுடன் பல மொழி களாகத் தோற்ற மெடுப்பதும் உண்டு. இதற்கு எடுத்துக் காட்டு வருமாறு:-

கி.மு. முதல் நூற்றாண்டில் உரோமப் பேரரசு இத் தாலியில் நிலைகொண்டு, ஐரோப்பாவில் மேன்மேலும் பல நாடுகளை வென்று, ஆங்கெல்லாம் தன் ஆணையுடன் இலத்தீன் மொழியையும் பரப்பி நிலைபெறச் செய்தது. ஆங்கு வழங்கிய மொழிகளின் இடத்தை நூல் வழக்கிலே யன்றிப் பேச்சு வழக்கிலும் இலத்தீன் பிடித்துக் கொண் டது. நாளடைவில் இம்மொழி சிதைந்து பல்வேறு மொழி யுருவம் பெற்றது. இத்தாலியன், பிரெஞ்சு, ஸ்பானியம், போச்சுகீசியம், ருமேனியன் முதலிய மொழிகள் இலத்தீ னின் சிதைவு மொழிகளே. அதனால் இம்மொழிகளை 'ரோமான்சு' (Romance) அதாவது – 'ரோமன் மொழிகள்'

எனல் மரபு. அமெரிக்கக் கண்டத்தில், பிரெஞ்சு, ஸ்பானியம், போர்ச்சுகீசியம் ஆகிய மொழிகள் வழங்கப்படும் ஆர்ஜென்டினா, பிரேசில், கொலம்பியா, குவாட்டமாலா முதலிய இருபது நாடுகள் 'இலத்தீன் அமெரிக்கா' என வழங்கப்படுவது ஈண்டு ஒப்புநோக்கற் பாலது.

ஆங்கில மொழிகூட இலத்தீனிலிருந்து சில கூறுகளைக் கடன் வாங்கி வளர்ந்துள்ளது. எண்ணற்ற சொற்கள் ஆங்கிலத்திலும், இலத்தீனின் 'பேச்சு மொழி' (Spoken Latin) எனப்படும் பிரெஞ்சு மொழியிலும் ஒத்துள்ளன ஒரேசொல் ஆங்கிலத்தில் ஒரு மாதிரியாகவும் பிரெஞ்சு மொழியில் வேறொரு மாதிரியாகவும் ஒலிக்கப்படுவது வியப்பே. 'Table' என்பது ஆங்கிலத்தில்'டேபிள்' எனவும் 'பிரெஞ்சில்'தாப்ளு'எனவும், 'Latin' என்பது ஆங்கிலத்தில் 'லேட்டின்' எனவும் பிரெஞ்சில் 'லத்தா(ன்)' எனவும், 'Page' என்பது ஆங்கிலத்தில் 'பேஜ்' எனவும் பிரெஞ்சில் 'பாழ்' எனவும், மற்றும் 'Invitation' என்பது ஆங்கிலத்தில் 'இன்வைடேஷன்' எனவும் பிரெஞ்சில் 'ஆ(ன்)விதாசிய(ன்)-எனவும், 'Encouragement' என்பது ஆங்கிலத்தில் 'எங்கரேஜ்மெண்ட்' எனவும் பிரஞ்சு மொழியில் 'ஆங்குராழ் மா(ன்)' எனவும் ஒலிக்கப்படுவது வியப்பாயுள்ளது. மொழிகளின் ஒப்புமைப் போக்குக்காக இவை ஈண்டு எடுத்துக்காட்டப்பட்டன.

வேற்றுமொழியின் செல்வாக்கான – கட்டாயமான ஊடுருவலால் ஒரு மொழி பல மொழிகளாகச் சிதைவதும் உண்டு. தென்னிந்தியத் திராவிட மொழிகளாகிய மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலியவை, சமசுகிருத மொழியின் வன்மையான ஊடுருவலாலேயே தமிழினின்றும் வேறுபட்டன. எடுத்துக்காட்டு வேண்டுமெனில்,

தமிழும் பழங் கன்னடமும் ஒத்திருப்பதைக் காணலாம். தமிழ்நாட்டின் முப்பெரும் பகுதிகளில் ஒன்றான சேரநாடு தான் இப்போது கேரள நாடாக மாறியுள்ளது. சேரநாட்டில் வழங்கிய தமிழ், சமசுகிருதத்தின் மிகுதியான ஊடுருவலால் 'மலையாளம்' என்னும் தனிமொழியாகப் பிரிந்தது. ஐரோப்பியர் சிலர் தமிழை 'மலபார் (மலையாள) மொழி' என்னும் பெயரால் வழங்குவது ஈண்டு எண்ணத் தக்கது. மலையாளிகள் பலர், தமிழை மறந்து, மலையாளம் சமசுகிருதத்திலிருந்து பிறந்தது என்று சொல்லும் அளவுக்குச் சமசுகிருதம் மலையாளத்தில் ஊடுருவியுள்ளது.

மொழிக் குடும்பங்கள்:

மேற்கூறியவாறு, ஒரு மூல மொழியும் அதிலிருந்து பிறந்த பல மொழிகளும், ஒரு மூல மொழியும் அதிலிருந்து சில சூழ்நிலைகளால் பிரிந்த பல மொழிகளும், ஒரு மூல மொழி திரிந்து வேற்று மொழியின் கலப்பினால் உருமாறியதால் உண்டான பல மொழிகளும், தனித்தனியே 'ஒரு குடும்பம்' என வழங்கப்படுகின்றன. திராவிட மொழிக் குடும்பம், சீனோ-திபேத்திய மொழிக் குடும்பம், சித்திய மொழிக் குடும்பம், இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பம் ஆஃபிரிக்க மொழிக் குடும்பம், அமெரிக்க மொழிக் குடும்பம் முதலியனவாகப் பல்வேறு மொழிக் குடும்பங்கள் உள்ளன.

ஒரு குடும்ப மொழிகள் நாளடைவில் தமக்குள் பல்வேறு வகையான மாறுபாடுகள் பெற்றிருப்பினும், அவற்றின் அடிச்சொற்கள் பெரும்பாலும் ஒத்திருக்கும். நெருக்கம் குறைந்த ஒரு குடும்ப மொழிகளில் பெரும்பாலான வேர்ச் சொற்கள் ஒத்தில்லாவிடினும், அப்பா-அம்மா

முதலியன போன்ற முறைப் பெயர்களும், ஒன்று-இரண்டு போன்ற எண்ணுப் பெயர்களும், இன்ன சிலவுமாயினும் ஒத்திருக்கும். இவ்வாறான ஒற்றுமைகளைக் கொண்டு ஒரு குடும்ப மொழிகளை அடையாளம் கண்டு கொள்ளலாம். இந்த அடிப்படையிலேயே உலகமொழிகள் மேற்கூறிய பல்வேறு குடும்பங்களாகப் பிரிக்கப்பட் டுள்ளன.

## மொழி ஒப்பியல் ஆய்வு:

மொழிகள் பல குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து 'மொழி ஒப்பியல் ஆராய்ச்சிகள்' விரிவும் வளர்ச்சியும் அடைந்து வரலாயின. அறிஞர் பலர், மொழிகள் பலவற்றுக்கிடையேயுள்ள ஒப்புமைகளை ஆய்ந்து 'மொழி ஒப்பியல்' (Comparative Philology) நூல்கள் பல வெளியிட்டுள்ளனர். அவற்றுள் ஓரிரண்டைக் குறிப்பிடலாம். சர். வில்லியம் ஜோன்சு (Sir William Jones) என்பவர், சமசுகிருதத்துக்கும் ஐரோப்பிய மொழிகட்கும் இடையேயுள்ள ஒப்புமையை ஆய்ந்து தமது படைப்பை கி.பி. 1786ஆம் ஆண்டில் வெளியிட்டார். கால்டுவெல் (Calwell) என்னும் அறிஞர், தென்னிந்தியத் திராவிட மொழிகளின் இலக்கண ஒப்புமைகளை ஆராய்ந்து, 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (Comparative Grammar of Dravidian Languages) என்னும் அரும்பெரு நூலைப் படைத்து கி.பி. 1856-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இதற்காக இவர்க்கு, இங்கிலாந்திலுள்ள கிளாஸ்கோ பல்கலைக் கழகம் 'டாக்டர்' என்னும் சிறப்புப் பட்டம் அளித்துச் சிறப்பு பெற்றது.

## தமிழ் இலத்தீன் பாலம்:

இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பமும் திராவிட மொழிக் குடும்பமும் தமக்குள் வேறானவை. இலத்தீன்

மொழி, இந்தோ-ஐரோப்பியக் குடும்ப மொழிகளுள் மிகவும் இன்றியமையாததாகும். தமிழ் மொழியோ, திராவிடக் குடும்ப மொழிகளின் தலைமை மொழியாகும். இரு வேறுபட்ட குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் மொழிக்கும் இலத்தீன் மொழிக்கும் இடையே ஒற்றுமையாக உள்ள அமைப்புகளையும் இலக்கண அமைதிகளையும் விளக்கி, 'தமிழ் இலத்தின் பாலம்' (Bridge Between Tamill and Latin) என்னும் பெயரில் யான் ஓர் ஆய்வு நூல் எழுதி கி.பி. 1970 ஆம் ஆண்டு வெளியிட்டேன். (எனக்கு எந்தப் பட்டமும் கிடைத்திலது).

கீக்கர்ஸ் (E. Kieckers) என்னும் அறிஞர், உலகில் 176 உருப்படியான மொழிகள் உள்ளன என்றும், அவற்றுள் இருபது அல்லது முப்பது மொழிகள் இன்றியமையாத நாகரிக இனத்தைச் சேர்ந்தவை என்றும், அவற்றுள் பன்னிரண்டு உலகம் அளாவிய மொழிகள் என்றும், அப்பன்னிரண்டனுள் இந்தோ-ஐரோப்பிய மொழிகள் எட்டு எனவும் கூறியுள்ளார். இவரது கருத்தின்படி நோக்கினும், உலகம் தழுவிய மொழிகள் பன்னிரண்டனுள் இந்தோ-ஐரோப்பிய மொழிகள் எட்டுப் போக மீதி நான்கனுள் தமிழ்மொழி ஒன்று என்பது கொள்ளக் கிடக்கிறது. எனது 'தமிழ் இலத்தீன் பாலம்' என்னும்நூலிலிருந்து உய்த்துணர வேண்டியதாவது: உருப்படியான உலக மொழிகள் பலவும் ஓரளவாயினும் ஒத்திருக்கும் என்னும் செய்தியே யாகும். தமிழிலுள்ள இலக்கண விதிகள் சில, ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலுங்கூட ஒத்துள்ளன. அவற்றையெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகு மாதலின் விடுப்பாம்.

### உலகப் பொது மொழி:

முன் கூறியதுபோல், போக்குவரவு ஊர்திகள், தொலைபேசி, தொலைக் காட்சி, செய்தித் தாள், இன்ன

பிற துணைகளால், உலக நாடுகள் ஒன்றுக் கொன்று மிகவும் நெருங்கியுள்ளமையால், உலக மக்கள் ஒருவரோ டொருவர் தொடர்பு கொள்ள உலகுக்கு ஒரு பொது மொழி வேண்டும். அது எம் மொழியாக இருக்கக்கூடு மெனில், இப்போது பெரும்பாலும் உலகத்தை இணைத் துக் கொண்டிருக்கின்ற ஆங்கில மொழியாகத்தான் இருக்க முடியும். அங்ஙன மெனில், உலகத்தார் அனை வரும் ஆங்கிலம் கற்க வேண்டும். சில நாடுகளில் ஆங் கிலம் தெரியாத தலைவர்கள் நாடாளுவது என்னவோ உண்மைதான்! இருப்பினும், இந்நிலைமை எதிர் காலத்தி லும் நீடிக்க முடியாது. இவர்கள் மற்றவர்களோடு தொடர்பு கொள்ள, இடையே, ஆங்கிலம் அறிந்த மொழி பெயர்ப்பாளர் ஒருவர் தேவைப்படுகிறார். இதனால் காலம் வீணாகிறது. எல்லாருக்கும் ஆங்கிலம் தெரிந் திருந்தால் காலப் பாழ் நேராது; பொருள் புலப்பாடும் தெளிவாயிருக்கும்.

எழுத்து அறிமுகம்:

ஆங்கிலத்துக்குத் தகுதி யுண்டாக்க எழுத்தும் ஒரு வகை வாய்ப்பாக உள்ளது. உலகில் பின்னணியில் உள்ள பல மொழிகளோடு முன்னணியில் உள்ள பல மொழிகட் கும் சொந்த எழுத்து இல்லை-இந்தி, குசராத்தி, மராத்தி, நேபளாம் முதலிய மொழிகட்குச் சொந்த எழுத்து இல்லை; இவை, சமசுகிருத மொழியின் (தேவ நாகரி) எழுத்தாலேயே எழுதப்படுகின்றன. இவ்வாறே, ஆங்கிலம் பிரெஞ்சு, இத்தாலியன், ருமேனியன், ஸ்பானியம், போர்த்துகீசியம்; செர்மனி, டேனிஷ், டச்சு (ஃஆலந்து) முதலிய மொழிகட்குச் சொந்த எழுத்து இல்லை. இவை இலத்தீன் எழுத்துக்களால் எழுதப்படுகின்றன. ஆங்கிலம்

எழுதப்படுகிற இருபத்தாறு எழுத்துக்களுள் 'W' என்னும் எழுத்து இலத்தீனில் இல்லை; மற்ற இருபத்தைந்து எழுத்துக்களே இலத்தீனில் உள்ளன. 'W' என்னும் எழுத்துக்குக்கு வேலை யில்லையாதலின் இலத்தீனில் இவ்வெழுத்து இல்லை. ஆங்கிலமும் பிரெஞ்சும் 'W' என்னும் புதிய எழுத்தையும் சேர்த்து இருபத்தாறு எழுத்துக்களை உடையனவாயுள்ளன. 'இரண்டு U' என்ற மாதிரியில் ஆங்கிலத்தில் 'W' என்பது 'Double' (டபிள்யூ) என ஒலிக்கப்படுகின்றது. ஆங்கிலத்தில் 'வி' எனச்சொல்லும் 'V' என்னும் எழுத்தைப் பிரெஞ்சு மொழியில் 'வே' என ஒலிப்பர்; எனவே, இரண்டு V'என்ற மாதிரியில் 'Double V' (துாப்ளுவே) என 'W' என்பதைப் பிரெஞ்சில் ஒலிக்கின்றனர்.

ஆங்கிலத்திலும் இலத்தீனைப் போலவே 'W' என்பதை விலக்கி இருபத்தைந்து எழுத்து மட்டுமே வைத்துக் கொள்ளலாம். 'W' என்பதற்குச் சிறப்பான வேலை ஒன்றும் இல்லை. 'W' என்பதன் வேலையை 'V' என்பதே செய்து விடும். 'W'என்னும் எழுத்து உள்ள ஆங்கிலச் சொற்களில் பெரும்பாலும் இந்த எழுத்து ஒலிக்கப்படுவதில்லை தொடக்கக் காலத்தில் ஒலிக்கப்பட்டிருக்கலாம். ஒலி பெறும் இடங்களிலும் 'W' என்பதற்குப் பதிலாக 'V' என்பதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். Widow window என்னும் சொற்களின் இறுதியில் உள்ள 'W' என்னும் எழுத்துக்கு ஒலியே இல்லை. முன்னால் உள்ள 'W' என்பதற்குப் பதிலாக 'V' என்பதையிட்டு 'Vido', 'Vindo' என எழுதலாம். 'write, wrong' முதலிய சொற்களிலும் 'W' என்பது ஒலி பெறவில்லை. எனவே, 'W' என்பதை விலக்கி ஆங்கிலத்தை இருபத்தைந்து எழுத்துக்களால் எழுதலாம். இது நிற்க. —

உரோமன் எழுத்துக்கள் (Roman Letters) எனப்படும். இலத்தீன் எழுத்துக்களாலேயே தத்தம் மொழிகளை எழுதும் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், போர்ச்சுகீசியர், ஃஆலந்துக்காரர் எனப்படும் டச்சுக்காரர், டேனிஷ்காரர் முதலியோர் உலகில் பல்வேறு நாடுகளைப் பிடித்துக் கொண்டு ஆண்டதால், ஆங்கெல்லாம் தத்தம் மொழியைப் பரப்பினர். இதனால், தம் மொழிக்குச் சொந்த எழுத்து இல்லாத அடிமை நாட்டு மக்கள், ஆட்சியாளர்கள் கற்றுத் தந்த உரோமன் எழுத்துக்களாலேயே தம் மொழியை எழுதலாயினர். மலாய் மொழி வழங்கும் மலேயாவை ஆங்கிலேயரும், அதே மொழி வழங்கும் இந்தோனேசியாவை டச்சுக்காரரும் ஆண்டனர். அதனால் மலாய் மொழி முதலில் உரோமன் எழுத்தால் எழுதப்பட்டது. இப்போது சொந்த எழுத்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றையும் தென் அமெரிக்க நாடுகள் பலவற்றையும், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், போர்ச்சுகீசியர், ஸ்பானிஷ்காரர் முதலியோர் ஆண்டதால், அவ்வந் நாட்டு மக்களும், சொந்த எழுத்தில்லாத தம் மொழிகளை உரோமன் எழுத்தால் எழுதலாயினர். சீன மொழியையும் உரோமன் எழுத்தால்எழுத வேண்டும் என்னும் இயக்கம் ஒரு காலத்தில் நடைபெற்றது. ஆனால் அது வெற்றி பெறவில்லை.

இந்தச் செய்தி இங்கே எழுதப்பட்டதன் நோக்கமாவது: ஆங்கிலம் எழுதப்படும் உரோமன் எழுத்து, முன்னமேயே, உலகின் பல்வேறு நாட்டினருக்கும் அறிமுகம் ஆகியுள்ளது; எனவே, ஆங்கிலத்தை உலகப் பொது மொழி யாக்கினால், உலக மக்கள் எழுத்தறிவு பெறவும் எளிதாயிருக்கும்-என்பதே!

ஆங்கில மொழிச் சீர்திருத்தம்:

எழுதுவதிலும் ஒலிப்பதிலுமாக ஆங்கில மொழியில் சில குறைபாடுகள் உள்ளன. ஆங்கில மொழியமைப்பில் உள்ள குறைபாடுகளை நீக்கிச் சீர்திருத்துவதற்காக, ஆங்கில மாமேதை பெர்னார்டு ஷா (Shaw, George Bernard: 1856-1950) அவர்கள் நிதி (Fund) வைத்துவிட்டுப் போயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆங்கிலம் உலகப் பொது மொழியாக வேண்டும் எனில், அதனை உலக மக்கள் எளிதில் கற்பதற்கேற்ப, வேண்டிய சீர்திருத்தங் களைத் தொடர்புடைய அறிஞர்கள் செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

இலத்தீன் (ரோமன்) மொழியில் இல்லாத 'W' என்னும் எழுத்தை விலக்கி விடலாம் என்ற கருத்து முன்பு சொல்லப் பட்டுள்ளது. காரணம், இவ்வெழுத்து பெரும்பாலும் ஒலி பெறாமையேயாகும். இலத்தீனின் நேர் வழி மொழியாகிய பிரெஞ்சிலும், இலத்தீனின் எழுத்துக்களையும் சில கூறுகளையும் கடன் வாங்கியுள்ள ஆங்கிலத்திலும், சில சொற்களில் உள்ள சில எழுத்துக்கள் ஒலி பெறாமை (Silent) எழுத்துக்களாயுள்ளன. சில எடுத்துக் காட்டுகள் வருக:-

ஆங்கிலம்

| சொல்: | ஒலிப்பு | ஒலிபெறா எழுத்துக்கள்: |
|---|---|---|
| Knowledge | நாலட்ஜ் | K-W-E (முதலிலும் இடையிலும் கடையிலும்) |
| Wrong | ராங்க் | W (முதலில்) |

| | | |
|---|---|---|
| Psychology | சைகாலஜி | P (முதலில்) |
| Often | ஆஃபென் | t (இடையில்) |
| Night | நைட் | gh ,, |
| Island | ஐலாண்ட் | s ,, |
| Though | தோ | ugh (இறுதியில்) |
| Draw | ட்ரா | w ,, |
| Come | கம் | e ,, |
| Know | நோ | k-w (முதல்-கடை) |

பிரெஞ்சு

| | | |
|---|---|---|
| Huit | வுய்த் | H (முதலில்) |
| Surveillance | சுய்ர் வெயான்ஸ் | ll (இடையில்) |
| Sept | செத் | P (இடையில்) |
| Vingt | வா(ன்) | g-t (இறுதியில்) |
| Paris | பரி | S ,, |
| Horloge | ஓர்லோழ் | H–e (முதல்-கடை) |

மேலே, பிரெஞ்சு மொழியின் சில சொற்களிலும் சில எழுத்துக்கள் ஊமை (Silent) எழுத்துக்களாய் இருப்பதை எடுத்துக்காட்டியிருப்பதன் நோக்கமாவது, பிரெஞ்சு மொழியின் தாய் மொழியாகிய இலத்தீன் மொழியில் எல்லாச் சொற்களிலும் எல்லா எழுத்துக்களுமே, தமிழ் போலவே, முழு ஒலிப்பும் பெறும் என்பதை அறிவிப்பதே யாகும். இது நிற்க:-

ஆங்கிலம் உலக மொழியாக வேண்டுமெனில், சில சொற்களில் ஊமை (Silent) யாக உள்ள எழுத்துக்களை விலக்கி விடுவது நன்று. அல்லது, அந்த ஊமை எழுத்துக் களையும் இயன்ற வரையிலும் ஒலிக்க முயல்வது நல்லது. மற்றும் 'X' என்னும் எழுத்து அவ்வளவாகத் தேவையா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்; இந்த எழுத் தின் வேலையை, வேறு எழுத்துக்களைக் கொண்டு முடித் துக் கொள்ள முடியாதா - என்பதையும் ஆராய்ந்து பார்க்கலாம். கட்டாயம் தேவையெனில் இருந்து போகட்டும்.

அடுத்து, 'Bazaar' என்னும் சொல்லில் 'zaar' என இரண்டு 'a' எழுத்துக்கள் உள்ளன அல்லவா? அவற்றில் ஒன்றை அமெரிக்கர்கள் விலக்கி 'Bazar' என எழுதுகின்ற னர். 'Colour' என்னும் சொல்லில் உள்ள 'U' என்னும் எழுத்தை விலக்கி 'Color' என அமெரிக்கர்கள் எழுதுகின் றனர். இவ்வாறு இன்னும் சீர்திருத்தப் பட்ட அமைப்பு 'American English' என வழங்கப்படுகிறது.

எனவே, இவ்வாறு தேவையில்லாத எழுத்துக்களை யெல்லாம் விலக்கி விடுவது நல்லது. இதனால், உலக மக்கள் குழப்பம் இன்றி எளிமையாக ஆங்கிலச் சொற் களை ஒலிக்க முடியுமன்றோ?

அடுத்து, - 'G', 'J' என்னும் எழுத்துக்கள் குழப்பம் தருவனவா யுள்ளன. 'ஜி', 'ஜே' என இரண்டும் தனித்தனி எழுத்தாய் ஒலிக்கப்படும்போது ஒரே வகையான 'ஜகர' ஒலிப்பு உடையனவாயுள்ளன. இவற்றுள் 'J' என்பது, தான் வரும் எல்லாச் சொற்களிலுமே 'ஜகர' ஒலி பெற் றுள்ளது. எடுத்துக்காட்டு:- Jail=ஜெயில்; Jar=ஜார்;

Job=ஜாப் அல்லது ஜோப்-முதலியனவாகும். ஆனால் 'G' என்னும் எழுத்தோ இரட்டைக் கோலம் புனைகிறது; அதாவது, சில சொற்களில் 'ககர' ஒலியும் சில சொற்களில் 'ஜகர' ஒலியும் பெறுகிறது; எடுத்துக்காட்டுகள்:- Gain = கெயின்; Get = கெட்; God = காட்; Gold = கோல்டு - முதலிய சொற்களில் 'G' எழுத்து 'ககர' ஒலி பெறுகிறது. George=ஜியார்ஜ்; Geometry=ஜியாமெட்ரி; General=ஜெனரல்; Gentle=ஜென்டில் - முதலிய சொற்களில் 'G' என்னும் எழுத்து 'ஜகர' ஒலி பெறுகிறது. உலகத்தினர் இந்தக் குழப்பத்தினின்றும் தெளிவு பெற வேண்டுமே! இதற்குரிய வழியாவது 'G' என்பதை 'ககர' ஒலி உடையதாகவே ஆக்கிவிட வேண்டும், 'ககர' ஒலி பெறும் சொற்களி லெல்லாம் தொடர்ந்து நிலையாக 'G' என்பதையே பயன்படுத்தி வர வேண்டும், G என்பது 'ஜகர' ஒலி பெறுஞ் சொற்களில் எல்லாம் 'G' என்பதற்குப் பதிலாக 'J' என்னும் எழுத்தையே பயன்படுத்த வேண்டும். அறிஞர்கள் இதை ஆராய்ந்து ஆவன செய்வார்களாக.

'G' எழுத்துக்குக் 'ககர' ஒலி தருவதால் மற்றும் ஓர் ஆதாயம் உள்ளது. சமசுகிருத மொழியில் க,ச,ட,த,ப- என்னும் ஐந்து எழுத்துக்களும் தனித்தனியே நந்நான்கு ஒலி பெறும்- அந்த நந்நான்கிற்கும் தனித்தனியான வரி வடிவங்கள் உண்டு-என்னும் செய்தி முன்னர்க் கூறப்பட்டுள்ளது. 'க' என்பது 'க' 'க்க', 'ங்க', 'ங்ங்க' - என்னும் நால்வகை அமைப்பு உடையது. மற்ற நான்கு எழுத்துக்களும் இவ்வாறேயாகும். சமசுகிருதம் போல நான்கு வகை வேண்டியதில்லை. 'க' 'ங்க' என இருவகையே போதும். இதன்படி நோக்கின், ஆங்கிலத்தில் 'க' என்பதற்கு 'k' என்னும் எழுத்தையும், 'ங்க' என்பதற்கு 'G' என்னும் எழுத்தை

யும் ஈடாகப் பயன்படுத்தலாம். இது ஓர் ஆதாயமாகும். ஆங்கில நெடுங் கணக்கில் (எழுத்து வரிசையில்) உள்ள 'P—B', 'T—D' என்னும் இணைகளைப்போல 'K...G' என்பவற்றையும் ஒலி ஒப்புமையுடைய ஓர் இணையாக ஆக்கலாம். இதன் படி 'G' என்னும் எழுத்தைத் தனியாக ஒலிக்கும்போது, முன்போல 'ஜி' என ஒலிக்காமல், 'ங்கி' என்பது போல ஒலிக்க வேண்டும்.

இங்கே இன்னொன்றையும் எண்ணிப் பார்க்க வேண்டி யுள்ளது. qualify= குவாலி.ஃபை; quarter= குவார்ட்டர்; queen= குயின்; quick = குயிக்; Technique = டெக்னிக் – என 'q' என்னும் எழுத்து, சொற்களில் 'ககர' (க) ஒலியே பெறுவதைக் காண்கிறோம். இதன் வேலையை 'kuarter=குவார்ட்டர்' என 'K' என்னும் எழுத்து செய்து ஈடு கட்ட முடியாதா? எனவே, 'q' என்னும் எழுத்து ஆங்கிலத்துக்குக் கட்டாயம் தேவைதானோ? – என்பதை யும் அறிஞர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

தமிழ் மொழியில் ஓர் எழுத்துக்கு ஒரே ஒலிதான் உண்டு; அவ்வாறே, ஓர் ஒலிக்கு ஒரே வரிவடிவமே உண்டு. எடுத்துக்காட்டு: 'உ' ஒலிக்கு 'உ' என்னும் ஒரே வடிவமே உண்டு; 'உ' என்னும் வரி வடிவத்துக்கு 'உ' என்னும் ஒரே ஒலியே உண்டு. ஆங்கில மொழியில் இவ்வாறில்லை; சில எழுத்துக்கள் இதனினும் மாறுபடுகின்றன. எடுத்துக் காட்டுகள்: a, e, i, o, u, y, c, g. முதலிய எழுத்துக்களாகும்.

இலத்தீன் மொழியில் a, e, i, o, u, y, என்னும் ஆறு உயிரெழுத்துக்கள் உள. ஆங்கில இலக்கணத்தில் 'y' என் பதை உயிர் எழுத்தாகக் கூறாவிடினும், இவ்வெழுத்து, ஆங்கிலத்தில் மெய்யெழுத்தாகப் பயன்படுவதோடு உயி

ரெழுத்தாகவும் பயன்படுகிறது, 'yard-' என்னும் சொல்லில் 'y' என்பது 'ய்' என்னும் மெய்யெழுத்தாயுள்ளது; 'Copy' என்னும் சொல்லில் 'y' என்பது 'இ' என்னும் உயிரெழுத்தாகப் பயன்படுகிறது. a, e, i, o, u, - என்னும் ஐந்து உயிரெழுத்துகளும் ஒலி வடிவில் பல மாறுதல்கள் பெறுகின்றன. 'a' என்பது, 'talk' என்னும் சொல்லில் 'ஆ' எனவும், 'take' என்னும் சொல்லில் 'ஏ' எனவும் ஒலிக்கப் படுகிறது. 'e' என்பது, 'dear' என்பதில் 'இ' ஒலியும், 'get' என்பதில் 'எ' ஒலியும் பெறுகிறது. 'i' என்பது,'idea' என்பதில் 'ஐ' ஒலியும், 'ill' என்பதில் 'இ' ஒலியும் பெறுகிறது. 'o' என்பது, 'god' என்பதில் 'ஆ' ஒலியும், 'go' என்பதில் 'ஓ' ஒலியும், 'good' என்பதில் 'உ' ஒலியும் பெறுகிறது. 'u' என்பது, 'cut' என்பதில் 'அ' ஒலியும், 'put'என்பதில் 'உ' ஒலியும் பெறுகிறது.

'c' என்னும் மெய்யெழுத்து, 'cut' என்னும் சொல்லில் 'க' ஒலியும், 'cell' என்பதில் 'சகர' (ச) ஒலியும், 'circular' என்பதில் முதலில் 'ச' ஒலியும் இடையில் 'ககர' (க) ஒலியும் பெறுகிறது. 'cha' என்னும் கூட்டமைப்பு, 'charity' என்னும் சொல்லில் 'ச்ச' என்னும் ஒலியும், 'character' என்னும் சொல்லில் 'ககர' (க) ஒலியும் பெறுகிறது. 'Accident', 'Vaccination' என்னும் சொற்களில், முறையே 'ஆக்சிடென்ட்', 'வாக்சினேஷன்' - என முதலில் உள்ள 'c' சகர (க) ஒலியும், அதன் பக்கத்திலே உள்ள இரண்டாவது 'c' சகர (ச) ஒலியும் பெறுவது மிகவும் வியப்பாயிருக்கின்ற தன்றோ? 'g' என்னும் மெய்யெழுத்து 'get' என்பதில் 'ங்க' ஒலியும், 'general' என்பதில் 'ஜ' ஒலியும் பெறுவது முன்னரே பேசப்பட்டுள்ளது. இவ்வாறு இன்னும் எவ்வளவோ சொல்லலாம்.

மேலே தந்துள்ள எடுத்துக் காட்டுகளில், ஒரே ஒலிக்குப் பல வரிவடிவங்களும், ஒரே வடிவத்துக்குப் பல ஒலிகளும் அமைந்திருப்பதைக் காணலாம். உலகத்தார் குழப்பம் இன்றி எளிதில் கற்கவேண்டுமெனில், தமிழில் இருப்பது போலவே, ஓர் ஒலிக்கு ஒரே வரிவடிவமும், ஒரு வரிவடிவத்துக்கு ஒரே ஒலியும் அமையுமாறு ஆங்கில மொழியமைப்பைச் சீர்திருத்த வேண்டும், இது நிற்க.—

ஒரே சொல்லையே ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரியாக ஒலிப்பதும் உண்டு. பேச்சு மொழியில் இத்தகைய மாற்றம் ஏற்படுவது இயல்பே. ஆனால், வரிவடிவ எழுத்து மொழியைப் படிக்குங்கால் மாறுபடுவது கூடாதன்றோ? குழப்பம் தரும் அல்லவா? 'Admission' என்னும் சொல்லை 'அட்மிஷன்' எனச் சிலரும், 'எட்மிஷன்' எனச் சிலரும் ஒலிக்கின்றனர். 'Economics' என்பதை, 'யீக்கனாமிக்ஸ் எனச் சிலரும், 'எக்கனாமிக்ஸ்' எனச் சிலரும் ஒலிக்கின்றனர், 'company' என்பதை, 'கம்பெனி' எனச் சிலரும் 'கொம்பெனி' எனச்சிலரும், ஒலிக்கின்றனர். பிரெஞ்சில் 'o' என்னும் எழுத்தை எல்லா இடங்களிலுமே 'ஒ' என்றே ஒலிக்க வேண்டும்.

கையெழுத்தும் அச்செழுத்தும்:

உரோமன் எழுத்தாகிய ஆங்கில எழுத்தமைப்பில் மற்றொரு வகைச் சீர்திருத்தமும் செய்யவேண்டியுள்ளது. தமிழ் மொழியிலும் இன்னும் பல மொழிகளிலும், கையெழுத்து-அச்செழுத்து, சிறிய எழுத்து-பெரிய எழுத்து என்ற வேறுபாடு இல்லை. ஆனால் ஆங்கிலத்தில் இந்த வேறுபாடு உண்டு. 'A' என்பதற்கு நான்கு வகை எழுத்து வடிவங்கள் உள்ளன. கையெழுத்தில் பெரிய எழுத்தை 'A எனவும், சிறிய எழுத்தை '*a*' எனவும் எழுதுவர்.

அச்செழுத்தில் பெரிய எழுத்து 'A' என்றும், சிறிய எழுத்து 'a' என்றும் எழுதப்படும். இவ்வாறு எல்லா எழுத்துகளும் பல வரிவடிவங்கள் பெற்றுள்ளன.

இத்தனை வகைகளையும் கற்றுக்கொள்ளக் குழந்தைகள் தொல்லைப்படலாம். அதனால், இருவகை அச்செழுத்துகளும் இல்லாமல், இருவகைக் கையெழுத்துகள் மட்டும் இருந்தால் போதும். பெரிய எழுத்து-சிறிய எழுத்து என இருவகை தேவையா எனில், சில இடங்களில் பெரிய எழுத்தைப் பயன்படுத்தும் மரபு இருப்பதால் பெரிய எழுத்தை வைத்துக் கொள்ளலாம். கையெழுத்தில் பெரிய எழுத்துகளையும் சிறிய எழுத்துகளையும் எவ்வாறு எழுதுகிறோமோ, அவையே போன்ற வரிவடிவங்களையே அச்சிலும் உருவாக்கி மொழியை அச்சடிக்கலாம்; அஃதாவது: அச்செழுத்திலும் *A-a* என்ற வரிவடிவங்களே இருக்க வேண்டும். அறிஞர்கள் இதனை ஆய்க.

'GHOTI'';

'மற்றும், ஆங்கில எழுத்துகளையும் சொற்களையும் ஒலிக்கும் தவறான முறையைச் சுட்டிக் காட்டுவதற்காக, பெர்னார்டுஷா செய்த கிண்டல்-கேலி ஒன்றை இங்கே சொல்லாமல் விடுவதற்கில்லை.

அவர் 'ghoti' என்னும் ஒரு சொல்லைத் தாமாக அமைத்துக் கொண்டார். இச்சொல் 'கோ(த்)தி' என்று ஒலிக்கப்பெறும். ஆனால், இதனைப் பெர்னார்டுஷா 'ஃபிஷ்' என-அதாவது-'fish' என்ற சொல்லை ஒலிப்பது போல ஒலிக்கலாம் என்று சொன்னாராம். அதற்கு அவர் தந்த விளக்கமாவது: laugh, enough, tough என்னும் சொற்கள், லாஃப்- யெனஃப்- டஃப்- என ஒலிக்கப்பெறும். இங்கே

'gh' என்பது -ஃப்-f' என்னும் ஒலி பெறுகிறது; எனவே, ghoti' என்பதிலுள்ள 'gh' என்பதை 'ஃப்-f' என எடுத்துக் கொண்டாராம் அவர். Woman என்பது 'விமன்' என ஒலிக்கப் பெறும்; இங்கே 'o' என்பது 'இ-i' என ஒலிக்கப் பெறுவதால், 'ghoti' என்பதிலுள்ள 'o' என்பதை 'i' எனக் கொண்டு, 'gho' என்பதை 'ஃபி-fi' என அமைத்துக் கொண்டாராம். Addition-Condition போன்றவற்றின் இறுதியிலுள்ள 'tion' என்பது 'ஷன்' என ஒலிக்கப் பெறும்; இதில் 'ti' என்பது 'ஷ்-sh' என்னும் ஒலி பெறுவதால், 'ghoti' என்பதில் உள்ள 'ti' என்பதை 'ஷ்-sh' எனக் கொண்டு, 'ghoti' என்பதை 'ஃ பிஷ்-fish' என ஒலிக்கலாம் என்று கூறிக் கேலி செய்தாராம்.

மற்றும் ஒன்று:- ஆங்கில எழுத்து நெடுங்கணக்கில், குறிலுக்கும் நெடிலுக்கும் தனித்தனி எழுத்துகள் இல்லை. குறிலினும் நெடிலுக்கு வேற்றுமை காட்டக் குறிலுக்கு மேலோ-கீழோ சில குறியீடுகள் இடப்படுகின்றன. இஃதும் ஒரு வகைக் குழப்பமே. Art என்பதில் A என்னும் ஓர் உயிரே உள்ளது. இதை அ என ஒலிப்பதா அல்லது ஆ என ஒலிப்பதா? இப்போது இது 'ஆர்ட்' என நெடிலாக ஒலிக்கப்படுகிறது. 'Aart' என இரண்டு A போட்டு நெடிலாக ஒலிப்பது எளிமையாயிருக்கும். மற்ற உயிர் எழுத்துகளிலும் குறிலுக்கு ஓர் எழுத்தும் நெடிலுக்கு ஈரெழுத்தும் பயன்படுத்துவது நல்லது.

எனவே, ஒலிப்பு முறையில் மேற்கூறிய குழப்பங்கட்கு இடம் இல்லாதவாறு, தொடர்புடைய அறிஞர்கள் ஆங்கில மொழியமைப்பைச் சீர்திருத்த வேண்டும். மொழியியலாரின் ஒத்துழைப்பு இதற்கு மிகவும் வேண்டற்பாலது. இங்கே, ஆங்கில மொழியைச் சீர்திருத்துவதற்காக நிதி

(Fund) வைத்துப் போன பெர்னார்டுஷா அவர்களின் கருத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இலக்கண அமைதி:

ஆங்கிலம் உலகப் பொதுமொழியானால், உலக மக்கள் அனைவரும் குழப்பம் இன்றி எளிமையாகக் கற்றுக் கொள்ளும் வகையில் அம்மொழி யிருக்கவேண்டும் என்பதற்காக, மேற்கூறிய குறைபாடுகட்கு இடமின்றி மொழியைச் சீர்த்திருத்தி யமைக்க வேண்டும் என்னும் கருத்து மேலே தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு ஆங்கிலம் உலக மக்கள் அனைவராலும் கையாளப் படுங்கால், ஒரு மூலைக்கு ஒரு மூலை கையாளுவதில் வேற்றுமையுண்டாக, அதனால் மொழி பலவாறு சிதைந்து பிரியக் கூடுமே என்ற ஐயம் சிலர்க்கு எழலாம். இவ்வாறு நேராது காப்பதற்கு உரிய சிறந்த வழியாவது, தகுந்த இலக்கணம் அமைத்து, அந்த இலக்கண விதிகளை உலக மக்கள் அனைவரும் பின்பற்றுமாறு செய்வதுதான்!

பேச்சு வழக்கில் எந்த ஒரு மொழியும் ஒரு மூலைக்கு ஒரு மூலை மாறுபடத்தான் செய்யும்; இது இயற்கையே! சென்னைத் தமிழன் பேசும் தமிழ் வழக்கும், திருநெல்வேலித் தமிழன் பேசும் தமிழ் வழக்கும், இலங்கை-யாழ்ப்பாணத்துத் தமிழன் பேசும் தமிழ் வழக்காறும் ஒன்றுக் கொன்று மாறுபடலாம்; சில கூறுகள் ஒருவர்க்கு ஒருவர் புரிந்து கொள்ள முடியாமலும் இருக்கலாம். ஆனால், எல்லா இடங்களிலும் உள்ள-கற்றறிந்த தமிழ் மக்கள் எழுதும் எழுத்து நடையை எல்லாரும் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. இதற்கு உரிய காரணம் என்ன? அனைவருமே குறிப்பிட்ட இலக்கண விதிகளைப் பின்பற்றி எழுதுவதால், எழுத்து நடையில் மொழி

மாறுபடாமல் ஒரே நிலையில் உள்ளது; அதனால் எல்லா ரும் புரிந்து கொள்ள முடிகிறது. குறிப்பிட்ட ஒரு மொழி யாளர் இலக்கண விதி அமைதியைப் பின்பற்றாமல் கண்ட படி மொழியைக் கையாண்டால் கட்டாயம் மொழி பிரியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு வருக:

தமிழ் நாட்டின் முப்பெரும் பகுதிகளுள் ஒன்றான சேர நாடு, இப்போது 'கேரளா' என வழங்கப்படுகிறது. இப்பகுதிக்கு 'மலையாளம்' என்ற பெயரும் உண்டு. அங்கே பண்டு பேசப்பட்டுவந்த தமிழ், நாளடைவில், 'மலை நாட்டுத் தமிழ்' எனவும் 'மலையாளத் தமிழ்' எனவும் 'மலையாண்மை' எனவும் வழங்கப்பட்டு, இப்போது மலை யாளம் என்னும் பெயர் உடையதாய் மாறித் திகழ்கிறது. தமிழிலிருந்து மலையாளம் பிரிந்ததற்குக் காரணம், சமசு கிருத மொழியின் ஊடுருவல், மதம், இனம், அரசியல் முதலிய சூழ்நிலை எனக்கூறப்படினும், அங்கிருந்த மக் களுள் பலர் குறிப்பிட்ட தமிழ் இலக்கண விதியைப் பின் பற்றாமையே உண்மையான காரணமாகும். தமிழ் தொடர்பான பேச்சு வடிவமும் சமசுகிருதம் கலந்த பேச்சு வடிவமும் இடைக்காலத்தில் இருந்து வந்தன. இப்போது, இந்த இரண்டும் கலந்த வடிவம் 'மலையாளம்' என்னும் பெயரில் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றது.

'துஞ்சத்து எழுத்தச்சன்' என்பவர் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் இப்போதுள்ள மலையாள மொழி எழுத் துக்களை உருவாக்கியதாகச் சொல்லப்படுகிறது. மலை யாளத்தில் 'அச்சன்' என்பதற்குத் தந்தை என்பது பொருள். முதலில் எழுத்துக்களை உருவாக்கியவராதலின் எழுத்துக் களின் தந்தை என்னும் பொருளில் அவருக்கு ''எழுத்தச் சன்' என்னும் சிறப்புப் பட்டப்பெயர் வழங்கப் பட்டது.

'துஞ்சத்து' என்பது, அவரது குடும்பப் பெயரின் தொடர்புடையதாம்.

மலையாளத் தமிழர்கள், குறிப்பிட்ட தமிழ் இலக்கண மரபைப் பின்பற்றாமல், பேச்சு வழக்கில் கொச்சையாகப் பேசும் தமிழ் வடிவத்தையே, புதிதாக உருவான எழுத்து வடிவிலும் கையாளலாயினர்; இதனால், தமிழ் வேறு– மலையாளம் வேறு என்றாயிற்று. சில காட்டுகள் வருமாறு:

| இலக்கியத் தமிழ் | கொச்சைப் பேச்சுத் தமிழ் | இலக்கிய மலையாளம் |
|---|---|---|
| கொன்று | கொன்னு | கொன்னு |
| கண் | கண்ணு | கண்ணு |
| வாய் | வாயி | வாயி |
| ஊண் (உணவு) | ஊணு | ஊணு |
| தின்றது | தின்னுச்சி | தின்னு |
| காளை | காள | காள |
| தலை | தல | தல |
| மழை | மழ | மழ |
| மலை | மல | மல |
| கஞ்சி | கஞ்ஞி | கஞ்ஞி |
| மாங்காய் | மாங்கா | மாங்ஙா |
| குன்று | குன்னு | குந்நு |

மேலுள்ள எடுத்துக் காட்டுகளால், சரியான இலக்கண மரபு வடிவத்தைப் பின்பற்றாததால், கொச்சையான

பேச்சு வடிவத் தமிழ்ச் சொற்கள், மலையாளத்தில் இலக்கிய வடிவச் சொற்களாயின என்னும் உண்மை புலனாகும். இத்தகைய பேச்சு வடிவக் கொச்சைத் தமிழ்ச் சொற்கள் பல, தெலுங்கிலும் கன்னடத்திலுங்கூட இலக்கிய வடிவச் சொற்களாயுள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கற்பாற்று.

உண்மை யிவ்வாறிருக்க, பேசுவது போல் எழுத வேண்டும் எனச் சிலர் கூறுகின்றனர்-செய்தும் வருகின்றனர். அங்ஙனமாயின், யார் பேசுவது போல் எழுத வேண்டும்? சென்னைத் தமிழன் பேசுவது போலவா-திருநெல்வேலித் தமிழன் பேசுவது போலவா-யாழ்ப்பாணத் தமிழன் பேசுவது போலவா-இன்னும் யார் பேசுவது போல் எழுதவேண்டும்? அவரவரும் அவரவர் பேசுவது போல் எழுதத் தொடங்கினால், அவரவருடைய மாறுபட்ட பேச்சு வடிவங்கள் தனித்தனி மொழியாக மாறிப் பிரியும். இது மிகப் பெரிய கொடுஞ் செயலாகும்.

எனவே, குறிப்பிட்ட இலக்கண விதி மரபை உலகினர் அனைவரும் பின்பற்றி ஆங்கில மொழியைக் கையாண்டால், அம்மொழி, ஒரு மூலைக்கு ஒரு மூலை வேறு மொழிகள் போல் சிதைந்து பிரிய வழியிராது. இதனைத் தொடர்புடையவர்கள் கவனித்து ஆவன புரிய வேண்டும். மேலே பரிந்துரைக்கப் பட்டுள்ள செப்பமான சீர்திருத்தங்களாலும் இலக்கண அமைதியாலும், ஆங்கில மொழியை உலக மக்கள் அனைவரும் எளிதில் கற்க வியலும்.

ஆகவே மக்களினம், உலகின் பொது மொழியாகப் பழக்கத்தில் உள்ள ஆங்கிலத்தைக் கட்டாயம் கற்று வாழ்க்கையைஎளிமைப் ப்டுத்திக்கொள்வதேஉய்யும் வழியாகும்.

# 9. உலகுக்கு ஒரே அரசு

உலக ஒற்றுமை:

உலகம் ஒன்றுபடவேண்டும் – உலகுக்கு ஒரே அரசு வேண்டும் - என்பது உலக அறிஞர்களின் ஆவல். இது அன்று மட்டுமன்று – இன்று மட்டும் அன்று - என்றுமே இருக்கும் ஆவல். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், சாதியாலும் சமயத்தாலும் பல பிரி வினரா யிருப்பினும், 'தமிழர்' என்னும் பொதுப் பெயரால் ஒன்றுபடுகின்றனர். பல மொழியினர்க்கு நடுவில் இவர்கள் தம்மைத் 'தமிழர்' என்னும் பெயரால்தான் தெரிவித்துக் கொள்ளவேண்டும். இதுபோலவே, தமிழன், தெலுங்கன், குசராத்தி, வங்காளி முதலியோர், பிறநாட்டினரின் நடுவில் 'இந்தியர்' என்னும் பொதுப் பெயரால் ஒன்றுபடுவர். இந்தியன், சீனன், பர்மியன் முதலியோர், பிற கண்டத் தார்களின் நடுவிலே 'ஆசியர்' (ஆசியாக் கண்டத்தினர்) என்னும் பொதுப் பெயரால் ஒன்றுபடுவர். ஆசியன், ஐரோப்பியன், ஆஃபிரிக்கன், அமெரிக்கன், ஆஸ்திரேலியன் ஆகிய எல்லாக் கண்டத்தாரும் ஒன்றுபடின், உலகம் ஒன்று பட்டதாகப் பொருள் அல்லவா? இந்த ஒற்றுமையை ஒரே அரசு - ஒரேஆட்சி உலகம் முழுதும் பரவின் உண்டாக்கக் கூடும். அல்லது, வேறுகோள் (கிரகம்) ஆகிய 'செவ்வாய்க் கோள்' போன்ற மண்டலத்திலிருந்து நம் உலகுக்கு எதிர்ப் புத் தோன்றுமாயின், எல்லாக் கண்டத்தார்களும் 'பூவுல கத்தார்' (பூமியார்) என்னும் பெயரால் ஒருவேளை ஒன்று படலாமோ என்னவோ!

### பழைய கொள்கையே:

ஒரே உலக அரசு அமைய வேண்டுமாயின், உலக முழுவதுக்கும் ஒரே நாடாளும் சட்டமன்றம் (Parliament) ஒரே மாதிரியான சட்ட திட்டங்கள், இன்னபிற உருவாக வேண்டும். இது மாதிரியான கருத்து பழமையானதே. கிரேக்கர் - உரோமர் கதைகளில் இது மாதிரியான கருத்து பண்டே சொல்லப்பட்டுள்ளதாம். பண்டைய இந்தியா, பண்டைய சீனா போன்ற நாடுகளில் பல உட்பிரிவுகள் இருந்தும் ஒரே உலக அமைப்பு போன்ற ஆட்சி - அதாவது, ஒரே இந்தியா - ஒரே சீனா போன்ற அமைப்பு இருந்துள்ளது. இப்போதும் இருப்பது உலகம் அறிந்ததே. கிரேக்க நாட்டு நகர ஆட்சிகளும் ஒரே அமைப்பாய்ப் பண்டு இருந்ததுண்டாம். இது மாதிரியான அமைப்பு உலக முழுதும் பரவின் உலகுக்கு ஒரே அரசு உருவாகும்.

### பண்டைத் தமிழரின் பங்கு:

இந்தியாவில் - தமிழ்நாட்டில் ஒரே உலகக் கோட்பாடு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே உருவாகியிருந்தது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே, கணியன் பூங்குன்றனார் என்னும் தமிழ்ப் புலவர், புறநானூற்றுப் பாடல் ஒன்றில்,

> ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' (192)

என்று கூறியுள்ளார். 'எல்லாருக்கும் எல்லாம் சொந்த ஊரே - எல்லாருக்கும் எல்லாரும் உறவினரே' என்பது இதன் கருத்து. கற்றவர்க்கு எல்லா நாடும் சொந்த நாடாகும் - எல்லா ஊரும் சொந்த ஊராகும் எனத் திருவள்ளுவர் திருக்குறளில் கூறியுள்ளார்:

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு". (397)

என்பது திருக்குறள் பாடல். மக்கள் அனைவரும் உறவினர் - மக்கள் இனத்துக்கு எல்லா இடமும் சொந்த இடமாகும் - என்னும் இக்கருத்து, ஒரே உலகக் கோட்பாட்டுக்குத் தெரிந்தோ - தெரியாமலோ இடப்பட்ட வித்து ஆகும். பழைய தமிழ்ப் புலவர் பலர், உலகக் கண்கொண்டே தம் நூல்களைத் தொடங்கியுள்ள பகுதிகள் மீண்டும் வருக: உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறளை, அதன் ஆசிரியர் திருவள்ளுவர், உலகக் கண்கொண்டே முதற் பாடலைத் தொடங்கியுள்ளார்:

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு".

என்பது திருக்குறளின் முதற் பாடலாகும். நக்கீரர் என்னும் மாபெரும் புலவர், தமது 'திருமுருகாற்றுப்படை' என்னும் நூலை "உலகம் உவப்ப" என்னும் தொடரால் தொடங்கியுள்ளார். ஐம்பெருந் தமிழ்க் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலை என்னும் நூலை, அதன் ஆசிரியர் சாத்தனார், 'உலகம் திரியா' என்னும் தொடரால் தொடங்கியுள்ளார். பாவேந்தராகிய கம்பர் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களையுடைய தமது இராமாயண நூலை, "உலகம் யாவையும்" என்னும் தொடரால் தொடங்கியுள்ளார். சேக்கிழார் என்னும் சிறந்த புலவர் தமது 'பெரிய புராணம்' என்னும் அரிய புராண நூலை, "உலகு எலாம்" என்னும் தொடராலேயே தொடங்கியுள்ளார். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்பது திருமூலரின் திருமந்திரமொழி.

உலகப் பொது மறை:

உலகம் முழுவதையும் - உலக மக்கள் அனைவரையும் மையமாகக் கொண்டே திருவள்ளுவர் தமது திருக்குறள் நூலை இயற்றியுள்ளார். இந்நூல் சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்ட உலகமொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது. இதனாலும் இதன் பொதுமைக் கருத்தினாலும், இந்நூல், 'உலகப் பொது மறை' எனப் போற்றப்படுகிறது. இதற்கேற்ப, ஆயிரத்து முந்நூற்று முப்பது (1330) பாடல்கள் கொண்ட இந்நூலில், சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட பாடல்களில், 'உலகு' என்னும் சொல்லும் அதே பொருளுடைய 'வையம்' முதலாய சொற்களும் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்களின் எண்கள் வருமாறு:-

1, 11, 13, 19, 20, 22, 23, 27, 50, 58, 101, 117, 140 149, 211, 215, 222, 233, 234, 238, 243, 247, 256, 280 290, 294, 336, 346, 374, 387, 389, 399, 425, 426, 470 520, 533, 542, 544, 547, 571, 572, 578, 598, 612, 701 809, 841, 850, 874, 970, 994, 996, 1015, 1025, 1031 1032, 1055, 1062, 1198-முதலிய எண்கள் கொண்ட பாடல்களில், 'உலகு' என்ற சொல்லும் அதே பொருளுடைய சொற்களும் அமைந்து, பொதுவாக உலகத்துக்குச் செய்தியறிவிப்பதைக் காணலாம். இந்த உண்மையை உணர்ந்தே, சுப்பிரமணிய பாரதியார்,

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு''

என்று பாடியிருக்கும் நுட்பம், நினைந்து - நினைந்து சுவைத்தற் குரியது.

உலக ஒருமைக் கழகம்:

பிற்காலத்தவராகிய வடலூர் இராமலிங்க வள்ளலார் ஒருவகை உலக ஒற்றுமைக் கழகமே ஏற்படுத்திவிட்டார் எனக் கூறலாம். அவரது சங்கத்தின் பெயர், 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' என்பதாகும். 'சமரசம்' என்னும் சொல் உலகப் பொதுமையைக் குறிக்கின்றது. அவர் கூறியுள்ளார்: ''கலகம் விளைத்துக் கொள்ளும் உலக மக்களின் பித்து - பிதற்றல்கள் என்று ஒழியுமோ? சமரச சன்மார்க்க சங்கம் என்றைக்கு உலகெங்கும் பரவுமோ? உலகம் முழுதும் ஒற்றுமையான - ஒருமைப்பாடு ஓங்குக என்று சங்குகள் முழங்கத் தொடங்கிவிட்டன; பெருமைக்கு உரிய சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தைப் பெரியவர்கள் சூழ்ந்து கொண்டு பெரும் புகழ் பேசத் தொடங்கி விட்டனர் என்று கூறியுள்ளார். பாடல்கள் வருமாறு:-

''பித்தெலாம் உடைய உலகர்தம் கலகப்
பிதற்றெலாம் என்று ஒழிந்திடுமோ
சத்தெலாம் ஒன்றென்று உணர்ந்த சன்மார்க்க
சங்கம் என்று ஓங்குமோ...''

''ஒருமையின் உலகெலாம் ஓங்குக எனவே
ஊதின சின்னங்கள் ஊதின சங்கம்
பெருமை கொள் சமரச சுத்த சன் மார்க்கப்
பெரும்புகழ் பேசினர் பெரியவர் சூழ்ந்தார்''

என்பன அவர்தம் பாடல்கள். எம்மதமும் சம்மதம் என்னும் கொள்கையுடைய அவர், சாதி – குலம்–கோத்திரம் –சமயம் - மதம் முதலிய வேறுபாடுகளையும் இழித்துப் பழித்துச் சாடியுள்ளார்:

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே"

"சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்".

என்பன அவர்தம் படால்களாகும். எல்லா வேறுபாடுகளும் நீங்கி 'ஒருமையின் உலகெலாம் ஓங்குக' என உலக ஒருமைக் கழகத்துக்கு வித்திட்டுள்ளார் இராமலிங்க வள்ளலார். ஆழ்வார்கள் நாயன்மார்கள் உட்பட இன்னும் தமிழறிஞர்கள் பலர் ஆயிரம் - ஆயிரம் ஆண்டுகளாக உலக ஒற்றுமைக்கு அடிகோலி வந்துள்ளனர். சாதி மத வேற்றுமைகளைப் போலவே, ஆரியர்-அல்லாதார் போன்ற இன வேற்றுமை, வெள்ளையர் -கறுப்பர் என்ற நிற வேற்றுமை முதலிய கொடுமைகளும் உலகத்தினின்றும் ஒழிக்கப்படல் வேண்டும். இது நிகழ்ந்தால்தான் வள்ளலார் கண்ட உலக ஒருமைப்பாட்டுக் கனவு உருப்படியாக முடியும். இனி, உலக ஒற்றுமைக்காக வேறு நாட்டினர்சிலர் செய்துள்ள முயற்சிகளைக் காண்பாம்.

## பல்லோர் முயற்சிகள்:

கி. பி. 1305-ஆம் ஆண்டிலேயே 'பீர்டு பாஸ்' என்பவர் தமது நூல் ஒன்றில், அனைத்து உலக அரசுகளின் கூட்டுறவுத் திட்டம் பற்றி வெளியிட்டார்.

பிரெஞ்சு மன்னர் நான்காம் ஹென்றி (1593-1610) ஒரு பெருந்திட்டம் (The Grand Design) வகுத்தார். ஐரோப்பாவை ஒத்த உரிமையுள்ள பதினைந்து அரசுகளாக

அமைக்க வேண்டும். பிணக்குத் தீர்க்கப் பொதுமன்றமும் பொதுப் படையும் இருக்கவேண்டும் - இன்ன பிற இவர் திட்டங்களாகும்.

1623-இல், 'எமரிக் குரூஸ்' என்னும் துறவி, உலக ஒற்றுமைத் திட்டம் பற்றி வெளியிட்டார். உலகநாடுகளி டையே வாணிக உரிமை இருக்கவேண்டும்; உலகச் சட்ட மன்றம், உலக நீதி மன்றம் அமைய வேண்டும்; உலகில் அமைதி நிலவவேண்டும் - இன்ன பிற அவர்தம் திட்டங் களாகும்.

'வில்லியம் பென்'(William Penn)என்பார் 1693-இல் ஒரு கட்டுரை வெளியிட்டார். அதில் அவர் கூறியன:—ஐரோப் பிய இளவரசர்கள் ஒன்றுகூட வேண்டும்; அனைத்துலக வழக்குகளைத் தீர்க்க உலகப் பொதுச் சட்டம் உருவாக்க வேண்டும்; அனைத்துலகச் சட்ட மன்றம் (Parliament) நிறுவ வேண்டும் – இன்ன பிற வாகும்.

பிரெஞ்சுப் பேரறிஞர் 'ழான் ழாக் ரூசோ' 1761-இல் ஒரு நூல் வெளியிட்டார். அதில் அவர் கூறியுள்ளவை:— அனைத்துலக நிலையம் – வலிமை மிக்க உலக நாடுகளின் கூட்டமைப்பு வேண்டும்; சட்டங்களை உருவாக்கவும் செயல்படுத்தவும் பொதுமன்றம் வேண்டும். இவற்றை ஒழுங்குறுத்த 'அனைத்துலக ஒப்பந்த உறுதி' செய்து கொள்ள வேண்டும் இன்ன பிறவாகும்.

'ஜெரிமி பென்தம்' (Jeremy Bentham) என்பவர் 1786 -89 ஆம் ஆண்டுக் கால அளவில், 'அனைத்துலகச் சட்டக் கொள்கைகள்' (Principles of International Law) என்னும் நூல் எழுதி வெளியிட்டார். அதில் அவர் கூறியிருப்பவை:-

அனைத்துலக அமைதி மன்றம் அமைக்க வேண்டும்; அனைத்துலக உறவும் பாதுகாப்பும் இருக்கவேண்டும்; படைகளைக் குறைக்க வேண்டும்; குடியேற்ற நாட்டு (colony) அடிமை முறையை அகற்ற வேண்டும்; அனைவருக்கும் வாணிக உரிமை வேண்டும்; போர் நேராதவாறு தடுக்கவேண்டும் - இன்ன பிற.

'H. G, வெல்ஸ்' (Wells, Herbert George: 1866-1946) என்னும் ஆங்கிலேயர், 'உலக வரலாற்றின் சுருக்கம்' (A short History of the World) என்னும் தமது நூலில் இதுபற்றி எழுதியிருப்பவை யாவன:— உலக ஒற்றுமையை நிலைநாட்ட ஒரு பொதுக் கொள்கை இருக்க வேண்டும்; எல்லாரும் கல்வி யறிவு பெறவேண்டும்; எவ்வகைப் படையும் இருக்கக் கூடாது; வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து அனைவரும் வளமுடன் வாழவேண்டும்-என்றெல்லாம் எழுதியுள்ளார். இவர் 'உலக அமைதிக்குரிய வழி' (The way To world Peace) என்னும் நூலும் எழுதியுள்ளார்.

முதல் உலகப் போர் முடிந்ததும், அமெரிக்கக் (U.S.A.) குடியரசுத் தலைவராயிருந்த 'வுட்ரோ வில்சன்'(woodrow wilson) முதலியோர் மிகவும் முயன்று 'உலக நாடுகளின் ஒற்றுமைக் கழகம்'(The League of Nations)என்னும் ஓர் அமைப்பை உருவாக்கி உலக ஒற்றுமைக்காக உழைத்தனர். இரண்டாம் உலகப் போர் முடிந்ததும், சான் பிரான்சிஸ்கோவில் மறுபடியும் உலக ஒற்றுமைக்காக மாநாடு கூட்டப்பட்டது; அப்போது அமெரிக்கக் குடியரசுத் தலைவராயிருந்த 'ட்ருமன்' (Truman) கூறியதாவது:- "அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசின் கீழ் (U. S. A.)

குடிமக்கள் அனைவரும் நலமாகவும் இன்பமாகவும், வாழ்வதைப் போலவே, அனைத்துலகக் குடியரசின் கீழும் உலக நாடுகள் அனைத்தும் ஒன்றுபட்டு நலமாக வாழ முடியும்'' என்பதாகும்.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு அறிஞர்கள் கூறியுள்ளன யாவும் சரியே! ஏட்டில் எழுதி வைத்து என்ன பயன்? எல்லாரும் பின்பற்ற வேண்டுமே! ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா? இந்தக் காலத்தில் உலக ஒற்றுமைக் கொள்கையினர். (சர்வதேச வாதிகள்) பலரும், உலகப் பொதுவுடைமைக் கொள்கையினர் பலரும் இந்த உலக ஒற்றுமைத் திட்டத்தை ஒப்புக் கொள்கின்றனர். இது உரிய முறையில் உருவாகி நடைமுறைக்கு வர வேண்டுமே!

## இயற்கைத் தடைகள்:

பண்டு மலை, காடு, பாலைநிலம், ஆறு, கடல் முதலியவற்றால் உலக நாடுகள் பிரிந்திருந்தன. எந்தெந்த நாடுகள் எங்கெங்கே உள்ளன என்பது எல்லா நாட்டினர்க்கும் தெரியாது. இன்றோ, செய்தித்தாள், தந்தி, வானவூர்தி, வானொலி, தொலை பேசி, தொலைக் காட்சி முதலியவற்றின் துணையால் உலக நாடுகள் நெருங்கிவிட்டன. பத்தாயிரம் கல் தொலைவுக்கு அப்பாலுள்ள ஓர் இடம் பக்கத்து அறை போல் ஆய்விட்டது. காலமும் தொலைவும் வெல்லப்பட்டன. குறுகிய காலத்தில் நெடுந் தொலைவில் உள்ள ஓரிடத்தை இன்று அடையமுடியும்.

அவ்வளவு ஏன்? சில செய்தி நாளேடுகளில் வெளியாகும் படங்களின் கீழே, 'அசோசியேடட் பிரஸ் தந்தி புகைப் படம்' (Associated press wire photo), 'பிரிட்டிஷ் ரேடியோ புகைப்படம்' (British official Radio photo)

'அமெரிக்க ரேடியோ தந்தி புகைப்படம்' (U.S. Signal corps Radio Telephoto), இன்ன பிற சொற்றொடர் களைக் காணலாம். இதனால் அறியப் படுவதாவது: புகைப் படங்கள், தந்தி வாயிலாகவும், ரேடியோ வாயி லாகவும், சுமார் பத்தாயிரம் கல் (மைல்) தொலைவுக்கு அப்பால் உள்ள நாடுகட்கும் சுமார் பத்தே மணித் துளி களில் (நிமிடங்களில்), புதிய பொறிகளின் துணை கொண்டு அனுப்பப்படுகின்றன - என்பதாகும். எனவே, உலகம் இப்போது மிகவும் நெருங்கி யுள்ளமை புலனாகும். மற் றும், இப்போது செயற்கைக் கோள்களின் வாயிலாக, ஒரே நேரத்தில் பல்வேறிடங்கட்கும் ஒலியும் ஒளியும் கிடைப்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

செயற்கைத் தடைகள்:

இவ்வாறு இயற்கைத் தடைகள் நீங்கியும், செயற்கை யான மனத் தடை இன்னும் நீங்க வில்லை. சாதி, மதம் மொழி, நிறம், நாட்டுப் பற்று, பழக்க வழக்கப் பண்பாட்டு முறை, வாணிக நோக்கு, பணப் பற்று முத லியன, உலக மக்கள் ஒன்றுபட இடம்தராத செயற்கைத் தடைகள் ஆகும். பரந்த - விரிந்த மனப்பான்மையால் மக்களினம் இந்தத் தடைகளை வெல்ல வேண்டும். பண்டு யாரும் எங்கும் போகலாம், இன்று அவ்வாறு இயலாது. உலக நாடுகள் பலவற்றின் மேலும் பறந்து செல்லும் பறவைகட்கு உள்ள உரிமை இன்று மக்கட்கு இல்லை. மக்கள் நாடு விட்டு நாடு செல்ல வேண்டுமெனில், பயண இசைவுச் சீட்டு (pass port), நுழைவு உரிமைச் சான்று (visa) ஆகியவை பெறவேண்டும்.

கூட்டாட்சி முறை:

உலகுக்கு ஒரே அரசு அமைக்கப் படிப்படியான முயற்சிகள் மேற்கொள்ளலாம் என்பது சிலரது கருத்து.

உலகைப் பல மண்டலங்களாகப் பிரிக்க வேண்டும்; ஒவ்வொரு மண்டலத்திலும் பல நாடுகள் இருக்க வேண்டும்; ஒவ்வொரு மண்டலமும் ஒரு கூட்டாட்சியால் ஆளப்பட வேண்டும்; பின்னர்ப் படிப்படியாகப் பல மண்டலங்கட்கும் ஒரு பொது ஆட்சி நிறுவலாம் - என்பது ஒரு வகையான முயற்சி. குறிப்பிட்ட நாடுகள் ஒரு மண்டலத்தில் சேர்வது அரிது - சேர்ந்தாலும் பின்னர்ப் பிரிந்து விடும் - எனவே இந்த முறை வெற்றி தராது - என்பது சிலரது கருத்து.

ஒட்டும் பேச்சு;

கூட்டாட்சி முறை வெற்றி தரும் என்பவர் சில எடுத்துக்காட்டுகள் தரலாம். இந்திய ஒன்றியம் (Indian union), ஒன்றிய அமெரிக்க நாடுகள் (U.S.A. -- United states of America), சோவியத் சோஷலிசக் குடியரசு ஒன்றியம் (ரஷ்யா) (U.S.S.R-Union of Soviet Socialist Republics). முதலிய அமைப்புகள் கூட்டாட்சிக் கொள்கையினருக்கு உரிய சான்றுகளாகும். ஐரோப்பியரின் வருகைக்கு முன், இந்தியாவில் சுமார் அறுநூறுக்கும் மேற்பட்ட அரசுகள் இருந்தன. இன்று எல்லாம் ஒன்றாகி ஒரே நாடாய்த் திகழ்வதைக் காணலாம். U.S.A. எனப்படும் அமெரிக்க ஒன்றியத்தில் முதலில் பதின் மூன்று நாடுகளே இருந்தன; பின்னர், மேலும் முப்பத்தைந்து நாடுகள் சேர்ந்து நாற்பத்தெட்டு நாடுகளின் ஒன்றியமாயிற்று; இப்போது மேலும் இரண்டு சேர ஒன்றியத்தில் ஐம்பது நாடுகள் உள்ளன. இதே போல, ரஷ்யா, சீனா ஆகியவையும், ‘சிறு துளி பெரு வெள்ளம்’ என்பது போல், பல நாடுகள் சேர்ந்த பெரிய ஒன்றியங்கள் ஆகும். மற்றும், கிரேட்

பிரிட்டனின் முடியரசு ஒன்றியத்தில் (U.K. -- united kingdom) இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து, வட அயர் லாந்து ஆகியவை உள்ளன. இன்ன பிற அமைப்புகள், கூட்டாட்சிக் கொள்கையினர்க்கு உரிய சான்றுகளாகும்.

வெட்டும் பேச்சு:

கூட்டாட்சி முறை வெற்றி தராது என்பவரும் சில எடுத்துக் காட்டுகள் தரலாம்: கிரேட் பிரிட்டனின் முடியரசு ஒன்றியத்திலிருந்து (U.K.) தென் அயர்லாந்து பிரிந்தமை ஒரு சான்று. எகிப்து, வேறு சில நாடுகளுடன் சேர்ந்து 'ஐக்கிய அரபுக் குடியரசு' என்னும் பெயருடன் சிறிது காலம் இருந்தது. பின்னர் எகிப்திலிருந்து சிரியா பிரிந்து விட்டது; சூடான் முன்னமேயே பிரிந்துவிட்டது. இப்போது எகிப்து தனியாயிருக்கிறது. மலாய், சிங்கப்பூர் சாரவாக், போர்னியோவின் ஒரு பகுதி ஆகியவை 'மலேசியா' (Malasia) என்னும் பெயரில் ஓர் ஒன்றியம் ஆயின; பின்னர் இந்த ஒன்றியத்திலிருந்து சிங்கப்பூர் பிரிந்து விட்டது. இவ்வாறாகக் கூட்டாட்சி முறையைச் சிலர் வெட்டிப் பேசுகின்றனர்.

பிரிவது இயற்கையே:

பொதுவாகப் பிரிவதே உலக இயற்கையா யுள்ளது. ஒரு பெரிய குடும்பத்தில் ஒன்றி வாழ்ந்த உடன் பிறந்தார்கள், பின்னர்த் தனித்தனிக் குடும்பத்தினராய், பிரிந்து விடுவதைக் காண்கிறோம். பெற்றோர் பிள்ளைகட்கிடையே பிரிவு – கணவன் மனைவியர்க் கிடையே பிரிவு – உடன் பிறந்தார்க்கிடையே பிரிவு – உறவினர்க்கிடையே பிரிவு – நண்பர்கட்கிடையே பிரிவு – இரு தெருவார்க்கிடையே பிரிவு - இரண்டு ஊரார்கட்கிடையே பிரிவு- இரு

நாட்டினர்க்கிடையே பிரிவு - இன்னும் சாதி, மதம், இனம், மொழி, நிறம், கட்சிகள், நாட்டுப்பற்று, இன்ன பிற காரணமாகப் பிரிவுகள் - இவ்வாறாகப் பல்வேறு பிரிவு களை உலகியலில் கண்டு வருகிறோம்.

அயர்லாந்து நாடு தென் அயர்லாந்து - வடஅயர் லாந்து எனப் பிரிந்தும், கொரியா நாடு தென்கொரியா- வட கொரியா எனப் பிரிந்தும், வியட்நாம் நாடு தென் வியட்நாம் - வடவியட்நாம் எனப் பிரிந்தும் போரிட்டுக் கொண்டமை உலக வரலாறு. செர்மனிநாடு கிழக்கு செர் மனி - மேற்கு செர்மனி என இரண்டாகப் பிரிந்திருப்பதும் அறிந்த செய்தியே. மற்றும், ஒரு நாட்டுக்குள்ளேயே இருக் கும் உறுப்புப் பகுதிகள் சில, தனித்தனி நாட்டு உரிமை கோரி உள்நாட்டுப் போர் நிகழ்த்திக் கொண்டிருப்பதும் உலகறிந்த செய்தி. இன்னும், சீனப் பெருநாட்டிலிருந்து ஃபார்மோசா (Formosa) தீவு தனி நாடாய்ப் பிரிந்திருப் பதும் ஈண்டு எண்ணத்தக்கது. மேலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் இந்தியா, பர்மா, இலங்கை, பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகியவை ஒரு நாடாய் இருந்தமையும் இப்போது ஒவ்வொன்றும் தனித் தனி நாடாய் இருக்கும் நிலைமையும் ஈண்டு ஒப்பு நோக் கத்தக்கன. எனவே, பிரிவதே உலகியற்கை. ஆனால் மக்க ளினம் இந்த இயற்கையை வென்று ஒன்றுபட வேண்டும்.

மண்டலச் சார்பு:

இப்போது உலகில் 'மண்டலச் சார்பு உள்ள நாடுகள்' (Alignment Countries) எனச் சிலவும், 'மண்டலச்சார்பு இல்லாத நாடுகள்' (Non-Alignment countries) எனச்சில வும் பெயர்பெற்றிருப்பதைக் காண்கிறோம். அமெரிக்கா

வின் துணையுடன் சில நாடுகளும், ரஷ்யாவின் துணையுடன் கம்யூனிஸ்ட் நாடுகள் சிலவும் இருந்துகொண்டு 'மண்டலச் சார்பு உள்ள நாடுகள்' என்னும் பெயருக்கு உரியனவாயுள்ளன. 'தென் கிழக்கு ஆசிய ஒப்பந்த நாடுகள்' (சீட்டோ=SEATO=South East Asian Treaty organization) என்னும் பெயருடன் சில நாடுகளும், 'வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள்' (நாட்டோ=NATO=North Atlantic Treaty Organization) என்னும் பெயருடன் சில நாடுகளும், வார்சா ஒப்பந்த நாடுகள், என்னும் பெயருடன் சில நாடுகளும் இணைந்து மண்டலச் சார்பு உடையவை என்னும் பெயர் பெற்றன. 'பாக்தாத் (Baghdad) ஒப்பந்த நாடுகள்' என்னும் பெயரில் சில நாடுகள் இணைந்ததும் உண்டு.

மற்றும், மண்டலச் சார்புஇல்லாமலேயே, இந்தோனேசியாவில்- ஜாவாத் தீவில் உள்ளதான'பாண்டுங்' (Bandung) என்னும் பெரிய நகரத்தில் 1955 ஏப்ரலில் முதல் ஆசிய - ஆப்பிரிக்கா நாடுகளின் மாநாடு நடந்தது. இதில் கலந்துகொண்ட நாடுகள் 'பாண்டுங் நாடுகள்' எனப்படுவதுண்டு.

1950 ஆம் ஆண்டில், இலங்கையின் தலைநகரான கொழும்புவில், தெற்கு - தென் கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உரிய திட்டம் வகுப்பதற்காகச் சில நாடுகள் கூடி மாநாடு நடத்தின - திட்டம் தீட்டின. இத்திட்டம் 'கொழும்புத்திட்டம்' எனப்படும். இதில் தொடர்புடைய நாடுகள் 'கொழும்பு நாடுகள்' எனப்படுவதுண்டு.

மண்டலச் சார்பு அற்ற நாடுகள் பல கூடி மாநாடு நடத்துவதும் உண்டு. 1981 பிப்ரவரியில் இது (Non-

Alignment conference) இந்தியாவில் நடைபெற்றது. மற்றும், 1983-ஆம் ஆண்டு, இந்தியாவின் தலைநகரான டெல்லியில், இந்தியத் தலைமையமைச்ச ராயிருந்த திருமதி இந்திரா காந்தியவர்களின் தலைமையில் கூட்டு சேரா நாடுகளின் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில், கூட்டு சேரா நாடுகளின் தலைமை நாடாக இந்தியா தேர்ந்தெடுக்கப் பெற்றது. ஒருவகையில் பார்க்கப்போனால், 'மண்டலச் சார்பு' அற்ற நாடுகளின் இயக்கம் - கூட்டு என்பது, ஒருவகை 'மண்டலச்சார்பு' ஆக ஆகிவிடும் போலும்!

இணைவதும் இயற்கையே:

பிரிவதே இயற்கையெனினும், கட்டாயத் தேவை ஏற்படும்போது இணைவதும் இயற்கையே! மண்டலச் சார்பு, கூட்டு மாநாடு ஆகியவை இதற்குச் சான்றாகும். புலியோ - சிங்கமோ தாக்க வரின், ஊரார் அனைவரும் ஒன்று கூடி அந்தப் பொது எதிரியைத் தாக்குகின்றனர். வறட்சி - பெருமழை - வெள்ளம் - புயல் – தீ - எரிமலை நிலநடுக்கம் - கொள்ளைநோய் - இன்ன பிற இயற்கையின் கொடுமைகளால் – கோளாறுகளால், உலகின் ஒரு பகுதியில் அழிவு ஏற்படின், உலகின் மற்ற பகுதியினர் வரிந்து கட்டிக்கொண்டு உதவுவதைக் காண்கிறோம். ஒருவர் வீட்டுச் சாவு வாழ்வு நிகழ்ச்சிகளில் உறவினரும் நண்பரும் பங்கு கொள்வது போல, ஒரு நாட்டின் இன்ப துன்பங்களில் உலகின் மற்ற நாடுகளும் பங்கு கொள்ளும் நிலைமை இன்று வளர்ந்து வருவதைக் காண்கின்றோம். இத்தகைய ஒற்றுமை உணர்வுக்கிடையே வேற்றுமையுணர்வும் பெருகிவருவது வேதனையாகும். வல்லரசுகள் மனம் வைத்தால் - வல்லரசுகள் ஒன்று பட்டால், உலகில் பிரிவினை யின்றியும் போர் இன்றியும் மக்களினம் அமைதியாய் வாழ முடியும்.

தனித்து வாழ முடியாது:

இந்தக் காலத்தில் எந்த வல்லரசுங்கூட வேறொரு நாட்டின் உதவியின்றித் தனித்து வாழமுடியாது. உலக நாடுகள் ஒன்றையொன்று சார்ந்தே வாழவேண்டிய நிலையில் உள்ளன. எந்த வல்லரசும் தன்னிடம் இல்லாத பொருளை இன்னொரு நாட்டிலிருந்து பெறவேண்டியுள்ளது. ஒரு நாட்டின் இன்ப - துன்பங்கள் மற்ற நாடுகளையும் தாக்குகின்றன. ஈரான், ஈராக் ஆகிய நாடுகளிலிருந்து எண்ணெய் பெற்று வந்த நாடுகள், ஈரான் - ஈராக் போரினால் எண்ணெய்த் தட்டுப்பாடு உடையவையாயுள்ளன. மற்றுமோர் அருமையான எடுத்துக்காட்டு வருமாறு: ஒரு சமயம் ஜப்பான் நாட்டில் உள்ள ஒரு பட்டுத் தொழிற்சாலையில் தீப்பற்றிக் கொண்டது. அங்கே தீப் பற்றிய இருபது மணித்துளிகளுக்குள் (நிமிடங்களுக்குள்) அமெரிக்க நியூயார்க் நகரில் உள்ள வாணிக நிலையங்களில் பட்டின் விலை ஏறத்தொடங்கிவிட்டது. இவ்வாறு இன்னும் எண்ணிறந்த எடுத்துக்காட்டுகள் தரலாம். எனவே, உலக நாடுகள் ஒன்றி வாழ வேண்டியனவா யுள்ளன.

முதல் உலக ஒற்றுமைக் கழகம்:

இரண்டாவது உலகப் பெரும் போருக்குப் பிறகு 'ஐக்கிய நாடுகளின் சங்கம்' (United Nations Organization) என்னும் அமைப்பு உருவாகி இப்போது இருந்து கொண்டுள்ளது. இதனைத் தமிழில் சுருக்கமாக 'ஐ,நா'. என்றும், ஆங்கிலத்தில் சுருக்கமாக 'U.N.O.' என்றும் வழங்குவர். இந்த வகையில் இது இரண்டாவது அமைப்பேயாகும். இதற்கு முன்பே இது போன்றதோர் அமைப்பு இருந்தது. அதன் வரலாறு சுருக்கமாக வருமாறு:-

முதல் உலகப்போர் 1914 சூலை 28 ஆம்நாள் தொடங்கி, 1918 நவம்பர் 11 ஆம் நாள்வரை நிகழ்ந்தது. 'கண் கெட்டபின் ஞாயிறு வணக்கம்'' 'திருட்டுப் போன பின் அறைக்குப் பூட்டு' என்ற முறையில் பல்வேறு பெரிய இழப்புகட்குப் பின்னர், 1919 சனவரி 18 ஆம் நாள் பாரிசில் அமைதிப் பேச்சு தொடங்கியது. அமெரிக்கக் குடியரசுத் தலைவராயிருந்த வுட்ரோ வில்சன்(Woodrow Wilson) உலக அமைதிக்குப் பெரிதும் பாடுபட்டார். பிரான்சில் பாரிசுக்குத் தென்மேற்கில் சுமார் 16 கி.மீ. தொலைவில் உள்ள 'வெர்செல்ஸ்' (Versailles) என்னும் நகரில் உள்ள கோட்டையின் கண்ணாடிக் கூடத்தில் (Hall of Mirrors), 1919 சூன் 28 ஆம் நாள், பகை நாடுகட்கிடையே அமைதி உடன்படிக்கை கையெழுத்தாகியது. இதற்கு வெர்செல்ஸ் உடன்படிக்கை' (Treaty of Versailles) என்று பெயராம். இதைத் தொடர்ந்து உலகப் பெரியார்கள் கூடி,'உலகநாடுகளின் ஒற்றுமைக் கழகம்' (The League of Nations) என்னும் அமைப்பை உருவாக்கினர். இதில் பெரும்பங்கு கொண்டிருந்த அமெரிக்கத் தலைவர் 'வுட்ரோ வில்சன்' 'உலக ஒற்றுமைக் கழகத்தின் தந்தை' என்னும் புகழ்ப் பெயர் பெற்றார். உலக மக்கள் ஒன்றுபடுவதற்கும் வசதியுடன் வாழ்வதற்கும் உரிய சட்ட திட்டங்கள் பலப் பல வகுக்கப்பட்டன. பல நாடுகள் கழகத்தில் சேர்ந்தன; சில நாடுகள் சில்லாண்டு கழித்துச் சேர்ந்தன. இக்கழகம் செய்த ஆக்க வேலைகளுள் ஒரு சில வருமாறு:-

1. சுவீடனுக்கும்- பின்லாந்துக்கும், செர்மனிக்கும்-போலந்துக்கும், கிரேக்கருக்கும்-பல்கேரியருக்கும், கொலம்பியாவிற்கும்-பெருவிற்கும் இடையே ஏற்பட்ட சச்சரவுகளை-கலகங்களைத் தீர்த்துப் போர் மூளாமல் செய்தது.

2. ஏழமை நாடுகளின் தொழில் வளத்தைப் பெருக்கிப் பொருளாதாரத்தை உயர்த்த முயன்றது.

3. அடிமைத்தனம்-அபின் வாணிகம் முதலியவற்றைத் தொலைக்கப் பாடுபட்டது.

4. தொற்று நோய்கள் பரவாமல் இருக்கத் தடுப்பு முறைகள் செய்தது.

5. ஏழை நாடுகட்குப் பெருந் தொகையைக் கடனாக அளித்துதவியது.

6. போர்க் கைதிகள் தத்தம் நாடு அடையச் செய்தது.

7. நிற வேற்றுமையை ஒழிக்க முனைந்தது-இன்னபிற.

இவ்வாறு பலவகை நன்மைகளைச் செய்துகொண்டிருந்த கழகம் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்ததா? அதுதான் இல்லை. கழகம் சிறகிழந்த பறவையாயிற்று-வேலியால் மேயப்பட்ட பயிராயிற்று. உறுப்பு நாடுகள் விதிகளை மீறிப் படைகளை மிகவும் பெருக்கின-கழகத்திலிருந்து ஒவ்வொன்றாகப் பிரியவும் தொடங்கின. மீண்டும் பெரும்போர். செர்மனியின் தலைவர் ஃஇட்லர் (Hitler) 1939 செப்டம்பர் முதல்நாள் போலந்தைத் தாக்கிப் போருக்குப் போணி பண்ணி, இரண்டாவது உலகப் பெரும் போருக்குத் திறப்பு விழா செய்தார். அணுகுண்டு வந்தே ஆண்டு நிறைவு விழா செய்தது. சப்பானில் உள்ள ஹிரோஷிமா நகரின்மேல் 1945 ஆகஸ்ட் 6 ஆம் நாளிலும், நாகசாகி என்னும் நகரில் 1945 ஆகஸ்ட் 9 ஆம் நாளிலும் அமெரிக்கா (U.S.A.) அணுகுண்டு போட்டது. சுமார் ஆறு ஆண்டு காலம் நடந்த போர், 1945 செப்டம்பர் 2ஆம் நாள் முடிவுக்கு வந்தது.

இரண்டாவது உலக நிறுவனம்:

இரண்டாவது உலகப் பெரும் போரினால் ஏற்பட்ட இழப்புக்களை உணர்ந்த உலக அரசியல் தலைவர்கள், இனி இம்மாதிரி நிகழாதிருக்க, மீண்டும் ஓர் உலகநிறுவனம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஐம்பது நாட்டுத் தலைவர்கள், 1945 சூன் 26 ஆம் நாள், அமெரிக்க நாட்டு 'சான்பிரான்சிஸ்கோ' நகரில் கூடி மாநாடு நடத்தினர். பல திட்டங்கள் தீட்டப்பட்டன. ஒன்றிய நாடுகளின் நிறுவனம்'(United Nations Organization)என்னும்பெயரில்ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் தலைமைச் செயலகம் நியூயார்க்கில் (U.S.A.) உள்ளது. இதனை இப்போது தமிழில் சுருக்கமாக 'ஐ.நா.' (ஐக்கிய நாடுகள்) என வழங்குகின்றனர். இதன் விதிமுறை 1945 அக்டோபர் 24 ஆம்நாள் நடைமுறைக்கு வரலாயிற்று. இதனால்தான் ஆண்டுதோறும் அக்டோபர் 24 ஆம் நாளை ஐ.நா. நாளாகக் கொண்டாடும் வழக்கம் இப்போது இருந்து வருகிறது. இந்த நிறுவனத்தில் மேலும் நாடுகள் சேர்ந்தன-இன்று வரையும் சேர்ந்துகொண்டும் உள்ளன. இந்நிறுவனத்தின் தலையாய உறுப்புக்கள்:- பொது மன்றம், பாதுகாப்பு மன்றம், அனைத்துலக நீதி மன்றம், பொருளாதார-சமூக மன்றம், இன்ன பிறவாம். மற்றும், இந்நிறுவனத்தின் இன்றியமையா நோக்கங்கள் சில வருமாறு:-

1, இனி உலகின் எந்த மூலையிலும் போர் என்ற பேச்சே எழலாகாது.

2. ஒவ்வொரு மாந்தரின் மதிப்பும் உரிமையும் காப்பாற்றப்பட வேண்டும்.

3. மக்கள் சமுதாயம் துன்பம் காணாத இன்ப வாழ்க்கை வாழ்வதற்கு வேண்டிய வசதிகளை உண்டாக்கித் தரல்வேண்டும்.

4. மக்களிடையே தாங்கும் (சகிக்கும்) தன்மையும் பொறுமையும் நிலவச் செய்து நட்பு வளரச் செய்ய வேண்டும்.

5. உலக ஒற்றுமைக்கும் அமைதிக்கும் கேடு நேரின், உலகினர் அனைவரும் ஒன்று பட்டுக் காக்க வேண்டும். இன்ன பிறவாம்.

இதன்படி ஐ.நா. நிறுவனம் பல ஆக்க வேலைகள் செய்தன-செய்து வருகின்றன. கொரியப் போர், ஈரான், எண்ணெய்த் தகராறு, காங்கோ சிக்கல், இன்ன பிறவற்றில் ஐ.நா.வின் ஈடுபாடு எத்தகையது என்பதை உலகறியும்.

யுனெஸ்கோ (UNESCO):

ஐ.நா. நிறுவனத்தின் ஒரு தலையாய உறுப்பாக, 'ஐக்கிய நாட்டுக் கல்வி-அறிவியல்-பண்பாட்டுக் கழகம்' (UNESCO = United Nations Educational, Scientific and cultural Organization) என்னும் ஓர் அமைப்பு, 1946 நவம்பர் 4 ஆம் நாள் ஏற்படுத்தப் பெற்றது. இதன் தலைமைச் செயலகம் பாரிசில் உள்ளது. இது, உலகில் கல்வி, அறிவியல், பண்பாடு ஆகியவை வளரச் செய்கிறது; இதன் வாயிலாக, உலக நாடுகளில், கூட்டுறவு-அமைதி-பாதுகாப்பு இன்ன பிற ஓங்கியுயரச் செய்கிறது; மாந்தரின் அடிப்படை உரிமையைப் பேணச் செய்கிறது; இன்ன பிற ஆக்கப் பணிகளை யுனெஸ்கோ ஆற்றி வருகிறது.

பெருங் குறை;

ஐ.நா. நிறுவனம் எவ்வளவுதான் நல்ல ஆக்கப் பணிகள் புரியினும், உலக நாடுகளிடையே நிகழும் போர்களை

உடனே நிறுத்த முடியாமை அதற்கு ஒரு பெருங்குறையாகும். நீண்ட நாள் போரை நடக்கவிட்டுப் பின்னரே நிறுத்த முடிகிறது. சில போர் நிறுத்தங்கள், 'காக்கை அமர்வதற்கும் பனம்பழம் விழத் தொடங்குவதற்கும் சரியாயிருந்தது' என்றாற்போல, பகை நாடுகள் தாமாகப் போரை நிறுத்துவதற்கும் ஐ.நா. முயற்சி தொடங்குவதற்கும் சரியாயிருந்தது என்ற மாதிரியில் உள்ளன. சிலபோர்களை இறுதிவரையும் ஐ.நா. வால் நிறுத்த முடியவில்லை. இப்போது-அதாவது – 1980-81ஆம் ஆண்டுக்காலத்தில் தொடங்கி நிகழ்ந்து கொண்டிருக்கும் ஈரான்-ஈராக் போரை இன்னமும் (1986) ஐ.நா. நிறுத்தவில்லை; நிறுத்த முடியவில்லை என்று கூடச் சொல்லலாம். இந்தப் பெருங் குறைக்கு உரிய காரணத்தை ஆராய்ந்து, இனி இந்தக் குறைக்கு இடம் இல்லாதவாறு செயல்படவேண்டும்.

விலக்கு உரிமை:

உலகில் இருநாடுகட்கிடையே போர் நிகழ்வது இயற்கையே! சில போர்கள் வல்லரசுகளால் தூண்டிவிடப்படுவதாகச் சொல்லப்படுவது உண்மையா யிருக்குமா? இரு நாடுகட்கிடையே இயற்கையாகப் போர் நிகழினும், போரிட்டுக் கொள்ளும் இரண்டு ஆட்டுக்கிடாய்கட்கு நடுவே நரி புகுந்து குருதி குடிப்பது போல, அந்நாடுகட்கிடையே வல்லரசுகள் புகுந்து 'திருவிளையாடல்கள்' புரிவதாகச் சொல்லப்படுவதும் உண்மையாயிருக்குமா? எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல, போர்புரியும் இருநாடுகட்கும், வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு படைக் கலங்கள் உதவுவதாக உரைக்கப்படுவதும் உண்மைதானா? வல்லரசுகட்கு அழகு, மெல்லரசுகட்கு இடையே அமைதியை நிலைநாட்ட முயல்வதேயாகும். வல்லரசுகள் ஒற்றுமையுடன் முயன்றால் இது முடி

யும். இல்லையேல், ஆயிரத்தெட்டு ஐ.நா. மன்றங்கள் இருப்பினும் சிறிதும் பயன் இல்லை.

ஐ.நா. மன்ற உறுப்பு நாடுகளுள் ஐந்து வல்லரசுகள் உள்ளன. அவை: அமெரிக்கா (U.S.A.), ரஷ்யா, பிரிட்டன், பிரான்சு, சீனா என்பனவாகும். இந்த ஐந்தும் ஒரு மனத்துடன் ஒத்துழைத்தால்தான் ஐ.நா. மன்றத்தில் எந்தத் தீர்மானமும் நிறைவேற்றப்பட முடியும். ஒரு தீர்மானத்துக்குப் போதுமான பெரும்பான்மை இருப்பினும், இந்த ஐந்து வல்லரசுகளுள் ஒன்று மறுக்குமாயினும் தீர்மானம் நிறைவேறவியலாது. இந்த வல்லரசுகட்கு அத்தகைய விலக்கு உரிமை-வெட்டு உரிமை (Veto power) உண்டு. ஒரு தீர்மானம் கொண்டுவரப் பெறின், ஐந்து வல்லரசுகளுள் ஒன்றுக்கு அது பிடிக்காது போயின், சீட்டாட்டத்தில் துருப்புச் சீட்டை அடித்து வெட்டுவதுபோல, அந்த வல்லரசு, தனது 'விலக்குரிமை' (Veto) என்னும் துருப்பைப் போட்டு, அடித்துத் தீர்மானத்தை வெட்டிவிட முடியும்? இதைப்பற்றி இளைஞர்களிடம் சொன்னால் வியப்பு அடைகிறார்கள். இது ஒரு கேலிக் கூத்தே! இப்படியொரு ஐ.நா. மன்றம் வேண்டியதுதானா? இதற்கு ஐக்கியம்-ஒன்றியம்-United Nations-என்ற பெயர் பொருந்துமா? இந்த விலக்குரிமை யிருப்பதால், உலக நாடுகள், வல்லரசுகளின் பேரருளை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியுள்ளது. இந்த வல்லடி வழக்கத்தை வல்லரசுகள் தாமாக முன்வந்து கைவிட வேண்டும். இல்லையேல், உலகநாடுகள் ஒவ்வொரு வல்லரசைப் பிடித்துக்கொண்டு பல குழுக்களாகவே இயங்க வேண்டியிருக்கும். இதனால் ஐ.நா. மன்றத்தின் நோக்கம் தோல்வியுறும். இப்போது ஐ.நா. போதிய வெற்றி பெறாததற்குக் காரணம் வல்லரசுகளே என்பதாக

ஒரு கருத்துச் சொல்லப்படுகிறது. இது மாறவேண்டும்; உண்மையான உலகச் சமுதாய உணர்வு வேண்டும்.

சமூக ஊக்கம்:

மாந்தன் ஒரு சமூகப் பிராணி' (Man is a Social Animal) என்பது, கிரேக்க அறிஞர் 'அரிஸ்டாட்டில்' (Aristotle: கி.மு. 384-322) என்பவரது கூற்றாகும். மாந்தன் தனித்து வாழ்வதற்கு உரியவன் அல்லன்; சமூகமாகக் கூடி வாழ வேண்டியவனே யாவான். இந்தியாவில் தமிழ்நாட்டு அறிஞர்கள் இதனை நன்கு உணர்ந்திருந்தனர். 'ஊர் ஓட ஒக்க ஓடு' என்பது பழமொழி. ஔவையார் என்னும் பெண்பாற்புலவர், ஊர் ஒற்றுமையும் வேண்டும்- பல ஊர்கள் சேர்ந்த நாட்டு ஒற்றுமையும் வேண்டும்- என்று கூறியுள்ளார்.

> ''ஊருடன் கூடி வாழ்'' (ஆத்திசூடி — 104)
>
> ''ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்''.
> (கொன்றை வேந்தன் — 6)
>
> ''தேசத்தோடு ஒத்துவாழ்'' (ஆத்திசூடி — 62)
>
> ''நாடு ஒப்பன செய்''. (ஆத்திசூடி — 67)

என்பது ஔவையாரின் அருள் மொழியாகும். சமூகமாகக் கூடி வாழவேண்டும் என்னும் 'சமூக ஊக்கம்' (Instinct of Gregariousness) ஆகிய இயல் பூக்கம் மாந்தர்க்கு உண்டு. அதற்கு ஏற்ற சூழ்நிலையை அமைத்தளிப்பது அறிஞர்கள்-அரசியல் தலைவர்கள் ஆகியோரின் பொறுப்பாகும்- கடமையுமாகும்.

## வள்ளுவரின் பங்கு

தமிழ் அறிஞராகிய திருவள்ளுவர் இந்தத் துறையில் தம் பங்கைச் சரியாகச் செலுத்தியுள்ளார். உலகப் பொது நூலாகிய திருக்குறளை, அவர், உலகத்தை மையமாகக் கொண்டே இயற்றியுள்ளார் என்னும் செய்தி முன்னமேயே கூறப்பட்டுள்ளது. பெண்பாற் புலவராகிய ஔவையார் ஊர் ஒற்றுமை உணர்வையும் நாட்டு ஒற்றுமை உணர்வையும் வலியுறுத்தியுள்ளார். திருவள்ளுவரோ, உலகச் சமுதாய ஒற்றுமை உணர்வை ஊட்டியுள்ளார். அவர் பாடல்களுள், விரிவு அஞ்சி, பத்தே பாடற் செய்திகளை ஈண்டு காண்பாம்:-

1. ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
 கல்லார் அறிவிலா தார்'' (140)

பல கலைகளைக் கற்றிருப்பினும், உலகத்தோடு ஒட்டி-ஒன்றி வாழ்தலைக் கல்லாதவர்கள் அறிவில்லாதவர்களே.

2. ''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
 உள்ளத்துள் எல்லாம் உளன்'' (294)

ஒருவன் தன் மனம் அறியப் பொய்க்காது-வஞ்சிக்காது ஒழுகினால், உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் நிலைத்திருப்பான்

3. ''தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு
 காமுறுவர் கற்றறிந் தார்'' (399)

தாம் பெற்று மகிழ்வதை உலகமும் பெற்று மகிழச்செய்து அது கண்டு மேலும் மகிழ்வது கற்றறிந்தார் இயல்பு

4. ''உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு'' (425)

உலகினரைத் தழுவிக் கொண்டு ஒத்துப்போவதே உயர் அறிவு; இன்பத்தில் விரிவதும் துன்பத்தில் குவிதலும் இல்லாததே நல்லறிவு.

5. ''எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு'' (426)

உலகம் எவ்வாறு அமைந்து வாழ்கிறதோ, அவ்வாறே உலகத்தோடு ஒன்றி அமைந்து வாழ்வதே அறிவுடைமையாகும்.

6. ''எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும்தம்மொடு'
கொள்ளாத கொள்ளாது உலகு'' (470)

தம் நிலைக்கு ஒவ்வாத செயல் முறைகளை உலகம் ஏற்றுக் கொள்ளாது; ஆதலின், எவரும், உலகம் இகழாத செயல்களாக எண்ணிப் பார்த்துச் செய்ய வேண்டும்.

7. ''கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு'' (809)

இடையே கெடாமல் வழிவழியாகத் தொடர்ந்து பழகுபவரின் தொடர்பைக் கைவிடாதாரை உலகம் விடாது விரும்பும்.

8. ''பகைநட்பாக்கொண்டொழுகும்பண்புடையாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு'' (874)

பகைவரையும் நண்பராக மாற்றி ஒழுகும் பண்பாளனது உயர் தகுதியோடு உலகம் ஒத்துத் தங்கியிருக்கும்.

9. "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு". (994)

நயத்துடன் நன்மை புரியும் பயன் உள்ளவர்களின் உயர் பண்பை உலகம் பாராட்டும்.

10. "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்" (996)

நற்பண்பு உடையவரைச் சார்ந்தே உலகம் நிலைத்து நடக்கிறது; அந்நிலை இல்லையேல், மண்ணுக்குள் மடிந்து மாய்ந்துபோகும். ஐயோ!

இவ்வாறு திருவள்ளுவர் திருக்குறளில் ஆங்காங்கே உலக ஒற்றுமையுணர்வை ஊட்டியிருப்ப தல்லாமல், 'ஒப்புரவு அறிதல்' என்னும் தனித்தலைப்பு ஒன்று இட்டு அது பற்றிப் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். 'ஒப்புரவு' என்றால், உலக நடையினை அறிந்து ஒத்து-உதவி வாழ்தல் என்பது பொருளாகும். எனவே, உலக ஒற்றுமைக் கோட்பாட்டில் திருவள்ளுவரின் பங்கு மிகப்பெரிது.

### கூட்டரசின் தீமைகள்

உலகுக்கு ஒரே கூட்டரசு ஏற்படுத்துவது இயலக் கூடிய தன்று என்பார், தம் கொள்கைக்கு உரிய காரண மாகக் கூறும் தீமைகள் என்னென்னவா யிருக்கலாம் என நாம் ஆய்ந்து பார்க்கலாம்:-

1. உலகம் முழுவதையும் ஒரே அரசு கட்டிக் காத்துச் சமாளிக்க முடியாது.

2. மூலைக்கு மூலை கலகங்கள் ஏற்படும்; இதைக் கவனிக்கவே சரியாயிருக்கும்; ஆட்சியை நன்கு கவனிக்க முடியாது.

3. சாதி, மதம், மொழி, இனம், நிறம், வட்டாரப் பற்று, நாட்டுப் பற்று, இன்ன பிற அடிக்கடித் தலை காட்டிக் கொண்டேயிருக்கும்; இதனால் மீண்டும் பிரி வினை ஏற்படலாம்.

4. உலகில் ஒரே அரசு உருவானால், செல்வநாடுகள் தம் செல்வத்தைப் பிறநாடுகட்குப் பங்கிடவேண்டிவரும்; அதற்கு அவை ஒப்புவது அரிது. எனவே, எல்லா நாடு களும் உலகக் கூட்டரசில் சேர்வது இயலக் கூடியதன்று.

5. எந்த நாட்டுக்கும் எதிலும் சொந்தப் பொறுப்பு இராது; மற்றவர்கள் பால் ஊற்றுவர்கள்–நாம் ஒருவர் மட்டும் தண்ணீர் ஊற்றினால் தெரியவாபோகிறது என்று எண்ணி எல்லாருமே தண்ணீர் ஊற்றிய கதையாய், எல்லாருமே 'யாருக்கு வந்த விருந்தோ' என்றிருக்கக்கூடும்.

6. எந்த நாட்டில் ஆட்சியின் தலைமையகம் இருப் பது? எந்த நாட்டார் தலைவரா யிருப்பது? – 'என்ற போட்டி மனப்பான்மை உருவாகும்; இதனால் கூட்டரசு வெற்றி பெற முடியாமற் போகலாம்.

இன்ன பிறவற்றைக் காரணமாகக் கூறிக் கூட்டரசுக் கோட்பாட்டைச் சிலர் மறுக்கலாம். ஆனால் இந்தக் குறைபாடுகள், முயன்றால் தீர்க்கக் கூடியவையே, இப் போது, ரஷ்யா, சீனா, அமெரிக்கா (U.S.A.), இந்தியா போன்ற பெரிய நாடுகளில் எவ்வாறு கூட்டாட்சி நடத்தப் பெற்று–எல்லாச் சிக்கல்களும் தீர்க்கப் பெற்று ஒழுங்கு நிலவுகிறதோ, அவ்வாறே, உலகக் கூட்டாட்சியையும் சிக் கல் இன்றி நடத்தி வெற்றி காணலாம். அமெரிக்காவில்

(U.S.A.) பல உறுப்பு மாநிலங்கள் (States) இருப்பது போல, இந்தியாவில் பல உறுப்பு மாநிலங்கள் இருப்பது போல, உலகக் கூட்டாட்சியில், ஒவ்வொரு நாடும், சிறிய தாயினும் சரி-பெரியதாயினும் சரியே-ஓர் உறுப்பு மாநில மாக இருக்கும். எனவே, அமெரிக்கா-இந்தியாபோலவே, உலகக் கூட்டாட்சியும் ஒழுங்காக நடைபெறும். எல்லாச் சிக்கல்களும் தீர்க்கப் பெறும்.

இப்போது ஐ.நா. மன்றத்தின் தலைமைச் செயலகம் இருக்கும் நியூயார்க் (U.S.A.) நகரமே, உலகக் கூட்டாட்சியின் தலைநகரமாகவும் இருக்கலாம். ஐ.நா. மன்றம் நியூயார்க்கில் இருக்க மற்ற நாடுகள் ஒத்துக் கொண்டது போலவே இதற்கும் ஒத்துக் கொள்ளலாம். அமெரிக்க (U.S.A.) நாட்டைப் போலவே ரஷ்யாவும் பெரிய வசதி படைத்த நாடாயிருப்பதால், உலக அரசின் இன்றியமையாத சில அலுவலகங்கள் ரஷ்யாவிலும் இருக்கலாம். 'யுனெஸ்கோ'வின் தலைமைச் செயலகம் இப்போது பாரிசில் இருப்பதுபோல், உலக அரசின் பல செயலகங்கள் வேறு சில நாடுகளிலும் இருக்கலாம். உலக அரசின் சட்டமன்றக் கூட்டத்தை அமெரிக்காவிலும் ரஷ்யாவிலுமாக மாறி மாறி நடத்தலாம்; இன்னும் வேறு நாட்டிலும் ஒரு கூட்டத் தொடரை நடத்தலாம். உலகைப் பல மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் உரிய தலைவரைத் தேர்ந்தெடுத்து, ஒருவர் போனபின் மற்றொருவர் என்ற சுற்று முறையில் கூட்டாட்சியின் தலைவரை அமர்த்தலாம்.

யுகோஸ்லாவியா நாட்டின் நீண்ட நாள் தலைவராயிருந்த 'டிட்டோ' (Tito) என்பவர், தமக்குப் பின் ஒன்ப

தின்மரைக் கூட்டுத் தலைவராக்கியும், அவர்கட்குள் ஒவ்வொருவர் மாறி மாறிக் கூட்டின் தலைவராயிருக்குமாறு செய்தும் வைத்து விட்டுப் போயிருப்பதை ஈண்டு ஒத்திட்டு நோக்கி, இவ்வாறே உலக ஆட்சிக்கும் தலைவரை அமர்த்தலாம்.

கூட்டரசின் நன்மைகள்:

கூட்டரசு இயலக் கூடியதன்று என்பார் கூறும் காரணங்களும் அவற்றிற்கு உரிய மறுப்பு அமைதியும் மேலே கூறப்பட்டன. கூட்டரசு இயலக்கூடியதே என்பார் அதற்குக் காரணமாகக் கூறக்கூடிய நன்மைகள் என்னென்னவாயிருக்கலாம் என்பதையும் பார்ப்போம்:-

1. வறுமையும் பற்றாக்குறையும் தீரும். வளம் உள்ள இடத்திலிருந்து வளம் இல்லா இடத்திற்கு வளம் வரும்.

2. போர்த் தொல்லை யிராது.

3. படைஞர் புரட்சி (இராணுவப் புரட்சி) நேராது.

4. படைஞர்களையும் படைக்கலங்களையும் பெரிதும் குறைப்பதால், அந்தச் செலவை வேறு ஆக்கத்துறைகட்குத் திருப்பலாம். மக்களிடையே ஏற்படும் குழப்பங்களைத் தீர்க்கு மளவுக்குப் படையிருப்பது போதும்.

5. சாதி, மதம், இனம், மொழி, நிறம், வட்டாரப் பற்று, தனி நாட்டுப்பற்று, இன்ன பிற காரணமாக விளையக்கூடிய வெறியுணர்வு படிப்படியாகக் குறைந்து மறையும்.

6. சிறுபான்மையினர்- பெரும்பான்மையினர் என்ற பாகுபாடு இராது. இதனால் கலகங்கள் குறைந்து மறையும்.

7. உலகமக்கள் அனைவருக்கும், உரிய அளவு கல்வி, மருத்துவ வசதி, வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமை யாப்பொருள்கள் முதலியவை கிடைக்கும்.

8. இத்தகைய நன்மைகளால் எல்லாரும் மகிழ்ந்து பொறுப்புடன் வேலை செய்வர்.

9. பற்றாக் குறையின்மையாலும் சம உரிமை கிடைப்பதாலும் தொழிலாளர் புரட்சி போன்றவற்றிற்கு இடம் இல்லை.

10. பயண இசைவுச்சீட்டு (Pass Port), நுழைவு உரிமைச் சான்று (Visa) ஆகியவை இல்லாமலேயே யாரும் உலகெங்கும் சென்று வரலாம்; உலக நாடுகள் சொந்த வீடுகள்போல் ஆகிவிடும்.

சம உரிமை:

இன்னபிற நன்மைகள் இருப்பதால், உலகக் கூட்ட ரசுக் கோட்பாடு மிகவும் ஏற்றதே. ஆனால் இவை முழு தும் செயலுக்கு வரவேண்டுமே! இதற்குச் செல்வ நாடு களின் இசைவும் வல்லரசுகளின் ஒத்துழைப்பும் இருந்தால் கட்டாயம் நிறைவேறும். இந்தியாவில்-தமிழ் நாட்டில் உள்ள 'வேடன் தாங்கல்' என்னும் ஊரில் இருக்கும் ஏரிக்கு, ரஷ்யா முதலிய நாடுகள் பலவற்றிலிருந்து பறவை கள் வந்துபோவதாகச் சொல்லப்படுகின்றது. இந்தப் பறவைகட்கு இருப்பது போன்ற உரிமை, உலக மக்களுக் கும் உலகம் முழுதும் இருக்கவேண்டும். ஒரு குடும்பத்தில் பிறந்தவர்கள் அனைவருக்கும் அந்தக் குடும்பத்தில் சம மான பங்கும் சம உரிமையும் இருப்பது போல, உலகத்தில் பிறந்த ஒவ்வொருவர்க்கும் உலகில் சமபங்கும் சமஉரிமை

யும் உண்டு என்பதை அனைவரும் ஒத்துக் கொள்ள வேண்டும்.

காலமும் இடமும்:

காலம், இடம் என்பன பற்றி மெய்யறிவாளர்கள் (தத்துவ வாதிகள்) பல்வேறு கருத்துக்கள் கூறியுள்ளனர். நியூட்டன், ஐன்ஸ்டைன் போன்ற அறிவியலாரும் இவை பற்றித் தம்முள் மாறுபட்டுப் பல்வேறு கருத்துக்கள் வெளியிட்டுள்ளனர். எளியவனாகிய என்னைப் பொறுத்த வரையிலும்; 'காலம்' என ஒரு பொருளும் 'இடம்' என ஒருபொருளும் தனியே இருப்பதாகத் தெரியவில்லை. சுற்றுச் சூழ்நிலையைக் கொண்டு, இது இந்தக்காலம்-அது அந்தக் காலம் என நாமாக நடைமுறை வசதிக்காக வகுத்துக் கொள்கிறோம். கோடைக்காலம், மழைக் காலம், குளிர்காலம், பனிக்காலம் என்பன, அவ்வப்போதுள்ள சூழ்நிலையைப் பொறுத்தே கணிக்கப்படுகின்றன. இந்தியாவில் ஞாயிற்றின் தோற்ற-மறைவைக் கொண்டு நாளும், மதியின் (சந்திரனின்) இயக்கத்தைக் கொண்டு மாதமும் கணிக்கப்படுகின்றன. கிறித்து பிறந்ததிலிருந்து நூறு நூறு ஆண்டுகளை மையமாகக் கொண்டு கி.பி. முதல் நூற்றாண்டு-ஐந்தாம் நூற்றாண்டு-பத்தாம் நூற்றாண்டு-இருபதாம் நூற்றாண்டு என நாமாகக் கணித்துக் கொண்டுள்ளோம். குறிப்பிட்ட ஒவ்வொரு கால வரையறையும், குறிப்பிட்ட அளவான இடத்துக்கு ஒன்று வீதம் நடப்பட்டுள்ள 'மைல் கல்' போன்றதேயாகும்.

இடம் என்பதும் காலத்தைப் போன்றதே. இடம் என ஒன்று தனியாக இல்லை. கடல், மலை, மணல், காடு, ஆறு முதலிய இயற்கைச் சூழ்நிலைகளைக் கொண்டு தொடக்கக் காலத்தில் இடம் என ஒன்று பிரிக்கப்பட்டு

உளதாகியிருக்கலாம். இப்போது, சுற்றி நான்கு பக்கங்களிலும் வேலி அடைத்து விட்டு, அதற்கு உட்பட்டது இன்னாருடைய இடம்-நிலம் என்றும், சுற்றி நான்கு பக்கமும் சுவர் எழுப்பி மேலே கூரைவேய்ந்து இதற்கு உட்பட்டது இன்னாருடைய வீடு என்றும், நாமாகச் செயற்கை முறையில்-சுற்றுச் சூழ்நிலைகளைக் கொண்டு இடம் என ஒன்றை வகுத்து வரையறை செய்து கொள்கின்றோம். எனவே, இயற்கையமைப்பின்படி நோக்குங்கால், இது இன்னாருடைய வயல்-இது இன்னாருடைய வீடு-இது இன்னாருடைய நாடு என்று சொல்வதற்கில்லை. செயற்கை முறையை அடிப்படையாகக் கொண்டே இட உரிமை வரையறை செய்யப்பட்டுள்ளது. இந்த இட உரிமையும் என்றும் நீடிப்பதில்லை; ஒருவரது இடத்தை இன்னொருவர் விலைக்கு வாங்கிக் கொள்வதும் உண்டு.

எனவே, பகுத்தறிவுடைய மக்களினம், இடம் என ஒன்று யாருக்கும் இயற்கையில் தனி உரிமை உடையதன்று என்பதை நன்கு ஓர்ந்து உணர்ந்து, "யாதும் ஊரே-யாவரும் கேளிர்" என்னும் பழங்காலத் தமிழ்ப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் 'இமாலய-எவரெஸ்ட் உண்மை மொழியைப் பொன்னே போல் போற்றி, உலகம் முழுவதையும் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவுடைமையாக்க வேண்டும்.

பழைய பேய்:

"வரப் போகும் புதிய பேயை விட பழைய பேயே மேல்" என்னும் பழமொழிக்கு ஏற்ப, இனிமேல் புதிய உலக அரசு ஒன்று தொடங்குவதனினும், இப்போதுள்ள ஐ.நா. மன்றத்தையே புதிய உலக அரசின் முதல்படியாகக்

கொண்டு, மேலும் பல படிகள் கட்டி அதை உயர்த்தி உலக அரசாகப் புது உருவம் கொடுக்கலாம். இதுகாறும் நடைபெற்று வந்த ஐ.நா. மன்றத்தின் செயல் முறைகள், புதிய அரசின் செயல் முறைகட்கு உரிய ஒத்திகையாகும்.

நாடுகளின் நிலை:

புதிய உலக அரசில் சிறு நாடுகள்-பெரிய நாடுகள் என்ற பாகுபாடு கூடாது. எல்லா நாடுகட்கும் ஒவ்வொரு வாக்குரிமை உண்டு-எல்லாம் சம உரிமை உடையவாகும். உலக அரசில் ஒவ்வொரு நாடும் ஒரு மாநிலம் (State) போல் இருக்கலாம். அல்லது இன்னொரு விதமாகவும் இருக்கலாம். அதாவது:- இந்தியப் பெருநாட்டில் பல மாநிலங்கள் (States) உள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலும் பல மாவட்டங்கள் (Districts) உள்ளன. பல மாவட்டங்கள் சேர்ந்தது ஒரு மாநிலம்; பல மாநிலங்கள் சேர்ந்தது இந்தியா என்னும் ஒரு பெரிய நாடு. இதுபோல, உலக அரசில் ஒவ்வொரு நாடும் ஒரு மாவட்டம் போல் இருக்கலாம். குறிப்பிட்ட சில நாடுகள் சேர்ந்து ஒரு மாநிலம் போல் ஒரு மண்டலம் உருவாக்கப்படலாம்- இவ்வாறு பல மண்டலங்கள் சேர்ந்தது உலகப் பேரரசாகும். எனவே, இனி எந்த நாட்டிலும் பிரிவினைக்கு இடமில்லை; மேலும் மேலும் பல நாடுகள் இணையும் கூட்டுறவுக்கே இடமுண்டு.

பத்து மண்டலங்கள்:

ஆட்சி (நிர்வாக) வசதிக்காக உலகைப் பின்வருமாறு பத்து மண்டலங்களாகப் பிரிக்கலாம். அவையாவன:-

1. வட அமெரிக்க மண்டலம்: கானடா, கிரீன்லாந்து, ஒன்றிய அமெரிக்கா (U.S.A.), மெக்சிகோ, ஹாண்டுரஸ்,

குவாட்டெமாலா, நிக்கராகுவா, காஸ்ட்டாரிகா பனாமா, கியூபா, மேற்கு இந்தியத் தீவுகள் (West-Indies), வட அமெரிக்கக் கண்டத்தைச் சுற்றி அருகில் உள்ள தீவு கள் ஆகியவை இம்மண்டலத்தில் அடங்கும்.

2. தென் அமெரிக்க மண்டலம்: தென் அமெரிக்கக் கண்டத்தில் உள்ள நாடுகள், ஃபாக்லாந்து (Falkland) தீவுகள், சுற்றுப்புறச் சூழல்கள் ஆகியவை இம்மண்டலத் தில் அடங்கும்.

3. ஆத்திரேலிய மண்டலம்: ஆத்திரேலியா, டாஸ் மேனியாத் தீவு, நியூஜிலாந்து, ஃபீஜித் (Fiji) தீவுகள், நியூ கினி, சுற்றுப் புறச் சூழல்கள் ஆகியவை இதில் அடங்கும்.

4. ஆஃபிரிக்க மண்டலம்: ஆஃபிரிக்கக் கண்டத்தில் உள்ள நாடுகள், மடகாஸ்கர் தீவு, மோரீஸ் (Mauritius) தீவுகள், சுற்றுப் புறத் தீவுகள் ஆகியவை இதில் அடங்கும்.

5. கிழக்கு ஐரோப்பிய மண்டலம்: ரஷ்யா (ஆசியப் பகுதி உட்பட்ட ரஷ்யா), கம்யூனிஸ்ட் சார்புள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவை இதில் அடங்கும்.

6. மேற்கு ஐரோப்பிய மண்டலம்: கம்யூனிஸ்ட் சார்பு இல்லாத மேற்கு ஐரோப்பிய நாடுகள், பிரிட்டிஷ் தீவுகள், மத்திய தரைக் கடலில் உள்ள சிசிலி – சார்டீனியா – கார் சிக்கா–கிரீட் -சைப்ரஸ் – சிக்ளடீஸ்– அமோனியத் தீவு– மால்ட்டா முதலிய தீவுகள், மற்றும் மேற்கு ஐரோப்பியக் கண்டத்தின் சுற்றுப் புறத் தீவுகள் ஆகியவை இதில் அடங் கும்.

7. மேற்கு ஆசிய மண்டலம்: மேற்கு ஆசியாவின் கிழக்கே உள்ள பாகிஸ்தான் –ஆப்கானிஸ்தானம் ஆகிய

வற்றிலிருந்து தொடங்கி, வடமேற்கே உள்ள துருக்கி-தென்மேற்கே உள்ள சவூதி அரேபியா ஆகிய பகுதிக்குள்ளும் சிறிது வெளியேயும் அடங்கியுள்ள நாடுகள், சுற்றுப்புறச் சூழல்கள் ஆகியவை இதில் அடங்கும்.

8. இந்திய-சுற்றுப்புற மண்டலம்: இந்தியா, இலங்கை, நேப்பாளம்,பூட்டான், வங்காள தேசம், மாலத் தீவுகள், சுற்றுப்புறச் சூழல்கள் ஆகியவை இதில் அடங்கும்.

9. சீனா-ஜப்பான்-சுற்றுப்புற மண்டலம்: சீனா, ஜப்பான், மங்கோலியா, கொரியா, ஹாங்காங் (Hongkong), சுற்றுப் புறச் சூழல்கள் ஆகியவை இதில் அடங்கும்.

10. தெற்கு-தென்கிழக்கு ஆசிய மண்டலம்: பார்மோசா (Formosa), வியட்நாம், கம்போடியா, லாவோஸ், பர்மா, தாய்லாந்து, மலேசியா (மலாய், சாரவாக், பார்னியோவின் ஒரு பகுதி உள்ளிட்டது மலேசியா), சிங்கப்பூர், போர்னியோ, இந்தோனேசியா (ஜாவா, சுமத்ரா முதலிய தீவுகள் அடங்கியது), ஃபிலிப்பைன்ஸ் (The Philippines),சுற்றுப் புறச் சூழல்கள் ஆகியவை இதில் அடங்கும்.

ஒரு மாதிரிக்காகவே மேலே பத்து மண்டலப் பாகுபாடு கொள்கையளவில் தரப்பட்டுள்ளது. இதுவே முற்ற முடிந்த முடிவு அன்று. உலக அறிஞர்கள் கூடி, இன்னும் வேறு விதமாகவும் மண்டலப் பாகுபாடு செய்யலாம்.

ஆட்சிமுறையும் சீர்த்திருத்தங்களும்:

சாதி, மதம், இனம், மொழி, நிறம் முதலிய வேற்றுமைக்கு இடமில்லை. உலக மக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான சட்ட திட்ட விதிகள் இருக்கவேண்டும்.

ஐயோ என் சாதி உரிமை போயிற்றே-ஐயோ என் மத உரிமை போயிற்றே- என்று எவரும் கூக்குரல் எழுப்ப முடியாது. 'ஒன்றே குலம்-ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் திருமந்திரப் பாடல் பகுதியைப் பெரு மந்திரமாகக் கொள்ள வேண்டும்.

சாதி உரிமை மத உரிமை முதலியன தந்தால், முன் போலவே எல்லா வேற்றுமை உணர்வுகளும் தலை தூக்கி மக்களினத்தை வேறு பிரித்து விடும்.

மத உரிமை என்பது வெறும் பித்தலாட்டமே. மன அமைதிக்காக-மன நிறைவுக்காகக் கடவுள் வழிபாடு என ஒன்று வேண்டுமாயின், அவரவர் இருப்பிடத்தில் இருந்தபடியே வணக்கம் செலுத்தலாம். கோயில் என ஒரு பொது இடம் வேண்டு மெனில், உலகில் உள்ள எல்லாக் கோயில்களும் ஒரே மாதிரியாயிருக்க வேண்டும்; கோயிலின் உள்ளேயோ- வெளியேயோ எவ்வித உருவச் சிலைகளும் கூடா. கடவுளுக்கு உருவம் உண்டா? கடவுள் நம்பிக்கை உடைய 'பட்டினத்தார்' என்னும் துறவியுங்கூட, எங்கும் பரந்துள்ள இறைவன் கல்லிலும் செம்பிலும் இருப்பதில்லை எனக் கூறியுள்ளார்.

"கல்லிலும் செம்பிலுமோ இருப்பான்
எங்கள் கண்ணுதலே"

என்பது அவரது பாடல் பகுதி. மற்றும், சிவ வாக்கியர் என்னும் சித்தர் பாடியுள்ள

"நட்ட கல்லைத் தெய்வ மென்று நாலு புட்பம் சார்த்தியே
சுற்றி வந்து மொண மொணத்துச் சொல்லு மந்திரம் ஏதடா?

நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ''.?
(சட்டுவம் அகப்பை)

என்னும் பாடலும் ஈண்டு ஒப்பு நோக்கற் பாலது. உருவச்சிலை இல்லாத கோயில்கட்குச் சென்று மனத்தால் எண்ணித் தியானித்து உள்ள அமைதி பெறலாம். போலியான பக்தி பெருகினால் போதாது; பண்பு பெருக வேண்டும்.

உலக மக்கள் அனைவரும் புது மதத்துக்கு மாறவேண்டும். மத மாற்றத்தைப் பொறுத்த வரையில், ஒரு காட்டாக இந்தியாவை எடுத்துக் கொள்வோம். இந்தியாவில் முன்பு இந்து மதத்திலிருந்து சமண மதத்துக்கும் புத்த மதத்துக்கும் மாறியவர்கள் பலர்,அப் புதுமதங்களில் பெரிய 'மோக வெறி' கொண்டிருந்தனர்; பின்னர் மீண்டும் பெரும் பாலார் இந்து மதத்துக்கே மாறி விட்டனர். எனவே மத மாற்றம் என்பது ஒரு சட்டையைக் கழற்றி வேறு சட்டை போட்டுக் கொள்வது போலவே யாகும். எல்லா மதங்களும் நல்லனவற்றையே புகட்டுகின்றன. எனவே எந்த மதத்தில் இருந்தால் என்ன?

இந்தியாவில், பலர், இப்போது, இந்து மதத்திலிருந்து கிறித்துவ மதத்திற்கும் இசுலாம் மதத்திற்கும் மாறியுள்ளனர். மாறுவதற்கு முன் இவர்கள் இந்து மதத்தில் பெரும் பற்றுக் கொண்டிருந்தவர்களே! ஆனால் மதம் மாறிய பிறகு, புதிய மதங்களில் ஆழ்ந்த பற்றும் பிடிப்பும் கொண்டுள்ளனர். எனவே, ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்துக்கு மாறுவது இயற்கை- அதனால் யாரும் கெட்டுப் போகவில்லை என்பது தெளிவாகிறது எனவே இப்போது

உலக மக்கள் அனைவரும் ஒரு புது மதத்துக்கு மாறினால் வருங் கேடு ஒன்றுமிலது. அந்தப் புது மதத்தின் பெயர் 'ஒருமை' என்பதாகும் அதாவது, உலக மக்கள் அனைவரும் ஒரே மாதிரியான கடவுள் வழிபாட்டைக் கடைப்பிடிப்பதே 'ஒருமை மதம்' எனப்படும். இந்த ஒருமை மதத்துக்கு அனைவரும் மாறவேண்டும். புது மதத்துக்குப் போவதற்கு முதலில் மனம் ஒவ்வாதுதான். பின்னர்ப் போகப் போகச் சரியாகிவிடும்.

மத வேற்றுமையைக் களைவது போலவே சாதி வேற்றுமையையும் களைந்தெறிய வேண்டும் இதற்குக் கலப்பு மணம் ஒன்றே உரிய வழியாகும். எல்லாச் சாதி-மதம், இனம்-மொழி-நிறம் உடையவர்களும் ஒன்றை விட்டு இன்னொன்றிற்குத் தாவிப் பெண் கொடுத்தல்-வாங்கல் செய்ய வேண்டும். இதற்கு அரசு ஊக்கமளிக்க வேண்டும். சாதி, மதம், இனம்,மொழி,நிறம் ஆகிய மாற்றம் செய்து கொள்பவர்கட்கு அரசு தனிச் சலுகைகள் தந்து ஆதரிக்க வேண்டும்.

உலகப் பொது அரசு முறையில் அரசியல் கட்சிகளுக்கு இடமில்லை. ஆட்சி செய்யும்ஒரே அமைப்புதான் இருக்கும். ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய தலைவரை அவ்வந் நாடு தேர்ந்தெடுக்கலாம். ஒவ்வொரு மண்டலத்துக்கும் உரிய தலைவரை அவ்வம் மண்டலம் தேர்ந்தெடுக்கும். மாவட்ட ஆட்சி போல் ஒவ்வொரு நாட்டின் ஆட்சியும் நடக்கும். மாநில (States) அமைச்சரவை ஆட்சிபோல் ஒவ்வொரு மண்டல ஆட்சியும் நடைபெறும். ஒவ்வொரு நாட்டுக்கும் இப்போது இருப்பது போல் அமைச்சரவையும் ஆட்சி உறுப்பினர்களும் இருப்பர். நாட்டாட்சியினும் பெரிதாக, ஒவ்வொரு மண்டலத்துக்கும் அமைச்சரவையும் ஆட்சி உறுப்

பினரும் இருப்பர். இந்த இருவகை அமைச்சரவைகளிலும் பெரிதாக உலக அரசின் அமைச்சரவை இருக்கும்; இது மத்திய அமைச்சரவை எனப் பெறும்; இதனால் ஆளப்படுவது மத்திய அரசு(Central Government)எனப்படும். இந்த மத்திய அரசுக்கு, மக்கள் தொகை அடிப்படையில் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெறுவர். இவர்கள் கூடி உலகக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பர். அத்தலைவர் தம் அமைச்சரவைக்கு வேண்டியவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்.

தேர்தல், கட்சி அடிப்படையில் நடைபெறாது. தேர்தலுக்கு நிற்பவர்க்கு அகவை (வயது), கல்வி,பண்பு இன்ன பிறவற்றில் குறைந்த அளவாயினும்-குறிப்பிட்ட அளவாயினும் ஒரு வரையறை இருக்கும். குறிப்பிட்ட தகுதியுடையவர்கள் யார் வேண்டுமானாலும், ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மண்டலத்திலும் தேர்தலுக்கு நிற்கலாம். கட்சியின் பெயரால் போட்டியிராது; நிற்பவரின் தகுதியின் பெயரால் போட்டியிருக்கும். உரிய தலைவரை மக்கள் பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுப்பர், இவர்கள் ஆட்சி அமைப்பின் உறுப்பு ஆவர்.

உலக அரசில் அரசியல் கட்சி முறை இல்லாமையால், ஆளும் கட்சி என ஒன்றும் எதிர்க்கட்சி என ஒன்று அல்லது பலவும் இருக்க முடியாது. ஒரே அரசு ஆட்சி அமைப்பில் உள்ள உறுப்பினர்கள், நட்பு முறையில் ஆட்சித் தலைவர்கட்குச் சட்டமன்றத்திலோ, தனித்தோ,தங்கள் சூழ்வை (ஆலோசனையை) உரைக்கலாம். தவறு கண்டால் ஆட்சி மன்றத்தில் சுட்டிக் காட்டிக் கண்டித்துத் திருத்தலாம். இதனால் இவர்கட்கு எந்தத் தீங்கும் யாரும்

செய்ய முடியாது. ஆள்பவர் தவறைத் திருத்திக் கொள்ள லாம். இவையாவும் நட்புச் சூழ்நிலையில் நடைபெறும்.

### ஆங்கிலமே பொது மொழி:

இப்போது உலக நாடுகள் யாவற்றிலும் அறியப்பட்டு உலகப் பொது மொழியாக இயங்கி வருவது ஆங்கில மொழியே. உலகப் பொது அரசாகிய ஒரே உலக அரசின் பொதுமொழியாக-ஆட்சி மொழியாக ஆங்கிலமே இருக்க வேண்டும். உலக மக்கள் அனைவரும் ஆங்கிலம் கற்றுக் கொள்ள வசதியும் வாய்ப்பும் உண்டாக்கித் தரல்வேண்டும். உலக மக்கள் அனைவரும் ஆங்கிலத்தில் எழுதவும் பேசவும் வல்லவராய் விளங்க வேண்டு

### நீதி மன்றங்கள்:

ஒரே உலக அரசின் நீதி மன்றங்கள் எப்படி இருக்க வேண்டும்? 'தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லு தல்'என்னும் உளவியல் முறைப்படி (Psychological Method), தெரிந்த இந்திய நீதி மன்றங்களிலிருந்து இன்னும் தெரி யாத உகை நீதி மன்ற அமைப்புக்குப் பயணம் தொடங்கு வோம். இந்திய அமைப்புமுறை வருமாறு:-

பல ஊர்கள் சேர்ந்தது ஒரு 'சிறு வட்டம்' (Taluk) -தாலுகா) எனப்படும். ஒவ்வொரு சிறு வட்டத்தின் தலை நகரிலும் நீதி மன்றம் உண்டு. பல சிறு வட்டங்கள் சேர்ந் தது ஒரு பெரிய 'மாவட்டம்' (District-ஜில்லா) எனப் படும். ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் நீதி மன் றம் உண்டு. பல மாவட்டங்கள் சேர்ந்தது ஒரு 'மாநிலம்' (State) ஆகும். ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகரிலும் நீதி மன்றம் உண்டு. மாநில நீதி மன்றத்திற்கு 'உயர் நீதி மன்றம்' (High court) என்று பெயராம். பல மாநிலங்

களும் சேர்ந்தது இந்தியப் பெரு நாடு; இதன் தலைநகரா கிய டில்லியில் உள்ள நீதி மன்றத்திற்கு 'மேல் உயர் நீதி மன்றம்' (Supreme Court) என்று பெயராம்.

இந்த அடிப்படையிலேயே உலக நீதி மன்றங்கள் அமையலாம். இவற்றோடு இன்னும் ஒன்று சேரவேண்டும். அதாவது: அனைத்து நாடுகளும் சேர்ந்த உலக அமைப் புக்குப் பொதுவாக 'அனைத்துலக நீதி மன்றம்' ஒன்று அமைக்கப்படல் வேண்டும். இப்போது ஐ.நா. மன்றம் அமைத்திருக்கும் உலக நீதி மன்றத்தையே, இன்னும் பெரியதாய் வளர்த்துப் புதிய உலக அரசின் பொது நீதி மன்றமாக உயர்த்தி அமைத்து விடலாம்.

மேலே கூறியுள்ளவரையும் சரிதான். ஆனால் இந்த அமைப்பில் ஒரு குறைபாடு உண்டு. அஃதாவது, ஒவ்வோர் ஊருக்கும் ஒரு நீதி மன்றம் இல்லாத குறையே அது. மிக வும் சிறிய ஊரில் நீதி மன்றம் இல்லாவிடினும், இரண்டு அல்லது மூன்று சிற்றூர்களை இணைத்தாயினும் அவற்றிற் குப் பொதுவாக ஒரு நீதி மன்றம் அமைக்கலாம். பெரிய ஊர் ஒவ்வொன்றுக்கும் நகரம் ஒவ்வொன்றுக்கும் ஒவ் வொரு நீதிமன்றம் அமைக்கமேண்டும். ஆனால், மேலே கூறியுள்ள வட்டம், மாவட்டம், மாநிலம், நாடு, உலகம் ஆகிய வற்றில் அமைக்கும் நீதி மன்றங்கட்கும் ஒவ்வோர் ஊரிலும் அமைக்கும் நீதி மன்றங்கட்கும் வேறுபாடுஉண்டு. அதாவது:-

பண்டைக் காலத்தில் அரசின் தொடர்பு பெற்றோ பெறாமலோ ஊர்தோறும் நீதி மன்றம் இருந்தது; இந்தக் காலத்திலும் சில ஊர்களில் இருக்கிறது. இந்த ஊர் நீதி மன்றம் சட்டப் படிப்புப் படித்துச் சட்டப்பட்டம் (B.L.or LL.B.) பெற்றவர்களால் நடத்தப்படுவதன்று. ஊரில்

தகுதி பெற்ற சிலர் தேர்ந்தெடுக்கப் பெற்று நீதி மன்றத்தின் தலைவராகவும் உறுப்பினராகவும் செயல்படுவர். இதற்குப்'பஞ்சாயத்து'என்றபெயர் உண்டு. பெரும்பாலும் இதில் ஐவர் இருந்து நீதி வழங்குவர். அரசின் தொடர்பு இல்லாமலேயே இந்த நீதி மன்றம் நடக்கலாம். ஊரார்க்குள் எந்த வம்பு வழக்கு இருப்பினும், இந்த நீதி மன்றத்தார் எளிதில்-குறுகிய காலத்தில்-செலவு இன்றியே தீர்த்து விடுவர். வழக்கைச் சேர்ந்தவர்களும் இவர்தம் தீர்ப்புக்குக் கட்டுப்படுவர். 'ஊர்க் கட்டுப்பாடு' என்ற முறையில் இது ஒழுங்காக நடைபெறும். இவ்வாறே, இத்தகைய எளிய-செலவில்லாத ஊர் நீதி மன்றங்களைப் புதிய உலக அரசும் ஊர்தோறும் அமைக்க ஏற்பாடு செய்யலாம். மற்றும், எல்லா வகையான நீதி மன்றங்களிலும் ஒருவகைச் சீர் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. அதன் விவரத்தைப் பட்டறிவு வாயிலாகக் கீழே தருகிறேன்.

## நீதிமன்றச் சீர்திருத்தம்:

உரிமை பெற்ற இந்தியாவில் 1955 ஆம் ஆண்டு வரையும், பல மொழிகள் பேசும் பகுதிகள் ஒரு மாநிலமாக (State) இணைந்து அமைந்திருந்தன. 1956 ஆம் ஆண்டில், மொழி வாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அப்போது தென்னிந்தியாவின் தெற்குக் கோடியில், மலையாள மொழி பேசப்படும் கேரளப் பகுதியோடு இணைந்திருந்ததும் தமிழ் பேசப்படுவது மாகிய கன்னியாகுமரிப் பகுதி, கேரளத்திலிருந்து பிரிக்கப்பட்டு; கன்னியாகுமரி மாவட்டம்' என்னும் பெயரில், தமிழ் மொழிபேசப்படும் 'தமிழ் நாடு' என்னும் மாநிலத்துடன் இணைக்கப்பட்டது.இதற்கு அடுத்த ஆண்டாகிய 1957ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் ஒரு நாள் யான் சென்னைக்குச் சென்றிருந்தேன். அங்கே

ஓரிடத்தில், முன்பின் அறியாத கன்னியாகுமரிப் பகுதியைச் சேர்ந்த இருவரைக் கண்டேன். அவர்களோடு உரையாடும் வாய்ப்பும் பெற்றேன். யான் அவர்களை நோக்கி, "மலையாளம் பேசும் கேரள மாநிலத்திலிருந்து பிரிந்து தாய்மொழியாகிய தமிழ்பேசும் தமிழ்நாடு மாநிலத்தோடு நீங்கள் சேர்ந்திருப்பதனால் உங்கட்கு நன்மையேயல்லவா?"- என்று வினவினேன். அவர்களுள் ஒருவர் எனக்கு அளித்த விடையாவது:- "மற்ற நன்மைகள் எல்லாம் அப்புறம் இருக்கட்டும். முதலில் ஒரு தீமையைச் சொல்கிறேன்:" எங்கள் ஊருக்குச் சுமார் ஐம்பது கல் (மைல்) தொலைவில் உள்ளதும் கேரள மாநிலத்தின் தலைநகரும் ஆகிய திருவனந்த புரத்தில் உள்ள உயர் நீதி மன்றத்துக்குச் சென்று வழக்கை முடித்துக்கொள்வது முன்பு வழக்கம். இப்போது தமிழ் நாட்டுடன் சேர்ந்து விட்டதால், தமிழ் நாட்டின் தலைநகரும் எங்கள் ஊருக்குச் சுமார் ஐந்நூறு கல் (மைல்) தொலைவில் உள்ளதுமான சென்னை மாநகரில் உள்ள உயர் நீதிமன்றத்துக்கு யாங்கள் இப்போது வர வேண்டியுள்ளது. இது நன்மையா - தீமையா? என்று அவர் என்னையே வினவுவதன் வாயிலாக விடையளித்தார். இதனால் நாம் அறிந்து கொள்ள வேண்டியதாவது:- மக்கள் தம் வம்பு வழக்குகளை உள்ளூரிலேயே அல்லது அண்மையிலுள்ள வேறு ஓர் ஊரிலேயே தீர்த்துக்கொள்ள வாய்ப்பு வசதி இருக்கவேண்டும் என்பதாகும். இதற்காக நீதி மன்ற அமைப்பில் செய்யவேண்டியசீர்திருத்தமாவது:-

ஒரே ஊரார்க்குள் உள்ள வம்பு வழக்குகள், ஊர்ப் 'பஞ்சாயத்து' நீதி மன்றத்தின் வாயிலாகவே தீர்க்கப்பட்டு விடவேண்டும்; இதற்கு வேண்டிய சரியான அமைப்பு இருக்க வேண்டும். ஓர் ஊரார்க்கும் மற்றோர் ஊரார்க்கும்

இடையே வரும் வம்பு வழக்குகள், பல ஊர்கள் சேர்ந்த சிறு வட்டத்தின் (தாலுகாவின்) தலைநகரில் உள்ள நீதி மன்றத்திலேயே தீர்த்துக் கொள்ளப்படவேண்டும். ஒரு சிறு வட்டத்தார்க்கும் இன்னொரு சிறு வட்டத்தார்க்கும் உள்ள வழக்குகள், சிறு வட்டங்கள் பல சேர்ந்த மாவட்டத்தின் தலைநகரில் உள்ள நீதி மன்றத்தில் தீர்க்கப்பட வேண்டும். ஒரு மாவட்டத்தாருக்கும் வேறு மாவட்டத் தாருக்கும் உள்ள வழக்குகள், பல மாவட்டங்கள் சேர்ந்த மாநிலத்தின் தலைநகரில் உள்ள உயர்நீதி மன்றத்தில் (High court)தீர்க்கப்பட வேண்டும். ஒரு மாநிலத்தார்க்கும் மற்றொரு மாநிலத்தாருக்கும் உள்ள வழக்குகள், எல்லா மாநிலங்கட்கும் பொதுவான - நாட்டின் தலைநகரத்தில் உள்ள மேல் உயர் நிதி மன்றத்தில் (Superme court) தீர்க்கப்பட வேண்டும். இரு நாட்டினர்க்கிடையேயுள்ள வழக்குகளே உலகநீதிமன்றம் செல்ல வேண்டும்.

ஓர் ஊரார், ஏறினது, சிறு வட்ட நீதிமன்றத்திலோ அல்லது மாவட்ட நீதிமன்றத்திலோ தம்வழக்கைத் தீர்த்து முடித்துக் கொள்ளும் படியாக நீதிமன்ற அமைப்பு முறை இருக்க வேண்டும். ஓர் ஊரார்க்குள் உள்ள வழக்கு, உயர் நீதி மன்றத்துக்கோ அல்லது மேல் உயர் நீதி மன்றத்துக்கோ செல்லும்படியா யிருக்கலாகாது. அதேபோல, ஒரு மாவட்டத்தாருக்குள் உள்ள வழக்கு, ஏறினது, மாநில உயர்நீதி மன்றத்திலேயே முடித்துக் கொள்ளும் படியான அமைப்பு வேண்டும். ஒரே மாவட்டத்தார்' நாட்டின் தலை நகரில் உள்ள 'மேல் உயர்நீதிமன்றம் செல்லும்படி அமைப்பு இருத்தலாகாது.

ஓர் ஊராரின் 'மேல் முறையீட்டு (Appeal) வழக்கு' உயர்நீதி (High court) மன்றத்துக்கு வருமாயின், கன்னியாகுமரி ஊரினர், சென்னையில் உள்ள உயர்நீதி

மன்றத்தையடையச் சுமார் ஐந்நூறு கல்(மைல்) தொலைவு கடந்து செல்லவேண்டும். 'மேல் முறையீட்டு (Appeal) வழக்கு' நாட்டின் தலைநகரில் உள்ள 'மேல் உயர்நீதி மன்றம்' சேருமாயின், கன்னியாகுமரி ஊரினர், இந்திய நாட்டின் தலைநகராகிய டில்லியில் உள்ள 'மேல் உயர் நீதி (Supreme court) மன்றம்' அடைய, சுமார் ஆயிரத் தைந்நூறு கல் (மைல்) தொலைவு கடந்து செல்ல வேண் டும். இஃது எல்லாருக்கும் இயலுமா? இயலாததனால் ஏழைகள் சிலர் கீழ் நீதிமன்றங்களோடு-தோல்வியடைந்து நின்று விடுகின்றனர்.

மாவட்ட நீதிமன்றம், மாநில உயர்நீதிமன்றம், நாட் டின் மேல் உயர்நீதிமன்றம் ஆகியவற்றில் உள்ள நீதிபதி கள் ஒரே மாதிரியான கல்விகற்றவர்களே. எனவே, இவர் கள், முதலிலேயே நன்கு சிந்தித்துச் சரியான தீர்ப்பு வழங்கினால், மேல் முறையீடாக 'அப்பீல்' வழக்குக்குச் செல்லத் தேவையே இல்லையே. மேல்மன்றங்கள் செய்யக் கூடியனவற்றைக் கீழ் மன்றங்களே செய்யும்படியான அமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும். மக்களுக்கு மிகுந்த செலவு இன்றி எளிமையாக மருத்துவ வசதி கிடைக்க வேண்டியது பேலவே, மிகுந்த செலவு இன்றி எளிய முறை யில் நீதியும் கிடைக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

உலகப் பொதுஅரசு அமையும் போது, உலகைப் பல மண்டலங்களாகப் பிரிக்கவும் செய்யலாம் என்னும் செய்தி முன்னர்க்கூறப்பட்டுள்ளது. அவ்வாறு மண்டலப் பாகுபாடு ஏற்படின், ஒவ்வொரு மண்டத்திலும் அதன் உறுப்பு நாடு ஏதாவது ஒன்றில், 'மண்டலப் பொது நீதி மன்றம்' என ஒன்று அமைக்கலாம். அம்மண்டலத்தைச் சேர்ந்த பல நாட்டினரும், தம் வழக்கை உலகநீதி மன்றத்துக்கொண்டு

போகாமல், மண்டலப் பொது நீதி மன்றத்திலேயே தீர்த்துக்கொள்ளலாம். ஒரு மண்டத்தார்க்கும் இன்னொரு மண்டலத்தார்க்கும் உள்ள வழக்குகளை உலக நீதி மன்றத்துக்குக் கொண்டு செல்லலாம். இதுகாறும் கூறி வந்தனவற்றுக்குப் புறனடையாக - விதி விலக்காக - ஒன்று கூறுகிறேன்: எந்த ஊராரும் - மாநிலத்தாரும் - நாட்டாரும் - மண்டலத்தாரும், தவிர்க்க முடியாத நெருக்கடி ஏற்படின், உலக நீதிமன்றத்துக்குச் செல்லலாம். அங்கே எளிய முறையில் வழக்கு தீர அரசு ஆவன செய்ய வேண்டும். இவ்வளவு ஏன்? மக்கள் அனைவரும் ஒற்றுமையை உயிரென மதித்து ஒழுகின் நீதிமன்றங்கட்கு மிகுந்த வேலையிராது.

சுண்ணாம்பில் உள்ளது சூட்சுமம்:

வெற்றிலை பாக்கை வாயில் போட்டு மென்றால் வாய் சிவக்காது; அவற்றுடன் சுண்ணாம்பும் சேர்ந்தால் தான் வாய் சிவக்கும்; இதனால், வாய் சிவப்பாவதற்குச் 'சுண்ணாம்பில் உள்ளது சூட்சுமம்' என்பதை ஒரு பழமொழியாகச் சொல்வது உண்டு. இதே போல, வேறு செயல்கள் சில வெற்றி பெறுவதற்கும் இன்றியமையாத- நுட்பமான (சூட்சுமமான) ஒன்றின் வலிய துணையும் வேண்டியிருக்கும்; இதை அறிவுறுத்துவதற்காகவும் 'சுண்ணாம்பில் உள்ளது சூட்சுமம்' என்னும் பழமொழியைப் பயன்படுத்துவதுண்டு. உலக அரசு அமைய, மேலே பல திட்டங்கள் தரப்பட்டுள்ளன. இவை வெற்றி பெறச் சுண்ணாம்பு போல் (சூட்சுமமாக) நுட்பமாயிருந்து உதவ வேண்டியவை வல்லரசுகளே. வளமுடைய வல்லரசுகளின் ஒத்துழைப்பு இன்றி மெல்லரசுகளால் எதையும் சாதிக்க வியலாது. வல்லரசுகள் தம்மிடம் உள்ள படைக்கருவிகள்

அனைத்தையும், ஆழமாகப் பள்ளம் தோண்டி மண்ணுக்கு அடியிலே போட்டு மறைத்து விடவேண்டும்.

உலகப் பொது அரசில் காவலர் (போலீஸ்) படையை வன்மை உடைய தாக்கினால் போதும். போர்ப் படைஞர் வேண்டியதில்லை. மக்களுக்கு இடையே ஏற்படும் கலகங் களை அடக்கக் கண்ணீர்ப் புகைக்குண்டுகளும் 'தோட்டா' போட்ட துப்பாக்கிகளும் இருந்தால் போதும். இவற்றைக் கொண்டு கலகங்களையும் வன்முறைகளையும் அகற்றி விடலாம். கோடிக் கணக்கில் பணம் செலவிட்டுச் செய்து வைத்துள்ள பல்வேறு படைக்கலங்களையும் மண்ணுக்குள் மறைத்துத்தான் ஆகவேண்டும். வல்லரசுகளும் சரி – மெல்லரசுகளும் சரி - பரந்த மனப்பான்மையுடன் இதைச் செய்ய வேண்டும்.

உலகப் பொது அரசில் சேர்வதால் வளம் நிறைந்த நாட்டினர், தம் வளத்தை மற்ற நாடுகட்குப் பங்கிட வேண்டியிருக்கும். இதற்கும் பரந்த மனப்பான்மை வேண் டும். மக்களினத்தில் ஒருவர் பட்டினி கிடப்பினும், அது மக்களின முழுவதின் தோல்வியாகும் என்பதை அனை வரும் உணர வேண்டும்; உணர்ந்து அதற்கேற்பச் செயல் படவேண்டும்.

''தனி ஒருவனுக்கு உணவு இல்லை யெனில்
இந்தச் செகத்தினை அழித்திடுவோம்''.

என்னும் சுப்பிரமணிய பாரதியாரின் பாடற் கருத்து ஈண்டு மீண்டும் நினைவுக்கு வரவேண்டும்.

உலக மக்கள் அனைவரும் எல்லாத் துறைகளிலும் நட்புறவுடனும் விட்டுக் கொடுக்கும் 'தியாக' உணர்வுட

னும் ஒழுகவேண்டும். உலக மக்கள் அறத் . துறையால் திருந்த மாட்டார்கள் எனில், அரசு, மறத்துறையால் திருத்த வேண்டும்.அஃதாவது-கட்டாயச் சட்டதிட்டங் களின் வாயிலாகவும், குற்றங்கட்கு ஏற்ற ஒறுப்புகள் வாயி லாகவும் திருத்த வேண்டும்-வேறு வழியில்லை. இம் முறைகளைப் பின்பற்றின் உலக அரசு ஒழுங்குற நடை பெறும்.

ஒரே உலக அரசுக்கு உரிய ஆட்சி முறைகள் சிலவும் சீர்திருத்தங்கள் சிலவும் மேலே பரிந்துரைக்கப் பெற்றுள் ளன. இவையாவும் முற்ற முடிந்த முடிவுகள் அல்ல. உலக அறிஞர்கள் இவற்றை மறு ஆய்வு செய்து இன்னும் புதிய பரிந்துரைகளை வழங்கலாம்; உலகுக்கு ஒரே அரசை அமைக்க ஆவன செய்யலாம்; அரசுத் தலைவர்கள் அவற்றைச் செயல் படுத்தலாம்.

மக்கள் பலரைக் கொன்று நாடுகள் பல வென்று கொடுங்கோலாட்சி புரிந்த மன்னர் மன்னர்களை உல கம் மதித்துப் புகழ்வதில்லை. உலகில் கும்பலாகக் கூடிப் பேசுபவர் பேசுபவையெல்லாம், பிறர்க்கு ஈந்து உதவி செய்பவரிடம் நிலைத்து நிற்கும் புகழைப் பற்றியே என் னும் கருத்துடைய

''உரைப்பார் உரைப்பவை எல்லாம்இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்'' (232)

என்னும் திருவள்ளுவரின் திருக்குறள் பாடலை ஈண்டு எண்ணிச் செயலாற்ற வேண்டும்.

இவ்வாறாக, உலகுக்கு ஒரே அரசு அமைக்கப்பெறின், மக்களினம் மிகவும் எளிதாகவும் பெரிதும் இன்பமாகவும் வாழ்வதுஉறுதி! உலகு உய்க'

''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு''

-சுப்பிரமணிய பாரதியார்.

# 10. நிறைவு உரை

முன்னோட்டம்:

இதுகாறும், இந்நூலில் உலகில் பிறந்து விட்ட உயிர்கள் கடினமும் துன்பமும் இன்றி, எளிதாகவும் இன்பமாகவும் வாழ்வதற்கு உரிய வழிமுறைகள் ஆராயப்பட்டுள்ளன. இந்நூலின் முடி மணியாக 'உலகுக்கு ஒரே அரசு' இருக்க வேண்டும் என்னும் கோட்பாடு பரிந்துரைக்கப் பெற்றுள்ளது.

ஒரே உலக அரசுக் கோட்பாடு என்னும் இலக்கை நோக்கியே இந்நூலின் பயணம் தொடங்கப் பெற்றுக் குறித்த இலக்கை நெருங்கியும் உள்ளது. இந்தக் கோட்பாடு நிறைவேறுமாயின், மக்களினத்தின் மண்ணுலக வாழ்வு மாண்புள்ள வாழ்வாக மலர்வது உறுதி. "ஏன் இந்த உலகம்" என்று ஏங்கித் தவிக்கக் கூடிய நிலையில் உள்ள மக்களினம், எளிதாகவும் இன்பமாகவும் வாழ இதனினும் சிறந்த மாற்று வழி எதுவும் இருக்கமுடியாது ஒற்றுமை உயர்வு தரும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

அணிலின் பங்கு:

உலகுக்கு ஒரே அரசு அமைக்க, உலக அறிஞர்கள், உலகத் தலைவர்கள் அன்று தொட்டு இன்று வரை முயன்று வருகின்றனர். இப்போது உலகத் தலைவர்கள் சிலர் இம்முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது. இம் முயற்சித் தொடரில் எளியேனது பங்கு மிகவும் சிறியதாகும். இந்தியாவில் நிகழ்ந்த இராமாயண

வரலாற்றிலிருந்து ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. இராமர் இலங்கைக்குச் செல்வதற்காக, தென்னிந்தியத் தரைப் பகுதிக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள கடல் பகுதியில் அணை கட்டுவித்தாராம். இராமனின் நட்பு அரசனாகிய சுக்கிரீவனுடைய குரங்குப் படைஞர்கள் கற்களையும் பாறைகளையும் கடலில் போட்டு அணைகட்டிக் கொண்டிருந்தார்களாம். அப்போது, சிறிய அணில் ஒன்று சிறிது சிறிதாக மணலைக் கொண்டு வந்து கடல் தண்ணீரில் போட்டு அணைகட்டும் முயற்சியில் தன்னால் இயன்றதைச் செய்ததாம். இராமர் மகிழ்ந்து அந்த அணிலின் முதுகில் தடவிக் கொடுத்தாராம். அந்த அணிலைப் போல, எளியேனும் இம்முயற்சியில் சிறிது பங்கு எடுத்துக்கொண்டேன்–அவ்வளவுதான். இராமர் அணிலின் முதுகில் மகிழ்ச்சியுடன் தடவிக் கொடுத்ததைப்போல, எவரும் என் முதுகில் தடவிக் கொடுக்கா விடினும், இத்தகைய புதிய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்வதற்காக என்மேல் சினந்து என் முதுகில் அடி கொடுக்காமல் இருந்தால் போதும்.

கண்ணோட்டப் பண்பு:

உலகில் மாபெருஞ் செல்வர்களும் வளமுள்ள நாடுகளும் வல்லரசு நாடுகளும் மற்றவர்பால்-மற்ற நாடுகளின் மீது அருள் கண்ணோட்டம் செலுத்தினாலேயே ஒரே உலக அரசு அமையும். கண்ணோட்டம் என்னும் மிகப் பெரிய இரக்கப் பண்பு இருந்தால்தான் இந்த உலகமும் நிலைத்து இருக்கும். உலக நடை முறை கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், கண்ணோட்டம் இல்லாத மக்கள் உலகுக்கு வீண் சுமையாகவே கருதப்படுவர்; கண்ணோட்டம் உள்ளவர்களே கண்ணாக மதிக்கப்பெறுவர்.உயர் பண்பு உடையவர்களைச் சார்ந்தே

உலகம் நிலைத்து நிற்கிறது; இந்நிலை இல்லையேல் மண்ணுக்குள் மடிந்து மாய்ந்து போக வேண்டியதுதான். இத்தகைய அரிய கருத்துக்களைத் திருவள்ளுவர் திருக்குறள் நூலில் தெரிவித்துள்ளார்.

''கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டு இவ் வுலகு'' (571)

''கண்ணோட்டத் துள்ளது உலகியல்; அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை'' (572)

''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'' (996)

என்பன திருக்குறள் பாடல்கள்.

## உண்டால் அம்ம இவ்வுலகம்:

வாய்ப்பு வசதி உடையவர்களும் வளம் நிறைந்த வல்லரசு நாட்டினரும் தம் நலத்துக்கு மட்டும் முயலாமல், பிறர் நலத்துக்கும்-பிறநாடுகளின் நலத்துக்கும் முயன்றால், உலகம் ஒழுங்குற நடைபெறுவது உறுதி என்ற மாதிரியில், ஒரு தோற்றம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே, 'கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி' என்னும் தமிழ்ப் பாண்டிய மன்னன், புறநானூற்றுப் பாடல் ஒன்றின் வாயிலாக உலகுக்கு அறைகூவல் விடுந்துள்ளான். அப்பாடல் வருமாறு:-

''உண்டால் அம்ம இவ்வுலகம், இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே, முனிவு இலர்,
துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சிப்,

புகழெனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர், அயர்விலர்,
அன்ன மாட்சி அனைய ராகித்,
தமக்கென முயலா நோன்தாள்,
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.'' (182)

என்பது அந்தப் புறநானூற்றுப் பாடலாகும். இதன் பொருளாவது:- ''இறப்பை நீக்கும் இந்திரர் அமிழ்தம் கிடைப்பினும் இனிமையாயிருக்கிறது என்று தாம்மட்டுமே தனித்து உண்ணாமல் பிறர்க்கும் அளித்தே உண்பவர்' யாரிடத்தும் சினமோ - வெறுப்போ கொள்ளாதவர், சோம்பல் இல்லாத உழைப்பாளர், அனைவரும் அஞ்சக் கூடிய தீச்செயல்களைத் தாமும் செய்ய அஞ்சுபவர், புகழான நற்செயல் எனில் உயிரையும் கொடுத்தாயினும் அந்நல்லதையே செய்யக் கூடியவர், பழிவரும் எனில் உலகம் முழுவதையும் ஒருங்கே தரினும் ஏற்றுக்கொள்ளாதவர், துன்பத்தைக் கண்டு சோராதவர், இன்ன பிற நன்மாண்புகளை உடையவராகி, தம் நன்மைக்கு என ஒன்றும் முயலாமல், வலிய உழைப்புடன், பிறரது நன்மைக்காகவே முயன்று பாடுபடும் பெரியார்கள் ஒருசிலராயினும் உள்ளமையால் தான், உலகம் ஓரளவாயினும் ஒழுங்காக இயங்குகிறது'' - என்பது பாடலின் பொருளாகும்.

'தம் நன்மைக்கு என ஒன்றும் முயலாமல் பிறரது நன்மைக்கு மட்டுமே வலிய உழைப்புடன் முயன்று பாடுபடுபவர் உள்ளமையாலேயே உலகம் இயங்குகிறது'' என்று பாடல் கூறுகிறது.

''தமக்குஎன முயலா நோன்தாள்
பிறர்க்குஎன முயலுநர் உண்மையானே
உண்டால் அம்ம இவ்வுலகம்''

என்பது பாடல் பகுதி. ஆனால், நாம் பரிந்துரைப்பதாவது-நாம் இங்கே வேண்டுவதாவது: தமது நன்மைக்காகவும் முயன்று பிறரது நன்மைக்காகவும் முயலுவாராக! - என்பதாகும்.

இந்தப் பாடலின் உட்பொருளை உலகநாடுகள் உட்கொண்டு பரந்த உளப் பான்மையுடன் செயலாற்றினால் மக்களினம், இந்த மண்ணுலக வாழ்வை மாண்புள்ள வாழ்வாக மலரச் செய்து, ஒரே உலக அரசின் கீழ் எளிதாகவும் இனிதாகவும் வாழ்வது உறுதி. வடலூர் இராமலிங்க வள்ளலாரின் அருள் மொழியை ஈண்டு மீண்டும் மீண்டும் ஒலிப்போமாக:-

‘ஒருமையின் உலகெலாம் ஓங்குக!’
‘ஒருமையின் உலகெலாம் ஓங்குக!’
‘ஒருமையின் உலகெல்லாம் ஓங்குக!’
ஓர் உலக அரசு வளர்க - வாழ்க!

# 11. மீள் பார்வை

"தனக்கு மிஞ்சியே தானம்"என்பது ஒரு வழு மொழி. அவ்வாறு தமக்கு மிஞ்சியும் பிறர்க்குத் தராதவர்களே பெரும்பாலராக உள்ள இவ்வுலகத்தில், உலக நோக்கு உடையவர்கள் அரியர். ஆயினும், உலகில் ஆங்காங்கு அவ்வப்போது உலக நோக்குடைய அருளாளர்கள் ஒரு சிலர் தோன்றியுள்ளனர் என்னும் செய்தி முன்னர் விளக்கப்பட்டுள்ளது.

## பொதுத் தோல்வி:

சுற்றுப்புறம் தூய்மையற்றிருப்பின், நாம் இருக்கும் இடம் தூயது என்று சொல்ல முடியாது. உலகில் தம்மைச் சுற்றிக் கோடிக் கணக்கானவர்கள் வறுமையாலும் பிணியாலும் இன்னபிறவற்றாலும் துன்புற்றிருக்க, ஒரு சிலர் மட்டும் இன்புற்றிருப்பது உண்மையான இன்பமாகாது. உலகில் ஒருவர் துன்புற்றிருந்தாலும், அது, மக்களினம் முழுவதற்கும் உரிய பொதுத் தோல்வியேயாகும். இதனால்தான், சுப்பிரமணிய பாரதியார்,

> "தனி யொருவனுக்கு உணவு இல்லை யெனில்
> இந்தச் சகத்தினை அழித்திடுவோம்"

என்று புரட்சிக் கனலை வீசியுள்ளார். எனவே, உலகம் முழுவதும் இன்புற்றுய்ய, முன்னர்க்கூறப்பட்டுள்ள ஆய்வுக் கருத்துக்களை அடிக்கடி நினைவு கூர்ந்து அவற்றை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும். அவற்றை முன்னோட்டத்தின் 'மீள் பார்வை'யாக மீண்டும் ஒரு முறை தொகுத்து நோக்குவோமே.

தொகுப்புரை

நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டியது, ஒவ்வொருவருக்கும் மிகவும் இன்றியமையாத கடமையாகும்.

முன்னேற்றப் பாதையின் குறுக்கே தடைக்கற்களாக இருக்கும் மூட நம்பிக்கைகளை அறவே அகற்ற வேண்டும்.

வாழ்க்கைக்கு இன்றியமையாததான பொருள் செய்யும் வகையை ஆய்ந்தறிந்து பொருளாதாரத்தைப் பெருக்கி, உலக மக்கள் அனைவருக்கும் அதில் சரியான பங்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

ஆக்க வேலைகளைக் காலந் தாழ்த்தாது உரிய நேரத்தில் உரிய முறையில் முனைந்து செய்ய வேண்டும். அழிவு வேலைகளை அறவே அகற்ற வேண்டும்.

போர் என்னும் எண்ணமே உலகின் எந்த மூலையிலும் எழக் கூடாது. உலக நாடுகள் தம் கையிருப்பில் உள்ள அனைத்துப் போர்ப் படைக் கருவிகளையும் மண்ணுக்குள் புதைத்து மறைத்து விட வேண்டும்.

உலகில் ஒரு துறையிலுங்கூட ஊழலுக்கு இடம் இருத்தலாகாது. ஒவ்வொரு துறையிலும் ஒழுங்கு முறையைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

உலகத்தை இணைத்து முழு ஒற்றுமையை உருவாக்கும் கருவியாக, உலகில் எல்லாத் துறைகளிலும் ஒரே பொது மொழியைப் பயன்படுத்த வேண்டும். அம்மொழி ஆங்கிலமாகத்தான் இருக்க முடியும்.

உலக மக்கள் அனைவருமே கட்டாயமாகக் கல்வி கற்கவேண்டும். அனைவரும் கல்வி கற்றால்தான், இன்றைய அறிவியலின் ஆக்கத்தை அனைவரும் பெற்று, ஆக்க வேலைகளில் ஊக்கத்துடன் ஈடுபட்டு நல்ல பண்பாட்டுடனும் வளமாகவும் வாழ முடியும்.

இவை யாவற்றினும் இன்றியமையாததாக, உலகம் முழுதும் ஒரு குடை நிழற்கீழ் ஆளப்படவேண்டும்-அஃதாவது-உலகப்பொது அரசு உருவாக வேண்டும். இதன் பயன் அளப்பரியது.

இன்ன பிற நல்ல வழிதுறைகளைக் கடைப்பிடித்து உண்மையுடனும் ஊக்கத்துடனும் செயலாற்றினால், எல்லா நலங்களும் வளங்களும் பெற்று உவகையுடன் உலகு உய்யும்:

உய்க உலகு!

# 12. பிற் சேர்க்கை

## உலக அரசு ஆதரவு மாநாடு

*யான் இந்த நூலை எழுதி முடித்த பின்னர், 1981 பிப்ரவரி 22ஆம் நாள், தென்னிந்தியாவில் வெளியாகும் "தின மணி" என்னும் தமிழ் நாளேட்டில் (The Widest Read Tamil Daily) 'ஒரே உலக அரசு' தொடர்பான செய்தி ஒன்று இருந்ததைப் படித்தேன். அச் செய்தியை இந்நூலின் பிற்சேர்க்கையாக, அந்த நாளேட்டில் உள்ளாங்கு அப்படியே கீழே தருகிறேன்:-

"தினமணி-ஞாயிற்றுக்கிழமை-பிப்ரவரி 22, 1981

### டில்லியில் உலக அரசு ஆதரவு மாநாடு தொடக்கம்

புதுடில்லி, பிப்ரவரி 21-மனித வர்க்கம் முற்றிலும் அழியாமல் காப்பாற்றச் சகிப்புத் தன்மையும் பரஸ்பர நல்லுறவும் உலகநாடுகளின் மக்களிடையே ஏற்படுவது அவசியம் என்று (இந்தியப் பார்லிமெண்ட்) லோக சபை சபாநாயகர் பலராம் ஜாகர் இன்று கூறினார்.

உலக நாடுகள் ஒன்றை ஒன்று சார்ந்தே இருக்கின்றன. எந்த நாடும் முற்றிலும் தன்னிறைவு உடையதாக இல்லை என்று அவர் சொன்னார்.

---

*இந்த நூல் 1980 ஆம் ஆண்டு எழுதப்பெற்றது. பின்னர் அடுத்த ஆண்டுகளில் இடையிடையே சிலசெய்திகள் சேர்க்கப் பெற்றன.

யாரும் தனக்குத்தான் வாழ உரிமை இல்லை-தகுதி வாய்ந்த நாடுதான் உலகில் இருக்க வேண்டும் என்றால், மிகவும் சொற்பமான நாடுகளே இருக்க முடியும் என்று அவர் சொன்னார்.

உலக அரசியல் சட்டம், பார்லிமெண்ட் சங்கத்தின் நான்காவது வருடாந்திர மகாநாட்டைப் பலராம் தொடங்கி வைத்தார்.

முப்பதுக்கு மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் இம் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். (இந்திய) லோக சபை, ராஜ்ய சபைமெம்பர்களும் கலந்து கொண்டார்கள்

உலக அரசியல் சட்டம் பற்றி இப்போது பேசுவது செவிடன் காதில் ஊதிய சங்கு போலத் தோன்றலாம். ஆனால் நீங்கள்எப்படியாவது ஊதித்தானேயாகவேண்டும் என்று அவர் கூறினார்.

மெக்ஸி கோவைச் சேர்ந்த ரெணெஹார்லியு மகா நாட்டுக்குத் தலைமை வகித்தார். இந்த விஷயத்தில் ஆக்க பூர்வமான முதல் நடிவடிக்கை எடுக்கக் கூடிய நாடு இந்தியாவாகத்தான் இருக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். உலக அரசாங்கம் ஒன்று அமையுமானால்› அதில் இந்தியா சேருவதற்கு வகை செய்யக்கூடிய முறையில் இந்திய அரசியல் சட்டத்தில் மாறுதல்கள் செய்யக் கோரும் திருத்தங்களைக் கொண்ட ஒரு மசோதாவை நேற்று (இந்தியப் பார்லிமெண்ட்) லோக சபையில் எட் வர்டோ ஃபலேரியோ கொண்டு வந்தது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

உலக அரசாங்கத்தின் நகல் அரசியல் அமைப்பு 1977-இல் நிறைவேற்றப்பட்டது என்றும், இந்தத் திருத்

தங்கள் பற்றி விவாதிக்க 1985-இல் விசேஷ மகாநாடு நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

(இந்திய) ராஜ்ய சபையின் முன்னாள் துணைத்தலைவரான ராம் நிவாஸ் மிர்தா பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினார்.''

(குறிப்பு:-அடைப்புக் குறிக்குள் இருப்பன, என்னால் சேர்க்கப்பட்டவை).

இந்தப் பிற்சேர்க்கை, 'உலகுக்கு ஒரே அரசு' என்னும் எனது கோட்பாட்டு விளக்கத்திற்கு-அதாவது-இந் நூலின் குறிக்கோளுக்கு அரண் செய்யலாம்.

உலகு உய்க!